# பரிசுத்த ஆவியானவரின் ஊழியம்

**சர்வதேச அறுவடைநேர நிறுவனம்**

இப்பாடமானது **சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின்** செயல்திட்டங்களில் ஒரு பகுதியாக இருக்கின்றது. இத்திட்டம் விசுவாசிகள் தாக்கமுள்ள ஆவிக்குரிய அறுவடையை செய்யும்படியாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள், வரிவசூலிப்பவர்கள் போன்றோருக்கு இயேசு கற்பித்து, அவர்களை மீள உருவாக்கும் கிறிஸ்தவர்களாக்கி, அவர்கள் வாழ்ந்த உலகத்தை சுவிஷேசத்தை ஆளுமையின் வல்லமையால் மாற்றியமைத்ததைப்போன்று உங்களுக்கும் கற்பிப்பதே இப்பயிற்சித்திட்டத்தின் நோக்கமாகும்.

பாடத்திட்டத்திலுள்ள பல பாடங்களில் இக்கையேடும் ஒன்றாகும். சுவிஷேச மயமாகுக்கும் இலக்கை நிறைவேற்ற, விசுவாசிகள் பெருக, பிரதிநிதிகளாக செயல்பட, ஆயத்தம் செய்யப்படவும் இப்பாடம் உதவும்.

மேலதிக விபரங்களுக்கும், பாடத்திட்டங்களும் எழுதவேண்டிய முகவரி:


Harvestime International Institute
14431 Tierra Dr.
Colorado Springs, CO 80921
U.S.A.


© Harvestime International Institute

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கையேட்டை பாவிப்பது எவ்வாறு | | I |
| குழுவாக கற்றலுக்கான ஆலோசனைகள் | | II |
| அறிமுகம் | | 1 |
| பாடத்தின் குறிக்கோள்கள் | | 2 |
| 1. | பரிசுத்த ஆவியானவர் குறித்த அறிமுகம் | 3 |
| 2. | பரிசுத்த ஆவியானவரின் பிரதிநிதித்துவம் | 17 |
| 3. | பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் | 26 |
| 4. | பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் | 43 |
| 5. | பரிசுத்த ஆவியானவரின் வரங்களுக்கான அறிமுகம் | 59 |
| 6. | பரிசுத்த ஆவியானவரின் விசேட வரங்கள் | 76 |
| 7. | பரிசுத்த ஆவியானவரின் பேசும் வரங்கள் | 103 |
| 8. | பரிசுத்த ஆவியானவரின் ஊழிய வரங்கள் | 111 |
| 9. | பரிசுத்த ஆவியானவரின் அடையாள வரங்கள் | 128 |
| 10. | உங்களுடைய வரத்தை கண்டுப்பிடித்தல் | 144 |
| 11. | பரிசுத்த ஆவியானவரின் கனி | 172 |
| 12. | மாம்சத்தின் கிரியைகள் | 195 |
| 13. | ஆவிக்குரிய கனியை அபிவிருத்தி செய்தல் | 218 |
| அனுபந்தம் | | 232 |
| சுய பரீட்சைக்கான விடைகள். | | 235 |

# கையேட்டை பாவிப்பது எவ்வாறு

### கையேட்டின் வடிவமைப்பு

ஒவ்வொரு பாடத்திலும் அடங்குபவை:

குறிக்கோள்கள்: அதிகாரத்தை கற்று முடித்ததும் இலக்கை நிறைவேற்ற முற்படுவீர்கள். பாடத்தை ஆரம்பிக்க முன்னர் அவைகளை வாசியுங்கள்.

திறவுகோள் வசனம்: அதிகாரத்தின் முக்கிய விடயத்தை இவ்வசனம் பிரபலிக்கும். மனனம் செய்யுங்கள்.

அதிகாரத்தின் பொருளடக்கம்: ஒவ்வொரு பகுதியையும் கற்கவும். வேதாகமத்தை பாவித்து கையேட்டில் இல்லாத வசனங்களையும் கவனிக்கவும்.

சுயபரீட்சை: அதிகாரத்தை கற்று முடித்ததும் இப்பரீட்சையை செய்யவும். வேதாகமத்தையும் கையேட்டையும் பாராமல் வினாக்களுக்கு விடையளிக்க முயற்சி செய்யுங்கள். விடையளித்து முடிந்ததும் இப்புத்தகத்தின் கடைசி பக்கத்திலுள்ள விடைகளுடன் ஒப்பிட்டு பாருங்கள்.

மேலதிக படிப்பினைக்கு: தேவனுடைய வசனத்தை தொடந்தேர்ச்சியாக கற்றுக்கொள்ளவும், கற்றல் திறனை அபிவிருத்தி செய்யவும், உங்கள் வாழ்விலும், ஊழியத்திலும், கற்றதை பிரயோகிக்கவும் இப்பகுதி உதவும்.

இறுதி பரீட்சை: நீங்கள் மதிப்பெண்களை பெறும்படியாக இப்பாடத்தை பதிவு செய்து கற்பீர்கள் என்றால் இப்பாடத்தின் இறுதியில் பரீட்சை எழுத வேண்டும். பரீட்சையை செய்து முடித்த பின்னர் மதிப்பெண்ணை பெற பரிசோதனைக்காக விடைத்தாளை திருப்பி அனுப்பி வைக்கவும்.

### மேலதிகமாக தேவைப்படுபவை

King James வேதாகமம் மேலதிகமாக தேவைப்படும்.

# குழுவாக கற்பதற்கான ஆலோசனைகள்

## முதல் கூடுகையில்

**ஆரம்பம்:** ஜெபத்தோடும் அறிமுகத்தோடும் ஆரம்பியுங்கள். நன்கு அறிமுகமாகி மாணவர்களை பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

தொடர்ந்து செயலாற்றகூடிய குழுவை நியமியுங்கள்: கூட்டத்தை வழிநடத்துவது யார், நேரம், இடம், திகதி என்பற்றை முடிவு செய்யுங்கள்.

துதியும் ஆராதனையும்: உங்கள் பயிற்சியின் வேளையில் பரிசுத்த ஆவியானவர் பிரசன்னமாயிருக்க அவரை அழையுங்கள்.

கையேடுகளை மாணவருக்கு பகிர்ந்தளித்தல்: கையேட்டின் தலைப்பையும், முதல் நான்கைந்து பக்கங்களிலுள்ள குறிக்கோள்களையும், அறிமுகப்படுத்துங்கள்.

முதலாவது ஒப்படை: மாணவர்கள் இப்பாடத்தை ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட முறையில் வாசிக்கவும், அடுத்த கூடுகைக்கு முன்னால் சுயமாக பரீட்சை செய்திருத்தல் வேண்டும். ஒவ்வொரு குழு கூடுகையின் போது அதிகாரங்களை முடிக்கும் எண்ணிக்கையானது அதிகாரத்தின் நீளத்திலும், உள்ளடக்கத்திலும், குழுவின் இயலுமையிலும் தங்கியிருக்கும்.

## இரண்டாவதும் தொடரும் கூட்டங்களும்

ஆரம்பம்: ஜெபியுங்கள். வரவேற்ற பின்னர் புதிதாக வந்த மாணவர்களை பதிவு செய்த பின் கையேட்டை வழங்குங்கள். வரவை பதிவு செய்யுங்கள். துதி ஆராதனையை நடத்துங்கள்.

மீட்டல்: கடந்த வகுப்பில் கற்றவற்றை சுருக்கமாக முன் வையுங்கள்.

பாடம்: அதிகாரத்திலுள்ள தடித்த எழுத்துகளிலுள்ள தலைப்புகளின் சகல பகுதிகளையும் கலந்துரையாடுங்கள். மாணவருக்கு தாங்கள் கற்றுக்கொண்ட பகுதிகளில் கேள்விகள் அல்லது விமர்சனங்கள் இருப்பின் கூறச் சொல்லவும். ஜீவியத்திலும், ஊழியத்திலும் கற்றவற்றை பிரயோகிக்கும்படி மாணவரை கேட்டுக் கொள்ளுங்கள்.

சுயபரீட்சை: சுய பரீட்சையை செய்திருப்பின் மீட்டல் செய்யுங்கள். (சுய பரீட்சைக்கான பதில்கள் கையேட்டில் இருக்க வேண்டியதில்லை என நீங்கள் தீர்மானித்தால் கடைசி பக்கங்களிலுள்ள அவற்றை அகற்றிவிடலாம்.

மேலதிக படிப்பினைக்கு: இத்திட்டத்தை குழுவாகவோ அல்லது தனிப்பட்ட விதத்திலோ செய்யலாம்.

இறுதிப்பரீட்சை: உங்கள் குழுவினர் மதிப்பெண்களை பெறுவதற்காக கற்பார்களாயின், இப்பாடத்திற்கான கேள்விப்பத்திரத்தை பெற்றுக் கொள்ளலாம். அதை பிரதிபண்ணி, மாணவரிடம் பரீட்சை எழுத கொடுத்து கண்காணிக்கவும்.

குறுங்கால பாடத்திட்டம்: பெருகுதல்
பாடம் : பரிசுத்த ஆவியானவரின் ஊழியம்

# அறிமுகம்

அப்போஸ்தலனாகிய பவுல் அவருடைய ஓர் மிஷனரி பிரயாணத்தின் போது விசுவாசிகளின் கூட்டத்தாரிடம் பரிசுத்த ஆவியானவர் பற்றிய கேள்விகளை கேட்டார். விசுவாசிகளானபோது பரிசுத்த ஆவியானவரை பெற்றீர்களா? என்ற கேள்வியை கேட்டார். அவர்களுடைய பதிலாவது, "பரிசுத்தஆவி உண்டென்பதை நாங்கள் கேள்விப்படவே இல்லை" என்றனர் (அப்போஸ்தலர் 19:2). இக்கிறிஸ்தவர்களிடையே பவுல் பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் பற்றிய செய்தியை பகிர்ந்து கொண்டார் (அப்போஸ்தலர் 19). இப்பரிசுத்த ஆவியானவர் பற்றிய செய்தியை இன்றைய விசுவாசிகளும் விளங்கிக் கொள்வது முக்கியமானதாக இருக்கிறது. தேவன் வாக்குத்தத்தம் பண்ணியுள்ளார்:

> **கடைசிநாட்களில் நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்.. (அப்போஸ்தலர் 2:17)**

இப்பாடமானது தேவன் தனது ஆவியை ஊற்ற சித்தமுள்ளவராக இருக்கின்றார் என்னும் நிலையான சத்தியத்தை முக்கியமாக ஆராய்கிறது. தேவ வல்லமையின் விசேட வெளிப்பாட்டின்படி பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். வேதாகமத்தின் மிகச்சிறந்த கோட்பாடுகளில் ஒன்றாக பரிசுத்த ஆவியானவர் குறித்த படிப்பினை இருக்கின்றது. கோட்பாடுகளின் சகல போதனைகளும் இப்பொருளுக்கு தொடர்புடையதாகவே இருக்கிறது. பவுல் தெரிவித்ததாவது:

> **வாசிக்கிறதிலும் புத்திசொல்லுகிறதிலும் உபதேசிக்கிறதிலும் ஜாக்கிரதையாயிரு..... (1 தீமோத்தேயு 4:13)**

எமது இவ்வுலகத்தில் தேவனுடைய அசைவாட்டம் மனிதனின் இயல்பான பெலத்தினால் அல்ல. அது பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தின் வழியாக இருக்கின்றது:

> **பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலேயே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (சகரியா 4:6)**

இப்பாடமானது பரிசுத்த ஆவியானவருடைய சுபாவத்தையும், ஆள்தத்துவத்தையும் ஆராய்கின்றது. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளில் விவாதிக்கப்படுவதோடு, பரிசுத்த ஆவியானவரை குறிக்கும் அடையாளச் சின்னங்களும் ஆராயப்படும். இவை இரண்டுமே அவரது ஊழியத்தை அதிகமாய் வெளிப்படுத்தும். பரிசுத்த ஆவியானவருடைய நோக்கங்கள், வரங்கள், கனிகள் என்பனவும் விரிவாக ஆராயப்படும். பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்தினால் ஏற்படும் தனிப்பட்ட, நடைமுறைக்கான வழிகாட்டலும் கொடுக்கப்பட்டுள்ளதோடு, பரிசுத்த ஆவியானவருடைய வரங்களை அடையாளம் காணவும், கனியை வளர்த்து அபிவிருத்தி செய்து கொள்ளவும் இப்பாடம் உதவும்.

# பாடத்தின் குறிக்கோள்கள்

இப்பாடத்தை கற்று முடிக்கின்றபோது உங்களால்:

பரிசுத்த ஆவியானவரின் ஆள்தத்துவத்தை விபரிக்கவும்,

பரிசுத்த ஆவியானவரின் பல்வேறுப்பட்ட பெயர்களையும், தலைப்புகளையும் பட்டியலிடவும்,

பரிசுத்த ஆவியானவரை குறிக்கும் அடையாளச் சின்னங்களை அடையாளம் காணவும்,

பரிசுத்த ஆவியானவருடைய ஊழியத்தை விபரிக்கவும்,

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை எவ்வாறு பெறலாம் என்பதை விபரிக்கவும்,

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்ளவும்,

ஆவியின் வரத்தை பட்டியலிட்டு, வரைவிலக்கணத்தை கூறவும்,

உங்களுடைய ஆவிக்குரிய வரத்தை அடையாளம் காணவும்,

ஆவியின் கனியை அடையாளம் காணவும்,

மாம்சத்தின் கிரியைகளை அடையாளம் காணவும்,

பரிசுத்த ஆவியானவருடைய கனியை உங்கள் வாழ்வில் அபிவிருத்தி செய்யவும் முடியும்.

அதிகாரம் ஒன்று

# பரிசுத்த ஆவியானவர் குறித்த அறிமுகம்

### குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

திருத்துவ தேவனில் ஒருவராகிய பரிசுத்த ஆவியானவரை அடையாளம் காண்பீர்கள்.
பரிசுத்த ஆவியானவரின் தனிப்பட்ட விஷேட தன்மையை பட்டியலிடுவீர்கள்.
பரிசுத்த ஆவியானவரின் சுபாவத்தை விளங்கிக் கொள்வீர்கள்.

### திறவுகோள் வசனம்:

**இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.**

**அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. (மத்தேயு 3:16-17)**

## அறிமுகம்

இவ்வதிகாரம் பரிசுத்த ஆவியானவரை அறிமுகம் செய்யும். திருத்துவ தேவனில் ஒருவராகிய அவரின் நிலையை விளக்கவும், தனிப்பட்ட விஷேட அவருடைய தன்மையை சம்பாஷிக்கவும், அவருடைய நுட்பதிறமிக்க சுபாவத்தை அறியவும் உதவும். பரிசுத்த ஆவியானவரை “பரிசுத்த ஆவி” என்ற பெயரால் அழைக்கப்படுவதை கவனிப்பீர்கள். “அவர்” என்ற பெயர் சொல், பரிசுத்த ஆவியானவருக்கு பாவிக்கப்படுகின்றது, மூன்று ஆள்தத்துவமுள்ள திரித்துவ தேவனில் ஒருவராக அவர் இருக்கிறார்.

பரிசுத்த ஆவியானவரை பற்றி இயேசு பேசும் போது “அவர்” என்றே சொன்னார். இயேசு கூறினார்:

-அவர் என்னைக்குறித்து சாட்சியிடுவார். யோவான் 15:26
-நான் அவரை உங்களிடத்தில் அனுப்புவேன். யோவான் 16:7
-அவர் என்னை மகிமைப்படுத்துவார். யோவான் 16:14
-அவர் தன்னைக்குறித்து சுயமாய் பேசமாட்டார். யோவான் 16:13

## திருத்துவ தேவனின் சுபாவம்

உலகில் பலவிதமான தேவர்களின் வணக்கம் இருக்கின்ற போதும், மெய்யான தேவன் ஒருவரே இருக்கிறார். பரிசுத்த வேதாகமம் இந்த மெய்யான தேவனின் கதையை உள்ளடக்கியுள்ளது. வேதாகமம் தேவனுடைய வார்த்தையாக இருப்பதால் மனித ஜாதியைக்குறித்த தேவனின் விஷேட திட்டத்தை அது வெளிப்படுத்துகின்றது.

தேவன் திரியேகத்துவமுள்ளவர் என வேதாகமம் வெளிப்படுத்துகின்றது. அவருடைய ஆள்தத்துவம் மூன்று விதமாக வெளிப்படுத்தப்படுகின்றது என்பதே இதன் அர்த்தம். அவர் மூன்று ஆள்தத்துவமுள்ள ஒரே தேவன். பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் என்ற திரியேகத்துவ சுபாவம் கொண்ட தேவனில், பரிசுத்த ஆவியானவரும் ஒருவராக உள்ளார். மூன்று ஆள்தத்துவமும் கர்த்தத்துவத்தில் ஐக்கியமாக இருக்கின்றது.

பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவியானவர் என்ற ஒவ்வொருவரும் மனுக்குலத்திற்கு விஷேட செயற்பாட்டை கொண்டவர்களாக இருக்கின்றனர். இப்பாடம் பரிசுத்த ஆவியானவரின் நோக்கத்தையும், ஊழியத்தையும் விளக்கும்.

## பரிசுத்த ஆவியானவராகிய தேவன்

பரிசுத்த ஆவியானவர் தேவன் என்று அழைக்கப்படுகின்றார்:

> **பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்து வைத்து, பரிசுத்தஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன? நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய் சொன்னாய் என்றான். (அப்போஸ்தலர் 5:3-4)**

அவர் தேவன் என்று அழைக்கப்படுவதால், பிதாவாகிய தேவனுக்கும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவுக்கும் சமமானவராக இருக்கின்றார். இவ்வதிகாரத்தின் திறவுகோள் வாக்கியம் திரித்துவ தேவனின் குணாதிசயத்தை தெளிவாக வெளிப்படுத்துகின்றது. இயேசு ஞானஸ்நானம் பெறுகின்றபோது, பரிசுத்த ஆவியானவர் அவர் மேல் அமர்ந்தார், பிதாவானவர் பேசினார்:

> **இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.**
>
> **அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. (மத்தேயு 3:16-17)**

இவ்வுலக ஊழியத்தை முடித்துக்கொண்டு பரலோகம் செல்லுமுன் பரிசுத்த ஆவியானவரை பற்றி இயேசு சொன்னதாவது:

> **பிதாவினிடத்திலிருந்து நான் உங்களுக்கு அனுப்பப்போகிறவரும், பிதாவினிடத்திலிருந்து புறப்படுகிறவருமாகிய சத்திய ஆவியான தேற்றரவாளன் வரும்போது, அவர் என்னைக்குறித்துச் சாட்சி கொடுப்பார். (யோவான் 15:26)**

அப்போஸ்தலனாகிய பவுலும் திரியேகத்தில் ஒருவராகிய பரிசுத்த ஆவியானவரைக் குறித்து கூறியதாவது:

> **கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.**

**அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். (ரோமர் 8:2-3)**

**கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினுடைய கிருபையும், தேவனுடைய அன்பும், பரிசுத்த ஆவியினுடைய ஐக்கியமும், உங்கள் அனைவரோடுங்கூட இருப்பதாக. ஆமென். (2 கொரிந்தியர் 13:14)**

**கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. (எபேசியர் 2:18)**

அப்போஸ்தலனாகிய பேதுருவும் திருத்துவ தேவனைப்பற்றி கூறுகின்றார்:

**நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள். ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார். அவர்களாலே தூஷிக்கப்படுகிறார். உங்களாலே மகிமைப்படுகிறார். (1 பேதுரு 4:14)**

அப்போஸ்தலருடைய நடபடிக்கை புத்தகம் திருத்துவ தேவனைப்பற்றி தெளிவாக காண்பிக்கின்றது:

**அவர் தேவனுடைய வலதுகரத்தினாலே உயர்த்தப்பட்டு, பிதா அருளிய வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்தஆவியைப்பெற்று, நீங்கள் இப்பொழுது காண்கிறதும் கேட்கிறதுமாகிய இதைப்பொழிந்தருளினார். (அப்போஸ்தலர் 2:33)**

பின்வரும் படம் திருத்துவ தேவனை அடையாளப்படுத்தி காட்டுகிறது. அங்கே மூன்று ஆள்தத்துவம் காணப்படுகிறது. அவர் பிதாவாகிய தேவன், குமாரனாகிய இயேசு கிறிஸ்து, பரிசுத்த ஆவியாகிய தேவன் என்ற மூன்று ஆள்தத்துவம் கொண்ட ஒரே தேவனாக இருக்கிறார்.




## பரிசுத்த ஆவியானவரின் தன்மை

திருத்துவ தேவனில் ஒருவராகிய பரிசுத்த ஆவியானவருக்கு விசேட தன்மைகள் உண்டு. அவருடைய தன்மையை பற்றி நாம் பேசுகின்றபோது, அவருடைய அடிப்படை தராதரத்தைப்பற்றியே அர்த்தப்படுத்துகிறோம். பரிசுத்த வேதாகமம் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி கற்பிக்கிறதாவது:

### சர்வ வியாபி:

அவர் எங்கும் வியாபித்திருக்கிறார் என்பது இதன் அர்த்தம் ஆகும்:

**உம்முடைய ஆவிக்கு மறைவாக எங்கே போவேன்? உம்முடைய சமுகத்தைவிட்டு எங்கே ஓடுவேன்? (சங்கீதம் 139:7)**

### சர்வ ஞானி:

அவர் சகலவற்றையும் அறிவார் என்பது இதன் அர்த்தம்:

**நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார்.**

**மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். (1 கொரிந்தியர் 2:10-11)**

### சர்வ வல்லவர்:

பரிசுத்த ஆவியானவர் சர்வ வல்லமையுள்ளவர் என்பது இதன் அர்த்தம்:

**தேவன் ஒருதரம் விளம்பினார், இரண்டுதரம் கேட்டிருக்கிறேன். வல்லமை தேவனுடையது என்பதே. (சங்கீதம் 62:11)**

**பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து.... (அப்போஸ்தலர் 1:8)**

### நித்தியர்:

அவர் சதாகாலமும் ஜீவிக்கிறவர் என்பது இதன் அர்த்தம். அவருக்கு ஆரம்பமும், முடிவும் இல்லை:

**நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! (எபிரெயர் 9:14)**

பரிசுத்த ஆவியானவருடைய நித்திய தன்மையை ஒரு வட்டத்திற்கு உதாரணப்படுத்தி விளக்கலாம். ஒரு வட்டத்திற்கு ஆரம்ப, முடிவு ஸ்தானம் இல்லை:



பரிசுத்த ஆவியானவரின் நித்திய தன்மை

## பரிசுத்த ஆவியானவருடைய ஆள்தத்துவம்

பரிசுத்த ஆவியானவர் திருத்துவ தேவனில் ஒருவராக இருக்கின்றபோதும் அவருக்கு தனிப்பட்ட ஆள்தத்துவமுண்டு. பரிசுத்த ஆவியானவரைப்பற்றி வேதாகமம் வெளிப்படுத்துகின்றது:

## சிந்தையுள்ளவர்:

**இருதயங்களை ஆராய்ந்துபார்க்கிறவர் ஆவியின் சிந்தை இன்னதென்று அறிவார்.... (ரோமர் 8:27)**

## மனிதரின் உள்ளந்திரியங்களை ஆராய்ந்து அறிகிறவர்:

**நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். (1 கொரிந்தியர் 2:10)**

## ஓர் சித்தம் கொண்டவர்:

**இவைகளையெல்லாம் அந்த ஒரே அவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார். (1 கொரிந்தியர் 12:11)**

பரிசுத்த ஆவியானவர் தம்முடைய சித்தத்தின்படி வழிநடத்துகிறார். ஆனாலும் சில காரியங்களை செய்ய விசுவாசிகளுக்கு அனுமதிப்பதில்லை:

**அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்தஆவியினாலே தடைபண்ணப்பட்டு,**

**மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியாநாட்டுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினார்கள். ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார். (அப்போஸ்தலர் 16:6-7)**

சில காரியங்களை தமது சித்தத்தின்படி செய்ய விசுவாசிகளுக்கு பரிசுத்த ஆவியானவர் அனுமதிக் கொடுக்கிறார்:

**அந்தத் தரிசனத்தை அவன் கண்டபோது, அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக்கொண்டு, உடனே மக்கெதொனியாவுக்குப் புறப்பட்டுப்போகப் பிரயத்தனம்பண்ணி... (அப்போஸ்தலர் 16:10)**

## பேசுகின்றார்:

அவர் பிலிப்புடன் பேசினார்:

**ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார். (அப்போஸ்தலர் 8:29)**

அவர் பேதுருவுடன் பேசினார்:

**பேதுரு அந்தத் தரிசனத்தைக் குறித்துச் சிந்தனை பண்ணிக்கொண்டிருக்கையில், ஆவியானவர்: இதோ, மூன்று மனுஷர் உன்னைத் தேடுகிறார்கள். (அப்போஸ்தலர் 10:19)**

அவர் அந்தியோகியா நகரத்தின் மூப்பரோடு பேசினார்:

**அவர்கள் கர்த்தருக்கு ஆராதனைசெய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது:**

**பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்தஆவியானவர் திருவுளம்பற்றினார். (அப்போஸ்தலர் 13:2)**

வெளிப்படுத்தின விஷேசம் 2ம், 3ம் அதிகாரங்கள் ஆசியாவிலுள்ள எழு சபைகளுக்கு ஆவியானவர் பேசியதை பதிவு செய்யு வைத்துள்ளது.

### அன்பு கூறுகின்றார்:

**நீங்கள் தேவனை நோக்கிச் செய்யும் ஜெபங்களில், நான் போராடுவதுபோல நீங்களும் என்னோடுகூடப் போராடவேண்டுமென்று நம்முடைய கர்த்தரகிய இயேசுகிறிஸ்துவினிமித்தமும், ஆவியானவருடைய அன்பினிமித்தமும், உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன். (ரோமர் 15:32)**

### பரிந்து மன்றாடுகின்றார்:

பரிசுத்த ஆவியானவரின் விஷேட தன்மைகளில் ஒன்றாக பரிந்து மன்றாடுதல் இருக்கின்றது. அவர் பிதாவிடம் மற்றவர்களுக்காக வேண்டுதல் செய்கின்றார் என்பதே இதன் அர்த்தம்:

**அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். (ரோமர் 8:26)**

## பரிசுத்த ஆவியானவரின் உணர்வு

பரிசுத்த ஆவியானவர் உணர்வுள்ளவர். மனிதருடைய கிரியைகளை உணரக்கூடியவர் என்பதே இதன் அர்த்தம். பரிசுத்த ஆவியானவர் உணர்வுள்ளவராக இருக்கிறார் என்பதினால் வேதாகமம் நீங்கள் செய்யக்கூடாதவற்றை குறித்து எச்சரிக்கின்றது:

### பரிசுத்த ஆவியானவரிடத்தில் பொய் பேசுதல்:

**பேதுரு அவனை நோக்கி: அனனியாவே, நிலத்தின் கிரயத்தில் ஒரு பங்கை வஞ்சித்துவைத்து, பரிசுத்தஆவியினிடத்தில் பொய்சொல்லும்படி, சாத்தான் உன் இருதயத்தை நிரப்பினதென்ன?**

**நீ மனுஷரிடத்தில் அல்ல, தேவனிடத்தில் பொய்சொன்னாய் என்றான். (அப்போஸ்தலர் 5:3-4)**

### ஆவியானவருக்கு எதிர்த்து நிற்றல்:

பரிசுத்த ஆவியானவர், விஷேசமான ஓர் ஊழியத்திற்காக விசுவாசிக்கு கொடுக்கப்படுகின்றார் என்பதை இப்பாடத்தின் மூன்றாம் அதிகாரத்தில் கவனிப்போம். பரிசுத்த ஆவியானவருக்கு எதிர்த்து நிற்காதிருந்தால், அவர் உங்கள் வாழ்வில் நம்பத்தகுந்த ஊழியத்தை செய்வார்:

**வணங்காக் கழுத்துள்ளவர்களே, இருதயத்திலும் செவிகளிலும் விருத்தசேதனம்**

**பெறாதவர்களே, உங்கள் பிதாக்களைக்போல நீங்களும் பரிசுத்தஆவிக்கு எப்பொழுதும் எதிர்த்துநிற்கிறீர்கள். (அப்போஸ்தலர் 7:51)**

## ஆவியை அவித்து போடுதல்:

ஆவியானவர் செய்ய வேண்டியதை செய்யாதிருக்கும் போது அவரை அவித்து போடுகின்றீர்கள். வேதாகமத்தில் "அவித்து போடுதல்" என்ற சொல், நெருப்பிலிருந்து எடுக்கப்பட்டு விடுதல் என்ற அர்த்தத்தோடு பாவிக்கப்படுகின்றது. ஆவியை அவித்து போடும்போது பரிசுத்த ஆவியானவர் உங்கள் மேல் ஊற்றப்படுதல் நிறுத்தப்படுகின்றது:

**ஆவியை அவித்துப்போடாதிருங்கள். (1 தெசலோனிக்கேயர் 5:19)**

## ஆவியை விசனப்படுத்துதல்:

பரிசுத்த ஆவியானவர் செய்யாதிருக்கும்படி சொன்னதை நாம் செய்கின்றபோது ஆவியானவரை அவித்துப்போடுகின்றோம். ஆவியானவர் விரும்பாத ஒரு காரியத்தை நாம் செய்கின்றபோது ஆவியானவரை நாம் விசனப்படுத்துகின்றோம். இஸ்ரவேலர்கள் பரிசுத்த ஆவியானவரை விசனப்படுத்தினார்கள்:

**எத்தனைதரமோ வனாந்தரத்திலே அவருக்குக் கோபம் மூட்டி, அவாந்தரவெளியிலே அவரை விசனப்படுத்தினார்கள். (சங்கீதம் 78:40)**

வேதாகமம் எச்சரிக்கின்றதாவது:

**அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்தஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். (எபிரெயர் 4:30)**

## ஆவியானவரை அவமதித்தல்:

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் பாவமன்னிப்பின் அனுபவத்தை பெற்ற பின்னர், திரும்பவுமாக பாவம் செய்கின்றபோது ஆவியானவரை அவமதிக்கின்றீர்கள்.

**தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள். (எபிரெயர் 10:29)**

**ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரமஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும்,**

**தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும்,**

**மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில்**

**அறைந்து அவமானப்படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம். (எபிரெயர் 6:4-6)**

## ஆவியானவரை தூஷித்தல்:

**ஆதலால், நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: எந்தப் பாவமும் எந்தச் தூஷணமும் மனுஷருக்கு மன்னிக்கப்படும். ஆவியானவருக்கு விரோதமான தூஷணமோ மனுஷருக்கு மன்னிக்கப்படுவதில்லை.**

**எவனாகிலும் மனுஷகுமாரனுக்கு விரோதமான வார்த்தை சொன்னால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். எவனாகிலும் பரிசுத்த ஆவிக்கு விரோதமாகப் பேசினால் அது இம்மையிலும் மறுமையிலும் அவனுக்கு மன்னிக்கப்படுவதில்லை. (மத்தேயு 12:31-32)**

பரிசுத்த ஆவியானவரை தூஷித்தலானது "மன்னிக்கப்பட முடியாத பாவம்" என்றழைக்கப்படுகின்றது, ஏனென்றால் இவ்வசனப்படி மன்னிக்கப்படமுடியாத பாவம் என்று இது ஒன்றே குறிப்பிடுகின்றது. பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையை மறுதலித்து பேசப்படுகின்ற தூஷண வார்த்தைகள் தேவனிடமிருந்து வராமல் சாத்தானிடமிருந்தே வருகின்றது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமை முற்றிலுமாக ஒருவன் மறுதலிக்கின்றவன் ஒருக்காலும் இரட்சிப்படைய மாட்டான், ஏனென்றால் பாவியான மனிதனை இயேசு கிறிஸ்துவிடம் வழிநடத்துவது பரிசுத்த ஆவியானவரேயாகும்.

பரிசுத்த ஆவியானவரோ நாம் தேவனுடைய வல்லமையை ஏராளமாக அடையாளங்களோடு காணும்படி உறுதி செய்கின்றவர். சுவிஷேசத்தின் சத்தியமான இவ்விதமான அடையாளங்களை ஒருவன் ஏற்றுக்கொள்ளாதிருந்தால், எதைப்பார்த்து விசுவாசிப்பீர்கள் என்று இயேசு கேட்டார்.

## பரிசுத்த ஆவியானவரை கோபப்படுத்துதல்:

பரிசுத்த ஆவியானவரை கோபப்படுத்துதல் என்றால் "வேதனைப்படுத்துதல், கோபமூட்டுதல் அல்லது எரிச்சலுண்டாக்குதல்" என்று அர்த்தப்படும். மனுக்குலத்தின் கீழ்ப்படியாமையாலும், அவிசுவாசத்தாலும் பரிசுத்த ஆவியானவர் கோபப்படுகின்றார். தீர்க்கதரிசியாகிய எசாயா, தேவனுடைய ஜனங்களாகிய இஸ்ரவேலர், பரிசுத்த ஆவியானவரை கோபமூட்டியபோது நடைபெற்ற காரியத்தை பதிவு செய்து வைத்துள்ளார்:

**அவர்களோ கலகம்பண்ணி, அவருடைய பரிசுத்த ஆவியை விசனப்படுத்தினார்கள். அதினால் அவர் அவர்களுக்குச் சத்துருவாய் மாறி, அவரே அவர்களுக்கு விரோதமாய் யுத்தம்பண்ணினார். (ஏசாயா 63:10)**

## சுய பரீட்சை:

١. திறவுகோள் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

٢. திருத்துவ தேவனின் ஒரு பகுதியான பரிசுத்த ஆவியானவர் இருக்கிறார். திருத்துவத்தில் அடங்கியிருப்பவர்கள்

--------------------------------------- தேவன், --------------------------------------- தேவன், --------------------------------------- தேவன்.

٣. இவ்வதிகாரத்தில் சம்பாஷிக்கப்பட்ட பரிசுத்த ஆவியானவருடைய விஷேட தன்மை ஆறை பட்டியலிடுக.

------------------------- ------------------------- ------------------------- ------------------------- ------------------------- -------------------------

٤. பரிசுத்த ஆவியானவர் "உணர்வுள்ளவர்" என்பதின் அர்த்தம் என்ன?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

٥. பரிசுத்த ஆவியானவர் உணர்வுள்ளவர் என்பதினால் நாம் என்ன செய்யகூடாது:

பரிசுத்த ஆவியானவரிடம் ------------------------------------ பரிசுத்த ஆவியானவரை ------------------------------------

பரிசுத்த ஆவியானவரை ------------------------------------ பரிசுத்த ஆவியானவரை ------------------------------------

பரிசுத்த ஆவியானவரை ------------------------------------ பரிசுத்த ஆவியானவரை ------------------------------------

பரிசுத்த ஆவியானவரை ------------------------------------

٦. பட்டியல் ஒன்றிலும், பட்டியல் இரண்டிலும் இரண்டு வசனங்கள் கொடுக்கப்பட்டு உள்ளது. 2ம் பட்டியலிலுள்ளது, 1ம் பட்டியலிலுள்ள பொருத்தமானதிற்கு முன் இலக்கத்தை எழுதுக.

**பரிசுத்த ஆவியானவருடைய திருத்துவம்**

| **பட்டியல் ஒன்று** | **பட்டியல் இரண்டு** |
|---|---|
| ..5.. சமம் | 1. வல்லமையுள்ளவர் என்பது இதன் அர்த்தம். |
| ..... சர்வ வியாபி | 2. அவர் சகலவற்றையும் அறிந்துள்ளார் என்பது இதன் அர்த்தம். |
| ..... சர்வ ஞானி | 3. அவர் எங்கும் இருக்கின்றார் என்பது இதன் அர்த்தம். |
| ..... வல்லமையுள்ளவர் | 4. அவர் நித்தியர் என்பது இதன் அர்த்தம். |
| ..... நித்தியர் | 5. பிதாவோடும், குமாரனோடும் ஒன்றாக இருக்கிறார் என்பது இதன் அர்த்தம். |

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன.)

## மேலதிக படிப்பினைக்கு

திரியேகத்துவத்தில் ஒரு ஆளாக இருக்கின்ற பரிசுத்த ஆவியானவரைப்பற்றி இப்பாடத்தில் கற்பீர்கள். கீழே கொடுக்கப்படுகின்ற பாடத்திலிருந்து, திருத்துவத்திலுள்ள பிதாவாகிய தேவனைப்பற்றியும், குமாரனாகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றியும் கற்பீகள்.

### திருத்துவம்

தேவன் பிதா, குமாரன், பரிசுத்த ஆவி என்ற மூன்று ஆள்தத்துவங்களை கொண்டவர்:

- பிதா குமாரனைக் குறித்து சாட்சியிடுகின்றார்: மத்தேயு 3:17
- குமாரன் பிதாவைக்குறித்து சாட்சியிடுகின்றார்: யோவான் 5:19-20
- குமாரன் பரிசுத்த ஆவியானவரைக்குறித்து சாட்சியிடுகின்றார்: யோவான் 14:26

## பிதாவாகிய தேவன்

தேவனே சர்வ சிருஷ்டிகர்: நெகேமியா 9:6

### தேவனுடைய பெயர்கள்:

இயற்கைக்கு அப்பாற்பட்ட ஒருவருக்கு "தேவன்" என்ற வார்த்தையை மனிதன் பாவிக்கின்றான். தேவனுக்கு இன்னும் அதிகமான பெயர்கள் வேதாகமத்தில் கூறப்படுகின்றது. வேதாகமத்தின் பெயர்கள் அவரை இன்னும் அடையாளப்படுத்தி காண்பிக்கின்றது. அப்பெயர்களுக்கு அவர் பாத்திரராய் உள்ளார். உள்ளடக்கப்பட்டுள்ள தேவனுடைய பெயர்கள்:

| | |
|---|---|
| யெகோவா: | கர்த்தர் என்பது இதன் அர்த்தம். தேவனைப்பற்றிய பல பெயர் இதனுடன் இணைந்து வருகின்றது. |
| யெகோவா-ராபா: | "குணமாக்கும் கர்த்தர்": யாத்திராகமம் 15:26 |
| யெகோவா-நிசி: | "தேவன் எமது கொடி": யாத்திராகமம் 17:8-15 |
| யெகோவா-ஷாலோம்: | "தேவன் எமது சமாதானம்": நியாயாதிபதிகள் 6:24 |
| யெகோவா-ரா: | "கர்த்தர் என் மேய்ப்பர்": சங்கீதம் 23:1 |
| யெகோரா-டிஸ்கேனு: | "கர்த்தம் எமது நீதி": எரேமியா 23:6 |
| யெகோவா-யீரே: | "தேவைகளை சந்திக்கும் ஆண்டவர்": நீதிமொழிகள் 22:14 |
| யெகோவா-ஷம்மா: | "தேவன் அங்கே இருக்கிறார்": எசேக்கியேல் 48:35 |
| ஏலோகீம்: | தேவனுடைய சிருஷ்டிப்பின் வல்லமை கூறப்படும் இடங்களில் இது பாவிக்கப்படுகின்றது. |
| பிதா: | அப்போஸ்தலர் 17:28; யோவான் 1:12-13 |
| அடோனாய்: | எஜமான், ஆண்டவர்: யாத்திராகமம் 23:17; ஏசாயா 10:16,33 |
| ஏல்: | இச்சொல் தேவனுடைய வேறு பெயர்களுடனும் இணைக்கப்பட்டுள்ளது. |
| எல் ஷடாய்: | "அவரது பிள்ளைகளின் தேவைகளை சந்திக்க போதுமானவர்": யாத்திராகமம் 6:3 |
| எல் ஓலாம்: | "நித்திய தேவன்": ஆதியாகமம் 21:33 |
| எல் எலியோன்: | "மற்ற தேவர்களைப்பார்க்கிலும் உயர்ந்தவர்": ஆதியாகமம் 14:18-20 |

பழைய ஏற்பாடு எபிரெய பாஷையில் எழுதப்பட்டுள்ளது. அதிலே "Yahwah" என்ற சொல் பாவிக்கப்பட்டுள்ளது. "யாவே" என்றால் "கர்த்தர்" என்று அர்த்தம். கர்த்தர் என்ற இவ்வார்த்தையை மற்ற வார்த்தைகளோடு ஒப்பிடும் போது அவரது குணாதிசயங்கள் இன்னும் அதிகமாக வெளிப்படுகின்றது. தேவன் அழைக்கப்படும் விதமாவது:

- யாவே யீரே: "தேவைகளை சந்திக்கும் தேவன்": ஆதியாகமம் 22:14

| | | |
|---|---|---|
| - யாவே நிசி: | "தேவன் எனது கொடி": | யாத்திராகமம் 17:15 |
| - யாவே சாலோம்: | "சமாதானத்தின் தேவன்": | நியாயாதிபதிகள் 6:24 |
| - யாவே சபோத்: | "சேனைகளின் கர்த்தர்": | 1 சாமுவேல் 1:3 |
| - மெக்காடிஸ்சிம்: | "பரிசுத்தமாக்கும் தேவன்": | யாத்திராகமம் 31:13 |
| - யாவே ரோய்: | "கர்த்தர் என் மேய்ப்பர்": | சங்கீதம் 23:1 |
| - யாவே டிஸ்கேனு: | "தேவனே எமது நீதி": | எரேமியா 23:6 |
| - யாவே சம்மா: | "தேவன் இங்கே இருக்கின்றார்": | எசேக்கியேல் 48:35 |
| - யாவே ஏலோகீம்: | "இஸ்ரவேலின் கர்த்தராகிய தேவன்": | நியாயாதிபதிகள் 5:3 |
| - குவாடுஸ் இஸ்ரவேல்: | "இஸ்ரவேலின் பரிசுத்தர்": | ஏசாயா 1:4 |

## தேவன் எங்கே இருக்கிறார்?

தேவன் பரலோகத்திலுள்ள சிங்காசனத்தில் வீற்றிருக்கிறதோடு, சர்வலோகத்திலும் அவர் வாசம் செய்கின்றார். தேவன் எங்கும் இருக்கிறார்: 2 நாளாகமம் 16:9; ஏசாயா 66:1; நீதிமொழிகள் 15:3; சங்கீதம் 139:7-8

## தேவன் எவ்வளவு பெரியவர்?

அவர் சர்வலோகத்தை பார்க்கிலும் பெரியவர். அவரை அளந்து பார்ப்பதற்கு மனிதனிடம் எவ்விதமான அளவுகோலும் கிடையாது: ஏசாயா 40:12,15,22

## தேவனுடைய (குணாதிசயம்) பண்புகள்:

பண்புகள் என்றால் குணாதிசயங்கள் என பொருள்படும். ஆண்டவருடைய பண்புகள் கீழே கொடுக்கப்படுகின்றன. தேவனானவர்:

**ஆவியாயிருக்கிறார்:** யோவான் 4:24

**எல்லையற்றவர்:** (மனித எல்லைகுட்பட்டவர் அல்ல): 1 இராஜாக்கள் 8:27; யாத்திராகமம் 15:18; உபாகமம் 33:27; நெகேமியா 9:5; சங்கீதம் 90:2; எரேமியா 10:10; வெளிப்படுத்தல் 4:8-10

**ஒருவர்:** அவர் மூன்றில் ஒருவராக இருக்கிறார்: யாத்திராகமம் 20:3; உபாகமம் 4:35,39;6:4; 1 சாமுவேல் 2:2; 2 சாமுவேல் 7:22; 1 இராஜாக்கள் 8:60; 2 இராஜாக்கள் 19:15; நெகேமியா 9:6; ஏசாயா 44:6-8; 1 தீமோத்தேயு 1:17

**சர்வ வல்லவர்:** ஆதியாகமம் 1:1; 17:1; 18:14; யாத்திராகமம் 15:7; உபாகமம் 3:24; 32:39; 1 நாளாகமம் 16:25; யோபு 40:2; ஏசாயா 40:12-15; எரேமியா 32:17; எசேக்கியேல் 10:5; தானியேல் 3:17; 4:35; ஆமோஸ் 4:13; 5:8; சகரியா 12:1; மத்தேயு 19:26; வெளிப்படுத்தல் 15:3; 19:6

**சர்வ வியாபி:** ஆதியாகமம் 28:15-16; உபாகமம் 4:39; யோசுவா 2:11; நீதிமொழிகள் 15:3; ஏசாயா 66:1; எரேமியா 23:23-24; ஆமோஸ் 9:2-4,6; அப்போஸ்தலர் 7:48-49; எபேசியர் 1:23

**சர்வ ஞானி:** ஆதியாகமம் 18:18,19; 2 இராஜாக்கள் 8:10,13; 1 நாளாகமம் 28:9; சங்கீதம் 94:9; 139:1-16; 147:4-5; நீதிமொழிகள் 15:3; ஏசாயா 29:15-16; 40:28; எரேமியா 1:4,5; எசேக்கியேல் 11:5; தானியேல் 2:22,28; ஆமோஸ் 4:13; லூக்கா 16:15; அப்போஸ்தலர் 15:8,18; ரோமர் 8:27,29; 1 கொரிந்தியர் 3:20; 2 தீமோத்தேயு 2:19; எபிரெயர் 4:13; 1 பேதுரு 1:2; 1 யோவான் 3:20

**ஞானமுள்ளவர்:** சங்கீதம் 104:24; நீதிமொழிகள் 3:19; எரேமியா 10:12; தானியேல் 2:20-21; ரோமர் 11:33; 1 கொரிந்தியர் 1:24,25,30; 2:6-7; எபேசியர் 3:10; கொலோசெயர் 2:2-3

**பரிசுத்தர்:** யாத்திராகமம் 15:11; லேவியராகமம் 11:44-45; 20:26; யோசுவா 24:19; 1 சாமுவேல் 2:2; சங்கீதம் 5:4; 111:9; 145:17; ஏசாயா 6:3; 43:14-15; எரேமியா 23:9; லூக்கா 1:49; யாக்கோபு 1:13; 1 பேதுரு 1:15-16; வெளிப்படுத்தல் 4:8; 15:3-4

**உண்மையுள்ளவர்:** யாத்திராகமம் 34:6; எண்ணாகமம் 23:19; உபாகமம் 4:31; யோசுவா 21:43-45; 23:14; 1 சாமுவேல் 15:29; எரேமியா 4:28; ஏசாயா 25:1; எசேக்கியேல் 12:25; தானியேல் 9:4; மீகா 7:20; லூக்கா 18:7-8; ரோமர் 3:4; 15:8; 1 கொரிந்தியர் 1:9; 10:13; 2 கொரிந்தியர் 1:20; 1 தெசலோனிக்கேயர் 5:24; 2 தெசலோனிக்கேயர் 3:3; 2 தீமோத்தேயு 2:13; எபிரெயர் 6:18; 10:23; 1 பேதுரு 4:19; வெளிப்படுத்தல் 15:3

**இரக்கமுள்ளவர்:** தீத்து 3:5; புலம்பல் 3:22; தானியேல் 9:9; எரேமியா 3:12; சங்கீதம் 32:5; ஏசாயா 49:13; 54:7

**அன்புள்ளவர்:** உபாகமம் 7:8; எபேசியர் 2:4; சகரியா 3:17; ஏசாயா 49:15-16; ரோமர் 8:39; ஓசியா 11:4; எரேமியா 31:3

**நல்லவர்:** சங்கீதம் 25:8; நாகூம் 1:7; சங்கீதம் 145:9; ரோமர் 2:4; மத்தேயு 5:45; சங்கீதம் 31:19; அப்போஸ்தலர் 14:17; சங்கீதம் 68:10; 85:5

## தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்து

### கிறிஸ்துவின் வாழ்க்கை:

தேவகுமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் வரலாறு மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் என்ற புத்தகங்களிலே பதிவு செய்யப்பட்டுள்ளது. அவரின் பிறப்பு, வாழ்க்கை, மரணம், உயிர்த்தெழுதல், இயேசுகிறிஸ்துவின் போதனைகள் யாவற்றையும் இப்புத்தகங்களிலே படித்து முடிக்கலாம்.

### இயேசு கிறிஸ்துவிற்கு கொடுக்கப்பட்ட பெயர்கள்:

"இயேசு" என்ற பெயரின் அர்த்தம் "இரட்சகர் அல்லது மீட்பர்" என்பதாகும்: மத்தேயு 1:21

"கிறிஸ்து" என்ற பெயரின் அர்த்தம் "அபிஷேகம் பண்ணப்பட்டவர்" என்பதாகும்: யோவான் 3:34

இவற்றைத்தவிர மேலதிக பெயர்களும் வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ளது:

| | |
|---|---|
| -நல்ல மேய்ப்பன்: | யோவான் 10:11 |
| -உலகத்தின் ஒளி: | யோவான் 8:12 |
| -ஜீவ அப்பம்: | யோவான் 6:48 |
| -வழி: | யோவான் 14:6 |
| -சத்தியம்: | யோவான் 14:6 |
| -ஜீவன்: | யோவான் 14:6 |
| -இராஜாதி ராஜா, கர்த்தாதி கர்த்தர்: | வெளிப்படுத்தல் 19:16 |
| -மனுஷகுமாரன்: | மத்தேயு 17:22 |
| -தாவீதின் குமாரன்: | மத்தேயு 1:1 |
| -பிந்தின ஆதாம்: | 1 கொரிந்தியர் 15:45 |
| -உன்னதத்திலிருந்து தோன்றிய அருணோதயம்: | லூக்கா 1:78 |

| | |
|---|---|
| -தேவ குமாரன்: | மத்தேயு 16:16 |
| -ஒரே பேறான குமாரன்: | யோவான் 3:16 |
| -பிரதான மூலைக்கல்: | எபேசியர் 2:20 |
| -பிரதான ஆசாரியன்: | எபிரெயர் 4:14 |
| -மத்தியஸ்தர்: | எபிரெயர் 12:24 |
| -யூத இராஜசிங்கம்: | வெளிப்படுத்தல் 5:5 |
| -அல்பாவும், ஓமேகாவும்: | வெளிப்படுத்தல் 1:8 |
| -நீதியுள்ள நியாயாதிபதி: | 2 தீமோத்தேயு 4:8 |
| -யூதருடைய இராஜா: | மாற்கு 15:26 |
| -இஸ்ரவேலரின் இராஜா: | யோவான் 1:49 |
| -விசுவாசத்தை துவக்குகிறவரும் முடிப்பவரும்: | எபிரெயர் 12:2 |
| -ஏக சக்கராதிபதி: | 1 தீமோத்தேயு 6:15 |
| -ஜீவாதிபதி: | அப்போஸ்தலர் 3:15 |
| -இரட்சிப்பின் அதிபதி: | எபிரெயர் 2:10 |
| -கர்த்தர்: | அப்போஸ்தலர் 2:36 |
| -இரட்சகர்: | யோவான் 4:42 |
| -கிறிஸ்து: | மாற்கு 1:1 |
| -வார்த்தை அல்லது லோகோஸ்: | யோவான் 1:1,14 |
| -தேவ ஆட்டுக்குட்டி: | யோவான் 1:29 |

## இயேசு கிறிஸ்துவின் பண்புகள்:

இயேசு கிறிஸ்து திரியேகத்தில் ஒருவராகவும், தேவனுடைய பண்புகளைப்போலவே, அதே பண்புகளைக் கொண்டவராகவும் இருக்கிறார். பின்வரும் வேதாகம வசனங்கள் இதை தெளிவாக காண்பிக்கிறது. இயேசு கிறிஸ்து:

| | |
|---|---|
| சர்வ வல்லவர்: | மத்தேயு 28:18 |
| சர்வ ஞானி: | மத்தேயு 16:30; யோவான் 21:17 |
| சர்வ வியாபி: | மத்தேயு 18:20; 28:20 |
| நித்தியர்: | யோவான் 1:1-2; 8:58 |
| மாறாதவர்: | எபிரெயர் 13:8 |

## இயேசுவின் தெய்வீகத்தன்மை:

இயேசுவின் தெய்வீகத்தைப்பற்றி யோவான் புத்தகம் அதிகமாக கூறுகின்ற காரணம், அவர் தேவனில் ஓர் பகுதியாக இருப்பதேயாகும். ஒவ்வொரு அதிகாரத்திலும் இது கூறப்படுகின்றது. தெரிவு செய்யப்பட்டுள்ள பின்வரும் வசனங்களை வாசித்து, கீறிட்ட இடத்தை நிரப்புங்கள்.

1:49............................................................

2:11............................................................

3:16............................................................

4:26............................................................

5:25............................................................

6:33............................................................

7:29............................................................

11:27............................................................

12:32............................................................

13:13............................................................

14:11............................................................

15:1 ............................................................

16:28............................................................

17:1 ............................................................

8:58..............................................................

9:37..............................................................

10:30..............................................................

18:11..............................................................

19:7 ..............................................................

20:28..............................................................

21:14..............................................................

அதிகாரம் இரண்டு

# பரிசுத்த ஆவியானவரின் பிரதிநிதித்துவம்

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

பரிசுத்த ஆவியானவருடைய அடையாள குறியீடுகளை இனம்காண்பீர்கள்.
ஒவ்வொரு அடையாள குறியீடுகளை விபரிப்பீர்கள்.
பரிசுத்த ஆவியானவரின் பெயர்களை பட்டியலிடுவீர்கள்.

## திறவுகோல் வசனம்:

**நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? (1 கொரிந்தியர் 3:16)**

## அறிமுகம்

பரிசுத்த ஆவியானவருடைய பெயர்களையும், அடையாளங்களையும் கவனிக்கிறபோது அவைகள் விசுவாசிகளிடத்தில் நடப்பிக்கிற அவருடைய சுபாவத்தையும், கிரியைகளையும் பற்றிய அறிவை எமக்கு கொடுக்கின்றது. பரிசுத்த ஆவியானவருடைய பெயர்கள், அடையாளங்கள் பற்றியே இவ்வதிகாரத்தில் கற்பதோடு, அவருடைய ஊழியத்தின் அறிமுகத்தையும் பெறுவோம்.

## பரிசுத்த ஆவியானவருடைய பெயர்கள்

பெயர்கள் ஒருவருடைய நிலையையும், அவரது கிரியையும் வெளிப்படுத்துகின்றது. உதாரணமாக, ஒரு நாட்டின் "ஜனாதிபதி" என்று கூறும்போது, அது அரசாங்கத்தில் அவரது நிலையையும், நாட்டின் தலைவர் என்ற வகையில் அவரின் கிரியையும் வெளிப்படுத்தும்.

அவ்வண்ணமாகவே வேதாகமத்திலுள்ள பரிசுத்த ஆவியானவருடைய பெயர்கள், அவரது நிலையையும், கிரியையும் வெளிப்படுத்துகின்றது. பரிசுத்த ஆவியானவர் அழைக்கப்படும் விதமானது:

### ஆவியாகிய தேவன்:

**நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? (1 கொரிந்தியர் 3:16)**

### கிறிஸ்துவின் ஆவி:

**தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக் குட்பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. (ரோமர் 8:9)**

## நித்திய ஆவி:

நித்திய ஆவி எனும் போது அவர் சதாகாலத்திற்குமுரியவராகவும், துவக்கமும், முடிவும் இல்லாதவராகவும் இருக்கிறார்:

**நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! (எபிரெயர் 9:14)**

## சத்திய ஆவி:

பரிசுத்த ஆவியானவர் சத்தியத்திற்கு ஆதாரமாக இருக்கிறார் என தேவனுடைய வசனமாகிய வேதாகமம் வெளிப்படுத்துகிறது. மனித ஜாதிக்கு இச்சத்தியத்தை அவர் வெளிப்படுத்துகிறார்:

**சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். (யோவான் 16:13)**

## கிருபையின் ஆவி:

**தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள். (எபிரெயர் 10:29)**

## ஜீவ ஆவி:

**கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. (ரோமர் 8:2)**

## மகிமையின் ஆவி:

**நீங்கள் கிறிஸ்துவின் நாமத்தினிமித்தம் நிந்திக்கப்பட்டால் பாக்கியவான்கள். ஏனென்றால் தேவனுடைய ஆவியாகிய மகிமையுள்ள ஆவியானவர் உங்கள்மேல் தங்கியிருக்கிறார். அவர்களாலே தூஷிக்கப்படுகிறார். உங்களாலே மகிமைப்படுகிறார். (1 பேதுரு 4:14)**

### ஞானமும் வெளிப்படுத்தலும் உள்ள ஆவி:

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்கு ஞானத்தைக் கொடுத்து இயேசு கிறிஸ்துவை பற்றி அறிந்து கொள்ள அவரை வெளிப்படுத்துகின்றார்:

> **நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் தேவனும் மகிமையின் பிதாவுமானவர் தம்மை நீங்கள் அறிந்துகொள்வதற்கான ஞானத்தையும் தெளிவையும் அளிக்கிற ஆவியை உங்களுக்குத்தந்தருளவேண்டுமென்றும்... (எபேசியர் 1:17)**

### தேற்றவாளர்:

விசுவாசிகள் பிரச்சனைகள், கவலைகள், தனிமை என்பவற்றிற்கு முகங்கொடுத்து இருக்கும் போது பரிசுத்த ஆவியானவர் அவர்களை தேற்றுகின்றார்:

> **என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே.... (யோவான் 14:26)**

### வாக்குத்தத்தத்தின் ஆவி:

பரிசுத்த ஆவியானவர் வாக்குத்தத்தத்தின் ஆவியாக இருக்கின்றார், தேவனுடைய வாக்குத்தத்தத்தை நிறைவேற்றும்படியாகவே ஆவியானவர் அனுப்பப்பட்டார்:

> **அன்றியும், அவர் அவர்களுடனே கூடி வந்திருக்கும்போது, அவர்களை நோக்கி: யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான். நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்தஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள்.**
>
> **ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். (அப்போஸ்தலர் 1:4-5)**

### பரிசுத்தத்தின் ஆவி:

> **இயேசுகிறிஸ்துவைக்குறித்துத் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப்பற்றி வாக்குத்தத்தம்பண்ணினபடி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவர், (ரோமர் 1:4)**

### விசுவாசத்தின் ஆவி:

> **விசுவாசித்தேன், ஆகையால் பேசினேன் என்று எழுதியிருக்கிறபடி, நாங்களும் அந்த விசுவாசத்தின் ஆவியை உடையவர்களாயிருந்து, விசுவாசிக்கிறபடியால் பேசுகிறோம். (2 கொரிந்தியர் 4:13)**

## புத்திர சுவிகாரத்தின் ஆவி:

பரிசுத்த ஆவியானவருக்கூடாக நாம் தேவனுடைய குடும்பத்திற்கு தேவனுடைய பிள்ளைகளை "சுவீகாரமாக" கொள்ளப்பட்டு உள்ளோம்:

> **அந்தப்படி, திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே, என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திரசுவிகாரத்தின் ஆவியைப் பெற்றீர்கள். (ரோமர் 8:15)**

## பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்கள்

பரிசுத்த ஆவியானவரை பிரதிநிதித்துவப்படுத்தும் பல அடையாளங்கள் வேதாகமத்தில் பாவிக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு அடையாளமும் ஒவ்வொரு காரியங்களை பிரதிநிதித்துவப்படுத்தும். குறியீடுகள் விஷேட அர்த்தங்களை கொண்டிருக்கின்றது. பரிசுத்த ஆவியானவரை பிரதிநிதித்துவப் படுத்தும் வேதாகமம் பாவிக்கின்ற அடையாளங்கள் கீழே தரப்படுகின்றன.

### புறா:

பரிசுத்த ஆவியானவர் புறாவைப் போன்று இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தின் போது வெளிப்பட்டார். இந்த பரிசுத்த ஆவியானவரின் அடையாளமானது பரிசுத்தத்தையும், சமாதானத்தையும் குறிக்கின்றது:

> **பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது: ஆவியானவர் புறாவைப்போல வானத்திலிருந்திறங்கி, இவர்மேல் தங்கினதைக் கண்டேன். (யோவான் 1:32)**

**ஒப்புதல்:**

> **பின்னும் யோவான் சாட்சியாகச் சொன்னது: ஆவியானவர் புறாவைப்போல வானத்திலிருந்திறங்கி, இவர்மேல் தங்கினதைக் கண்டேன். (யோவான் 1:32)**

**சமாதானம்:**

> **அப்பொழுது நான்: ஆ, எனக்குப் புறாவைப்போல் சிறகுகள் இருந்தால், நான் பறந்துபோய் இளைப்பாறுவேன். (சங்கீதம் 55:6)**

**பரிசுத்தம்:**

> **என் புறாவே, என் உத்தமியே ஒருத்தியே.... (உன்னதப்பாட்டு 6:9)**

### எண்ணெய்:

பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளமாக பரிசுத்த வேதாகமத்தில் எண்ணெய் பாவிக்கப்பட்டுள்ளது. வெளிச்சத்தை, சுகமாக்குதலை, அபிஷேக ஆராதனையை எண்ணெய் குறிப்பிடுகின்றது. இவை அனைத்து பரிசுத்த ஆவியானவருக்கு ஊடாக விசுவாசிகளுக்கு கொடுக்கப்படுகின்றது.

**கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார். தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்... (லூக்கா 4:18)**

**நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார். தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். (அப்போஸ்தலர் 10:38)**

**நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர். ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார் என்றும்... (எபிரெயர் 1:9)**

## தண்ணீர்:

ஜீவனையும், பாவமற கழுவப்படுதலையும் விசுவாசிக்கு பரிசுத்த ஆவியானவர் விசுவாசிக்குள் கொண்டு வருவதை தண்ணீர் அடையாளப்படுத்துகின்றது. பரிசுத்த ஆவியானவரை தண்ணீருக்கு ஒப்பிட்டு இயேசு பேசினார்:

**பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்.**

**வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.**

**தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச்சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை. (யோவான் 7:37-39)**

**தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன். உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன். (ஏசாயா 44:3)**

## முத்திரை:

தனக்குரியது என்றதை அடையாளப்படுத்திக் காட்டும் குறியீடே முத்திரை ஆகும். அவருடைய வேலை முடிக்கப்பட்டு விட்டது என்பதையும் இது சுட்டிக்காட்டும். பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகள் தேவனுக்குரியவர்கள் என முத்திரையிடுகின்றார். இரட்சிப்பின் கிரியைகள் யாவும் முடிந்து விட்டது எனவும் சுட்டிக் காண்பிக்கின்றது.

**நீங்களும் உங்கள் இரட்சிப்பின் சுவிசேஷமாகிய சத்திய வசனத்தைக் கேட்டு, விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம்பண்ணப்பட்ட பரிசுத்தஆவியால் அவருக்குள்**

**முத்திரைபோடப்பட்டீர்கள். (எபேசியர் 1:13)**

**அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்தஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள். (எபேசியர் 4:30)**

**அவர் நம்மை முத்திரித்து, நம்முடைய இருதயங்களில் ஆவியென்னும் அச்சாரத்தையும் கொடுத்திருக்கிறார். (2 கொரிந்தியர் 1:22)**

## காற்று:

காற்றும் பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளமாக கூறப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியானவரின் வல்லமையை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது:

**காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது. ஆவியினாலும் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். (யோவான் 3:8)**

**பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.**

**அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று. (அப்போஸ்தலர் 2:1-2)**

பௌதீக உலகில் உங்களால் காற்றை காண முடியாது, ஆனால் காற்றின் தாக்கத்தை கண்களால் காண முடியும். பௌதீக உலகில் காற்று விஷேச வேலையை செய்கின்றது. இந்த “காற்றின்” இவ்வேலைகள் பரிசுத்த ஆவியானவரின் வேலைக்கு இணையாக இருக்கின்றது:

### காற்று ஜீவனை உண்டாக்குகின்றது:

காற்று பல்வேறு திசைகளுக்கு விதைகளை பரவச்செய்து புதிய வளர்ச்சியை கொண்டு வருகிறது. பரிசுத்த ஆவியானவரும் விதையாகிய வேத வசனத்தை மனிதருடைய மனதிலும், இருதயத்திலும் வளர்ந்து பெருகச் செய்து புதிய ஜீவன்களை கொண்டு வருகின்றார். இந்த ஜீவன் இரட்சிப்பினால் வருகின்ற நித்திய ஜீவனாக மட்டுமிராமல், வேதவசனத்தின்படி ஆவிக்குரிய முதிர்ச்சியடைந்து ஆவிக்குரிய கனிகொடுக்க உதவுகிறது.

### காற்று கோதுமையையும், பதரையும் வேறுபிரிக்கின்றது:

குப்பை கூறங்களையும் பறக்கச்செய்து பரிசுத்தப்படுத்துகிறது. பரிசுத்த ஆவியானவர் விசுவாசியின் வாழ்வில் பரிசுத்தப்படுத்தும் வல்லமையாக கிரியைச் செய்கின்றார்.

### காற்று அனையாமல் கொழுந்து விட்டு எரியச் செய்யும்:

பரிசுத்த ஆவியானவராகிய காற்று தேவனுடைய பிள்ளைகளை எழுப்புதலடையச் செய்து உலகில் கொழுந்துவிட்டு பிரகாசிக்க செய்கிறார்.

## அக்கினி:

அக்கினி பரிசுத்த ஆவியானவருக்கு கொடுக்கப்படுகின்ற இன்னொரு அடையாளமாகும். அக்கினி அடையாளப்படுத்துவது:

**தேவனுடைய பிரசன்னத்தை:**

> **அங்கே கர்த்தருடைய தூதனானவர் ஒரு முட்செடியின் நடுவிலிருந்து உண்டான அக்கினிஜு வாலையிலே நின்று அவனுக்குத் தரிசனமானார். அப்பொழுது அவன் உற்றுப்பார்த்தான். முட்செடி அக்கினியால் ஜு வாலித்து எரிந்தும், அது வெந்துபோகாமல் இருந்தது. (யாத்திராகமம் 3:2)**

**தேவனுடைய ஒப்புதலை காண்பிக்கின்றது:**

> **அன்றியும் கர்த்தருடைய சந்நிதியிலிருந்து அக்கினி புறப்பட்டு, பலிபீடத்தின்மேல் இருந்த சர்வாங்க தகனபலியையும் கொழுப்பையும் எரித்துவிட்டது. ஜனங்களெல்லாரும் அதைக் கண்டபோது ஆரவாரித்து முகங்குப்புற விழுந்தார்கள். (லேவியராகமம் 9:24)**

**பாதுகாப்பிற்கும், வழிநடத்துதலுக்கும்:**

> **அவர்கள் இரவும் பகலும் வழிநடக்கக்கூடும்படிக்கு, கர்த்தர் பகலில் அவர்களை வழிநடத்த மேகஸ்தம்பத்திலும், இரவில் அவர்களுக்கு வெளிச்சங்காட்ட அக்கினிஸ்தம்பத்திலும் அவர்களுக்கு முன் சென்றார். (யாத்திராகமம் 13:21)**

**பரிசுத்தப்படுத்தலுக்கு:**

ஏசாயா தீர்க்கதரிசி பரிசுத்த ஆவியானவரின் அக்கினியால் சுத்திகரிக்கப்பட்டதை ஏசாயா 6:1-8ல் கூறுகின்றது. இவ்வேதப்பகுதியை வாசிக்கவும்.

**பரிசுத்த ஆவியானவரின் வரங்கள்:**

பரிசுத்த ஆவியானவர் முதன்முறையாக அருளப்பட்டபோது, அவரது பிரசன்னத்திற்கு அடையாளமாக அக்கினியே பாவிக்கப்பட்டுள்ளது:

> **அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது. (அப்போஸ்தலர் 2:3)**

**நியாயத்தீர்ப்பு:**

> **நம்முடைய தேவன் பட்சிக்கிற அக்கினியாயிருக்கிறாரே. (எபிரெயர் 12:29)**

## பரிசுத்த ஆவியானவை பிரதிநிதித்துவப்படுத்தல்

பரிசுத்த ஆவியானவருடைய பெயரும், அடையாளங்களும், அவருடைய நோக்கத்தையும், ஊழியத்தையும் வெளிப்படுத்துகிறது. அடுத்த அதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவரின் ஊழியங்களை மேலதிகமாகவும், விரிவாகவும் கற்போம்.

## சுய பரீட்சை:

١. திறவுகோள் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

-------------------------------------------------------------------------------------------

٢. அடையாளங்கள் என்றால் என்ன?

-------------------------------------------------------------------------------------------

٣. முதலாம் பட்டியலிலுள்ள பரிசுத்த ஆவியானவரின் அடையாளங்களை வாசிக்கவும். அதன் வரைவிலக்கணத்தை இரண்டாம் பட்டியலில் பார்க்கவும். அடையாளத்திற்கு முன்னால் உள்ள இடைவெளியில் வரைவிலக்கணம் குறிப்பது எது குறித்த எண்ணை எழுதவும்.

**பரிசுத்த ஆவியானவருடைய அடையாளங்கள்**

| **பட்டியல் ஒன்று** | **பட்டியல் இரண்டு** |
|---|---|
| ....... காற்று | 1. பரிசுத்ததிற்கும், சமாதானத்திற்கும் அடையாளம். |
| ....... முத்திரை | 2.வெளிச்சத்தையும், குணமாக்குதலையும், அபிஷேகிப்பதையும் சுட்டிக்காட்டுகிறது. |
| ....... தண்ணீர் | 3. ஜீவனையும், சுத்திகரிப்பையும் சுட்டிக்காட்டுகின்றது. |
| ....... புறா | 4. உரிமையை சுட்டிக்காட்டுகின்றது. |
| ....... எண்ணெய் | 5. வல்லமையை சுட்டிக்காட்டுகின்றது. |

٤. அக்கினி பரிசுத்த ஆவியானவருக்குரிய ஒரு அடையாளமாகும். அக்கினி அடையாளப்படுத்தும் ஆறு காரியங்களை எழுதவும்.

------------------------------------------ ------------------------------------------

------------------------------------------ ------------------------------------------

------------------------------------------ ------------------------------------------

5. பரிசுத்த ஆவியானவரின் பெயர்கள் பதின்மூன்றை இப்பாடத்தில் கவனித்தோம். உங்களால் எத்தனை பெயர்களை எழுது முடியும்?

-------------- -------------- -------------- -------------- -------------- --------------

-------------- -------------- -------------- -------------- -------------- --------------

--------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன.)

## மேலதிக படிப்பினைக்கு

புதிய ஏற்பாட்டில் ஆவியானவரைப்பற்றி 261 பகுதிகளில் சொல்லப்பட்டுள்ளது. பரிசுத்த ஆவியானவரைப்பற்றி:

-மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய சுவிசேஷ புத்தகங்களில் 56 தடவையும்,
-அப்போஸ்தலரில் 57 தடவையும்,
-புதிய ஏற்பாட்டு மற்ற புத்தகங்களில் 148 தடவையும் கூறப்பட்டுள்ளது.

புதிய ஏற்பாடு முழுவதிலும் வாசித்தறியுங்கள். பரிசுத்த ஆவியானவரைப் பற்றி வாசிக்கின்ற ஒவ்வொரு தடவையும் வட்டமிடுக. பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தைப்பற்றி மேலதிகமாக அறிந்து கொள்ள இப்பகுதியை கற்கவும்.

அதிகாரம் மூன்று

# பரிசுத்த ஆவியானவரின் ஊழியம்

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

சிருஷ்டிப்பில்
வேதவசனத்தில்
இஸ்ரவேலில்
சாத்தானில்
இயேசுவில்
பாவிகளில்
சபையில்
விசுவாசிகளில் பரிசுத்த ஆவியானவர் செய்கின்ற ஊழியத்தைக் குறித்து அறிந்துக் கொள்ள முடியும்.

## திறவுகோள் வசனம்:

**என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். (யோவான் 14:26)**

## அறிமுகம்

உலக சிருஷ்டிப்பு முதல், விசுவாசிகளினது தற்கால ஊழியங்கள் வரையிலும் பரிசுத்த ஆவியானவருடைய கிரியைகளை விபரிப்பதே இவ்வதிகாரத்தின் நோக்கமாகும்.

## சிருஷ்டிப்பு

உலக சிருஷ்டிப்பில் பரிசுத்த ஆவியானவர் கிரியை செய்தார்:

**பூமியானது ஒழுங்கின்மையும் வெறுமையுமாய் இருந்தது. ஆழத்தின்மேல் இருள் இருந்தது. தேவ ஆவியானவர் ஜலத்தின்மேல் அசைவாடிக்கொண்டிருந்தார். (ஆதியாகமம் 1:2)**

**நீர் உம்முடைய ஆவியை அனுப்பும்போது, அவைகள் சிருஷ்டிக்கப்படும். நீர் பூமியின் ரூபத்தையும் புதிதாக்குகிறீர். (சங்கீதம் 104:30)**

## வேத வசனம்

பரிசுத்த வேதாகமம் அல்லது பரிசுத்த வேதவசனங்கள் என்று அழைக்கப்படும் தேவனுடைய

எழுதப்பட்ட வார்த்தையில் பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் அடங்கியுள்ளது:

### வெளிப்பாடு:

தேவனுடைய செய்தியை எழுதும்படி மனிதரிடம் அவர் பேசினார்:

> **தீர்க்கதரிசனமானது ஒருகாலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள். (2 பேதுரு 1:21)**

### அருளப்படல்:

எழுத்தாளர்கள் பிழையின்றி தேவ செய்தியை எழுதுவதற்கு அவர் வழிகாட்டினர்:

> **வேதவாக்கியங்களெல்லாம் தேவ ஆவியினால் அருளப்பட்டிருக்கிறது. தேவனுடைய மனுஷன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவனாகவும் இருக்கும்படியாக,**
>
> **அவைகள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது. (2 தீமோத்தேயு 3:16-17)**

### ஒளியூட்டப்படல்:

சுவிசேஷத்தின் ஒளி மனிதருடைய மனங்களில் பிரகாசிக்கச் செய்தார்:

> **என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். (யோவான் 14:26)**

## இஸ்ரவேல்

உலகைக் குறித்தான தனது பெரிதான திட்டத்தை நிறைவேற்றவும், தன்னையும் வெளிப்படுத்தவும், தேவன் இஸ்ரவேலை தெரிந்தெடுத்தார். இஸ்ரவேலிலிருந்தே மேசியா வந்து மனிதரை பாவத்திலிருந்து இரட்சிப்பார். விசுவாசிகளினது வெற்றிக்கும், தோல்விக்கும் சிறந்த உதாரணமாக இஸ்ரவேலரே இருக்கின்றனர். இஸ்ரவேலின் தலைநகராகிய எருசலேமில் இருந்தே சுவிசேஷத்தின் செய்தி உலகமெங்கும் பரவியது.

பரிசுத்த ஆவியானவருடைய கிரியைகள் இஸ்ரவேல் ஜாதியாரிடையே ஆரம்பம் முதலே இருந்தது. பரிசுத்த ஆவியானவர்:

### இஸ்ரவேல் தலைவர்களிடையே இறங்கினார்:

இக்கையேட்டில் ஏராளமான உதாரணங்களும், வசனங்களும் கொடுக்கப்பட்டுள்ளது. "மேலதிக படிப்பினைக்கு" என்ற பகுதியில் வேதவசனத்தின் பட்டியலும் கொடுக்கப்படுகின்றது. பழைய ஏற்பாட்டுக் காலத்தில், பரிசுத்த ஆவியானவர் மக்களிடையே எவ்விதமாக கிரியை செய்தார் என்பதற்கான விளக்கங்கள் இப்பாடம் தருகின்றது.

## இஸ்ரவேல் ஆராதிக்கும் இடங்களில் சமூகமளித்தார்:

**என் அப்பொழுது ஒரு மேகம் ஆசரிப்புக்கூடாரத்தை மூடினது. கர்த்தருடைய மகிமை வாசஸ்தலத்தை நிரப்பிற்று. (யாத்திராகமம் 40:34)**

**அப்பொழுது ஆசாரியர்கள் பரிசுத்த ஸ்தலத்திலிருந்து புறப்படுகையில், மேகமானது கர்த்தருடைய ஆலயத்தை நிரப்பிற்று. (1 இராஜாக்கள் 8:10)**

## வாக்குத்தத்தம் பண்ணிய நாட்டிற்குள் வழிநடத்தினார்:

**அவர்களுக்கு அறிவை உணர்த்த உம்முடைய நல் ஆவியைக் கட்டளையிட்டீர். அவர்கள் வாய்க்கு உம்முடைய மன்னாவை அருளி, அவர்கள் தாகத்துக்குத் தண்ணீரைக் கொடுத்தீர்.**

**இப்படி நாற்பது வருஷமாக வனாந்தரத்தில் அவர்களுக்கு ஒன்றும் குறைவுபடாதபடிக்கு, அவர்களைப் பராமரித்து வந்தீர். (நெகேமியா 9:20-21)**

## உபத்திரவ காலத்தில் இஸ்ரவேலருக்காக வருவார்:

எதிர்காலத்தில் உலகில் பெரிதான உபத்திரவம் ஏற்படும். தேவன் அவ்வேளையில் இஸ்ரவேலரை அடையாளமிட்டு பாதுகாப்பார்.

**ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக்கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவரக்கண்டேன். அவன், பூமியையும் சமுத்திரத்தையும் சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம் பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி:**

**நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்.**

**முத்திரைபோடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக்கேட்டேன். இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரைபோடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர். (வெளிப்படுத்தல் 7:2-4)**

## ஆயிரம் வருட அரசாட்சியில் இஸ்ரவேலிடம் வருவார்:

ஆயிரம் வருட அரசாட்சிக்காலத்தில் பூமியனைத்தையும் இயேசு சமாதானத்துடன் ஆளுகை செய்வார்:

**நான் தாவீது குடும்பத்தாரின்மேலும் எருசலேம் குடிகளின்மேலும் கிருபையின் ஆவியையும் விண்ணப்பங்களின் ஆவியையும் ஊற்றுவேன். அப்பொழுது அவர்கள் தாங்கள் குத்தின என்னை நோக்கிப்பார்த்து, ஒருவன்தன் ஒரே பேறானவனுக்காகப் புலம்புகிறதுபோல எனக்காகப் புலம்பி, ஒருவன் தன் தலைச்சன் பிள்ளைக்காகத் துக்கிக்கிறதுபோல எனக்காக மனங்கசந்து துக்கிப்பார்கள். (சகரியா 12:10)**

## சாத்தான்

பரிசுத்த ஆவியானவரை பொருத்தளவில் சாத்தானிடமும் ஊழியம் உண்டு. பரிசுத்த ஆவியானவர் சாத்தானின் ஆவிக்குரிய சேனையையும், வல்லமையையும் கட்டுப்படுத்தி வைப்பார்:

**வெள்ளம்போல் சத்துரு வரும்போது, கர்த்தருடைய ஆவியானவர் அவனுக்கு விரோதமாய்க் கொடியேற்றுவார். (ஏசாயா 59:19)**

பரிசுத்த ஆவியானவர் உலகிலிருந்து எடுத்துக் கொள்ளப்படும்போது, அந்திக்கிறிஸ்து உலகை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவான். அந்திகிறிஸ்துவே தீய உலகின் அதிபதி:

**அக்கிரமத்தின் இரகசியம் இப்பொழுதே கிரியைசெய்கிறது: ஆனாலும் தடைசெய்கிறவன் நடுவிலிருந்து நீக்கப்படுமுன்னே அது வெளிப்படாது.**

**நீக்கப்படும்போது, அந்த அக்கிரமக்காரன் வெளிப்படுவான். அவனைக் கர்த்தர் தம்முடைய வாயின் சுவாசத்தினாலே அழித்து, தம்முடைய வருகையின் பிரசன்னத்தினாலே நாசம்பண்ணுவார்.**

**அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்,**

**கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனடியால் அப்படி நடக்கும்.**

**ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு,**

**அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார். (1 தெசலோனிக்கேயர் 2:7-12)**

## இயேசு

இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவருடைய ஊழியம் தெளிவாக காண்பிக்கப்படுகின்றது. இயேசு கிறிஸ்து:

### ஆவியானவரால் உற்பத்தியானார்:

**தேவதூதன் அவளுக்குப் பிரதியுத்தரமாக: பரிசுத்தஆவி உன்மேல் வரும். உன்னதமானவருடைய பலம் உன்மேல் நிழலிடும். ஆதலால் உன்னிடத்தில் பிறக்கும் பரிசுத்தமுள்ளது தேவனுடைய குமாரன் என்னப்படும். (லூக்கா 1:35)**

**இயேசுகிறிஸ்துவினுடைய ஜெநநத்தின் விவரமாவது: அவருடைய தாயாகிய மரியாள்**

யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில், அவர்கள் கூடிவருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள் என்று காணப்பட்டது.

அவன் இப்படிச் சிந்தித்துக்கொண்டிருக்கையில், கர்த்தருடைய தூதன் சொப்பனத்தில் அவனுக்குக் காணப்பட்டு: தாவீதின் குமாரனாகிய யோசேப்பே, உன் மனைவியாகிய மரியாளைச் சேர்த்துக்கொள்ள ஐயப்படாதே, அவளிடத்தில் உற்பத்தியாயிருக்கிறது பரிசுத்த ஆவியினால் உண்டானது. (மத்தேயு 1:18,20)

## ஆவியானவராலே அபிஷேகிக்கப்பட்டார்:

இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது. தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். (மத்தேயு 3:16)

கர்த்தருடைய ஆவியானவர் என்மேலிருக்கிறார். தரித்திரருக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படி என்னை அபிஷேகம்பண்ணினார். இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலையையும், குருடருக்குப் பார்வையையும் பிரசித்தப்படுத்தவும், நொறுங்குண்டவர்களை விடுதலையாக்கவும்... (லூக்கா 4:18)

நசரேயனாகிய இயேசுவைத் தேவன் பரிசுத்தஆவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம்பண்ணினார். தேவன் அவருடனேகூட இருந்தபடியினாலே அவர் நன்மைசெய்கிறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித்திரிந்தார். (அப்போஸ்தலர் 10:38)

நீர் நீதியை விரும்பி, அக்கிரமத்தை வெறுத்திருக்கிறீர். ஆதலால், தேவனே, உம்முடைய தேவன் உமது தோழரைப் பார்க்கிலும் உம்மை ஆனந்த தைலத்தினால் அபிஷேகம்பண்ணினார் என்றும்... (எபிரெயர் 1:9)

## ஆவியானவரால் முத்திரையிடப்பட்டார்:

அழிந்துபோகிற போஜனத்திற்காக அல்ல, நித்தியஜீவன்வரைக்கும் நிலைநிற்கிற போஜனத்திற்காகவே கிரியை நடப்பியுங்கள். அதை மனுஷகுமாரன் உங்களுக்குக் கொடுப்பார். அவரைப் பிதாவாகிய தேவன் முத்திரித்திருக்கிறார் என்றார். (யோவான் 6:27)

## ஆவியானவரால் வழிநடத்தப்பட்டார்:

அப்பொழுது இயேசு பிசாசினால் சோதிக்கப்படுவதற்கு ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டார். (மத்தேயு 4:1)

## ஆவியானவரால் பெலப்படுத்தப்பட்டார்:

நான் தேவனுடைய ஆவியினாலே பிசாசுகளைத் துரத்துகிறபடியால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்தில் வந்திருக்கிறதே. (மத்தேயு 12:28)

## ஆவியானவராலே நிரப்பப்பட்டார்:

இயேசு பரிசுத்த ஆவியினாலே நிறைந்தவராய் யோர்தானை விட்டுத் திரும்பி, ஆவியானவராலே வனாந்தரத்திற்குக் கொண்டுபோகப்பட்டு... (லூக்கா 4:1)

தேவனால் அனுப்பப்பட்டவர் தேவனுடைய வார்த்தைகளைப் பேசுகிறார். தேவன் அவருக்குத் தமது ஆவியை அளவில்லாமல் கொடுத்திருக்கிறார். (யோவான் 3:34)

## ஆவியிலே கலங்கினார்:

அவள் அழுகிறதையும் அவளோடே கூட வந்த யூதர்கள் அழுகிறதையும் இயேசு கண்டபோது ஆவியிலே கலங்கித்துயரமடைந்து: (யோவான் 11:33)

## ஆவியில் களி கூர்ந்தார்:

அந்த வேளையில் இயேசு ஆவியிலே களிகூர்ந்து: பிதாவே! வானத்துக்கும் பூமிக்கும் ஆண்டவரே! இவைகளை நீர் ஞானிகளுக்கும் கல்விமான்களுக்கும் மறைத்து, பாலகருக்கு வெளிப்படுத்தினபடியால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன். ஆம், பிதாவே! இப்படிச் செய்வது உம்முடைய திருவுளத்துக்குப் பிரியமாயிருந்தது. (லூக்கா 10:21)

## ஆவியானவரால் ஒப்புக்கொள்ளப்பட்டார்:

நித்திய ஆவியினாலே தம்மைத்தாமே பழுதற்ற பலியாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்த கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச்சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ்வளவு நிச்சயம்! (எபிரெயர் 9:14)

## ஆவியானவரால் உயிர்ப்பிக்கப்பட்டார்:

ஏனெனில், கிறிஸ்துவும் நம்மைத் தேவனிடத்தில் சேர்க்கும்படி அநீதியுள்ளவர்களுக்குப் பதிலாக நீதியுள்ளவராய்ப் பாவங்களினிமித்தம் ஒருதரம் பாடுபட்டார். அவர் மாம்சத்திலே கொலையுண்டு, ஆவியிலே உயிர்ப்பிக்கப்பட்டார். (1 பேதுரு 3:18)

இயேசுகிறிஸ்துவைக்குறித்துத் தேவன் தம்முடைய தீர்க்கதரிசிகள் மூலமாய்ப் பரிசுத்த வேதாகமங்களில் முன்னே தம்முடைய சுவிசேஷத்தைப்பற்றி வாக்குத்தத்தம்பண்ணினபடி கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவானவர், (ரோமர் 1:4)

## ஆவியானவருக்கூடாக சீடருக்கு கட்டளையிட்டார்:

**அவர் எடுத்துக்கொள்ளப்பட்ட நாள் வரைக்கும் செய்யவும் உபதேசிக்கவும் தொடங்கின எல்லாவற்றையுங் குறித்து, முதலாம் பிரபந்தத்தை உண்டுபண்ணினேன். (அப்போஸ்தலர் 1:2)**

## பாவிகள்

பாவிகளுக்கிடையிலான பரிசுத்த ஆவியானவருடைய ஊழியத்தைப்பற்றி இயேசு கிறிஸ்து பறைசாற்றினார்:

**நான் உங்களுக்கு உண்மையைச் சொல்லுகிறேன். நான் போகிறது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கும். நான் போகாதிருந்தால், தேற்றரவாளன் உங்களிடத்தில் வரார். நான் போவேனேயாகில் அவரை உங்களிடத்திற்கு அனுப்புவேன்.**

**அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.**

**அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும்,**

**நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும்,**

**இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துவார். (யோவான் 16:7-11)**

## சபை

பரிசுத்த ஆவியானவர் சபையில் பல நோக்கங்களைக் கொண்டு பணி செய்கிறார். அவர்....

### ஸ்தாபிக்கின்றார்:

**ஆகையால், நீங்கள் இனி அந்நியரும் பரதேசிகளுமாயிராமல், பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும் தேவனுடைய வீட்டாருமாயிருந்து,**

**அப்போஸ்தலர் தீர்கதரிசிகள் என்பவர்களுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டப்பட்டவர்களுமாயிருக்கிறீர்கள். அதற்கு இயேசுகிறிஸ்து தாமே மூலைக்கல்லாயிருக்கிறார்.**

**அவர்மேல் மாளிகை முழுவதும் இசைவாய் இணைக்கப்பட்டு, கர்த்தருக்குள் பரிசுத்த ஆலயமாக எழும்புகிறது.**

**அவர்மேல் நீங்களும் ஆவியினாலே தேவனுடைய வாசஸ்தலமாகக் கூட்டிக்கட்டப்பட்டுவருகிறீர்கள். (எபேசியர் 2:19-22)**

### ஆராதனையை உயிரடையச் செய்கின்றார்:

ஏனெனில், மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிற நாமே விருத்தசேதனமுள்ளவர்கள். (பிலிப்பியர் 3:3)

### ஊழியம் செய்ய வழிநடத்துகின்றார்:

ஆவியானவர்: நீ போய், அந்த இரதத்துடனே சேர்ந்துகொள் என்று பிலிப்புடனே சொன்னார். (அப்போஸ்தலர் 8:29)

அவர்கள் பிரிகியா கலாத்தியா நாடுகளைக் கடந்துபோனபோது, ஆசியாவிலே வசனத்தைச் சொல்லாதபடிக்குப் பரிசுத்தஆவியினாலே தடைபண்ணப்பட்டு,

மீசியா தேசமட்டும் வந்து, பித்தினியாநாட்டுக்குப் போகப் பிரயத்தனம் பண்ணினார்கள். ஆவியானவரோ அவர்களைப் போகவொட்டாதிருந்தார்.

அந்தத் தரிசனத்தை அவன் கண்டபோது, அவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி கர்த்தர் எங்களை அழைத்தாரென்று நாங்கள் நிச்சயித்துக்கொண்டு, உடனே மக்கெதொனியாவுக்குப் புறப்பட்டுப்போகப் பிரயத்தனம்பண்ணி, (அப்போஸ்தலர் 16:6,7,10)

அவர்கள் கர்த்தருக்கு ஆராதனைசெய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்தஆவியானவர் திருவுளம்பற்றினார்.

அப்படியே அவர்கள் பரிசுத்தஆவியினால் அனுப்பப்பட்டுச் செலூக்கியாபட்டணத்துக்கு வந்து, கப்பல் ஏறி, அங்கிருந்து சீப்புருதீவுக்குப் போனார்கள். (அப்போஸ்தலர் 13:2,4)

### ஊழியர்களை தேர்ந்தெடுக்கின்றார்:

ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். (அப்போஸ்தலர் 20:28)

### பிரசங்கிகளை அபிஷேகிக்கிறார்:

என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாயிருந்தது. (1 கொரிந்தியர் 2:5)

### மூப்பர்களை வழிநடத்துகிறார்:

**அவசியமான இவைகளையல்லாமல் பாரமான வேறொன்றையும் உங்கள்மேல் சுமத்தாமலிருப்பது பரிசுத்தஆவிக்கும் எங்களுக்கும் நலமாகக் கண்டது. (அப்போஸ்தலர் 15:29)**

## வல்லமையால் அபிஷேகிக்கிறார்:

**பெந்தெகொஸ்தே என்னும் நாள் வந்தபோது, அவர்களெல்லாரும் ஒருமனப்பட்டு ஓரிடத்திலே வந்திருந்தார்கள்.**

**அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.**

**அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது.**

**அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள். (அப்போஸ்தலர் 2:1-4)**

### விசுவாசிகள்

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளின் வாழ்வைக் குறித்து விஷேசித்த நோக்கத்தைக் கொண்டிருக்கிறார். அவர்...

## குற்றத்தை கண்டித்தல்:

மனிதருக்கும், மனுஷிகளுக்கும் பாவத்தை குறித்து கண்டித்துணர்த்துவது பரிசுத்த ஆவியானவருடைய வேலையாகும். பரிசுத்த ஆவியானவருடைய கிரியையின்றி உங்களால் ஒரு விசுவாசியாக மாற முடியாது:

**அவர் வந்து, பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக் கண்டித்து உணர்த்துவார்.**

**அவர்கள் என்னை விசுவாசியாதபடியினாலே பாவத்தைக்குறித்தும்,**

**நீங்கள் இனி என்னைக் காணாதபடிக்கு நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினாலே நீதியைக்குறித்தும்,**

**இந்த உலகத்தின் அதிபதி நியாயந்தீர்க்கப்பட்டதினாலே நியாயத்தீர்ப்பைக்குறித்தும், கண்டித்து உணர்த்துவார். (யோவான் 16:8-11)**

## மறுபடியும் பிறத்தல்:

பரிசுத்த ஆவியானவர் நீங்கள் விசுவாசியாகும் போது உங்கள் வாழ்வை மாற்றுகின்றார்:

**நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல், தமது இரக்கத்தின்படியே, மறுஜென்ம முழுக்கினாலும், பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார். (தீத்து 3:5)**

**இயேசு அவனுக்கு பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.**

**அதற்கு நிக்கொதேமு: ஒரு மனுஷன் முதிர்வயதாயிருக்கையில் எப்படிப் பிறப்பான்? அவன் தன் தாயின் கர்ப்பத்தில் இரண்டாந்தரம் பிரவேசித்துப் பிறக்கக் கூடுமோ என்றான்.**

**இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன்.**

**மாமிசத்தினால் பிறப்பது மாம்சமாயிருக்கும், ஆவியினால் பிறப்பது ஆவியாயிருக்கும்.**

**நீங்கள் மறுபடியும் பிறக்கவேண்டும் என்று நான் உனக்குச் சொன்னதைக் குறித்து அதிசயப்படவேண்டாம். (யோவான் 3:3-7)**

## பரிசுத்தமாக்குதல்:

பரிசுத்த ஆவியானவர் இரட்சித்து வாழ்வை மாற்றுவதோடு, உத்தமமாய் ஜீவிக்க உதவுகிறார்.

**கர்த்தருக்குப் பிரியமான சகோதரரே, நீங்கள் ஆவியினாலே பரிசுத்தமாக்கப்படுகிறதினாலும், சத்தியத்தை விசுவாசிக்கிறதினாலும் இரட்சிப்படையும்படிக்கு, ஆதிமுதல் தேவன் உங்களைத் தெரிந்துகொண்டபடியினாலே, நாங்கள் உங்களைக்குறித்து எப்பொழுதும் தேவனை ஸ்தோத்திரிக்கக் கடனாளிகளாயிருக்கிறோம். (2 தெசலோனிக்கேயர் 2:13)**

## அபிஷேகிக்கிறார்:

இந்த புத்தகத்தின் நான்காம் அதிகாரம் பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தின் அனுபவத்தை குறித்து கற்றுத் தரும்:

**அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள். (அப்போஸ்தலர் 2:4)**

## வாசம் செய்கின்றார்:

பெலப்படுத்துவதும், புதிய சுபாவத்தை இரட்சிப்புக்கூடாக பெறச் செய்வதுவே அவர் வாசம் செய்வதின் நோக்கமாயிருக்கின்றது:

**உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும்**

**அறியீர்களா? (1 கொரிந்தியர் 6:19)**

**நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? (1 கொரிந்தியர் 3:16)**

**இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான். பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. (2 கொரிந்தியர் 5:17)**

**பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்படி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள்.**

**மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது. நீங்கள் செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது.**

**ஆவியினால் நடத்தப்படுவீர்களானால், நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டவர்களல்ல. (கலாத்தியர் 5:16-18)**

பௌதீக உலகில் ஒரு வீட்டில் வாழுகின்ற ஒருவனின் குணாதிசயங்களை அவ்வீடு பிரதிபலித்துக் காண்பிக்கும். எங்களுடைய ஆவிக்குரிய வீடும் பரிசுத்த ஆவியானவர் வாசம் செய்யும் போது அவருடைய குணாதிசயத்தை வெளிப்படுத்தும்.

## பெலப்படுத்துகின்றார்:

**நீங்கள் அவருடைய ஆவியினாலே உள்ளான மனுஷனில் வல்லமையாய்ப் பலப்படவும், விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும்... (எபேசியர் 3:16)**

## ஐக்கியப்படுத்துகின்றார்:

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளிடையே ஒருவருக்கொருவர் ஒரு மனதை உருவாக்குவார். இது "ஆவியானவருடைய அந்நியோன்னிய ஐக்கியம்" என அழைக்கப்படுகிறது:

**அப்படியே கர்த்தரோடிசைந்திருக்கிறவனும், அவருடனே ஒரே ஆவியாயிருக்கிறான். (1 கொரிந்தியர் 6:17)**

**எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம். ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது. அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்.**

**நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். (1 கொரிந்தியர் 12:12-13)**

## பரிந்து பேசுகின்றார்:

**அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவிசெய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார். (ரோமர் 8:26)**

**நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகா பரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக்கொண்டு பரிசுத்தஆவிக்குள் ஜெபம்பண்ணி.... (யூதா 20)**

**எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள். (எபேசியர் 6:18)**

## வழிநடத்துகின்றார்:

**சத்தியஆவியாகிய அவர் வரும்போது, சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார். அவர் தம்முடைய சுயமாய்ப் பேசாமல், தாம் கேள்விப்பட்டவைகள் யாவையுஞ்சொல்லி, வரப்போகிற காரியங்களை உங்களுக்கு அறிவிப்பார். (யோவான் 16:13)**

**மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். (ரோமர் 8:14)**

## அன்பை நிரூபித்து காட்டுகின்றார்:

பரிசுத்த ஆவியானவர் கிறிஸ்துவின் அன்பை விசுவாசிகளுக்கூடாக காண்பிக்கிறார்:

**மேலும் நமக்கு அருளப்பட்ட பரிசுத்தஆவியினாலே தேவஅன்பு நம்முடைய இருதயங்களில் ஊற்றப்பட்டிருக்கிறபடியால், அந்த நம்பிக்கை நம்மை வெட்கப்படுத்தாது. (ரோமர் 5:5)**

## கிறிஸ்துவின் சாயலாக மாற்றுகின்றார்:

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளை கிறிஸ்துவின் சாயலாக மாற்றுகின்றார்:

**நாமெல்லாரும் திறந்த முகமாய்க் கர்த்தருடைய மகிமையைக் கண்ணாடியிலே காண்கிறதுபோலக் கண்டு, ஆவியாயிருக்கிற கர்த்தரால் அந்தச் சாயலாகத்தானே மகிமையின்மேல் மகிமையடைந்து மறுரூபப்படுகிறோம். (2 கொரிந்தியர் 3:18)**

## சத்தியத்தை வெளிப்படுத்துகின்றார்:

**நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார். அந்த ஆவியானவர் எல்லாவற்றையும், தேவனுடைய ஆழங்களையும், ஆராய்ந்திருக்கிறார். (1 கொரிந்தியர் 2:10)**

## கற்பிக்கின்றார்:

நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை. அந்த அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது. அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக. (1 யோவான் 2:27)

## இரட்சிப்பை உறுதிப்படுத்துகின்றார்:

நாம் தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிறோமென்று ஆவியானவர்தாமே நம்முடைய ஆவியுடனேகூடச் சாட்சிகொடுக்கிறார். (ரோமர் 8:16)

அவருடைய கட்டளைகளைக் கைக்கொள்ளுகிறவன் அவரில் நிலைத்திருக்கிறான், அவரும் அவனில் நிலைத்திருக்கிறார். அவர் நம்மில் நிலைத்திருக்கிறதை அவர் நமக்குத் தந்தருளின ஆவியினாலே அறிந்திருக்கிறோம். (1 யோவான் 3:24)

## விடுதலைக் கொடுக்கின்றார்:

கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே. (ரோமர் 8:2)

கர்த்தரே ஆவியானவர். கர்த்தருடைய ஆவி எங்கேயோ அங்கே விடுதலையுமுண்டு. (2 கொரிந்தியர் 3:17)

## தேற்றுகின்றார்:

கர்த்தருக்குப் பயப்படுகிற பயத்தோடும், பரிசுத்தஆவியின் ஆறுதலோடும்... (அப்போஸ்தலர் 9:31)

உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது. அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.

என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். (யோவான் 14:17,26)

## உயிர்ப்பிக்கின்றார்:

அன்றியும் இயேசுவை மரித்தோரிலிருந்து எழுப்பினவருடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பினவர் உங்களில் வாசமாயிருக்கிற

**தம்முடைய ஆவியினாலே சாவுக்கேதுவான உங்கள் சரீரங்களையும் உயிர்ப்பிப்பார். (ரோமர் 8:11)**

## பேசுகின்றார்:

**அவர்கள் உங்களைக் கொண்டுபோய் ஒப்புக்கொடுக்கும்போது, நீங்கள் என்ன பேசுவோமென்று முன்னதாகக் கவலைப்படாமலும் சிந்தியாமலுமிருங்கள். அந்த நாழிகையிலே உங்களுக்கு எது அருள்செய்யப்படுமோ அதையே பேசுங்கள். ஏனெனில் பேசுகிறவர்கள் நீங்களல்ல, பரிசுத்த ஆவியே பேசுகிறவர். (மாற்கு 13:11)**

## தேவனுடைய வல்லமையை உறுதிப்படுத்துகின்றார்:

**உங்கள் விசுவாசம் மனுஷருடைய ஞானத்திலல்ல, தேவனுடைய பெலத்தில் நிற்கும்படிக்கு,**

**என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாயிராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்பட்டதாயிருந்தது. (1 கொரிந்தியர் 2:4-5)**

## ஆராதனையை உயிர்ப்பிக்கின்றார்:

**தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுதுகொள்ளுகிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும் என்றார். (யோவான் 4:24)**

## சாட்சியிட வல்லமையளிக்கின்றார்:

பரிசுத்த ஆவியால் அபிஷேகம் பெற்றுள்ளார் என்பதற்காக உண்மையான ஆதாரம் சாட்சியிட வல்லமையை கொண்டிருப்பதாகும்.

**பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

## வரங்களை கொடுப்பதும், கனியை அபிவிருத்தி செய்வதும்:

பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளுக்கு வரங்களைக் கொடுக்கின்றார். சபையில் சிறப்பான முறையில் செயல்பட தேவனால் கொடுக்கப்படுகின்ற சிறந்த திறமை இதுவாகும். விசுவாசிகளுடைய வாழ்விலே கனியை அபிவிருத்தி செய்யவும் பரிசுத்த ஆவியானவர் உதவுகிறார். ஆவியின் கனி, பரிசுத்த ஆவியானவருடைய சுபாவத்தை, விசுவாசியின் வாழ்வில் வெளிப்படுத்திக் காண்பிக்கிறது. இவைகளின் முக்கியத்துவம் காரணமாக, பரிசுத்த ஆவியானவருடைய சுபாவத்தை, விசுவாசியின் வாழ்வில் வெளிப்படுத்திக் காண்பிக்கிறது. இவைகளின் முக்கியத்துவம் காரணமாக, பரிசுத்த ஆவியானவருடைய வரங்களும் கனியும் வேறு அதிகாரங்களிலே கற்றுக் கொடுக்கப்படும்.

## சுய பரீட்சை:

١. திறவுகோள் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

٢. இஸ்ரவேல் ஜாதியாருடன் பரிசுத்த ஆவியானவர் கொண்டுள்ள ஐந்து உறவின் நோக்கத்தை பட்டியலிடுக.

------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------

3. இக்கூற்று சரியா? பிழையா? உலக சிருஷ்டிப்பில் பரிசுத்த ஆவியானவர் பங்கு கொண்டார்.

இக்கூற்று ---------------

4. கீழ்க்காணும் சொற்களுக்குரிய அர்த்தத்தை கண்டுப்பிடித்து சொற்களுக்கு எதிரே இலக்கத்தை குறிப்பிடவும்.

**பரிசுத்த ஆவியானவருக்கும் வேத வாக்கியங்களுக்கும் உள்ள சம்பந்தம்**

| | |
|---|---|
| ------------ஒளியூட்டல் | 1.தேவனுடைய செய்தியை மனித எழுத்தாளர்களுடன் அவர் பேசினார். |
| -----------வெளிப்படுத்தல் | 2.பரிசுத்த ஆவியானவருடைய தற்போதைய ஊழியமானது, சுவிசேஷத்தை மக்கள் விளங்கிக் கொள்ளும் உதவி செய்தலாகும். |
| -----------அருளப்படல் | 3.எழுத்தாளர்கள் எழுத வேண்டிய செய்தியை பிழையின்றி எழுத ஆவியானவர் வழிநடத்தினார். |

5. பாவிகளுடைய வாழ்வு சம்பந்தமாக பரிசுத்த ஆவியானவரின் நோக்கம் என்ன என்பதை குறித்த வேத வசனத்தை தரவும்.

--------------------------------------------------------------------------------

6. சாத்தானைப் பொறுத்தளவில் பரிசுத்த ஆவியானவருடைய ஊழியம் என்ன?

--------------------------------------------------------------------------------

7. இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவர் கொண்டிருந்த 11 நோக்கங்களை இந்த பாடத்தில் சம்பாஷிக்கப்பட்டுள்ளது. அவைகளில் உங்களால் எத்தனை நோக்கங்களை எழுத முடியும்?

------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------

------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------

------------------------------

8. இந்த அதிகாரத்தில் சபையைக் குறித்து பரிசுத்தாவியானவருக்கு இருக்கின்ற ஏழு நோக்கங்கள் சம்பாஷிக்கப்பட்டது. உங்களால் எத்தனை எழுத முடியும்?

------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------

------------------------------ ------------------------------

9. இந்த அதிகாரத்தில் விசுவாசிகளின் வாழ்வைக் குறித்து பரிசுத்தாவியானவருக்குள்ள இருபது நோக்கங்கள் சம்பாஷிக்கப்பட்டன. அவைகளில் உங்களால் எத்தனை நோக்கங்களை எழுத முடியும்?

------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------

------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------

------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------

------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------

------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------

10. பரிசுத்த ஆவியானவரை ஒரு விசுவாசி பெற்றுள்ளார் என்பதற்கான உண்மையான அடையாளம் என்ன?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. இஸ்ரவேலரைக்குறித்து பரிசுத்தாவியானவருக்குள்ள ஊழியங்களைப்பற்றி பின்வரும் தேவ வாக்கியங்களுக்கூடாக மேலதிகமாக கற்றுக்கொள்ளவும்:

   ஆதியாகமம் 41:38
   எண்ணாகமம் 11:17; 11:25; 27:18
   நியாயாதிபதிகள் 3:10; 6:34; 11:29; 14:6,19; 15:14-15
   1 சாமுவேல் 10:10; 11:6; 16:13
   1 இராஜாக்கள் 18:12
   2 இராஜாக்கள் 2:15-16
   எசேக்கியேல் 2:2
   தானியேல் 4:9; 5:11; 6:3
   மீகா 3:8
   2 நாளாகமம் 15:1; 24:20

2. பரிசுத்த ஆவியானவருக்கு ஒரு விசுவாசியின் வாழ்விலுள்ள நோக்கங்களை மீட்டல் செய்து பார்க்கவும். உங்கள் வாழ்வில் இப்பகுதிகளில் பரிசுத்த ஆவியானவர் கிரியைச் செய்ய இடமளிக்கின்றீர்களா?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

3. பரிசுத்த ஆவியானவர் சபையில் ஊழியம் செய்வதை மீட்டல் செய்யுங்கள். நீங்கள் செல்லும் ஆலயத்தை பற்றி எண்ணிப்பாருங்கள். பரிசுத்த ஆவியானவர், தனது நோக்கத்தை நிறைவேற்ற அவர்கள் இடம் கொடுக்கிற பகுதிகள் எவை? எப்பகுதிகளில் இன்னும் முன்னேற வேண்டியது அவசியம்?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

அதிகாரம் நான்கு

# பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

ஞானஸ்நானத்தின் வரைவிலக்கணத்தை தருவீர்கள்.

பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்தை மக்கள் பெறும் போது, என்ன நடைபெறுகின்றது என்பதை வெளிப்படுத்தும் மூன்று வேதவாக்கியங்களை அடையாளம் காண்பீர்கள்.

பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்தை எவ்வாறு பெறலாம் என விளக்குவீர்கள்.

பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்தை பெற்றதிற்கான வெளியரங்கமான அடையாளத்தை இணங்காணுவீர்கள்.

பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்தை பெற்றதிற்கான மெய்யான அடையாளத்தை விளக்குவீர்கள்.

பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்தை பெறுவதற்கான வழிகாட்டலை பட்டியலிடுவீர்கள்.

பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்தை பெற்றுக்கொள்வீர்கள்.

பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்தை புறக்கணிக்க சில மக்கள் கூறும் நான்கு பிரதான காரணங்களை பட்டியலிடுவீர்கள்.

## திறவுகோல் வசனம்:

**பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

### அறிமுகம்

வேதாகமம் நான்கு வித்தியாசமான ஞானஸ்நானத்தைக் குறித்து கற்றுத் தருகின்றது:

1. கிறிஸ்துவினால் வரும் பாடுகளின் ஞானஸ்நானம்.
2. யோவான் ஸ்நானகனால் முன்வைக்கப்பட்ட தண்ணீர் ஞானஸ்நானம்.
3. கிறிஸ்தவ தண்ணீர் ஞானஸ்நானம்.
4. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்.

இவ்வதிகாரத்தில் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைக் குறித்து கவனிப்போம். (மற்றைய மூன்று ஞானஸ்நானத்தை பற்றியும் சர்வதேச அறுவடை நேர பாடத்திட்டமான “விசுவாச அத்திபாரங்கள்” என்ற பாடத்தில் கற்றுள்ளோம்.)

### வரைவிலக்கணம்

"ஞானஸ்நானம்" என்பதின் அர்த்தமாவது மூழ்குதல் அல்லது அமிழ்தல் என்பதாகும்.

## ஞானஸ்நானத்தை குறித்த வாக்குத்தத்தம்

இயேசு உயிர்த்தெழுந்த பின்பும், பரலோகத்திற்கு செல்லும் முன்பும், தன்னை பின்பற்றியோருக்கு முக்கிய அறிவுறுத்தல்களைக் கொடுத்தார்:

> **என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார். (லூக்கா 24:49)**

பௌதீக பரிசுத்த ஆவியானவரைக் குறித்த வாக்குத்தத்தத்தை இயேசு குறிப்பிட்டார்:

> **நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.**
>
> **உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது. அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.**
>
> **நான் உங்களைத் திக்கற்றவர்களாகவிடேன். (யோவான் 14:16-18)**

இது புதிய வாக்குத்தத்தம் அல்ல. பழைய ஏற்பாட்டு காலத்திலேயே பரிசுத்த ஆவியானவர் வாக்குப்பண்ணப்பட்டிருந்தார்:

> **பரியாச உதடுகளினாலும் அந்நியபாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார்.**
>
> **இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இளைப்பாறுதல். இதுவே ஆறுதல் என்று அவர்களோடே அவர் சொன்னாலும் கேட்கமாட்டோம் என்கிறார்கள். (ஏசாயா 28:11-12)**
>
> **அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன். (யோவேல் 2:28)**

## பரிசுத்த ஆவியானவரை பெற்றுக் கொண்டமைக்கான சான்றுகள்

கடந்த அதிகாரத்தில் விசுவாசிகளின் வாழ்வைக்குறித்து பரிசுத்த ஆவியானவருக்கு பல நோக்கங்கள் உண்டு என கற்றீர்கள். சுவிஷேசத்திற்கு வல்லமையுள்ள சாட்சிகளாக கிறிஸ்தவர்களை மாற்றுவது, பரிசுத்த ஆவியானவருடைய முக்கிய குறிக்கோளாகும்:

> **பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

பரிசுத்தாவியானவரை பெற்றுக் கொண்டமைக்கான உண்மையான சாட்சியாக, அப்போஸ்தலனாகிய பேதுருவின் வாழ்வு இருக்கின்றது. பெந்தேகொஸ்தே நாளுக்கு முன் அவர் இயேசுவை அறிந்திருந்த போதும் பயந்து அவரை மறுதலித்து விட்டார். ஆனாலும் அவர் பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்தைப் பெற்ற பின்னர், அவர் எழுந்து நின்று வல்லமையாக சாட்சியிட்டதின் பலனாக 3,000 பேர் இரட்சிக்கப்பட்டார்கள்.

ஆதிசபையானது பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையால் உலகம் எங்கும் சென்று சுவிசேஷத்தை அறிவித்தது. அப்போஸ்தலருடைய புத்தகம் பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையுள்ள ஞானஸ்நானத்தை பதிவு செய்துள்ளது.

## பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம்

"ஞானஸ்நானம்" என்ற சொல் பரிசுத்த ஆவியானவரை சம்பந்தப்படுத்தி புதிய ஏற்பாட்டில் ஏழு பகுதிகளில் பாவிக்கப்பட்டுள்ளது. இவைகளில் நான்கு வாக்கியங்களை யோவான் ஸ்நானகனால் சுவிஷேசங்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது:

> **மனந்திரும்புதலுக்கென்று நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன். எனக்குப்பின் வருகிறவரோ என்னிலும் வல்லவராயிருக்கிறார், அவருடைய பாதரட்சைகளைச் சுமக்கிறதற்கு நான் பாத்திரன் அல்ல. அவர் பரிசுத்த ஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார். (மத்தேயு 3:11)**

> **நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்தேன். அவரோ பரிசுத்த ஆவியினால் உங்களுக்கு ஞானஸ்நானம் கொடுப்பார் என்று பிரசங்கித்தான். (மாற்கு 1:8)**

> **யோவான் எல்லாருக்கும் பிரதியுத்தரமாக: நான் ஜலத்தினால் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுக்கிறேன், என்னிலும் வல்லவர் ஒருவர் வருகிறார், அவருடைய பாதரட்சைகளின் வாரை அவிழ்க்கிறதற்கும் நான் பாத்திரன் அல்ல, அவர் பரிசுத்தஆவியினாலும் அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுப்பார். (லூக்கா 3:16)**

> **நானும் இவரை அறியாதிருந்தேன். ஆனாலும் ஜலத்தினால் ஞானஸ்நானங் கொடுக்கும்படி என்னை அனுப்பினவர்: ஆவியானவர் இறங்கி யார்மேல் தங்குவதை நீ காண்பாயோ, அவரே பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானங்கொடுக்கிறவர் என்று எனக்குச் சொல்லியிருந்தார். (யோவான் 1:33)**

இயேசு கிறிஸ்துவும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைக் குறித்து பேசினார்:

> **யோவான் ஜலத்தினாலே ஞானஸ்நானங் கொடுத்தான்: நீங்கள் சில நாளுக்குள்ளே பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள். (அப்போஸ்தலர் 1:4)**

பேதுருவும் கொர்நேலியுவின் வீட்டில் வைத்து பேசும் போது இயேசுவின் வார்த்தைகளை மேற்கோளாக பாவித்தார்:

> **யோவான் ஜலத்தினாலே ஞாஸ்நானங் கொடுத்தான், நீங்களோ பரிசுத்தஆவியினாலே**

**ஞானஸ்நானம் பெறுவீர்கள் என்று கர்த்தர் சொன்ன வார்த்தையை அப்பொழுது நினைவுகூர்ந்தேன். (அப்போஸ்தலர் 11:16)**

பரிசுத்த ஆவியானவரை சம்பந்தப்படுத்தி பவுலும் "ஞானஸ்நானம்" என்ற வார்த்தையை பாவித்து உள்ளார்:

**நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம்பண்ணப்பட்டு, எல்லாரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம். (1 கொரிந்தியர் 12:13)**

கிறிஸ்தவ தண்ணீர் ஞானஸ்நானங்களின் போதும் பரிசுத்த ஆவியின் "ஞானஸ்நானத்தை" பெற்றார்கள் என்று சொல்லும் அதே வார்த்தையே பாவிக்கப்படுகின்றது. இவ்விரண்டு ஞானஸ்நானமும், உள்ளான ஆவிக்குரிய அனுபவங்களுக்குரிய வெளியரங்க அடையாளமாக இருக்கின்றது.

யூதர்கள் பெந்தேகொஸ்தே பண்டிகையை அனுசரிக்கின்ற அந்நாளிலேயே பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டார். "பெந்தேகொஸ்தே நாளில்" பரிசுத்த ஆவியானவர் கொடுக்கப்பட்டார். இதன் காரணமாகவே பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் "பெந்தேகொஸ்தே அனுபவம்" என வர்ணிக்கப்படுகிறது.

பரிசுத்த ஆவியானவர் பரலோகிலிருந்து இறங்கி வந்து, எருசலேமின் மேல்வீட்டிலிருந்த விசுவாசிகளை நிறைத்தார். அவர்கள் இயேசு கிறிஸ்துவின் கட்டளைக்கு கீழ்ப்படிந்து காத்திருந்த போது அல்லது மேலறையில் தங்கியிருந்த போது இச்சம்பவம் நடைபெற்றது. பேதுரு இவ்வனுபவத்தை கடைசி நாட்களில்... "மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்" என்ற தேவனுடைய வாக்குத்தத்தத்தின் நிறைவேறல் எனக் குறிப்பிடுகிறார். இவ்வாக்குத்தத்தம் யோவேல் தீர்க்கதரிசியால் கொடுக்கப்பட்டது.

**அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன். அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்.**

**ஊழியக்காரர்மேலும் ஊழியக்காரிகள் மேலும், அந்நாட்களிலே என் ஆவியை ஊற்றுவேன். (யோவேல் 2:28-29)**

ஆண்களுக்கும், பெண்களுக்கும், வாலிபருக்கும், வயதானோருக்கும் பரிசுத்த ஆவியானவரின் ஊற்றுதலை பெறுவர். அவர்கள் தீர்க்கதரிசனங்களையும், சொப்பனங்களையும், தரிசனங்களையும் காண்பார்கள். தேவனுடைய ஆவியானவர் ஆண்களையும், பெண்களையும் வல்லமைப்படுத்தியுள்ளார். ஆவியானவர் அருளப்பட்ட போது பேதுரு கூறியதாவது:

**பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்.**

**வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி...**

**(அப்போஸ்தலர் 2:38-39)**

பேதுருவின் வார்த்தைகளும் பரிசுத்த ஆவியானவரைக் குறித்த வாக்குத்தத்தத்தை வெளிப்படுத்துகின்றது:

-ஜாதிகளுக்கான வாக்குத்தத்தம்: "உங்களுக்கு" (யூத மக்களுக்கு).
-குடும்பத்திற்கான வாக்குத்தத்தம்: "உங்கள் பிள்ளைகளுக்கு."
-சர்வலோகத்திற்கான வாக்குத்தத்தம்: "உங்கள் அனைவருக்கும்."

## பௌதீக அடையாளம்

பரிசுத்த ஆவியானவரை மாம்ச கண்களால் காண முடியாது. இயேசு கிறிஸ்து அவரை காற்றுடன் சம்பந்தப்படுத்தி பேசியுள்ளார்:

**காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது. ஆவியினாலும் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். (யோவான் 3:8)**

காற்றை கண்களால் காணமுடியாது, ஆனால் அதன் தாக்கத்தை காணவும், கேட்கவும் முடியும். காற்றடிக்கின்றபோது, தரையிலிருந்து தூசுகள் மேலே எழும்பும், மரங்கள் யாவும் ஒரு பக்கமாக அசையும், இலைகள் உதிரும், கடல் அலைகள் பேரிரைச்சலிடும், மேகங்கள் ஆகாயத்தில் அசையும். இதுவே காற்று இருப்பதற்கான பௌதீக அடையாளங்கள். பரிசுத்த ஆவியானவரும் இவ்விதமாகவே இருக்கிறார். பரிசுத்த ஆவியானவரை கண்களால் காண முடியாதிருக்கின்ற போதும், அவருடைய தாக்கத்தை காணவும், கேட்கவும் முடியும்.

புதிய ஏற்பாட்டில், மூன்று இடங்களிலே பரிசுத்த ஆவியானவர் அபிஷேகித்த போது நாங்கள் பேசிய காரியங்கள் நடைபெற்றதை காணக்கூடியதாக உள்ளது:

### 1. பேந்தேகொஸ்தே நாளில்:

அப்போஸ்தலர் 2:2-4ல் பெந்தேகொஸ்தே நாளில் நடைபெற்றதை பதிவு செய்துள்ளது:

**அப்பொழுது பலத்த காற்று அடிக்கிற முழக்கம்போல, வானத்திலிருந்து சடிதியாய் ஒரு முழக்கமுண்டாகி, அவர்கள் உட்கார்ந்திருந்த வீடு முழுவதையும் நிரப்பிற்று.**

**அல்லாமலும் அக்கினிமயமான நாவுகள்போலப் பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்குக் காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும் வந்து அமர்ந்தது.**

**அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள். (அப்போஸ்தலர் 2:2-4)**

### 2. கொர்நேலியுவின் வீட்டில்:

பேதுரு சுவிஷேசத்தை பிரசங்கித்த போது கொர்நேலியுவின் குடும்பத்தாருக்கு சம்பவித்தவைகள் அப்போஸ்தலர் 10:44-46ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

> **இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தைக்கேட்டவர்கள் யாவர்மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்.**
>
> **அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும்,**
>
> **பேதுருவோடேகூட வந்திருந்த விருத்தசேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும்போது, பரிசுத்தஆவியின் வரம் புறஜாதிகள்மேலும் பொழிந்தருளப்பட்டதைக்குறித்துப் பிரமித்தார்கள். (அப்போஸ்தலர் 10:44-46)**

## 3. எபேசுவில் மனந்திரும்பியோரிடம்:

எபேசுவில் முதற்குழுவினர் மனந்திரும்பிய போது என்ன நடைபெற்றது என்பதை அப்போஸ்தலர் 19:6 விளக்குகின்றது.

> **அல்லாமலும் பவுல் அவர்கள்மேல் கைகளை வைத்தபோது, பரிசுத்தஆவி அவர்கள்மேல் வந்தார். அப்பொழுது அவர்கள் அந்நியபாஷைகளைப் பேசித்தீர்கதரிசனஞ் சொன்னார்கள். (அப்போஸ்தலர் 19:6)**

## பொதுவான அடையாளம்: அந்நிய பாஷை

நாம் இப்பகுதியை ஆராய்ந்து பார்க்கின்ற போது மூன்று இடங்களிலும் பொதுவான ஒரு அடையாளத்தை காண கூடியதாக இருக்கின்றது. பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்தை பெற்ற அனைவரும் அந்நியபாஷை பேசியுள்ளார்கள். பரிசுத்த ஆவியானவரைப்பற்றி இயற்கைக்கு அப்பாற்பட்ட அடையாளங்கள் குறிப்பிடப்படுகின்ற போதும் இந்த மூன்று சந்தர்ப்பங்களிலே இருந்தது போன்று வேறு சந்தர்ப்பங்கள் இருக்கவில்லை.

பெந்தேகொஸ்தே நாளில் பலத்த காற்று அடிக்கும் முழக்கம் போல சத்தமும், அக்கினி மயமான நாவுகளையும் கண்டார்கள். இவைகள் எபேசுவிலிருந்து புதிய விசுவாசிகள் தீர்க்கதரிசனம் உரைத்தனர். இதைப்போன்ற ஓர் குறிப்பு, பெந்தேகொஸ்தே நாளின் சம்பவத்திலும், கொர்நேலியு வீட்டின் சம்பவத்திலும் குறிப்பிடப்படவில்லை.

கொர்நேலியுவிடமும் அவன் வீட்டாரிடமும், அந்நிய பாஷையை பேசும் ஒரெயொரு வெளியரங்க அடையாளத்தை மாத்திரமே அப்போஸ்தலர்கள் அவதானித்தனர். இந்த சரீர அடையாளம் இந்த வீட்டார் பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பெற்றுள்ளார்கள் என்பதை சீடர்களுக்கு நிரூபித்து காட்டியது. வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, அந்நியபாஷை பேசுகின்ற இந்த சரீர அடையாளத்தைக் கொண்டு, ஒருவன் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை பெற்றுள்ளான் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ளலாம்.

இந்த "அந்நியபாஷை"யானது மனிதர் அறிந்த பாஷையாக இருக்கலாம். பெந்தேகொஸ்தே நாளில் இதுவே நடைபெற்றது:

**எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா?**

**அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி? (அப்போஸ்தலர் 2:7-8)**

அந்நிய பாஷை மனிதனால் அறியப்படாத பாஷையாகும். அதனாலேயே "அந்நியபாஷை" என அழைக்கப்படுகின்றது:

**ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான். (1 கொரிந்தியர் 14:2)**

## அந்நிய பாஷையின் நோக்கங்கள்

எபேசு பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்திற்கு அந்நியபாஷை பேசும் அடையாளமானது, விசுவாசிகளின் வாழ்க்கைக்கு பல நோக்கங்களுடன் கொடுக்கப்பட்டுள்ளது. வேதாகமத்தில் 1 கொரிந்தியர் 14ம் அதிகாரத்தை திருப்பிக் கொள்ளுங்கள். அந்நியபாஷையின் நோக்கங்களல் சில:

-தேவனிடம் ஜெபித்தல்: வசனம் 2
-சுய பக்தி விருத்திக்காக: ஆவிக்குரிய அறிவை வளர்க்கவும், வாழ்வை கட்டியெழுப்பவும். வசனம் 4
-சபையார் விளங்கிக் கொள்ள வியாக்கியானம் செய்யப்படல் வேண்டும்: வசனம் 12-13
-பரிந்துபேசுதல்: வசனம் 14 (ரோமர் 8:26-27ஐயும் பார்க்கவும்)
-அவிசுவாசிகளுக்கு அடையாளம்: வசனம் 22
-வாக்குத்தத்தத்தின் நிறைவேறுதல்: வசனம் 21 (ஏசாயா 28:11-12ஐயும் பார்க்கவும்)
-துதித்தல்: வசனம் 15,17

## அந்நிய பாஷையை மறுத்துரைத்தல்

சிலர் அந்நியபாஷையை மறுத்துரைக்கின்றனர். மறுத்துரைத்தல்களில் சில:

### ஒவ்வொரு கிறிஸ்தவனிலும் பரிசுத்த ஆவியானவர் இருக்கின்றார்:

இரட்சிக்கப்படும் போது ஒவ்வொரு கிறிஸ்தவனும் பரிசுத்த ஆவியானவரை பெற்றுக் கொள்கிறான் என்பது பொதுவான ஓர் மறுப்புரையாகும். எனவே மீண்டும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்ற அனுபவம் அவசியமில்லை என்கின்றனர். உதாரணமாக புதிய ஏற்பாட்டிலுள்ள மெய்யான விசுவாசிகளைக் கவனித்துப் பாருங்கள். அப்போஸ்தலர்கள் தங்களுடைய பாவங்களுக்காக மனந்திரும்பி, இயேசுவை மேசியா என்று விசுவாசித்து ஏற்றுக் கொண்டனர். அவர்கள் தனிப்பட்ட முறையில் அவரது மரணத்தையும், அடக்கம் பண்ணப்படுதலையும், உயிர்த்தெழுதலையும் குறித்து சாட்சியிட்டனர். இயேசு தன்னையும் குறித்து பின்பற்றியோரிடம் கூறியதாவது:

**என் பிதா வாக்குத்தத்தம்பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன். நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப்படும்வரைக்கும் எருசலேம்**

**நகரத்தில் இருங்கள் என்றார். (லூக்கா 24:49)**

அவர் மேலும் கூறியதாவது:

**ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம் நிறைவேறக் காத்திருங்கள் என்று கட்டளையிட்டார். (அப்போஸ்தலர் 1:5)**

பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் பெந்தேகொஸ்தே நாளில் ஆரம்பமானது:

**அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள். (அப்போஸ்தலர் 2:4)**

அப்போஸ்தலர்கள் ஏற்கனவே கிறிஸ்தவர்களாக இருந்தபோதும், பெந்தேகொஸ்தே நாள் வரையிலும் பரிசுத்த ஆவியின் நிறைவை (ஞானஸ்நானத்தை) பெறாமலேயிருந்தனர்.

சமாரிய மக்கள் சுவிஷேசம் பிரசங்கிக்கப்படுவதை கேள்விப்பட்டனர். அதை விசுவாசித்து தண்ணீர் ஞானஸ்நானத்தையும் பெற்றனர், ஆனாலும் அவர்கள் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றிருக்கவில்லை:

**சமாரியர் தேவவசனத்தை ஏற்றுக்கொண்டதை எருசலேமிலுள்ள அப்போஸ்தலர்கள் கேள்விப்பட்டு, பேதுருவையும் யோவானையும் அவர்களிடத்திற்கு அனுப்பினார்கள்.**

**இவர்கள் வந்தபொழுது அவர்களில் ஒருவனும் பரிசுத்தஆவியைப் பெறாமல் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலே ஞானஸ்நானத்தைமாத்திரம் பெற்றிருந்தவர்களாகக் கண்டு,**

**அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றுக்கொள்ளும்படி அவர்களுக்காக ஜெபம்பண்ணி,**

**அவர்கள்மேல் கைகளை வைத்தார்கள், அப்பொழுது அவர்கள் பரிசுத்தஆவியைப் பெற்றார்கள். (அப்போஸ்தலர் 8:14-17)**

சமாரிய மக்கள் பிலிப்புவின் ஊழியத்திற்கு ஊடாக இரட்சிக்கப்பட்டனர். அவர்கள் பரிசுத்த ஆவியை பேதுரு, யோவானின் ஊழியத்தின் ஊடாகவே பெற்றனர். பரிசுத்த ஆவியானவரைப் பெற்றுக்கொள்ளுதல், இரட்சிப்பை பெற்றுக் கொள்வதையும் விட வேறு அனுபவமாகும்.

அப்போஸ்தலர் 19:1-6ம் வசனங்கள், பவுல் எபேசுவிற்கு சென்று மக்களை சந்தித்தனர். அம்மக்கள் “சீஷர்கள்” என்றழைக்கப்பட்டதை கூறுகிறது. ஆனாலும் பவுல் “நீங்கள் விசுவாசிகளான போது பரிசுத்த ஆவியானவரை பெற்றீர்களா?” என்று கேள்வி கேட்கின்றார்.

இரட்சிக்கப்பட்டபோதே பரிசுத்த ஆவியானவரை அம்மக்கள் பெற்றிருந்தால் பவுல் ஓர் முட்டாளைப்போன்று ஓர் கேள்வியை ஏன் கேட்கிறார். மக்கள் விசுவாசிகளான போதும் பரிசுத்த ஆவியானவரை பெறாமல் இருக்கலாம் என்பதை இச்சத்தியம் தெளிவாக காண்பிக்கிறது. எனினும் ஒரு மனிதன் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெறுகின்ற அதே நேரத்திலேயே இரட்சிப்பையும் பெறலாம், ஆனாலும் இது ஒரு வேறான அனுபவமாகவே இருக்கின்றது.

உலகம் சிருஷ்டிக்கப்படும் போதே பரிசுத்த ஆவியானவரின் ஊழியம் இருந்தமையை நீங்கள்

கற்றுள்ளீர்கள். பழைய ஏற்பாடு, இஸ்ரவேலின் ஆவிக்குரிய தலைவர்களிடம் பரிசுத்த ஆவியானவர் இறங்கியமையைப்பற்றி பேசுகிறது. பரிசுத்த ஆவியானவர், பாவிகளை கிறிஸ்துவிடம் கொண்டுவரப்பட அவர்கள் வாழ்வில் கிரியைச் செய்கின்றார்.

ஆனால் இந்த பரிசுத்த ஆவியானவரின் ஊழியங்கள் யாவும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்திலும் பார்க்க வித்தியாசமானவைகளாகும். இயேசு கிறிஸ்து தெளிவாக இதைப்பற்றி அறிவித்துள்ளார்.

> **உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும். இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது. அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள். (யோவான் 14:17)**

இச்சந்தர்ப்பத்தில் சீடர்களிடம் பரிசுத்த ஆவியானவர் இருந்தார், எனினும் அவர்களுக்குள் இருக்கவில்லை. பரிசுத்த ஆவியானவரின் நிறைவை (ஞானஸ்நானத்தை) பெந்தேகொஸ்தே நாளிலேயே பெற்றனர்.

பாவிகள் கிறிஸ்துவிடம் கொண்டுவரப்பட பரிசுத்த ஆவியானவரே அவர்களில் இருக்கிறார். ஆனால் இது அவர்களுடன் இருக்கிறார் என அர்த்தமாகாது.

பழைய ஏற்பாட்டு காலத்தில் பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, ஆவிக்குரிய தலைவர்களின் மேல் விஷேசித்த முறையில் குறிப்பிட்ட நேரத்தில் மாத்திரம் வந்தது. புதிய ஏற்பாட்டில் இந்த வல்லமை விசுவாசிகளுக்கு நிரந்தரமாக கொடுக்கப்படுகின்றது.

பழைய ஏற்பாட்டு காலத்தில் பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய தலைவர்களிடம் இருந்தார். எப்போதும் அவர்களுடன் இருக்கவில்லை. பரிசுத்த ஆவியானவர் பற்றிய ஊழியங்களுக்கான பழைய, புதிய ஏற்பாட்டுகளுக்கான வித்தியாசம் இதுவே.

## யாவராலும் அந்நியபாஷை பேச முடியுமா?

அடுத்த மறுத்துரைப்பு அப்போஸ்தலனாகிய பவுலின் கேள்வியை விளங்கிக் கொள்ளாமையால் ஏற்பட்டதாகும். 1 கொரிந்தியர் 12:30ல் பவுல் "எல்லோரும் அந்நியபாஷைகளை பேசுகிறார்களா?" எனக் கேட்கிறார். இதற்கு பதில் இல்லை "எல்லோரும் அந்நியபாஷையை பேசவில்லை" என்பதாகும். ஆனால் இங்கே பவுல் பரிசுத்த ஆவியானவரின் ஸ்நானத்தின் அனுபவத்தைக் குறித்து பேசவில்லை. அவர் வரங்களைக்குறித்தே பேசுகின்றார், வரத்தை எவ்விதம் சபையில் விசுவாசி பாவிக்க வேண்டும் என்பதைக்குறித்து பேசுகிறார்.

> **நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்.**
>
> **தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார். (1 கொரிந்தியர் 12:27-28)**

பவுல் அப்போஸ்தலன், சபையின் அங்கத்தவர்கள் எவ்விதமாக வரங்களை பாவிக்கலாம் என்பதை பற்றி பேசியிருக்கிறார். பரிசுத்த ஆவியானவருடைய வரங்களில் ஒன்று "பலவிதமான பாஷைகள்" என்பதாகும்.

பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையினால் அந்நியபாஷைக்கூடாக சபைக்கு விஷேடமான செய்திகளைக்கொடுக்க இவ்வரம், திறமைகளைக் கொடுக்கின்றது.

பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்தை பெறும் போது, அவ்வனுபவத்திற்கு அடையாளமாக அந்நியபாஷை கொடுக்கப்படுகிறது, ஆனால் பல பாஷைகளை பேசும் விசேட வரத்தை ஒவ்வொருவரும் பெறவில்லை. (ஒன்பதாம் அதிகாரத்தில் இப்பாடத்தைக் குறித்து சம்பாஷிப்போம்).

**பயம்:**

சில விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை தேடி பெற பயப்படுகின்றனர், காரணம் அது தேவனிடமிருந்து வந்த அனுபவமில்லை என எண்ணுகின்றனர். ஆனால் வேதாகமம் கூறுவதாவது:

> **கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள். தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்.**
>
> **ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான். தேடுகிறவன் கண்டடைகிறான். தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்.**
>
> **உங்களில் எந்த மனுஷனானாலும் தன்னிடத்தில் அப்பத்தைக் கேட்கிற தன் மகனுக்குக் கல்லைக் கொடுப்பானா?**
>
> **மீனைக் கேட்டால் அவனுக்குப் பாம்பைக் கொடுப்பானா?**
>
> **ஆகையால், பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா தம்மிடத்தில் வேண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு நன்மையானவைகளைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா? (மத்தேயு 7:7-11)**

உலகத்தகப்பனாரிடம் நற்காரியங்களை கேட்பது போன்று தேவனிடத்தில் எதையாவது கேட்போமானால், அவர் அவனை அழிக்கும் எதையாவது கொடுத்துவிட மாட்டார்.

**உணர்வுபூர்வமான அனுபவம்:**

இது ஒரு உணர்வுபூர்வமான அனுபவம் என அந்நியபாஷை பேசுவதை மறுத்துரைக்கின்றனர். அநேக விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை பெறும் போது, அது அவர்களின் உணர்வின் பிரதிபலிப்பின் அனுபவம் என்று எண்ணுகின்றனர்.

மனிதன் உணர்வுள்ள சிருஷ்டிப்பு. மனம் மாறுவதை இயேசு கிறிஸ்து மனிதனுடைய உணர்வு சம்பந்தமானது என கணிக்கவில்லை. அவன் தற்போதும் சந்தோஷமும், துக்கமும் கொண்டவனாகவே இருக்கின்றான். மனம் மாறுதல் பாவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருந்து மனிதனை விடுதலைப் பண்ணுகின்றது. இவ்வுணர்வு தேவனை தொழுதுகொள்ள உதவுகின்றது.

“சந்தோஷம்” என்ற சொல் வேதவாக்கியங்களில் பரிசுத்த ஆவியானவரோடு சம்பந்தப்படுகிறது. அப்போஸ்தலர் 13:52ல் “சீஷர்கள் சந்தோஷத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள்” என நாம் வாசிக்கின்றோம். சிலர் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை பெற்றதும் சந்தோஷத்தின்

உணர்வை அதிகளவில் காண்பிக்கின்றார்கள், காரணம் அவர்கள் இயற்கையாகவே மற்றவர்களையும் விட அதிக உணர்வை கொண்டிருப்பதாகும். அவர்கள் சத்தமிடுவர், சிரிப்பார்கள், அவர்கள் சரீரத்தின் உணர்வுக்கேற்றபடி நடப்பார்கள்.

ஆனால் இந்த உணர்வுபூர்வமான நடத்தைகள் யாவும் பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை பெற்றமைக்கான அடையாளம் அல்ல. அந்நிய பாஷை பேசுவது மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்பட்ட அடையாளம். வல்லமையே இதன் ஆதாரம். சிரித்தலும், சத்தமிடுதலும், நடனமாடுதலும் இதற்கு அவசியமில்லை. ஒருவன் உணர்வில் சந்தோஷ அனுபவத்தை பெற்றாலும், அது அவனுடைய தனிப்பட்ட அனுபவமாகவே உள்ளது.

சந்தோஷமான உணர்வை கொண்டவர்களைப் பார்த்து அதாவது பரிசுத்த ஆவியானவரின் உணர்வை பெற்றவர்களை நீங்கள் விமர்சிக்க வேண்டாம். ஏனெனில் வல்லமையான அனுபவத்தை தேவனிடம் இருந்து பெற்றதாக வேதாகமம் குறிப்பிடுகிறது. மக்கள் குதிப்பார்கள், தரையில் விழுந்து உருளுவார்கள், சத்தமிடுவார்கள், களிகூறுவார்கள், தேவனுக்கு முன்பதாக நடனம் பண்ணுவார்கள்.

மக்களின் சில உணர்வுபூர்வமான வெளிப்பாடுகளை அவதானிக்கிறபோது சுவாரஸ்யமாக இருக்கும். அவர்கள் பணிந்து கொள்வர், சிரிப்பர், மேலும் கீழும் குதிப்பார்கள், விளையாட்டு போட்டியை பார்ப்பது போல பரவசம் அடைவார்கள். பரிசுத்த ஆவியானவர் எமது வாழ்வில் நாம் பல காரியங்களை நிறைவேற்றும் நோக்கத்துடன் வரங்களை கொடுத்து எம்மை உற்சாகமூட்டுகின்றார், மட்டுமல்லாது பெரிதான சந்தோஷத்தையும், வல்லமையையும் கொடுத்து, சுவிசேஷத்தால் உலகை ஆதாயப்படுத்த உந்துவிக்கின்றார்.

சங்கீதக்காரனும் இதை ஏற்றுக்கொள்கின்றார். அவரும் சந்தோஷத்துடன், ஆரவாரத்துடன், உணர்வுபூர்வமான ஆராதனையை தேவனுக்கு முன் செய்தார்:

> **கர்த்தரைக் கெம்பீரமாய்ப் பாடி, நம்முடைய இரட்சணியக் கன்மலையைச் சங்கீர்த்தனம் பண்ணக்கடவோம் வாருங்கள்.**
>
> **துதித்தலுடனே அவர் சந்நிதிக்கு முன்பாக வந்து, சங்கீதங்களால் அவரை ஆர்ப்பரித்துப் பாடக்கடவோம்.**
>
> **கர்த்தரே மகா தேவனும், எல்லா தேவர்களுக்கும் மகாராஜனுமாயிருக்கிறார். (சங்கீதம் 95:1-3)**
>
> **எக்காள தொனியோடே அவரைத் துதியுங்கள். வீணையோடும் சுரமண்டலத்தோடும் அவரைத் துதியுங்கள்.**
>
> **தம்புரோடும் நடனத்தோடும் அவரைத் துதியுங்கள். யாழோடும் தீங்குழலோடும் அவரைத் துதியுங்கள்.**
>
> **ஓசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள். பேரோசையுள்ள கைத்தாளங்களோடும் அவரைத் துதியுங்கள்.**
>
> **சுவாசமுள்ள யாவும் கர்த்தரைத் துதிப்பதாக. அல்லேலூயா. (சங்கீதம் 150:3-6)**

ஆனால் இந்த பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தை பெற்றால் கட்டுப்பாட்டை இழந்துவிடுவேன் அல்லது வழமைக்கு மாறாக செயல்பட வேண்டிவரும் என்று நீங்கள் பயப்பட வேண்டியதில்லை.

“அமைதியாயிருக்கவும்” “சமாதானத்தை காத்துக்கொள்ளவும்” என பவுல் பரிசுத்த ஆவியின் அந்நிய பாஷையைப்பற்றி பேசும்போது குறிப்பிடுகிறார் (1 கொரிந்தியர் 14). மக்கள் பரிசுத்த ஆவியானவரை பெற்றால் கட்டுப்பாட்டை இழந்து விடுவார்கள் என்று பவுல் இக்கூற்றினால், கூற முற்படவில்லை. வேதாகமம் கூறுவதாவது:

> **தீர்க்கதரிசிகளுடைய ஆவிகள் தீர்க்கதரிசிகளுக்கு அடங்கியிருக்கிறதே. (1 கொரிந்தியர் 14:32)**

பாவிப்பவரின் கட்டுப்பாட்டுக்குள் கொடுக்கப்பட்ட எந்த வரமும் இருக்கும் என்பதே இதன் அர்த்தம். தேவன் ஒழுங்கீனமாய் செயல்பட மாட்டார்.....

> **தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார். (1 கொரிந்தியர் 14:33)**

## பரிசுத்த ஆவியானவரை பெற்றுக்கொள்ளுதல்

பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு சில வழி காட்டல்கள் பின்வருகின்றன.

### மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுங்கள்:

> **பேதுரு அவர்களை நோக்கி: நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். (அப்போஸ்தலர் 2:38)**

### உங்களுக்கானது என விசுவாசியுங்கள்:

> **வாக்குத்தத்தமானது உங்களுக்கும், உங்கள் பிள்ளைகளுக்கும் நம்முடைய தேவனாகிய கர்த்தர் வரவழைக்கும் தூரத்திலுள்ள யாவருக்கும் உண்டாயிருக்கிறது என்று சொல்லி... (அப்போஸ்தலர் 2:39)**

### வாஞ்சியுங்கள்:

> **பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாளிலே இயேசு நின்று, சத்தமிட்டு: ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்.**
>
> **வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.**
>
> **தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச்சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை.**

**(யோவான் 7:37-39)**

## ஈவு என்று பெற்றுக்கொள்ளுங்கள்:

பரிசுத்த ஆவியானவர் ஏற்கனவே கொடுக்கப்பட்டு விட்டார். பெந்தேகொஸ்தே நாளில் அவர் சபைக்காக அருளப்பட்டுவிட்டார். ஏனென்றால் அது ஒரு ஈவு, அதை பெற்றுக்கொள்ள நீங்கள் ஒன்றும் செய்ய தேவையில்லை:

**பரிசுத்தஆவியின் வரத்தை..... (அப்போஸ்தலர் 2:38)**

**ஒன்றைமாத்திரம் உங்களிடத்தில் அறிய விரும்புகிறேன். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே ஆவியைப் பெற்றீர்கள்?**

**அன்றியும் உங்களுக்கு ஆவியை அளித்து, உங்களுக்குள்ளே அற்புதங்களை நடப்பிக்கிறவர் அதை நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலேயோ, விசவாசக் கேள்வியினாலேயோ, எதினாலே செய்கிறார்?**

**ஆபிரகாமுக்கு உண்டான ஆசீர்வாதம் கிறிஸ்து இயேசுவினால் புறஜாதிகளுக்கு வரும்படியாகவும், ஆவியைக் குறித்துச் சொல்லப்பட்ட வாக்குத்தத்தத்தை நாம் விசுவாசத்தினாலே பெறும்படியாகவும் இப்படியாயிற்று. (கலாத்தியர் 3:2,5,14)**

பரிசுத்த ஆவியானவர் தேவனுடைய ஈவு என்பதற்காக நன்றி சொல்லி துதிக்க ஆரம்பியுங்கள்.

## தேவனுடன் இணங்கு:

துதி ஆராதனையின் போது அந்நியபாஷை பேசுவதற்கு தேவனுடன் இசைந்திருங்கள். அவரை துதிக்கின்றபோது காதால் கேட்கக்கூடியவாறு, உங்களது உதடுகள் திக்கிப் பேசுவதைப் போன்ற அனுபவத்தை முதலில் பெறுவீர்கள். நீங்கள் தொடர்ந்தும் பரிசுத்த ஆவியானவருக்கு இணங்கி அந்நியபாஷையை பேசும்போது நீங்கள் விளங்கிக் கொள்ளக்கூடியதாக அவர் பேசுவார். இதுவே பரிசுத்த ஆவியானவரை பெற்றீர்கள் என்பதற்கான சரீர வெளிப்பாடு:

**பரியாச உதடுகளினாலும் அந்நியபாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார். (ஏசாயா 28:11)**

**அவர்களெல்லாரும் பரிசுத்தஆவியினாலே நிரப்பப்பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத்தொடங்கினார்கள். (அப்போஸ்தலர் 2:4)**

## மற்ற விசுவாசிகளிடம் உனக்காக வேண்டுதல் செய்யும்படி கேள்:

பரிசுத்த பரிசுத்த ஆவியானவரை மற்றவர்கள் கைகளை வைத்து ஜெபிக்கின்றபோதும் பெறலாம் (அப்போஸ்தலர் 8,9,19). கைகளை வைக்காமலும் பெறலாம் (அப்போஸ்தலர் 2,4,10). இந்த அதிகாரங்களை வாசித்து ஆவியில் நிறைந்த விசுவாசிகள் எவ்விதம் உங்களுக்கு உதவ முடியும் என்பதை கவனியுங்கள்.

## அனுபவத்தின் முக்கியத்துவம்:

வல்லமையுடன் சுவிசேஷத்தை அறிவிக்கும் சாட்சிகாரனாக பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் முக்கியமாக இருக்கின்றது:

> **விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: என் நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்துவார்கள். நவமான பாஷைகளைப் பேசுவார்கள்.**
>
> **சர்ப்பங்களை எடுப்பார்கள். சாவுக்கேதுவான யாதொன்றைக் குடித்தாலும் அது அவர்களைச் சேதப்படுத்தாது. வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். (மாற்கு 16:17-18)**

பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய விசேட வரங்களையும், உங்கள் வாழ்வில் ஆவியின் கனி அபிவிருத்தி செய்யப்படவும் உதவுகிறார். வரங்களையும் கனியையும் குறித்து, இப்பாடத்தில் ஞாபகப்படுத்துவோம்.

சுய பரீட்சை:

١. திறவுகோள் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

٢. பரிசுத்த ஆவியானவரை பெறும் 6 வழிமுறைகளை எழுதவும்.

---------------------------------------------------- ---------------------------------------------------- ----------------------------------------------------

---------------------------------------------------- ---------------------------------------------------- ----------------------------------------------------

3. பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றுக் கொண்டமைக்கான வெளியரங்க அடையாளம் என்ன?

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

4. பரிசுத்த ஆவியானவரின் ஞானஸ்நானம் என்பதின் மெய்யான அடையாளம் என்ன? உங்கள் பதிலுக்கு ஆதாரமாக வேதவசனத்தை தரவும்.

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

5. "அந்நிய பாஷை" பேசுவதைக்குறித்து மக்கள் கூறும் மறுப்புரைகள் நான்கை எழுதுக.

---------------------------------------------------- ----------------------------------------------------

---------------------------------------------------- ----------------------------------------------------

6. இந்த மறுத்துரைப்புக்கள் வேதவசனத்தின் அடிப்படையில் பெறுமதி வாய்ந்தவையா?--------------------

7. "ஞானஸ்நானம்" என்ற சொல்லின் அர்த்தம் என்ன?

---------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

8. பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம் பெற்ற போது நடைபெற்றவற்றை காண்பிக்க நாம் சொன்ன வேதவாக்கியங்களை தருக.

---------------------------------------------------- ---------------------------------------------------- ----------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. பழைய ஏற்பாட்டில் பரிசுத்த ஆவியானவரைப்பற்றி 85 தடவைகள் குறிப்பிடப்பட்டுள்ளது. பழைய ஏற்பாட்டை வாசிக்கின்றபோது, பரிசுத்த ஆவியானவரைப்பற்றி எல்லா இடங்களிலும் குறிப்பிடப்படுகிறது. புதிய ஏற்பாட்டு காலத்திற்கு முன் அவருடைய, ஊழியங்களை விளங்கிக் கொள்ள இப்பாடம் உங்களுக்கு உதவிசெய்யும். இரண்டாம் அதிகாரத்திலுள்ள புதிய ஏற்பாடு பற்றிய வேலையை முடித்திருந்தால், பரிசுத்த ஆவியானவர் பற்றிய படிப்பை சம்பூரணமாக கற்றிருப்பீர்கள். இப்போதே அக் குறிப்புகளை வேதாகமத்தில் அடையாளப்படுத்திக் கொள்ளுங்கள்.

2. பரிசுத்த ஆவியானவருடைய வரத்தைப்பற்றிய நிறைவான வாக்குத்தத்தங்கள் பழைய ஏற்பாட்டு காலத்திலேயே கொடுக்கப்பட்டுவிட்டது. பரிசுத்த ஆவியானவரை பற்றிய வாக்குத்தத்தங்களை கற்றுக்கொள்ளுங்கள்:

   **பழைய ஏற்பாடு:**

   ஏசாயா 28:11-12
   யோவேல் 2:28-29
   ஏசாயா 44:3

   **புதிய ஏற்பாடு:**

   யோவான் 7:38-39; 14:16-18; 15:26: 16:7-11
   அப்போஸ்தலர் 1:4,5,8; 2:38-39
   கலாத்தியர் 3:14
   லூக்கா 24:49

3. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேக அனுபவம் உனக்கு உண்டா? இல்லையாயின் இவ் அதிகாரத்தில் கொடுக்கப்பட்ட வழிகாட்டலை பின்பற்றுங்கள்.

4. இந்த அதிகாரத்தில் அந்நியபாஷையின் நோக்கம் பற்றி நாம் சம்பாஷித்தவற்றை மீட்டல் செய்யுங்கள். இதில் எந்த நோக்கம், அந்நியபாஷை பேசுவதால் சாட்சியை பாவிக்க தூண்டுகிறது.

5. இந்த பாடத்தில் அந்நியபாஷை பேசுவதை மறுத்துரைகளை மீட்டல் செய்யுங்கள். இந்த மறுப்புரைகளை மீண்டும் நீங்கள் கேட்க நேர்ந்தால் எவ்விதமான பிரதிபலிப்பை காட்டுவீர்கள் என்பதை சிந்தித்து பாருங்கள்.

அதிகாரம் ஐந்து

# பரிசுத்த ஆவியானவரின் வரங்களுக்கான அறிமுகம்

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால் :

ஆவிக்குரிய வரங்களை விபரிக்க முடியும்.
இவ்வரங்களில் ஆதாரத்தை அடையாளம் காண முடியும்.
ஆவிக்குரிய வரத்திற்கும், தாலந்திற்கும் உள்ள வேறுபாட்டை கண்டறிய முடியும்.
ஆவிக்குரிய வரங்களின் நோக்கங்களை விபரிக்க முடியும்.
ஆவிக்குரிய வரங்களின் குறிக்கோள்களை விபரிக்க முடியும்.
இவ்வரங்கள் எவ்விதம் பகிர்ந்தளிக்கப்படுகின்றது என்பதை விபரிக்க முடியும்.
ஆவிக்குரிய வரங்கள் எவ்விதம் துஷ்பிரயோகம் செய்யப்படுகிறது என்பதை அடையாளம் காண முடியும்.
ஆவிக்குரிய வரங்களை பாவிப்பதற்கான திறவுகோலை அடையாளம் காண முடியும்.
சரியான ஆவிக்குரிய வரத்திற்கும், பிழையான ஆவிக்குரிய வரத்திற்கும் வேறுபாட்டை அறியவும் முடியும்.

## திறவுகோள் வசனம்:

**அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக்குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை. ( 1 கொரிந்தியர் 12:1)**

### அறிமுகம்

இவ்வதிகாரம் உலகின் கடைசிபரியந்தமும் சென்று சுவிசேஷத்தை பரப்பும் உத்தரவாதத்தை இயேசு தன்னை பின்பற்றியோருக்கு கொடுத்தார். அவர்கள் இந்த உத்தரவாத்தை நிறைவேற்ற பரிசுத்த ஆவியானவருடைய வல்லமையே உதவி செய்தது.

**பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

இயேசு தம்மை பின்பற்றியோர், இப்பெரிதான உத்தரவாதத்தை நிறைவேற்ற திறமைகளைக் கொடாமல் செல்லவில்லை. பரிசுத்த ஆவியானவருடைய வரங்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட திறமைகளை விசுவாசிகளுக்கு, சுவிசேஷத்திற்கு சாட்சிகளாயிருக்க கொடுக்கிறது.

ஆதிசபையாரிடத்தில் பவுல் இந்த ஆவிக்குரிய வரத்தைப்பற்றி பேசியுள்ளார். அவர் கூறினதாவது:

**அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக்குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை. ( 1 கொரிந்தியர் 12:1)**

இந்த அதிகாரம் ஆவிக்குரிய வரத்தை உங்களுக்கு அறிமுகம் செய்யும். தொடர்ந்து வருகின்ற அதிகாரங்கள் பலதரப்பட்ட ஆவிக்குரிய வரங்கள் விசுவாசிகளுக்காக வைக்கப்பட்டுள்ளதை விபரித்து கூறும். உங்களின் ஆவிக்குரிய வரத்தை கண்டுபிடிக்க இப்பாடத்தில் வழிகாட்டல்கள் கொடுக்கப்பட்டுள்ளது.

## ஆவிக்குரிய வரங்கள் எவை?

"ஆவிக்குரிய" என்பதின் அர்த்தம் "குணாதிசயங்கள் பரிசுத்த ஆவியானவரால் கட்டுப்படுத்தப்படுகின்றது" என்பதாகும். "வரம்" என்பது எதாவதொன்றை இலவசமாக ஒருவர் இன்னுமொருவருக்கு கொடுப்பதாகும். ஆவிக்குரிய வரம் என்பது, சரீரமாகிய சபையில் பாவிக்கப்படும்படிக்கு, விசுவாசிக்கு பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்படுகின்ற இயற்கைக்கு அப்பாற்பட்ட திறமையாகும்.

பரிசுத்த ஆவியானவருடைய "வரத்திற்கும்", பரிசுத்த ஆவியானவருடைய "வரங்களுக்கும்" வித்தியாசம் உண்டு. பரிசுத்த ஆவியின் வரம் பெந்தேகொஸ்தே நாளில் நடைபெற்ற சம்பவத்தில், (அப்போஸ்தலர் 2) இயேசு கிறிஸ்துவின் வாக்குத்தத்தத்தின் பதிலாக கிடைத்தது:

**நான் பிதாவை வேண்டிக்கொள்ளுவேன், அப்பொழுது சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.... அந்தச் சத்திய ஆவியானவரை..... (யோவான் 14:16-17)**

பரிசுத்த ஆவியின் "வரம்" ஏற்கனவே கூறப்பட்ட வாக்குத்தத்தத்தின் பதிலாக உள்ளது. "வரங்கள்" பரிசுத்த ஆவியின், இயற்கைக்கு அப்பாற்பட்ட திறமைகளுடன், விசுவாசி ஊழியம் செய்யும்படி கொடுக்கப்படுகிறது:

**அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். (மாற்கு 16:20)**

## வரங்களும் தாலந்துகளும்

இயற்கையான தாலந்துகளுக்கும், ஆவிக்குரிய வரங்களுக்கும் வித்தியாசமுண்டு. தாலந்துகள் இயற்கையாகவே பிறப்பினால் அல்லது பயிற்சி பெற்று அபிவிருத்தி செய்யப்பட்டமையால் கிடைத்திருக்கும். ஆவிக்குரிய வரம் இயற்கைக்கு அப்பாற்பட்ட திறமையாகும். இது பரம்பரையினால் அல்லது பயிற்சியால் கிடைப்பதில்லை. இது பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்படுகின்ற விசேட திறமை, இது ஆவிக்குரிய நோக்கங்களுக்காக அருளப்படுகிறது.

ஒருவர் விசுவாசியாகின்ற போது அவரது தாலந்துகள் பரிசுத்த ஆவியானவரால் பரிசுத்தமாக்கப்படுகின்றது (ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆசீர்வதிக்கப்படுகின்றது). தாலந்து வரமாக மாற்றப்பெற்று தாலந்திலும் பார்க்க ஆசீர்வதிக்கப்படுகின்றது. உதாரணமாக, ஒரு மனிதன்

இயற்கையாக பெற்றுள்ள தாலந்தான நிர்வாகம் செய்வதை பெற்ற பயிற்சியின் மூலம் ஸ்திரப்படுத்திக் கொள்கின்றான். ஆனால் அவன் பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தை பெற்றபின் இத்தாலந்து பரிசுத்தமாக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டு ஆவியானவரால், ஆவியின் வரமாக பாவிக்கப்படுகின்றது.

ஆவிக்குரிய வரங்கள் ஆவிக்குரிய ஆற்றலாக கொண்டிருப்பதால் மிகச் சிறந்த தாலந்தைப் பார்க்கிலும் உயர்வானதாக இருக்கின்றது. நாம் எமக்குள்ள சகல தாலந்துகளையும் தேவனுக்காக பாவிக்கின்றபோதும் ஆவியானவருடைய வரங்கள் எமக்கு அவசியமானதாகவே இருக்கின்றது.

## வரங்கங்களின் நோக்கம்

பரிசுத்த ஆவியானவருடைய வரங்களின் நோக்கங்கள் என்ன என்பதற்கான பட்டியல் எபேசியர் 4:12-15ல் குறிப்பிடப்பட்டுள்ளது:

**பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,**

**அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.**

**நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்,**

**அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார். (எபேசியர் 4:12-15)**

இந்த வேதப்பகுதியின்படி பரிசுத்த ஆவியானவரின் நோக்கம் யாதெனில்:

-பரிசுத்தவான்கள் சீர்பொருந்தல்
-ஊழிய வேலைகளுக்காக
-சபை பக்திவிருத்தியடைதல்

ஆவிக்குரிய வரங்களின் குறிக்கோள் அல்லது இலக்கு எமது சித்தமாக இருக்க வேண்டும்:

-விசுவாசத்தில் ஐக்கியமடைதல்.
-கிறிஸ்துவைப்பற்றிய அறிவில் விருத்தியடைதல்.
-கிறிஸ்துவை முன்மாதிரியாகக் கொண்டு பரிபூரணத்தில் விருத்தியடைதல்.
-பிழையான உபதேசங்களால் வஞ்சிக்கப்படாமல் சத்தியத்தில் உறுதியாயிருத்தல்.
-கிறிஸ்துவின் ஆவிக்குரிய முதிர்ச்சியடைதல்.

## திருத்துவமும் வரங்களும்

பரிசுத்த ஆவியானவர் திருத்துவ தேவனில் ஒருவர் என முன்னர் கற்றுள்ளீர்கள். திருத்துவத்திலுள்ள மூன்று நபர்களும் விசுவாசிகள் ஆவிக்குரிய வரங்களைப்பெற்று வல்லமையடைவதில் உள்ளடக்கப்படுகின்றனர்.

**வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே. கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே. (1 கொரிந்தியர் 12:4-6)**

இப்பகுதியில் பரிசுத்த ஆவியானவரும், தேவனும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவும் குறிப்பிடப்படுகின்றனர். ஆவிக்குரிய வரங்களில் அவர்களின் பங்களிப்பு எவ்வகையானது என்பதை பின்வரும் அட்டவணைக் காண்பிக்கிறது:

| | | |
|---|---|---|
| வசனம் நான்கு | வசனம் ஐந்து | வசனம் ஆறு |
| ஆவி | கர்த்தர் | தேவன் |
| வித்தியாசமான வரங்கள் | வித்தியாசமான நிர்வாகம் | வித்தியாசமான செயல்பாடுகள் |
| (பல்வேறுப்பட்ட வரங்கள்) | (பல்வேறுப்பட்ட ஊழியங்கள்) | (பல்வேறுபட்ட முறைகளில் வரங்கள் பாவிக்கப்படுகிறது) |

## ஆவிக்குரிய ஆயுதங்கள்

ஆவிக்குரிய வரங்களும் சபைக்கு ஆவிக்குரிய போராட்டத்தைச் செய்து சாத்தானை வெற்றிக் கொள்ள ஓர் ஆயதமாக கொடுக்கப்பட்டுள்ளது:

**ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. (எபேசியர் 6:12)**

சில சந்தர்ப்பங்களில் விசுவாசிகள் ஆவிக்குரிய போராட்டத்திற்கு செல்கின்றனர். ஆவிக்குரிய ஆயுதங்களின் அறிவின்றி, ஆயுதமின்றி நீங்கள் போராட்டத்திற்கு சென்றால் போராட்டத்தில் வெற்றியை எதிர்பாக்க முடியாது. இதனாலேயே ஆவிக்குரிய வரங்களைக் குறித்து விளங்கிக் கொள்வது முக்கியமானதாக இருக்கின்றது. இவைகள் தேவன் கொடுத்துள்ள ஆவிக்குரிய ஆயுதங்களின் ஒரு பகுதியாக இருக்கின்றது.

## வரங்களைப் பகிர்ந்தளித்தல்

ஒவ்வொரு விசுவாசிக்கும் குறைந்தது ஒரு ஆவிக்குரிய வரமாவது இருக்கும்:

**அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். (1 பேதுரு 4:10)**

**உலகத்தோற்றத்திற்குமுன்னே தேவன் நம்முடைய மகிமைக்காக ஏற்படுத்தினதும், மறைக்கப்பட்டதுமாயிருந்த இரகசியமான தேவஞானத்தையே பேசுகிறோம்.**

**மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான். (1 கொரிந்தியர் 12:7,11)**

ஒவ்வொரு விசுவாசிக்கும் ஒரு ஆவிக்குரிய வரமாவது இருக்கும், எமக்குள்ள இவ்வரத்தை பாவிப்பது எமது உத்தரவாதமாயிருக்கின்றது.

உங்களுக்குள் எத்ததை வரம் உள்ளதென்று தீர்மானித்து சொல்ல முடியாது. உங்களது உண்மைத்துவத்தின் நிமித்தம் நிதானிக்கலாம், உங்களுக்கு கொடுக்கப்பட்ட வரத்தை அல்லது வரங்களை நீங்கள் பாவியுங்கள். தாலந்து பற்றிய உவமை பற்றிய இச்சத்தியத்தை மத்தேயு 25:14-30ல் உறுதிப்படுத்துகின்றது.

அநேகமான ஆவிக்குரிய வரங்கள் இருக்கின்ற போதும், பரிசுத்த ஆவியானவர் சகல வரங்களுக்கும் ஒரு விசுவாசிக்கு இருப்பதில்லை:

**எல்லாரும் அப்போஸ்தலர்களா? எல்லாரும் தீர்க்கதரிசிகளா? எல்லாரும் போதகர்களா? எல்லாரும் அற்புதங்களைச் செய்கிறவர்களா?**

**எல்லாரும் குணமாக்கும் வரங்களுடையவர்களா? எல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசுகிறார்களா? எல்லாரும் வியாக்கியானம் பண்ணுகிறார்களா? (1 கொரிந்தியர் 12:29-30)**

ஒருவருக்கு ஒன்றுக்கு மேற்பட்ட வரம் இருக்கலாம், ஆனால் ஆவியின் சகல வரங்களும் ஒருவருக்கு இருப்பதில்லை.

## வரங்களை துஷ்பிரயோகம் செய்தல்

ஆவிக்குரிய தேவனால் கொடுக்கப்பட்ட வரம் துஷ்பிரயோகம் செய்யப்படலாம். "துஷ்பிரயோகம்" என்பது சரியான முறையில் பாவிக்கப்படாமை என்று அர்த்தம் கொள்ளும். ஆவிக்குரிய வரம் உங்களாலும் பின்வரும் முறைகளில் துஷ்பிரயோகம் செய்யப்படலாம்.

### கொடுக்கப்பட்ட வரங்களை பாவிக்காமை:

பவுல் தீமோத்தேயுவுக்கு கூறினதாவது:

**மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே. (1 தீமோத்தேயு 4:14)**

**இதினிமித்தமாக, நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல்மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன். (2 தீமோத்தேயு 1:6)**

### உங்களுக்கு கொடுக்கப்படாத வரங்களை இருப்பதாக காண்பிக்க முயற்சி செய்தல்:

பேதுருவும், யோவானும் சமாரியாவில் ஊழியம் செய்கின்றபோது, சீமோன் என்னும் மனிதனை சந்தித்தனர், அவன் தனக்கு வல்லமையுள்ள வரங்கள் இருப்பதாக காண்பிக்க விருப்பமுள்ளவனாயிருந்தான். இத்திறமைகளை சீமோன் பெற்றுக்கொள்வதற்காக பணம் கொடுக்க விரும்பினான். பேதுரு கூறினதாவது:

> **தேவனுடைய வரத்தைப் பணத்தினாலே சம்பாதித்துக்கொள்ளலாமென்று நீ நினைத்தபடியால் உன் பணம் உன்னோடேகூட நாசமாய்ப் போகக்கடவது. இந்த விஷயத்திலே உனக்குப் பங்குமில்லை பாகமுமில்லை..... (அப்போஸ்தலர் 8:20-21)**

ஆவிக்குரிய வரங்கள் பரிசுத்த ஆவியானவரிடமிருந்தே வருகிறது. இதைவேறெந்த முறையினாலும் உரிமையாக்கிக் கொள்ள முடியாது. இந்த வரம் தான் வேண்டும், இந்த வரம்தான் என்னில் கிரியை செய்ய வேண்டும் என்று உங்களால் தீர்மானிக்க முடியாது. பரிசுத்த ஆவியானவரே இதை உங்களுக்கு தர முடியும்.

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் ஏழு குமாரரைக் கொண்டிருந்த பிரதான ஆசாரியன், அப்போஸ்தலனாகிய பவுல் செய்வதைப்போன்ற அற்புதங்களை செய்து பிசாசுகளை துரத்த முற்பட்டான்:

> **பொல்லாத ஆவி அவர்களை நோக்கி: இயேசுவை அறிவேன், பவுலையும் அறிவேன், நீங்கள் யார் என்று சொல்லி,**
>
> **பொல்லாத ஆவியையுடைய மனுஷன் அவர்கள்மேல் பாய்ந்து, பலாத்காரம்பண்ணி, அவர்களை மேற்கொள்ள, அவர்கள் நிருவாணிகளும் காயப்பட்டவர்களுமாகி அந்த வீட்டை விட்டு ஓடிப்போனார்கள். (அப்போஸ்தலர் 19:15-16)**

பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகமின்றி வரங்களை பாவிக்க முற்படுவது பயங்கரமானதாக அமையும்.

## வரங்களை ஒழுங்காக பாவிக்காமை

1 கொரிந்தியர் 12-14ல் பவுல் முறையாக ஆவியின் வரங்களை பாவிப்பதை கூறுகின்றார். இவ்வதிகாரத்தின் படிப்பினையை சுருக்கமாக கூறினால்:

> **தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார், சகலமும் நல்லொழுக்கமாயும் கிரமமாயும் செய்யப்படக்கடவது. (1 கொரிந்தியர் 14:33,40)**

என்றே கூற வேண்டும். தேவன் குழப்பத்தின் தேவன் அல்ல. சந்தேகம் எங்கே குடிகொண்டிருக்கின்றதோ அங்கே வரங்கள் சரியானபடி பாவிக்கப்படுவதில்லை. ஆவிக்குரிய வரங்கள் தவறாக பாவிக்கப்படும்போது மக்களை நீங்கள் நன்றாக ஏமாற்றுகின்றீர்கள், உங்கள் சுயநலத்துக்காக பாவிக்கின்றீர்களே ஒழிய மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்காக பாவிக்கவில்லை.

ஆவிக்குரிய வரங்களை பாவிப்பதற்கான வழிகாட்டலை பவுல் 1 கொரிந்தியர் 12-14ல் சந்தேகமின்றி கொடுத்துள்ளார். இதனைப்பற்றிய படிப்பை இவ்வதிகாரத்திலுள்ள “மேலதிக படிப்பினைக்கு” என்ற பகுதியில் கற்றுக்கொள்ளும் சந்தர்ப்பம் உங்களுக்கு உண்டு.

## உங்கள் வரங்களைக்குறித்து மேன்மை பாராட்டுதல்

உங்கள் வரங்களை குறித்து "மேன்மைபாராட்டினால்" மற்ற வரங்களை பார்க்கிலும் உங்கள் வரம் மேலானது என எண்ணுவீர்கள். வரத்தை கொடுத்தவரைப் பார்க்கிலும் வரத்தை மேன்மைபடுத்த ஆரம்பிப்பீர்கள்.

## அநேக வரங்கள் ஒன்றையே ஆதாரமாக கொண்டவை:

வேதாகமமானது அநேக வரங்களுண்டு என்று வெளிப்படுத்துகின்றபோதும், அவை ஒரு ஆதாரத்தில் இருந்தே வந்து உள்ளது. அந்த ஆவிக்குரிய வரங்களின் ஆதாரம் பரிசுத்த ஆவியானவரே ஆகும். அவரே விசுவாசிக்கு வரங்களை கொடுத்து அதை உபயோகிக்கின்றார்:

**வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே.**

**ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே.**

**கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே.**

**ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. (1 கொரிந்தியர் 12:4-7)**

**நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன்.**

**ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும்,**

**புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன். பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன். முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன். இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன். (ரோமர் 12:6-8)**

ஆவிக்குரிய வரங்கள் ஒரு ஆதாரத்திலிருந்து வருகின்ற போதும், அநேக வித்தியாசமான வரங்களுண்டு. ஒரு வரத்தை பார்க்கிலும் மற்றது முக்கியமானதல்ல. கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள உங்கள் நிலமையை ஒரு மனித சரீரத்திலுள்ள உங்கள் நிலமையை ஒரு மனித சரீரத்துடன் ஒப்பிட்டு பாருங்கள். சரீரத்தில் கண் சிறிய அவயவமாக இருக்கின்ற போதும் அதன் கிரியை மிகமுக்கியமானது, அவ்விதமாகவே பார்க்கையில் "சிறிய" வரமாக இருக்கின்றபோதும் சபைக்கு அதன் கிரியை முக்கியம். சில வரங்கள் பெரிய உத்தரவாதங்களைக் கொண்டதாக இருப்பினும், எந்த வரமும் மற்றொன்றைப் பார்க்கிலும் மிக முக்கியமானதல்ல.

சரீரத்திலுள்ள சில அவயவங்கள் பெரிதான உத்தரவாத்தை கொண்டவைதான். உதாரணமாக கண்களினால் சுற்றிலுமுள்ளவற்றை நீங்கள் காண்கின்றீர்கள். நடப்பதற்கு உதவுகின்றது. அது வாசிக்கவும், பார்க்கவும் தேவனுடைய சிருஷ்டிப்பில் சந்தோஷப்படவும் உதவுகின்றது. கண்ணுக்கு பெரிதான உத்தரவாதம் இருக்கின்ற போதும், நடப்பதற்கு சமநிலை தரும் காலின் பெருவிரல்

பார்க்கிலும் மிக முக்கியமானதல்ல. கண் வழிகாட்டுகின்றபோதும் பாதமில்லாவிட்டால் நடக்க வழிகாட்டி எந்த பிரயோசனமும் இல்லை. கண்களால் உங்களுக்கு வாசிக்க உதவ முடியுமென்றாலும், வாசிப்பதை விளங்கிக் கொள்ள மூளை இல்லாவிட்டால் வாசிப்பதில் பிரயோசனமில்லை.

சில வேளைகளில் மற்றவர்களின் வரங்களைக்குறித்து சபையிலுள்ள விசுவாசிகள் அறியாதபடியால், தவறான புரிந்து கொள்ளுதல்கள் ஏற்படுகின்றது. உதாரணம் ஒருவருக்கு ஈகை வரம் இருக்கலாம், மற்றவர் விடுதலையோடு கொடுக்காமல் இருப்பதை விளங்கிக் கொள்ளாமல் இருக்கலாம் அல்லது ஒருவருக்கு நிர்வகிக்கும் திறமையிருக்கலாம், ஆனால் அவர் பொறுமைசாலியாக மக்களுடன் நடந்து கொள்ளாவிட்டால் அவர் நிர்வாகத்தை இழந்து விடுவார்.

ஒவ்வொரு விசுவாசியும் தனது ஆவிக்குரிய வரத்தை பாவிக்க வேண்டும், மற்றவரின் வித்தியாசமான வரத்தையும் ஏற்று ஒன்றாக கிரியை செய்ய வேண்டும். இப்படி நடைபெறுகின்றபோது சபையின் கிரியைகள் சிறப்பானதாக கிறிஸ்துவின் சரீரத்தில் இருக்கும்.

## வரங்களைக்குறித்த உக்கிராணத்துவம்

உங்களுக்கு ஆவியானவரின் வரங்களை குறித்த உக்கிராணத்துவம் உண்டு. உக்கிராணத்துவம் என்பது தனக்கு சொந்தமற்றதிற்காக வேலை செய்வதாகும். தனக்கு கொடுக்கப்பட்டவற்றை மற்றவர்களுக்காக பாவிப்பது உக்கிராணத்துவம். தனக்கு கொடுத்தவற்றிற்காக அதை அவர் பாவிப்பார். நீங்கள் கிறிஸ்து இயேசுவின் உக்கிராணக்காரர்கள்:

> **இப்படியாக, எந்த மனுஷனும் எங்களைக் கிறிஸ்துவின் ஊழியக்காரரென்றும், தேவனுடைய இரகசியங்களின் உக்கிராணக்காரரென்றும் எண்ணிக்கொள்ளக்கடவன். (1 கொரிந்தியர் 4:1)**

தேவனுடைய இரகசியங்கள் உக்கிராணத்துவம் எனக் குறிப்பிடப்படுவது ஆவியானவருடைய வரங்களையேயாகும். அவைகள் பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கு கொடுக்கப்படுவதின் காரணம் கிறிஸ்துவுக்காக ஊழியம் செய்வதற்கேயாகும்:

> **அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். (1 பேதுரு 4:10)**

உக்கிராணக்காரன் என்றவகையில், உங்களுக்கு கொடுக்கப்பட்ட வரங்களின்படி உங்கள் உன்னதத்துவம் நியாயந்தீர்க்கப்படும்.

> **மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவனென்று காணப்படுவது அவசியமாம். (1 கொரிந்தியர் 4:2)**

## ஆவியின் வரங்கள்

ஆவியின் வரங்களைப்பற்றிய முக்கிய வேதபகுதிகளின் பட்டியல் நீங்கள் அடையாளம் காணும்படிக்கு கீழே கொடுக்கப்படுகிறது. கற்றுக்கொள்ளும் முன்னர் இவ்வேதபகுதிகளை வாசியுங்கள். இவ்வசனங்கள்

பலவிதமான வரங்களை உங்களுக்கு அறிமுகம் செய்யும்:

-ரோமர் 12:1-8 -1 கொரிந்தியர் 12:1-31
-எபேசியர் 4:1-16 -1 பேதுரு 4:7-11

இவ்வரங்கள் யாவற்றிற்கும் தேவனிடத்திலிந்து வந்த விசேட திறமையுண்டு என்பதை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். எமது வாழ்வில் சில வரங்கள் இருப்பதற்கான ஆதாரங்கள் இருக்கலாம், ஆனால் இந்த வரம்தான் எனக்குரியது என்று எம்மால் கூற முடியாது. உதாரணமாக சகல விசுவாசிகளும், தேவனுடைய வேலைக்காக தசமபாகங்களையும், காணிக்கையையும் கொடுக்கிறார்கள். ஆனால் கொடுக்கின்ற வரம் பரிசுத்த ஆவியானவரால் அருளப்படுகின்ற திரளான குணம் கொண்ட வரமாகும். சகல விசுவாசிகளுக்கும் தேவனுடைய வசனத்தில் குறிப்பிடத்தக்க அளவிலான விசுவாசமே இருக்கின்றது. ஆனால் விசுவாசவரம் என்பது விசேட திறமை கொண்டது. அது சாதாரணமாக கிறிஸ்தவர்களிடம் உள்ள விசுவாசத்தை விட பெரிதான விசுவாசம்.

## இன்றும் வரங்கள் உண்டா?

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள ஆவிக்குரிய வரங்களின் பட்டியலிலுள்ளவைகள் இன்றைய திருச்சபைக்கானது அல்லவென்று சிலர் கூறுகின்றனர். அவர்கள் தீர்க்கதரிசனங்கள், அந்நியபாஷை என்பனவற்றை அது ஆதித்திருச்சபைக்கானது என விசுவாசிக்கின்றனர். இந்த மக்கள், சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர், புதிய ஏற்பாடு எழுதப்பட்டு விட்டமையால் இவ்வரங்கள் அவசியமில்லை என்று கூறுகின்றனர். அதற்கு ஆதாரமாக 1 கொரிந்தியர் 13:10ஐ விபரிக்கின்றனர்:

**நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோம். (1 கொரிந்தியர் 13:10)**

தேவனுடைய வசனம் பரிபூரணமாக வெளிப்படுத்தப்பட்டு எழுதப்பட்டு விட்டது. அதனாலேயே அந்நிய பாஷை பேசுவதும், வியாக்கியானம் பண்ணுதலும், தீர்க்கதரிசனமும் அவசியமில்லை என்கின்றார்கள். சபை ஸ்தாபிக்கப்பட்டு விட்டமையால் அடையாளங்களும், அற்புதங்களும் அவசியமில்லை என கூறுகின்றனர்.

ஆனால் அவர்கள் குறிப்பிடப்பட்டுள்ள வார்த்தையின் பகுதியான "ஒழிந்துபோகும்" என்பதை உற்றுநோக்க தவறிவிட்டார்கள்:

**அன்பு ஒருக்காலும் ஒழியாது. தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம், அந்நிய பாஷைகளானாலும் ஓய்ந்துபோம், அறிவானாலும் ஒழிந்துபோம். (1 கொரிந்தியர் 13:8)**

இவ்வார்த்தையில் நாம் அந்நியபாஷையும், வியாக்கியானமும், தீர்க்கதரிசனமும் அவசியமில்லை எனக்கூறுவோமானால், அறிவும் எமக்கு அவசியம் இல்லை என்றே கூற வேண்டும்.

உண்மையாகவே இப்பகுதி எதிர்காலத்தில் "பரிபூரணமான" தேவ இராஜ்ஜியம் பூமியில் ஸ்தாபிக்கப்படும் என்பதையே வெளிப்படுத்துகின்றது. எனவே பரிபூரணமாக இது வந்துவிட்டால் எமக்கு எவ்விதமான ஆவிக்குரிய வரங்களும் தேவைப்படாது, ஏனென்றால்...

**இதோ, மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார். அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன்தாமே அவர்களோடேகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். (வெளிப்படுத்தல் 21:3)**

இவ்வேளையில் எமக்கு தீர்க்கதரிசன செய்திகளும், அந்நியபாஷையும், வியாக்கியானமும் அவசியமில்லை, ஏனென்றால் நாம் தேவனோடு வாசம் செய்வோம், அவர் செய்திகளை எமக்கு அருளுவார். அப்போது எமக்கு ஞானத்தை அருளும் வசனமும், அறிவை உணர்த்தும் வசனமும் அவசியமில்லை. ஏனென்றால் அறிவின் ஆதாரத்துடனேயே நாம் வாழ்வோம். எங்களுக்கு பகுத்தறியுயும் ஆவியும் அவசியமில்லை.

> **ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை.... ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள். (வெளிப்படுத்தல் 21:27)**

அங்கு குணமாக்கும் வரங்களும் அவசியமில்லை. ஏனென்றால்...

> **நகரத்து வீதியின் மத்தியிலும், நதியின் இருகரையிலும், பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவவிருட்சம் இருந்தது, அது மாதந்தோறும் தன் கனியைக் கொடுக்கும். அந்த விருட்சத்தின் இலைகள் ஜனங்கள் ஆரோக்கியமடைகிறதற்கு ஏதுவானவைகள். (வெளிப்படுத்தல் 22:2)**

ஆவிக்குரிய வரங்கள் கொடுக்கப்பட்டதின் நோக்கத்தையும், குறிக்கோளையும் ஞாபகப்படுத்திக் கொள்ளுங்கள். எபேசியர் 4:12-15. நோக்கங்களானவை:

-பரிசுத்தவான்களை சீர்ப்படுத்த.
-சுவிஷேச ஊழியத்தின் வேலைக்காக.
-கிறிஸ்துவின் சபை பக்திவிருத்தியடைய.

இந்த நோக்கங்கள் நிறைவேறுவது வரங்களிலேயே தங்கியிருக்கின்றது. உலகின் முடிவு பரியந்தமும் பரிசுத்தவான்களுக்கு இன்னும் சீர் பொருந்துதல் அவசியம். சுவிசேஷ ஊழியங்கள் செய்யப்படுவது அவசியம், கிறிஸ்துவின் சபையானது இன்னும் பக்தி விருத்தியடைவது அவசியமாக இருக்கின்றது.

இக்குறிக்கோள்கள் நிறைவேற்றப்பட நாம்:

-விசுவாசத்தில் உறுதியாயிருக்க வேண்டும்.
-கிறிஸ்துவை அறிகின்ற அறிவில் வளர வேண்டும்.
-கிறிஸ்துவை மாதிரியாகக் கொண்டு நாம் பரிபூரணப்பட வேண்டும்.
-பிழையான உபதேசங்களினால் ஏமாறாமல் சத்தியத்தில் உறுதியாயிருக்க வேண்டும்.
-கிறிஸ்துவின் ஆவிக்குரிய முதிர்ச்சியடைய வேண்டும்.

இப்படியான நோக்கத்திற்காக தேவன் இவ்வரங்களை தராது இருந்தால் அவரது குறிக்கோள்கள் நிறைவேற்றப்படுமா?

-சகல விசுவாசிகளும் விசுவாசத்தில் உறுதியாயிருப்பார்களா?
-யாவரும் கிறிஸ்துவை அறிகின்ற அறிவில் பூரணப்படுவார்களா?
-நாம் பரிபூரணமடைவோமா?
-எமது சபை அங்கத்தவர்கள் பிழையான உபதேசத்தால் ஏமாற்றப்படாமல் இருப்பார்களா?
-எமது சபையின் அங்கத்தவர்கள் ஆவிக்குரிய முதிர்ச்சியடைவார்களா?

இக்கேள்விகளுக்கான பதில் இல்லை என்பதாகும். இக்குறிக்கோள் நிறைவேற்றப்படுவதில்லை. இதன் காரணமாக இவ்வரங்கள் இன்றைக்கும் அவசியமாக இருக்கின்றது. தேவன் ஆவிக்குரிய வரங்களை சபைக்கு கொடுக்கக் காரணம் அவரது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காகும். இந்த நோக்கங்களை

நிறைவேற்றாமல் அவர் எந்தவொரு வரத்தையும் திரும்ப பெற மாட்டார். தேவனுடைய கிருபை வரங்களும் அவர் அழைத்த அழைப்பும் மாறாதவைகள் என வேதாகமம் கூறுகின்றது. (ரோமர் 11:29). அவர் கொடுத்த வரத்தையும் அழைப்பையும் திரும்ப பெற்றுக் கொள்ளும் படிக்கு அவர் தனது மனதை மாற்றிக் கொள்ள மாட்டார் என்பதே இதன் அர்த்தம்.

## வரங்களை உபயோகிக்கும் திறவுகோல்

பரிசுத்த ஆவியானவரின் வரங்களை பாவிக்கும் திறவுகோலை அப்போஸ்தலனாகிய பவுல் 1 கொரிந்தியர் 13ல் தருகின்றார். 1 கொரிந்தியர் 12:31ல் இப்பாடத்தை அறிமுகம் செய்கின்றார். ஆவர் ஆவியானவரின் வரங்களை பட்டியல்படுத்தி காட்டி கூறுகின்றதாவது:

> **இன்னும் அதிக மேன்மையான வழியையும் உங்களுக்குக் காண்பிக்கிறேன். (1 கொரிந்தியர் 12:31)**

அங்கு 1 கொரிந்தியர் 13ம் அதிகாரம் “மிகச் சிறப்பான வழிகளில்” இதை விபரிக்கின்றது. இவ்வதிகாரத்தை வாசியுங்கள். ஆவிக்குரிய வரங்கள் பற்றிய திறவுகோலை இவ்வதிகாரம் தருகிறது. அன்பே அந்த திறவுகோல். உங்களுக்கு தீர்க்கதரிசனம் உரைத்தல், குணமாக்குதல், விசுவாசம், கொடுத்தல் போன்ற வரங்கள் இருக்கலாம், ஆனால் அன்பில்லாமல் இவ்வரங்கள் பாவிக்கப்படும்போது அது தாக்கத்தை ஏற்படுத்தாது.

அன்பில்லாமல் பாவிக்கப்படும் வரங்களினால் பயனில்லை. அந்நியபாஷை பேசுகின்றபோது சத்தம் பேரொலியைப் போலிருக்கும். அன்பில்லாமல் பாவிக்கப்படுகின்ற எவ்வரமும் பிரயோசமற்றதாயும், பெறுமதியற்றதாயுமிருக்கும். உங்களை பாவிப்பதற்கு அன்பே “மிகச்சிறப்பான வழியாக” இருக்கிறது. தேவனுடைய அன்பானது வரங்களின் மூலமாக எம்மை சுற்றிலும் நீதியாய் பாய்கின்றது. ஆவிக்குரிய வரங்கள் சாதகமான பயனைத்தர திறவுகோலாக இருப்பது அன்பேயாகும்.

## எச்சரிக்கை: சாத்தானுடைய வஞ்சகத்திற்கு

பரிசுத்த ஆவியானவருடைய வரங்களை சாத்தான் வஞ்சிக்கின்றான். அவன் போலியானவற்றை வரம்போன்று காண்பித்து ஏமாற்றுகின்றான். அவன் காண்பிப்பது மெய்யான வரமல்ல. சாத்தான் ஏமாற்றுக்காரன். அவன் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரிக்கிறான் என வேதாகமம் கூறுகின்றது (1 கொரிந்தியர் 11:14). கடைசி நாட்களில் அந்திக்கிறிஸ்து சாத்தானின் வஞ்சகத்தோடு வருவான் (1 யோவான் 2:18,22).

ஏராளமான போலியான வரங்களை மாந்திரிகத்தினால் நிறைவேற்றுகின்றது. உதாரணமாக அறிவை உணர்த்தும் வசனம், மாந்திரிகர்களின் பாசாங்கினால், வஞ்சகமான முறையில், யாரும் அறியாத எதிர்காலத்தைக்குறித்து கூறப்படுகிறது. மாந்திரிகள் தேவனைவிட்டு விட்டு, இயற்கைக்கு அப்பாற்பட்ட ஆதாரத்தின் மூலமாக அவற்றை அறிந்து கிரியை செய்கின்றான். அவனது ஆதாரமாக சாத்தானே இருக்கின்றான். இந்த வஞ்சகமான வரங்களை பகுத்தறியும் ஆவியின் மூலம் அடையாளம் காணலாம்.

அற்புதங்களும் சாத்தானால் வஞ்சகமான முறையில் செய்யப்படுகின்றது (யாத்திராகமம் 7) அந்திகிறிஸ்துவே அவற்றை செயல்படுத்துகிறான் (வெளிப்படுத்தல் 13:14). கள்ள தீர்க்கதரிசிகளைப் பற்றியும் வேதாகமம் கூறுகின்றது (அப்போஸ்தலர் 13:6-12). வஞ்சகத்திற்கும், மெய்யானதிற்கும் உள்ள

வேறுபாட்டை எவ்வாறு அடையாளம் காணுவீர்கள் என்பதே முக்கியமான கேள்வியாக இருக்கின்றது.

பரிசுத்த ஆவியானவருடைய ஆவியின் வரங்களின் நோக்கத்தை வஞ்சக ஆவி நிறைவேற்றாது. திரும்பவும் எபேசியர் 4:12-15வரை வாசியுங்கள். எவ்விதமான பரிசுத்த ஆவியின் வரங்களும், ஆவிக்குரிய நோக்கத்தையும், குறிக்கோளையும் நிறைவேற்றும்.

வேதாகமத்தில் இயேசு கற்பித்தவற்றுடன் வஞ்சக வரங்கள் ஒத்துக்போகாது. யாராவது வரங்களை ஊழியத்தில் பாவிப்பார்களானால் இயேசுவைப்பற்றி அவர்கள் என்ன கூறுகின்றார்கள் என்பதை கவனியுங்கள். அவைகள் வேத வசனத்தோடு ஒத்துப் போகின்றதா என பாருங்கள்.

> **ஆகிலும், சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றிய உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன்.**
>
> **ஏப்படியெனில், உங்களிடத்தில் வருகிறவன் நாங்கள் பிரசங்கியாத வேறொரு இயேசுவைப் பிரசங்கித்தானானால், அல்லது நீங்கள் பெற்றிராத வேறொரு ஆவியையும், நீங்கள் ஏற்றுக்கொள்ளாத வேறொரு சுவிசேஷத்தையும் பெற்றீர்களானால், நன்றாய்ச் சகித்திருப்பீர்களே. (2 கொரிந்தியர் 11:3-4)**

அவர்களுடைய தனிப்பட்ட குணாதிசயத்திலும் வஞ்சகம் இருப்பதை நீங்கள் அடையாளம் காணுவீர்கள். இதைப்பற்றிய பட்டியல் 2 பேதுரு 2இலும், யூதாவின் புத்தகத்திலும் கொடுக்கப்பட்டு உள்ளது. இவ்வதிகாரங்களை உங்களுடைய வேதாகமத்தில் கவனித்து, உண்மையானதிற்கும், வஞ்சகத்திற்கும் உள்ள வேறுபாட்டை கண்டறியுங்கள்.

## சுய பரீட்சை:

١. திறவுகோள் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

٢. இயற்கையான தாலந்துகளுக்கும், ஆவிக்குரிய வரங்களுக்குமுள்ள வேறுபாடு என்ன?

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. ஆவிக்குரிய வரங்களுக்கான 3 நோக்கங்கள் தருக:

------------------------------------------------- ------------------------------------------------- -------------------------------------------------

4. ஆவிக்குரிய வரங்களுக்கான 5 குறிக்கோள்கள் யாவை?

------------------------------------------------- ------------------------------------------------- -------------------------------------------------

------------------------------------------------- -------------------------------------------------

5. ஆவி ஒவ்வொருவருக்கும் குறைந்தது ஒரு வரமாவது உண்டா? உங்கள் பதிலுக்கு ஆதாரமாக குறைந்தது ஒரு வேத வசனத்தையாவது தரவும்.

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

6. ஆவிக்குரிய வரங்கள் துஷ்பிரயோகம் செய்யப்படும் 4 காரியங்களை தருக.

----------------------------------- ----------------------------------- ----------------------------------- -----------------------------------

7. ஆவிக்குரிய வரங்களுக்கான ஆதாரம் யார்?-----------------------------------------------------------------------------

8. ஆவிக்குரிய வரங்களை பாவிப்பதற்கான முக்கிய திறவுகோல் யாது?-------------------------------------------

9. பரிசுத்த ஆவியானவருடைய உண்மையான வரத்தை, சாத்தானின் வஞ்சகத்தினின்று எவ்விதம் வேறுபடுத்துவீர்கள்?

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

10. ஆவியின் வரங்கள் யாவை?

--------------------------------------------------------------------------------

11. தற்போதைய ஆவிக்குரிய வரங்கள் யாவும், ஆதிசபையின் வரங்களைப் போன்றதா? பதிலை விபரித்து எழுதவும்.

--------------------------------------------------------------------------------

12. ஆவிக்குரிய "வரங்களுக்கும்", பரிசுத்த ஆவியானவருடைய "வரத்திற்கும்"உள்ள வித்தியாசம் யாது?

--------------------------------------------------------------------------------

13. பின்வரும் கூற்றுக்களை வாசித்து, சரியாயின் "ச" எனவும், பிழையாயின் "பி" எனவும் கூற்றுக்கு முன் உள்ள கீறிட்ட இடத்தில் எழுதவும்.

அ............ மனித தாலந்துக்கள் ஆவிக்குரிய வரங்கள் அல்ல.

ஆ........... பிறக்கின்ற போதே ஆவிக்குரிய வரங்களோடு நீங்கள் பிறந்தீர்கள்.

இ............ உங்களுடைய மேன்மைக்காகவே ஆவியானவருடைய வரங்களை தேவன் கொடுக்கின்றார்.

ஈ.............. சபை ஸ்தாபிக்கப்பட்ட பின்னர் தேவனின் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமை தற்போது அவசியம் இல்லை.

உ........... ஏற்கனவே "சகலரும் பரிபூரணமடைந்து விட்டமையால்" தற்போது அந்நியபாஷை பேசுதலும், வியாக்கியானம் செய்தலும், தீர்க்கதரிசனம் உரைத்தலும் அவசியமில்லை.

ஊ........... எந்த கிறிஸ்தவனுக்கும் சகல வரங்களும் கிடைப்பதில்லை.

எ............. எமது வரங்களை எம்மால் தேர்ந்தெடுக்க முடியாது.

ஏ........... எமது வரங்களை எவ்விதமாக நாம் பாவிக்கிறோம் என்பதற்காக தேவனிடத்தில் நாம் கணக்கொப்புவிக்க வேண்டும்.

ஐ............ அன்பில்லாமல் பாவிக்கப்படும் வரங்களினால் பிரயோசனமில்லை.

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன).

## மேலதிக படிப்பினைக்கு

1. 2 பேதுரு 2 ஐயும், யூதாவையும் வாசியுங்கள். கள்ள தீர்க்கதரிசிகளுக்கும், மறுதலிக்கிற பக்தியற்றவர்களாகிய சிலர் என்பவர்களுடைய தனிப்பட்ட குணாதிசயத்தை பட்டியலிடுங்கள். இப்படிப்பட்டவர்களே வஞ்சிக்கின்றவர்களாக இருக்கின்றனர். இவர்கள் மெய்யான விசுவாசிகளல்ல, போலியான வரங்களை பாவித்து தேவ மக்களை ஏமாற்றுவார்கள்.

2. ஆவிக்குரிய வரங்களைப் போன்றே இயற்கையான தாலந்துகளும் தேவனால் பாவிக்கப்படலாம். கீழ்க்கண்ட வசனங்களை கவனியுங்கள். தனித்தனியாக அவர்களுடைய பெயர்களையும், அவர்களுடைய தாலந்துகளையும் குறிப்பிடவும்:

### இயற்கையான தாலந்துகள்

| வசனம் | பெயர் | தாலந்து |
|---|---|---|
| ஆதியாகமம் 4:20 | ---------------------------------------- | ---------------------------------------- |
| ஆதியாகமம் 4:2 | ---------------------------------------- | ---------------------------------------- |
| ஆதியாகமம் 4:21 | ---------------------------------------- | ---------------------------------------- |
| ஆதியாகமம் 4:22 | ---------------------------------------- | ---------------------------------------- |
| ஆதியாகமம் 25:27 | ---------------------------------------- | ---------------------------------------- |

3. பின்வரும் வேத வாக்கியங்களை படித்து வசனங்களை பூர்த்தி செய்யுங்கள். ஆவிக்குரிய வரங்களைப்பற்றி அறிந்து கொள்வது முக்கியமானது.. ஏனென்றால்:

   அ. நாம் பெற்றுக்கொண்ட ------------------------------------- தேவனுக்காக உபயோகிக்க வேண்டும்.

   நாம் ------------------------------------------------------------

   (1 பேதுரு 4:10; 1 கொரிந்தியர் 4:1-2; மத்தேயு 25:14-30)

   ஆ. நாம் ------------------------------------------------- கவனமாக -----------------------------------------.

   (1 தீமோத்தேயு 4:14; 1 கொரிந்தியர் 12:1)

4. 1 கொரிந்தியர் 13ல் அன்பின் குணாதிசயங்கள் கூறப்படுகின்றது. இடைவெளிகளில் வசனத்தின் இலக்கத்தை எழுதவும். பின்வருவனவற்றில் முதலாவது உதாரணமாக பாவிக்கப்பட்டுள்ளது:

---5--- பொறுமையுள்ளது
-------- தயவுள்ளது
-------- பொறாமைப்படாது
-------- பெருமைப்படாது
-------- இறுமாப்படையாது
-------- அயோக்கியமானதை செய்யாது
-------- தற்பொழிவை நாடாது

-------- சினமடையாது
-------- தீங்கு நினையாது
-------- அநியாயத்தில் சந்தோஷப்படாது
-------- சந்தியத்தில் சந்தோஷப்படும்
-------- சகலத்தையும் தாங்கும்
-------- சகலத்தையும் விசுவாசிக்கும்
-------- சகலத்தையும் நம்பும்
-------- சகலத்தையும் சகிக்கும்

உங்களால் நேசிக்க முடியாத இருக்கின்ற ஒரு நபரின் பெயரை எழுதுங்கள். மேலே உள்ள தராதரங்களின் பட்டியலையும் பாருங்கள். ஒரு நபரிடம் அன்பு செலுத்த இந்த விஷேசித்த தராதரங்கள் வேண்டும் என எண்ணும் தராதரங்களை பட்டியலிடுக.

என்னால் ------------------------------------------ என்ற நபரை நேசிக்க சிரமம்.

அவனை அல்லது அவளை நேசிக்க ------------------------------------------------------------------------------------------ ----------------------------------------------------------- தராதரம் வேண்டும்:

5. பவுல், 1 கொரிந்தியர் 12-14ம் அதிகாரங்களில் வரங்களை குறித்து பேசுகின்றார். அதை நீங்கள் பின்வரும் வரைகோட்டின் மூலம் தெளிவாக அறிந்து கொள்ளுங்கள்.

I. ஆவிக்குரிய வரங்களைக்குறித்து நீங்கள் அறிந்து இருக்க வேண்டும்: 1 கொரிந்தியர் 12:1

II. அநேக வரங்கள் இருக்கின்றன, ஆனால் ஒரு ஆவியானவராலேயே இது வருகின்றது: திருத்துவ தேவன் சகல வரங்களிலும் கிரியை செய்கின்றார். 1 கொரிந்தியர் 12:4-11

III. ஆவிக்குரிய வரங்களை பாவிக்கிற போது ஒரு சரீரத்தை போன்று கிரியை செய்ய வேண்டும். ஒரு பாகம் மற்ற பாகத்துடன் ஒத்துழைத்து கிரியை செய்ய வேண்டும். 1 கொரிந்தியர் 12:12-31

அ. சரீரத்திலே பிரிவினைகள் கிடையாது. அதைப்போன்றே நாம் ஒருவரையொருவர் கவனிக்க வேண்டும்: 1 கொரிந்தியர் 12:25-26

ஆ. தேவன் சபையில் ஆவியானவரின் வரங்களை ஒழுங்கின்படி வைத்துள்ளார்: 1 கொரிந்தியர் 12:28

இ. அனைவருக்கும் ஒரே வரம் கிடைப்பதில்லை: 1 கொரிந்தியர் 12:28-30

ஈ. ஆவியானவருடைய வரங்களை நாம் வாஞ்சிக்க வேண்டும்: 1 கொரிந்தியர் 12:31; 14:1

உ. சகல வரங்களும் பாவிக்கப்பட அன்பே திறவுகோல்: 1 கொரிந்தியர் 13

ஊ. சபையின் பக்திவிருத்திக்காக வரங்கள் கொடுக்கப்பட்டுள்ளது: 1 கொரிந்தியர் 14:12

IV. உங்களுக்கு அந்நியபாஷை பேசி ஜெபிக்கிற வரம் இருந்தால், வியாக்கியானம் பண்ணும் வரத்தையும் நீங்கள் கொண்டிருக்க வேண்டும்: 1 கொரிந்தியர் 14:1-13

அ. ஆவியில் கருத்தின்றி துதிப்பதும், கருத்தோடு ஆவியில் துதிப்பதும் ஆராதனையில் ஒரு பகுதிதான்: 1 கொரிந்தியர் 14:14-15

ஆ. பேசும் வார்த்தைகள் மற்றவர்கள் விளங்கிக் கொள்வது முக்கியம், விசேடமாக

அவிவிசுவாசிகள் இருக்கின்றபோது: 1 கொரிந்தியர் 14:16-19

இ. அந்நிய பாஷை பேசுவது அவிவிசுவாசிகளுக்கு அடையாளமாக இருக்கின்றது: 1 கொரிந்தியர் 14:22-25

ஈ. தீர்க்கதரிசனங்கள் விசுவாசிகளுக்கான நற்பலனாகும்: 1 கொரிந்தியர் 14:22-25

V. ஆராதனைவேளையில் சகலமும் கிரமமாயும், ஒழுங்கின் படியும் நடைபெற வேண்டும். வியாக்கியானம் பண்ண ஒருவரும் இராவிட்டால் அந்நிய பாஷை பேசுவதில் பிரயோசனம் இல்லை: 1 கொரிந்தியர் 14:26-31

அ. பரிசுத்த ஆவியானவர் உங்களுக்கூடாக கிரியை செய்யும் போது கட்டுப்பாட்டை இழக்க வேண்டாம். நீங்கள் வரங்களை தகுந்த முறையில் பாவிக்க கட்டுப்பாட்டுடன் இருப்பது அவசியம்: 1 கொரிந்தியர் 14:32

ஆ. சந்தேகம் தேவனிடத்திலிருந்து வருவதில்லை: 1 கொரிந்தியர் 14:33

VI. நீங்கள் அந்நியபாஷை பேசுவதை தடுத்து நிறுத்த முடியாது. தீர்க்கதரிசனம் சொல்ல வாஞ்சையாயிருங்கள்: 1 கொரிந்தியர் 14:39

VII. முட்டாள்தனமான கேள்விகளை கேட்பது ஆராதனையில் ஒரு பகுதியல்ல: 1 கொரிந்தியர் 14:34-35,37-38

VIII. வரங்களை சரியானபடி பாவிப்பதற்காக வழிகாட்டல்: சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படக்கடவது. 1 கொரிந்தியர் 14:40

அதிகாரம் ஆறு

# பரிசுத்த ஆவியானவரின் விசேட வரங்கள்

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால் :

இப்பாடத்தில் பாவிக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய வரங்களின் நான்கு பிரிவுகளின் பெயரைக் குறிப்பிடுவீர்கள்.
பரிசுத்த ஆவியானவரின் விஷேட வரங்களை அடையாளம் காண்பீர்கள்.
விசேட வரமான தீர்க்கதரிசனத்திற்கும், தீர்க்கதரிசிக்கும் இடையிலான வித்தியாசத்தை விபரிப்பீர்கள்.
விசேட வரமான போதகருக்கும், போதகத்திற்கும் இடையிலான வித்தியாசத்தை விபரிப்பீர்கள்.

## திறவுகோள் வசனம்:

**அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். (எபேசியர் 4:13)**

## அறிமுகம்

இவ்வதிகாரத்தைக் கற்றுக் கொள்ளும் முன்னர் பின்வரும் வேதபகுதிகளை வாசிக்கவும். இந்த வசனங்கள் பரிசுத்த ஆவியானவருடைய வரங்களின் பட்டியலாகும்.

-ரோமர் 12:1-8
-1 கொரிந்தியர் 12:1-31
-எபேசியர் 4:1-16
-1 பேதுரு 4:7-11

இக்கையேட்டின் அனுபுத்தகத்திற்கு திருப்பிக் கொள்ளுங்கள். உங்களால் முடியுமானால் ஆங்கில Amplified versonல் இப்பகுதியை வாசியுங்கள். இலகுவாக கற்றுக்கொள்வதற்காக வரங்களை 4 பிரதான பிரிவுகளாக பிரித்துள்ளோம்:

-விசேட வரங்கள்
-பேசும் வரங்கள்
-சேவை செய்யும் வரங்கள்
-அடையாள வரங்கள்

வேதாகமத்தில் இவ்வித பிரிவுகளாக வரங்கள் காணப்படவில்லை. நீங்கள் கற்றுக் கொள்வதற்கு இலகுவாக இருக்கும்படியே இவ்விதமாக நாம் பிரித்துள்ளோம் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். இவ்வதிகாரம் விசேட வரங்களை குறித்து கற்றுத் தரும். தொடர்ந்து வரும் அதிகாரங்களில் பேசும், சேவை செய்யும், அடையாள வரங்களை விபரிக்கும்.

## சரீரத்தில் ஒருங்கிணைத்தல்

கடந்த அதிகாரம் ஆவிக்குரிய வரங்களின் ஒருமைப்பாட்டையும் பல்வேறு வகைகளையும் விபரித்தது. பலவிதமான வரங்கள் இருக்கின்றன, அவையாவும் ஒரு ஆதாரத்தையே கொண்டு உள்ளது. அந்த ஆதாரம் பரிசுத்த ஆவியானவர் ஆகும். சபையிலுள்ள ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவன் விசேட இடத்தை வைத்துள்ளார்:

> **தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். (1 கொரிந்தியர் 12:18)**

தேவன் சகல விசுவாசிகளையும் தெரிந்தெடுத்துள்ளமையால், அவர்களுக்கு ஓர் இடம் உண்டு. பரிசுத்த ஆவியானவருக்கு ஊடாக தனது திட்டம் சபையில் நிறைவேறும்படியாக வரங்களை பகிர்ந்தளிக்கின்றார்.

ஒவ்வொரு விசுவாசியும் தேவன் தம்மை தெரிந்து கொண்ட இடத்தில் தம்மை பொருத்திக் கொள்ளும் போது, சபையில் சீராக ஆவிக்குரிய வரங்கள் கிரியை செய்ய அவர்களை பாவிக்கின்றார். இதனை தேவன் மனித சரீரத்தோடு ஒப்பிட்டு பேசுவதோடு ஒரு விசுவாசியின் கண் முதல் கால் விரல் வரைக்குமான கிரியைகளை சபையுடன் ஒப்பிடுகின்றார் (1 கொரிந்தியர் 12:1-3). இந்த ஆவியின் வரங்கள் யாவும் கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்கு மிகவும் முக்கியமாக இருப்பது போல, சகல அங்கத்தவர்களும் சபைக்கு முக்கியமானவர்கள்:

> **கண்ணானது கையைப்பார்த்து: நீ எனக்கு வேண்டுவதில்லையென்றும், தலையானது கால்களை நோக்கி: நீங்கள் எனக்கு வேண்டுவதில்லையென்றும் சொல்லக்கூடாது.**
>
> **சரீர அவயவங்களில் பலவீனமுள்ளவைகளாய்க் காணப்படுகிறவைகளே மிகவும் வேண்டியவைகளாயிருக்கிறது. (1 கொரிந்தியர் 12:21-22)**

ஆவிக்குரிய வரங்களைக்குறித்து நீங்கள் கற்றுக் கொள்ளுகின்ற போது, அவர்களுடைய இயற்கையான திறமைகள் பாவிக்கப்படவில்லை என்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளவும். பரிசுத்த ஆவியானவரிடத்தில் இருந்தே இத்திறமைகள் அவர்களுக்கு கிடைக்கிறது, சேவை செய்யும்படியாக விசுவாசிகளுக்கு இவை பகிர்ந்தளிக்கப்படுகின்றது.

(தொடர்ந்து வருகின்ற மூன்று அதிகாரங்களிலும் கொடுக்கப்பட்டுள்ள “மேலதிக படிப்பினைக்கு” என்ற பகுதியில் ஆவிக்குரிய வரங்கள் பற்றி பேசுவோம். ஒரு பாடத்திற்கு செல்லும் முன்னதாகவே, ஒவ்வொரு வரங்களையும் பற்றி ஒவ்வொரு அதிகாரத்திலும் கற்பீர்கள்.)

## விசேட வரங்கள்

ஆவிக்குரிய வரங்களில் உள்ள முதலாவது பிரிவை நாம் “விஷேசித்த வரங்கள்” என்று அழைப்போம். சபையிலுள்ள தலைமைத்துவ நிலையை ஒவ்வொருவரும் பெற்று இருப்பதினாலேயே இத்தலைப்பை நாம் வரங்களுக்கு கொடுத்துள்ளோம்:

> **அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். (எபேசியர் 4:13)**

சபையில் இத்தலைமைத்துவ நிலைகள் சில வேளைகளில் “உத்தியோகம்” என்றும் அழைக்கப்படுகின்றது. “உத்தியோகம்” என்பது ஓர் இடத்தில் உத்தரவாதத்துடன் செய்யப்படுகின்ற வேலை எனப்படுகிறது. இந்த விசேட தலைமைத்துவ வரங்களாவன:

-அப்போஸ்தலர்
-தீர்க்கதரிசி
-சுவிசேஷகர்
-மேய்யர்
-போதகர்

## அப்போஸ்தலர்கள்

**தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும்... (1கொரிந்தியர் 12:28)**

**அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், ஏற்படுத்தினார். (எபேசியர் 4:13)**

அப்போஸ்தல வரமானது விஷேட திறமைகளை கொண்ட வரம், இவர்கள் பல புதிய சபைகளை வித்தியாசமான இடங்களிலும், கலாச்சாரங்களின் மத்தியிலும் ஸ்தாபித்து, பல சபைகளை கண்காணிப்பார்கள். அப்போஸ்தலர் என்றால் “மற்றவர்களுக்காக வல்லமையும், அதிகாரமும் கொடுத்து பிரதிநிதியாய் அனுப்பி வைக்கப்பட்டவர்” என அர்த்தமாகும். சுவிசேஷத்தை உலகமெங்கும் கொண்டு சென்று விசுவாசிகளின் கட்டமைப்பை உருவாக்கி, அபிவிருத்தி செய்யும் அப்போஸ்தலருக்கு விஷேட அதிகாரமும், திறமையும் இருக்கின்றது. தற்கால சபைகளில் அப்போஸ்தலர் என்ற சொல்லுக்கு பதிலாக மிஷனரிகள் அல்லது சபை ஸ்தாபிப்போர் என்ற சொற்கள் பாவிக்கப்படுகின்றன.

வேதாகமம் அப்போஸ்தலர்களை 3 விதமான வகையாக பிரித்து பேசுகின்றது. இயேசு கிறிஸ்துவும் அப்போஸ்தலனை அழைத்தார்:

**இப்படியிருக்க, பரம அழைப்புக்குப் பங்குள்ளவர்களாகிய பரிசுத்த சகோதரரே, நாம் அறிக்கைபண்ணுகிற அப்போஸ்தலரும் பிரதான ஆசாரியருமாயிருக்கிற கிறிஸ்து இயேசுவைக் கவனித்துப்பாருங்கள்.**

**இவரும் தம்மை ஏற்படுத்தினவருக்கு உண்மையுள்ளவராயிருக்கிறார்.... (எபிரெயர் 3:1-2)**

பன்னிரண்டு அப்போஸ்தலரையும் இயேசு அழைத்தார்:

**அந்தப் பன்னிரண்டு அப்போஸ்தலருடைய நாமங்களாவன... (மத்தேயு 10:2)**

பன்னிரெண்டு அப்போஸ்தலருக்கும் விஷேடமான வேலைகள் இருந்தன. சபையை ஸ்தாபிக்கின்ற வேலையில் ஓர் பங்கும் அவர்களுக்கிருந்தது. இவர்களுக்கு கொடுக்கப்பட்ட வேலைகளைப்போன்று வேறு விசுவாசிகளுக்கு கொடுக்கப்படவில்லை, எனினும் பரிசுத்த ஆவியானவருடைய அப்போஸ்தல வரம் பொதுவானதாக இருக்கிறது:

**அவர், சிலரை அப்போஸ்தலராகவும்..... (எபேசியர் 4:13)**

இவ்வசனத்தின் படி தேவனே அப்போஸ்தலரை தெரிந்தெடுக்கிறார். பவுலும் இதை உறுதிப்படுத்துகிறார்:

**தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும்... (1 கொரிந்தியர் 12:28)**

அப்போஸ்தலனாயிருக்கிற ஒருவன் விஷேட அடையாளங்களை அப்போஸ்தலன் என உறுதி செய்யப்படுவான் என வேதாகமம் கற்பிக்கின்றது:

**அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே. (2 கொரிந்தியர் 12:12)**

**அப்போஸ்தலருடைய கைகளினாலே அநேக அடையாளங்களும் அற்புதங்களும் ஜனங்களுக்குள்ளே செய்யப்பட்டது... (அப்போஸ்தலர் 5:12)**

அப்போஸ்தலர் நடபடிகை விஷேசித்த தலைமைத்துவம் கொண்ட அப்போஸ்தல ஊழியம் சபைகளில் இருப்பதற்கான உதாரணங்களைத் தருகின்றது:

**சிலர் யூதேயாவிலிருந்து வந்து: நீங்கள் மோசேயினுடைய முறைமையின்படியே விருத்தசேதனமடையாவிட்டால், இரட்சிக்கப்படமாட்டீர்கள் என்று சகோதரருக்குப் போதகம்பண்ணினார்கள்.**

**அதினாலே அவர்களுக்கும் பவுல் பர்னபா என்பவர்களுக்கும் மிகுந்த வாக்குவாதமும் தர்க்கமும் உண்டானபோது, அந்த விஷயத்தினிமித்தம் பவுலும் பர்னபாவும் அவர்களைச் சேர்ந்தவேறு சிலரும் எருசலேமிலிருக்கிற அப்போஸ்தலரிடத்திற்கும் மூப்பரிடத்திற்கும் போகவேண்டுமென்று தீர்மானித்தார்கள். (அப்போஸ்தலர் 15:1-2)**

**அவர்கள் பட்டணங்கள்தோறும் போகையில், எருசலேமிலிருக்கும் அப்போஸ்தலராலும் மூப்பராலும் விதிக்கப்பட்ட சட்டங்களைக் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு ஒப்புவித்தார்கள்.**

**அதினாலே சபைகள் விசுவாசத்தில் ஸ்திரப்பட்டு, நாளுக்குநாள் பெருகின. (அப்போஸ்தலர் 16:4-5)**

அப்போஸ்தலர்கள் சுவிசேஷத்தை பரப்பி சபைகளை எழுப்புவார்கள். அவர்கள் சபைகளுக்கு தலைமைத்துவத்தை வழங்குவர், அவர்களுடைய ஊழியங்களிலே விஷேட ஆவிக்குரிய அடையாளங்கள் காணப்படும். அவர்களுடைய அழைப்பும், அப்போஸ்தல வாஞ்சையும் தேவனிடமிருந்தே வருகின்றது:

**மனுஷராலுமல்ல, மனுஷன் மூலமாயுமல்ல, இயேசுகிறிஸ்துவினாலும், அவரை மரித்தோரிலிருந்தெழுப்பின பிதாவாகிய தேவனாலும், அப்போஸ்தலனாயிருக்கிற பவுலாகிய நானும்... (கலாத்தியர் 1:1)**

இவ்விசேட வரத்தை அடையாளம் கண்டு கொள்கின்ற பிரதேச சபையானது அப்போஸ்தலரை பிற பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கும்:

**அந்தியோகியா பட்டணத்திலுள்ள சபையிலே... தீர்கதரிசிகளாயும் போதகர்களாயும் இருந்தார்கள்.**

**அவர்கள் கர்த்தருக்கு ஆராதனைசெய்து, உபவாசித்துக் கொண்டிருக்கிறபோது: பர்னபாவையும் சவுலையும் நான் அழைத்த ஊழியத்துக்காக அவர்களைப் பிரித்துவிடுங்கள் என்று பரிசுத்தஆவியானவர் திருவுளம்பற்றினார்.**

**அப்பொழுது உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள்மேல் கைகளை வைத்து, அவர்களை அனுப்பினார்கள். (அப்போஸ்தலர் 13:1-3)**

வேறொருவரும் ஊழியம் செய்யாத இடங்களில் ஊழியம் செய்யவே அப்போஸ்தலர்கள் விரும்புவார்கள்:

**மேலும் அவருடைய செய்தியை அறியாதிருந்தவர்கள் காண்பார்களென்றும், கேள்விப்படாதிருந்தவர்கள் உணர்ந்துகொள்வார்களென்றும் எழுதியிருக்கிறபடியே,**

**நான் மற்றொருவனுடைய அஸ்திபாரத்தின்மேல் கட்டாதபடிக்கு கிறிஸ்துவினுடைய நாமம் சொல்லப்பட்டிராத இடங்களில் சுவிசேஷத்தை அறிவிக்கும்படி நாடுகிறேன். (ரோமர் 15:20-21)**

**ஆகிலும் உங்கள் விசுவாசம் விருத்தியாகும்போது, மற்றவர்களுடைய எல்லைகளுக்குள்ளே செய்யப்பட்டவைகளை நாங்கள் செய்ததாக மேன்மைபாராட்டாமல், உங்களுக்கு அப்புறமான இடங்களில் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கத்தக்கதாக, எங்கள் அளவின்படி உங்களால் மிகவும் பெருகி விருத்தியடைவோமென்று நம்பிக்கையாயிருக்கிறோம். (2 கொரிந்தியர் 10:16)**

அப்போஸ்தலர்கள் மற்றவர்களின் கலாச்சாரங்களை தமது வாழ்வில் முறையாக மாற்றிக் கொண்டு மக்களை கிறிஸ்துவுக்காக ஆதாயப்படுத்த விரும்புவார்கள்:

**நான் ஒருவருக்கும் அடிமைப்படாதவனாயிருந்தும், நான் அதிக ஜனங்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு, என்னைத்தானே எல்லாருக்கும் அடிமையாக்கினேன்.**

**யூதரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு யூதருக்கு யூதனைப்போலவும், நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு நியாயப்பிரமாணத்துக்குக் கீழ்ப்பட்டவனைப்போலவுமானேன்.**

**நியாயப்பிரமாணமில்லாதவர்களை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்கு அவர்களுக்கு நியாயப்பிரமாணம் இல்லாதவனைப்போலவுமானேன். அப்படியிருந்தும், நான் தேவனுக்குமுன்பாக நியாயப்பிரமாணமில்லாதவனாயிராமல், கிறிஸ்துவின் பிரமாணத்துக்குள்ளானவனாயிருக்கிறேன்.**

**பலவீனரை ஆதாயப்படுத்திக்கொள்ளும்படிக்குப் பலவீனருக்குப் பலவீனனைப்போலானேன். எப்படியாகிலும் சிலரை இரட்சிக்கும்படிக்கு நான் எல்லாருக்கும் எல்லாமானேன்.**

**சுவிசேஷத்தில் நான் உடன்பங்காளியாகும்படிக்கு, அதினிமித்தமே இப்படிச் செய்கிறேன். (1 கொரிந்தியர் 9:19-23)**

அப்போஸ்தலர்கள் தாம் இல்லாத போதும் ஊழியங்கள் நடைபெறும்படியாக தலைவர்களை ஏற்படுத்தி பயிற்றுவிப்பார்கள்:

**அந்தப் பட்டணத்தில் அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அநேகரைச் சீஷராக்கினபின்பு, லீஸ்திராவுக்கும் இக்கோனியாவுக்கும் அந்தியோகியாவுக்கும் திரும்பி வந்து,**

**சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லி, நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று சொன்னார்கள்.**

**அல்லாமலும் அந்தந்தச் சபைகளில் அவர்களுக்கு மூப்பர்களை ஏற்படுத்தி வைத்து, உபவாசித்து ஜெபம்பண்ணி, அவர்கள் விசுவாசித்துப் பற்றிக்கொண்ட கர்த்தருக்கு அவர்களை ஒப்புவித்தார்கள். (அப்போஸ்தலர் 14:21-23)**

பின் தொடரும் ஊழியம் மூலம் தகுதியுள்ள தலைமைத்துவத்தை புதிய சபைகளுக்காக ஏற்படுத்துவது அப்போஸ்தலர்களுடைய உத்தரவாதமாயிருக்கிறது என்பதை இவ்வசனங்கள் வெளிப்படுத்துகின்றது.

அப்போஸ்தல ஊழியத்திற்கான முத்திரை அல்லது சான்று, அப்போஸ்தல வரத்திற்கான ஆவிக்குரிய பலனாக, மற்றவர்களின் வாழ்வில் இருக்கிறது. புவுல் தான் ஏற்படுத்திய கொரிந்திய சபைக்கு எழுதுவதாவது:

**கர்த்தருக்குள் நீங்கள் என் அப்போஸ்தல ஊழியத்திற்கு முத்திரையாயிருக்கிறீர்களே....... (1 கொரிந்தியர் 9:2)**

பல சமுதாயங்களிலிருந்தும் விசுவாசிகளை எழுப்பி சபையாக ஸ்தாபிப்பது அப்போஸ்தல வரத்தின் முத்திரையாக இருக்கிறது.

வேதாகமம் கள்ள அப்போஸ்தலர்களைப்பற்றி எச்சரிப்பதோடு, அவர்களது வஞ்சகத்தன்மையை அவர்களது வேலைகளால் அடையாளம் காண முடியும் எனவும் கூறுகின்றது.

**அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள்.**

**அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே.**

**ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே. அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத்தக்கதாயிருக்கும். (2 கொரிந்தியர் 11:13-15)**

## மேலதிக படிப்பினைக்கு:

புதிய ஏற்பாடு அப்போஸ்தல வரத்தைக் கொண்டிருந்த சிலரைப் பற்றிய தகவல்களை உதாரணமாக தருகின்றது. கீழுள்ள வசன தரவுகளை மேலதிக படிப்பினைக்காக உபயோகப்படுத்துங்கள்:

| | |
|---|---|
| -பவுல்: | கலாத்தியர் 1:1 |
| -அன்றொனீக்கையும், யூனியாவும்: | ரோமர் 16:7 |
| -ஆப்பொஸ்லோஸ்: | 1 கொரிந்தியர் 4:6,9 |
| -யாக்கோபு: | கலாத்தியர் 1:9 |
| -இயேசுவின் சீடர்கள்: | சுவிஷேச புத்தகங்கள்;அப்போஸ்தலருடைய நடபடிகள் |

### தீர்க்கதரிசிகள்:

**தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும்... ஏற்படுத்தினார். (2 கொரிந்தியர் 12:28)**

**அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும்.... (எபேசியர் 4:13)**

தீர்க்கதரிசன வரங்கள் இரண்டு உண்டு. தீர்க்கதரிசியாக இருப்பது ஒரு வரம். தீர்க்கதரிசனம் உரைப்பது இன்னுமொரு வரம். பொதுவாக கூறுவோமாயின் தேவனுடைய விஷேசித்த வெளிப்பாடுகளுக்கு கீழ்ப்பட்டு, பேசும் வரமே தீர்க்கதரிசனம். வசனத்தை பெற்றதும் உடனடியானவே தேவ செய்தியை மக்களுக்கு தெய்வீக அபிஷேகத்துடன் சொல்வது விசேட திறமையாகும். இக்குறிப்பின் அடிப்படையிலேயே விசேட தலைமைத்துவ வரமான தீர்க்கதரிசியும், பேசும் வரமான தீர்க்கதரிசனமும் வரையறுக்கப்படுகின்றது.

ஒருவன் தீர்க்கதரிசனம் உரைப்பதினால் அவன் தீர்க்கதரிசியாகிவிட முடியாது. யாவரும் தீர்க்கதரிசன வரத்தை வாஞ்சிக்கும்படியாக பவுல் சபையாருக்கு கூறுகிறார்:

**அன்பை நாடுங்கள். ஞானவரங்களையும் விரும்புங்கள். விஷேசமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள். (1 கொரிந்தியர் 14:1)**

**எல்லாரும் கற்கிறதற்கும் எல்லாரும் தேறுகிறதற்கும், நீங்கள் அனைவரும் ஒவ்வொருவராகத் தீர்க்கதரிசனஞ்சொல்லலாம். (1 கொரிந்தியர் 14:31)**

யாவரும் தீர்க்கதரிசிகள் அல்லவென்று பவுல் சுட்டிக் காட்டுகின்றார். அவர் கூறுகின்றார்:

**எல்லாரும் தீர்க்கதரிசிகளா? (1 கொரிந்தியர் 12:29)**

தீர்க்கதரிசனத்திற்கும், தீர்க்கதரிசிக்கும் உள்ள வித்தியாசம் வெளிப்படையாகவே பின்வரும் பகுதியில் கூறப்படுகின்றது:

**மறுநாளிலே பவுலைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள் புறப்பட்டுச் செசரியாபட்டணத்துக்கு வந்து, ஏழுபேரில் ஒருவனாகிய பிலிப்பென்னும் சுவிசேஷகனுடைய வீட்டிலே பிரவேசித்து, அவனிடத்தில் தங்கினோம்.**

**தீர்கதரிசனஞ்சொல்லுகிற கன்னியாஸ்திரீகளாகிய நாலு குமாரத்திகள் அவனுக்கு**

**இருந்தார்கள்.**

**நாங்கள் அநேகநாள் அங்கே தங்கியிருக்கையில், அகபு என்னும் பேர்கொண்ட ஒரு தீர்க்கதரிசி யூதேயாவிலிருந்து வந்தான். (அப்போஸ்தலர் 21:8-10)**

பிலிப்புவின் குமாரத்திகள் தீர்க்கதரிசனம் சொல்லுகின்றவர்களாக இருந்தார்கள். ஆனால் அகபு என்பவன் ஒரு தீர்க்கதரிசியாக இருக்கிற போதும், அவன் ஒரு தீர்க்கதரிசனத்தை மாத்திரம் கொடுத்துள்ளது மட்டுமின்றி சபையில் தலைமைத்துவப் பெறுப்பையும் வகித்தான். பவுலுடைய ஊழியத்தின் தலைமைத்துவப் பொறுப்பை வகிக்க தேவன் அவனை பாவித்துள்ளார். அகபு பவுலுக்கு ஆவிக்குரிய வழிகாட்டலை கொடுத்து எருசலேமில் அவனுக்கு சம்பவிக்கப் போவதைப்பற்றி கூறினான் (அப்போஸ்தலர் 21:11).

தீர்க்கதரிசியாக இருப்பதற்கான விஷேட வரம் தேவனுடைய வெளிப்பாட்டின் கீழ் பேசுவது அல்ல. அவர்கள் சபையிலே விஷேட அதிகாரமும், தலைமைத்துவமும் கொண்டவர்களாக இருக்கினறனர். இதை அப்போஸ்தலர் 13:1-4 உறுதிப்படுத்துகின்றது. தலைமைத்துவ தகுதியைப் பெற்றிருந்த பர்னபாவையும், சீலாவையும் விஷேட ஊழியத்திற்காக தேவன் அழைத்த போது தீர்க்கதரிசியும், போதகர்களும் சரியான வழிகாட்டலை இவர்களுக்கு வழங்கினார்கள்.

பழைய ஏற்பாட்டு மக்களுக்கு வழி நடத்தலைப் பெறும்படியாக தீர்க்கதரிசிகளிடம் சென்றனர். பரிசுத்த ஆவியானவருடைய நிறைவை இவர்கள் இப்போது பெற்றிருக்கவில்லை. ஆனால் தேவனுடைய பரிசுத்த பிரசன்னம் அவர்களை மூடியது. ஆனால் நாம் மரித்து உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவினால் தேவ பிரசன்னத்தை அணுககின்றோம். பரிசுத்த ஆவியானவரின் வரம் கொடுக்கப்பட்டு உள்ளது, அவரது நோக்கத்தையும், வழிநடத்துதலையும் பற்றி ஏற்கனவே கற்றுள்ளீர்கள்:

**மேலும் எவர்கள் தேவனுடைய ஆவியினாலே நடத்தப்படுகிறார்களோ, அவர்கள் தேவனுடைய புத்திரராயிருக்கிறார்கள். (ரோமர் 8:14)**

பழைய ஆவிக்குரிய வழிநடத்தலைப் பெறும்படி நாம் தீர்க்கதரிசியை நாடிச் செல்ல வேண்டியதில்லை. விசுவாசிகளின் வாழ்வில் இது பரிசுத்த ஆவியின் கிரியையாக இருக்கின்றது. ஒவ்வொரு விசுவாசியும் தேவனுடைய ஆவியால் வழிநடத்தப்படும் விதத்தை கற்றிருக்க வேண்டும். புதிய ஏற்பாட்டிலே பரிசுத்தாவியானவர் அருளப்பட்டதின் பின்னர் விசுவாசிகள் வழிநடத்தலை பெறும்படிக்கு தீர்க்கதரிசிகளை தேடிச் சென்றனர் என்பதற்கான பதிவுகள் இல்லை.

ஆனால் தேவன், ஏற்கனவே பரிசுத்த ஆவியானவரால் விசுவாசிகளுக்கு கொடுக்கப்பட்ட வரத்தை பாவித்து அவர்கள் பெற்றுள்ள வழிநடத்தலை உறுதிப்படுத்துகின்றார். இதுவே பவுலின் வாழ்வில் அகபுவினால் நடைபெற்றது. பவுல் எருசலேமிற்கு செல்ல வேண்டும் என்பதை ஏற்கனவே அறிந்திருந்தான். அங்கே என்ன நடைப்பெறப்போகின்றது என்பதை அகபு வெளிப்படுத்தினான். இது எருசலேமிற்கு செல்லு முன்பாகவே பவுலுக்கு கிடைத்த தீர்க்கதரிசனமோ அல்லது வழிநடத்தலோ அல்ல.

தீர்க்கதரிசி ஒருவர் தெய்வீக வெளிப்பாட்டின் கீழ் பேசுவதே தீர்க்கதரிசனம். தீர்க்கதரிசனம் தேவனுடைய வார்த்தையில் இருந்து வருகின்றமையால், அது ஆறுதலையும், புத்தியையும், பக்திவிருத்தியையும் கொடுக்கும்:

**தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்குப்பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான். (1 கொரிந்தியர் 14:3)**

ஒழுக்கமான தீர்க்கதரிசன ஊழியம் விசுவாசிகளுக்கு மாத்திரமல்ல, அவிசுவாசிகளுக்கும் உரியது. தீர்க்கதரிசனம் அவிசுவாசியை உணர்த்தி, அதனால் அவன் தேவனிடம் திரும்புவான்:

**எல்லாரும் தீர்க்கதரிசனஞ் சொல்லுகையில், அவிசுவாசியொருவன், அல்லது கல்லாதவனொருவன், உள்ளே பிரவேசித்தால், அவன் எல்லாராலும் உணர்த்துவிக்கப்பட்டும், எல்லாராலும் நிதானிக்கப்பட்டும் இருப்பான்.**

**அவனுடைய இருதயத்தின் அந்தரங்கங்களும் வெளியரங்கமாகும். அவன் முகங்குப்புற விழுந்து, தேவனைப் பணிந்துகொண்டு, தேவன் மெய்யாய் உங்களுக்குள்ளே இருக்கிறாரென்று அறிக்கையிடுவான். (1 கொரிந்தியர் 14:24-25)**

தீர்க்கதரிசியின் இன்னுமொரு நோக்கம் மக்களை மனந்திரும்புதலுக்குள் கொண்டு வருவதாக இருக்கும்:

**அவர்களைத் தம்மிடத்திற்குத் திரும்பப்பண்ணக் கர்த்தர் அவர்களிடத்திலே தீர்க்கதரிசிகளை அனுப்பினார். அவர்கள் ஜனங்களைத் திடச்சாட்சியாகக் கடிந்துகொண்டார்கள். ஆனாலும் அவர்கள் செவிகொடுக்கவில்லை. (2 நாளாகமம் 24:19)**

தீர்க்கதரிசனம் மகத்தான வரம் என வேதாகமம் வெளிப்படுத்துவதோடு, அந்நியபாஷை பேசுவதைக் காட்டிலும் இதை விரும்பும்படி வேதாகமம் கூறுகின்றது:

**அன்பை நாடுங்கள். ஞானவரங்களையும் விரும்புங்கள். விஷேசமாய்த் தீர்க்கதரிசன வரத்தை விரும்புங்கள்.**

**ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான்.**

**தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவனோ மனுஷருக்குப்பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகத்தக்கதாகப் பேசுகிறான். (1 கொரிந்தியர் 14:1-3)**

**நீங்களெல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன். ஆகிலும், அந்நியபாஷைகளில் பேசுகிறவன் சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகும்படிக்கு அர்த்தத்தையும் சொல்லாவிட்டால், தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன். ஆதலால் நீங்கள் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவர்களாக வேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன். (1 கொரிந்தியர் 14:5)**

**இப்படியிருக்க, சகோதரரே, தீர்க்கதரிசனஞ்சொல்ல நாடுங்கள், அந்நிய பாஷைகளைப் பேசுகிறதற்கும் தடைபண்ணாதிருங்கள். (1 கொரிந்தியர் 14:39)**

பரிசுத்த ஆவியானவர் எப்போதும் மெய்யான தீர்க்கதரிசியை தனது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பார், மட்டுமின்றி இயேசுகிறிஸ்துவுக்கு நேராய் கவனத்தை திருப்புவான்:

**அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக்குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை.**

**நீங்கள் அஞ்ஞானிகளாயிருந்தபோது ஏவப்பட்டபடியே, ஊமையான விக்கிரகங்களிடத்தில் மனதைச் செலுத்தினீர்களென்று உங்களுக்குத் தெரியுமே.**

**ஆதலால், தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லமாட்டானென்றும், பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாதென்றும், உங்களுக்குத் தெரிவிக்கிறேன். (1 கொரிந்தியர் 12:1-3)**

வேதவசனத்திற்கு பதிலாக தீர்க்கதரிசனத்தை நாம் வைக்கக்கூடாது. தீர்க்கதரிசனம் நிறுத்தப்படலாம் என வேதாகமம் கூறுகின்றது, ஆனால் வேதவசனமோ எப்போதும் நிலைநிற்கும்:

**தீர்க்கதரிசனங்களானாலும் ஒழிந்துபோம்.... (1கொரிந்தியர் 13:8)**

**கர்த்தருடைய வசனமோ என்றென்றைக்கும் நிலைத்திருக்கும். உங்களுக்குச் சுவிசேஷமாய் அறிவிக்கப்பட்டுவருகிற வசனம் இதுவே. (1 பேதுரு 1:25)**

கள்ள தீர்க்கதரிசிகளைக்குறித்து வேதாகமம் எச்சரிக்கின்றது (மத்தேயு 24:11,24; மாற்கு 13:22). ஒருவன் "கள்ளத்தீர்க்கதரிசி" என அழைக்கப்பட்டான், உலக முடிவில் அவனது முடிவும் சம்பவிக்கும் (வெளிப்படுத்தல் 13:11-17; 16:13; 19:20; 20:10).

அநேக கள்ளத்தீர்க்கதரிசிகள் இருக்கின்றார்கள், மெய்யான தீர்க்கதரிசிகளை அடையாளம் காண பல வழிகளை தேவனுடைய வசனம் தருகின்றது. அதைக் கொண்டு அடையாளம் காணலாம். அவர்களை:

## 1. உபதேச பிழைகள்:

**நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான படியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப் பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன். (ரோமர் 12:6)**

விசுவாச பிரமாணத்திற்கு ஏற்றப்படி என்பதின் அர்த்தம், சரியான விசுவாசத்தின்படி என்பதாகும். உண்மையான தீர்க்கதரிசியா? தீர்க்கதரிசனம் உண்மையானதா என்பதை, வேதாகமத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கிறிஸ்தவ உபதேசனத்தின் அடிப்படையில் சொல்லுகிறாரா என்று சோதித்து ஏற்க வேண்டும். உதாரணமாக கள்ள தீர்க்கதரிசிகள் கிறிஸ்து இயேசுவின் தெய்வீகத் தன்மையை ஏற்று அறிக்கை செய்ய மாட்டார்கள்:

**பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்.**

**தேவஆவியை நீங்கள் எதினால் அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது.**

**மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால்**

**உண்டானதல்ல. வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திகிறிஸ்துவினுடைய ஆவி அதுவே..... (1 யோவான் 4:1-3)**

பிழையான உபதேசக்காரர்கள் பாலியல் ஒழுக்கக்கேடுகளையும் படிப்பித்து அவற்றிற்கு அனுமதியும் கொடுப்பார்கள்:

**கள்ளத்தீர்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள்.**

**அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள். அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும்.**

**பொருளாசையுடையவர்களாய், தந்திரமான வார்த்தைகளால் உங்களைத் தங்களுக்கு ஆதாயமாக வசப்படுத்திக்கொள்ளுவார்கள். பூர்வகாலமுதல் அவர்களுக்கு விதிக்கப்பட்ட ஆக்கினை அயர்ந்திராது, அவர்களுடைய அழிவு உறங்காது. (2 பேதுரு 2:1-3)**

கள்ள தீர்க்கதரிசிகள், மக்கள் தேவனுடைய வசனத்திற்கு கீழ்ப்படியாமல் இருக்கும்படியாக அவர்கள் வழிநடத்துவார்கள் (உபாகமம் 13:1-5). இப்படிப்பட்ட தீர்க்கதரிசனங்கள் கிறிஸ்தவ விசுவாசத்துடன் சரியான சம்பந்தத்தைக் கொண்டிருப்பதில்லை.

## 2. ஏமாற்றும் அற்புதங்கள்:

கள்ள தீர்க்கதரிசிகள் வியக்கத்தரும் அற்புதங்களைச் செய்து மக்களை ஏமாற்றுவார்கள்:

**அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, அநேகரை வஞ்சிப்பார்கள்.**

**ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். (மத்தேயு 24:11,24)**

## 3. கெட்ட கனி:

எந்தவொரு ஊழியத்தையும் சோதிக்க ஆவியின் கனியே சிறந்த சான்றாக சான்றாக இருக்கிறது.

**கள்ளத் தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த்துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள். உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்.**

**அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.... (மத்தேயு 7:15-16)**

பதினொராம் அதிகாரத்திலே பரிசுத்த ஆவியானவரின் கனியை குறித்து கற்றீர்கள். உண்மையான தீர்க்கதரிசிக்கு இந்த ஆவிக்குரிய தகமைகள் இருக்க வேண்டும்.

## 4. பிழையான உரிமை கோரல்கள்:

எந்தவொரு தீர்க்கதரிசியும் தெய்வீகத்தை அல்லது கிறிஸ்துவைப் போன்று உரிமை பாராட்ட முடியாது:

> **அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார், அதோ, அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள்.**
>
> **ஏனெனில், கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள். (மத்தேயு 24:23-24)**

## 5. நிறைவேறாத தீர்க்கதரிசனங்கள்:

இறுதியாக உண்மையான தீர்க்கதரிசியை என, அவரது நிறைவேறுதலைப் பொறுத்தே அடையாளம் காணப்பட வேண்டும்:

> **சொல்லும்படி நான் கட்டளையிடாத வார்த்தையை என் நாமத்தினாலே சொல்லத் துணியும் தீர்க்கதரிசியும், வேறே தேவர்களின் நாமத்தினாலே பேசும் தீர்க்கதரிசியும் சாகக்கடவன்.**
>
> **கர்த்தர் சொல்லாத வார்த்தை இன்னதென்று நான் எப்படி அறிவேன் என்று நீ உன் இருதயத்தில் சொல்வாயாகில்,**
>
> **ஒரு தீர்க்கதரிசி கர்த்தரின் நாமத்தினாலே சொல்லும் காரியம் நடவாமலும் நிறைவேறாமலும்போனால், அது கர்த்தர் சொல்லாத வார்த்தை. அந்தத் தீர்க்கதரிசி அதைத் துணிகரத்தினால் சொன்னான். அவனுக்கு நீ பயப்படவேண்டாம். (உபாகமம் 18:20-22)**

## மேலதிக படிப்பினைக்கு:

தீர்க்கதரிசனம் மூன்று ஆதாரங்களின் அடிப்படையில் கூறப்படலாம்:

| | |
|---|---|
| -மனித ஆவி: | எரேமியா 23:16; எசேக்கியேல் 13:2,3 |
| -தீய ஆவி அல்லது பொய்யின் ஆவி: | ஏசாயா 8:19-20; 1 இராஜாக்கள் 22:22; மத்தேயு 8:29; அப்போஸ்தலர் 16:17 |
| -பரிசுத்த ஆவி: | 2 சாமுவேல் 23:2; எரேமியா 1:9; அப்போஸ்தலர் 19:6; 21:11 |

இவைகளைக் கொண்டே நாம் தீர்க்கதரிசனங்களை, பரிசுத்த ஆவியானவரால் வந்ததா, இல்லையா என நியாயந்தீர்க்க வேண்டும்.

வேதாகமத்தின் பழைய, புதிய ஏற்பாடுகளிலேயே தீர்க்கதரிசனங்களைப்பற்றி பல உதாரணங்கள் தரப்பட்டுள்ளது, அவைகளை வாசித்து, தீர்க்கதரிசிகளையும், தீர்க்கதரிசன வரங்களையும் பற்றி மேலதிகமாக கற்று விளங்கிக் கொள்ளுங்கள்.

**பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள்:**

| | |
|---|---|
| ஆபிரகாம்: | ஆதியாகமம் 20:7 |
| மோசே: | உபாகமம் 34:9 |

ஆபகூக்: ஆபகூக் 1:1
ஏசாயா: 2 இராஜாக்கள் 19:2
மீகா: மத்தேயு 2:5-6
ஓசியா: மத்தேயு 21:15
எப்பிராயீம்: ஓசியா 9:8
யோவேல்: அப்போஸ்தலர் 2:16
எரேமியா: எரேமியா 1:5
காத்: 1 சாமுவேல் 22:15
சகரியா: சகரியா 1:1
அகியா: 1 இராஜாக்கள் 11:29
சாமுவேல்: 1 சாமுவேல் 3:20
யெகூ: 1 இராஜாக்கள் 16:7
நாத்தான்: 2 சாமுவேல் 7:2
மிகாயா: 1 இராஜாக்கள் 22:7-8
யோனா: 2 இராஜாக்கள் 14:25
இத்தோ: 2 நாளாகமம் 13:22
அசூர்: எரேமியா 28:18
எசேக்கியேல்: எசேக்கியேல் 2:1-5
அனனியா: எரேமியா 28:17
தானியேல்: மத்தேயு 24:15
பிலேயாம்: 2 பேதுரு 2:15-16
ஆமோஸ்: அப்போஸ்தலர் 7:42-43
செமாயா: 2 நாளாகமம் 12:5
எலிசா: 1 இராஜாக்கள் 19:16
எலியா: 1 இராஜாக்கள் 18:22
ஆகாய்: ஆகாய் 1:1
தாவீது: அப்போஸ்தலர் 2:29-30
ஆரோன்: யாத்திராகமம் 7:1
ஆசாரியா: 2 நாளாகமம் 15:8
ஓபெத்: 2 நாளாகமம் 15:8
ஆசாப்: சங்கீதம் 78:2

**பழைய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் (பெண்கள்):**

மிரியாம்: யாத்திராகமம் 15:20
தெபோராள்: நியாயாதிபதிகள் 4:4
உல்தாள்: 2 இராஜாக்கள் 22:15
நொவதியாள்: நெகேமியா 6:14
ஏசாயாவின் மனைவி: ஏசாயா 8:3

**புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள்:**

இயேசு: மத்தேயு 21:11
யோவான் ஸ்நானகன்: மத்தேயு 11:7-11
ஆகாஸ்: அப்போஸ்தலர் 11:27-28; 21:10
சீலா : அப்போஸ்தலர் 15:32
யூதா: அப்போஸ்தலர் 15:32
அந்தியோகியாவின் தலைவர்கள்: அப்போஸ்தலர் 13:1

**புதிய ஏற்பாட்டு தீர்க்கதரிசிகள் (பெண்கள்):**

அன்னாள்: லூக்கா 2:36
பிலிப்புவின் குமாரத்திகள்: அப்போஸ்தலர் 21:8-9

தீர்க்கதரிசனம் சபைக்கூடும் போது பாவிக்கப்பட வேண்டிய முறையை 1 கொரிந்தியர் 14:29-31ல் படிக்கவும்.

## சுவிஷேசகர்கள்

**சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். (எபேசியர் 4:13)**

விசுவாசிகள் அல்லாதோருக்கு சுவிஷேசத்தை அறிவிக்கின்ற திறமை சுவிஷேசகர்களுக்கே உண்டு. அதைப்போன்றே கிறிஸ்துவின் சபையின் அங்கத்தவர்களும் இதே உத்தரவாதத்தை கொண்டவர்களாக இருக்கின்றார்கள். “சுவிஷேசகர்” என்ற சொல்லின் அர்த்தம் “நற்செய்தியை கொண்டு வருபவர்” என்பதாகும்.

சுவிஷேசகர் என்ற சொல் புதிய ஏற்பாட்டில் மூன்று தடவைகள் பாவிக்கப்பட்டுள்ளது. எபேசியரில் விஷேச வரமாக இவ்வரம் பட்டியலிடுப்பட்டுள்ளது:

**சிலரைச் சுவிசேஷகராகவும்.... ஏற்படுத்தினார். (எபேசியர் 4:13)**

தீமோத்தேயுவும் சுவிஷேசகனுக்குரிய வேலைகளைச் செய்தார்:

**நீயோ எல்லாவற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷகனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று. (2 தீமோத்தேயு 4:5)**

சகல விசுவாசிகளும் “சுவிசேஷத்தின் வேலையைச் செய்ய வேண்டும்”. சுவிஷேசத்தை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும், ஆனாலும் தேவன் சுவிஷேசகராக இருக்கும்படி தேவன் சிலருக்கு இவ்விசேட வரத்தை கொடுக்கிறார். பிலிப்புவும் சுவிஷேசகர் என்னும் ஆவிக்குரிய வரத்தை பெற்றவராக இருக்கின்றார்:

**மறுநாளிலே பவுலைச் சேர்ந்தவர்களாகிய நாங்கள் புறப்பட்டுச் செசரியாபட்டணத்துக்கு வந்து, ஏழுபேரில் ஒருவனாகிய பிலிப்பென்னும் சுவிசேஷகனுடைய வீட்டிலே பிரவேசித்து, அவனிடத்தில் தங்கினோம். (அப்போஸ்தலர் 21:8)**

புதிய ஏற்பாட்டிலே, பிலிப்பு மாத்திரமே சுவிசேஷகராக இருக்கிறார். கிறிஸ்துவுடனான அனுபவத்தின் காரணமாக, விருப்பத்துடன் இவ்வரம் பாவிக்கப்பட இடமளித்தான் என்பது தெளிவாக தெரிகின்றது. முதற்தடவையாக பிலிப்பு இயேசுவை சந்தித்த போது, இந்த நற்செய்தியை அவன் நாத்தான்வேலுடன் பகிர்ந்து கொண்டான்:

**பிலிப்பு நாத்தான்வேலைக் கண்டு: நியாயப்பிரமாணத்திலே மோசேயும் தீர்க்கதரிசிகளும் எழுதியிருக்கிறவரைக் கண்டோம். அவர் யோசேப்பின் குமாரனும் நாசரேத்தூரானுமாகிய இயேசுவே என்றான்.**

**அதற்கு நாத்தான்வேல்: நாசரேத்திலிருந்து யாதொரு நன்மை உண்டாகக்கூடுமா என்றான். அதற்குப் பிலிப்பு: வந்து பார் என்றான். (யோவான் 1:45-46)**

பின்னர் பிலிப்பு ஆவிக்குரிய பசியோடு இருந்த கிரேக்கரை இயேசுவிடம் வழி நடத்தினான்:

**அவர்கள் கலிலேயாநாட்டுப் பெத்சாயிதா ஊரானாகிய பிலிப்புவினிடத்தில் வந்து: ஐயா, இயேசுவைக் காண விரும்புகிறோம் என்று அவனைக் கேட்டுக்கொண்டார்கள்.**

**பிலிப்பு வந்து, அதை அந்திரேயாவுக்கு அறிவித்தான். பின்பு அந்திரேயாவும் பிலிப்புவும் அதை இயேசுவுக்கு அறிவித்தார்கள். (யோவான் 12:21-22)**

பிலிப்பு சீஷராக இருக்கும்படி தேர்ந்தெடுக்கப்பட்டவர் (மத்தேயு 10:3) அவர் மேலறையில் இருக்கும் போது பரிசுத்த ஆவியானவர் இறங்கிய போது தேர்ந்தெடுக்கப்பட்டார் (அப்போஸ்தலர் 1:13). பிலிப்பு சபையில் உதவி ஊழியராக நியமிக்கப்பட்டார் (அப்போஸ்தலர் 6:1-6) ஆனாலும் தேவன் நியமித்தப்படி சுவிஷேசகனாகவும் இருந்தார் (எபேசியர் 4:11-12).

## மேலதிக படிப்பினைக்கு:

பிலிப்புவின் ஊழியத்தின் ஊடாக விசேட வரமான சுவிஷேசகராக இருப்பதைகுறித்து மேலதிக படிப்பினையில் அறிவை வளர்த்துக்கொள்ள கற்றுக் கொள்ளுங்கள்:

| | |
|---|---|
| -அவருடைய செய்தி: | அப்போஸ்தலர் 8:35 |
| -விடுதலை, அற்புதங்கள், குணப்படுத்தல்: | அப்போஸ்தலர் 8:5-8 |
| -ஞானஸ்நானம் எடுத்தல்: | அப்போஸ்தலர் 8:12,36-38 |
| -பிரசங்கித்தல் (தேவ இராஜ்ஜியம் பற்றி): | அப்போஸ்தலர் 8:12 |
| -வீடு ஒன்றை தேர்ந்தெடுத்தல்: | அப்போஸ்தலர் 21:8-9 |
| -சுவிஷேசத்தை பரப்ப பிரயாணம் செய்தல்: | அப்போஸ்தலர் 8:4-5,26,40 |
| -மக்களை நம்பவைக்கும் திறமை: | அப்போஸ்தலர் 8:6 |
| -நகரமே பதற்றமடைந்தது: | அப்போஸ்தலர் 8:8 |
| -தனிப்பட் முறையில் ஊழியம் செய்தல்: | அப்போஸ்தலர் 8:27-38 |
| -தேவனால் வழிநடத்தப்பட்டார்: | அப்போஸ்தலர் 8:26,39 |
| -தேவவசனத்தை குறித்த அறிவு: | அப்போஸ்தலர் 8:30-35 |
| -தாக்கமுள்ள ஊழியத்தின் மூலமாக மக்களிடம் வந்த பிரதிபலன்: | அப்போஸ்தலர் 8:5-6,8,12,35-39 |

## மேய்ப்பர்கள்

**சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். (எபேசியர் 4:13)**

புதிய ஏற்பாட்டில் இவ்விடத்தில் மாத்திரமே “மேய்ப்பன்” என்ற சொல்லை King James வேதாகமம் பாவிக்கிறது. கிரேக்க பாஷையில் மேய்ப்பன் ‘Pastor’ என்றால் மேய்ப்பன் என்பது அர்த்தமாகும். (புதிய ஏற்பாடு கிரேக்க பாஷையிலேயே எழுதப்பட்டது). விசுவாசிகளின் ஆவிக்குரிய போராட்டத்திற்கு தனிப்பட்ட ரீதியில் மேய்ப்பர்களே தலைவர்களுக்குரிய உத்தரவாதத்தை கொண்டிருந்தனர். மேய்ப்பன் என்ற சொல் இயேசு கிறிஸ்துவினால் உதாரணமாக பாவிக்கப்பட்டுள்ளது. அவரும் மக்களின் மேய்ப்பனாக இருக்கின்றார்:

**ஆடுகளுடைய பெரிய மேய்ப்பரான நம்முடைய கர்த்தராகிய இயேசுவை மரித்தோரிலிருந்து ஏறிவரப்பண்ணின சமாதானத்தின் தேவன்... (எபிரெயர் 13:20)**

**அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப்**

**பெறுவீர்கள். (1 பேதுரு 5:4)**

இயேசு கிறிஸ்துவும் தன்னை நல்ல மேய்ப்பன் என மேய்ப்பனின் கிரியைகளை குறிப்பிடும் போது வெளிப்படுத்தினார் யோவான் 10:1-18.

வேதாகமம் கண்காணியானவனின் கடமைகளைப் பற்றி குறிப்பிடுகின்றது (1 தீமோத்தேயு 3). அநேகர் இதையே மேய்யபர் என எண்ணுகின்றனர், ஏனென்றால் இயேசுவும் பின்வரும் வசனத்தில் அப்படியே பேசுகின்றார்:

> **சிதறுண்ட ஆடுகளைப்போலிருந்தீர்கள். இப்பொழுதோ உங்கள் ஆத்துமாக்களுக்கு மேய்ப்பரும் கண்காணியுமானவரிடத்தில் திருப்பப்பட்டிருக்கிறீர்கள். (1 பேதுரு 2:25)**

கண்காணிகளும், மூப்பர்களும், உதவி ஊழியர்களும் சபையில் ஆவிக்குரிய தேவைகளுக்காக தலைமைத்துவ பொறுப்பை ஆதிசபையில் கொண்டிருந்தனர், மட்டுமின்றி மேய்ப்பரைப்போன்றே மக்களை வழி நடத்தினர். 1 தீமோத்தேயு 3:1-13ஐ வாசியுங்கள்.

ஊழியத்தில் ஒரு மேய்ப்பனின் உத்தரவாதமானது ஆவிக்குரிய உணவளித்து தமக்கு கீழ் உள்ளவர்களை பாதுகாக்க வேண்டும். இதுவே சரியான கொள்கையாக இருக்கின்றது, பொருள் ஆதாயத்தை பார்ப்பது சரியான கொள்கையல்ல:

> **ஆகையால், உங்களைக்குறித்தும், தேவன் தம்முடைய சுயரத்தத்தினாலே சம்பாதித்துக்கொண்ட தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்தஆவி உங்களைக் கண்காணிகளாக வைத்த மந்தை முழுவதையுங்குறித்தும், எச்சரிக்கையாயிருங்கள். (அப்போஸ்தலர் 20:28)**
>
> **உங்களிடத்திலுள்ள தேவனுடைய மந்தையை நீங்கள் மேய்த்து, கட்டாயமாய் அல்ல, மனப்பூர்வமாயும், அவலட்சணமான ஆதாயத்திற்காக அல்ல, உற்சாக மனதோடும்,**
>
> **சுதந்தரத்தை இறுமாப்பாய் ஆளுகிறவர்களாக அல்ல, மந்தைக்கு மாதிரிகளாகவும், கண்காணிப்புச் செய்யுங்கள்.**
>
> **அப்படிச் செய்தால் பிரதான மேய்ப்பர் வெளிப்படும்போது மகிமையுள்ள வாடாத கிரீடத்தைப் பெறுவீர்கள். (1 பேதுரு 5:2-4)**

“மேய்ப்பன்” என்ற சொல் பழைய ஏற்பாட்டில் எரேமியாவின் புத்தகத்தில் பாவிக்கப்பட்டுள்ளது. மேய்ப்பர்களுக்கு தேவன் கொடுக்கிற எச்சரிக்கையாவது:

> **மேய்ப்பர்கள் எனக்குத் துரோகம் பண்ணினார்கள்...... (எரேமியா 2:8)**
>
> **மேய்ப்பர்கள் மிருககுணமுள்ளவர்களாகி, கர்த்தரைத் தேடாமற் போனார்கள். ஆகையால், அவர்கள் காரியம் வாய்க்காமற்போய், அவர்கள் மந்தையெல்லாம் சிதறடிக்கப்பட்டது. (எரேமியா 10:21)**
>
> **அநேக மேய்ப்பர்கள் என் திராட்சத்தோட்டத்தை அழித்து, என்பங்கைக் காலால் மிதித்து, என் பிரியமான பங்கைப் பாழான வனாந்தரமாக்கினார்கள்.**

**அதைப் பாழாக்கிவிட்டார்கள். பாழாய்க் கிடக்கிற அது என்னைநோக்கிப் புலம்புகிறது. தேசமெல்லாம் பாழாயிற்று. ஒருவனும் அதை மனதிலே வைக்கிறதில்லை. (எரேமியா 12:10-11)**

**என் மேய்ச்சலின் ஆடுகளைக் கெடுத்துச் சிதறடிக்கிற மேய்ப்பர்களுக்கு ஐயோ! என்று கர்த்தர் சொல்லுகிறார்.**

**இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தர் தமது ஜனத்தை மேய்க்கிற மேய்ப்பர்களுக்கு விரோதமாகச் சொல்லுகிறது என்னவென்றால், நீங்கள் என் ஆடுகளைப் பராமரியாமல், அவைகளைச் சிதறடித்து அவைகளைத் துரத்திவிட்டீர்கள். இதோ, நான் உங்கள்பேரில் உங்கள் செய்கைகளின் பொல்லாப்புக்கேற்ற தண்டனையை உங்கள்மேல் வருவிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். (எரேமியா 23:1-2)**

## மேலதிக படிப்பினைக்கு:

1 தீமோத்தேயு 3:1-13ல் குறிப்பிட்டுள்ள கண்காணி அல்லது உதவி ஊழியக்காரர்களாவது பற்றி படிக்கவும். மேய்ப்பர் என்பவர் இவற்றை பிரயோகிக்க வேண்டும். இயேசு கிறிஸ்துவின் நல்ல மேய்ப்பருக்குரிய குணாதிசயங்களை யோவான் 10:1-18ம் வசனங்களில் படிக்கவும்.

## போதகர்

**சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார். (எபேசியர் 4:13)**

போதகர்கள் தேவவசனத்தை தெளிவாக சம்பந்தப்படுத்தி பேசும் விஷேட திறமையை கொண்ட விசுவாசிகளாக இருக்கின்றனர். வேத வசனங்களை கற்பிப்பவற்றை கற்று மற்றவர்களுக்கும் கற்பிப்பார்கள். பயிற்சியளித்தலும், கற்றுக் கொடுத்தலின் அடங்குகின்றது. தகவல்களை பரிமாறுவது மட்டும் கற்றுக் கொடுத்தல் ஆகாது.

**சிலரை போதகராகவும் ஏற்படுத்தினார்.... (எபேசியர் 4:13)**

**தேவனானவர் சபையிலே.... மூன்றாவது போதகர்களையும்..... ஏற்படுத்தினார். (1கொரிந்தியர் 12:28)**

**போதிக்கிறவன் போதிக்கிறதிலும்.... (ரோமர் 12:7)**

விசேட வரமான போதக வரம் சகல விசுவாசிகளுக்கும் கிடைப்பதில்லை. பவுல் கேட்கின்றார்:

**எல்லாரும் போதகர்களா? (1 கொரிந்தியர் 12:29)**

இக்கேள்விக்கான பதில் "இல்லை" என்பதாகும். தேவன் விசேடமாக போதிக்கும் வரத்தை கொடுக்கின்றார்.

விசேட வரமான போதிக்கும் வரம் பேசும் வரத்திலிருந்தும் வேறுபடுகின்றது, போதிக்கும் வரம்

தீர்க்கதரிசன வரத்திலிருந்தும் வேறுபடுகின்றது. தீர்க்கதரிசன வரம், தீர்க்கதரிசனம் உரைக்கும் வரத்திலிருந்தும் வேறுபடுகின்றது. நீங்கள் அப்போஸ்தலர் 13:1-4 மீளாய்வு செய்து பாருங்கள், அது ஊழியத்திற்காக பவுலையும், பர்னபாவையும் வழிநடத்தியதையும் அவர்கள் போதகர்களாகவும் தலைமைத்துவத்தில் இருந்ததை காண்பிக்கின்றது. (தீர்க்கதரிசன வரமும் அவர்களுக்கிருந்தது). சகல விசுவாசிகளுக்கும் விசேட வரமான போதகவரம் அல்லது பேசும் வரமான போதிக்கும் வரம் இருப்பதில்லை. ஆனால் சகல விசுவாசிகளிலும் நற்செய்தியை போதிக்கும் வரத்துடன் தொடர்புள்ளவர்களாக இருக்கின்றனர்:

> **காலத்தைப் பார்த்தால், போதகராயிருக்கவேண்டிய உங்களுக்குத் தேவனுடைய வாக்கியங்களின் மூல உபதேசங்களை மறுபடியும் உபதேசிக்கவேண்டியதாயிருக்கிறது. (எபிரெயர் 5:12)**

வரம் பெற்றிருந்தாலும் சரி, வரம் பெறாதிருந்தாலும் சரி சகல முதிர்ச்சியடைந்த விசுவாசிகளும் சுவிஷேசத்தை கற்பிக்க வேண்டியவர்களாக இருக்கின்றனர். (ஏனென்றால் சர்வதேச அறுவடை நேர நிறுவனம் "கற்பிக்கும் வியூகங்கள்" என்ற வேறு பாடத்தை சமர்ப்பிக்கின்றது).

கள்ள போதகர்களைக்குறித்து வேதாகமம் எச்சரிக்கின்றது. இப்படியான மக்கள் தங்களுக்கு வரம் இருக்கின்றது என உரிமை பாராட்டுகின்றபோதும் அவர்கள் வேத வசனத்திலிருந்து சத்தியத்தை கற்பிப்பதில்லை.

> **கள்ளத்தீர்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள். (2 பேதுரு 2:1)**

> **ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க மனதில்லாமல், செவித்தினவுள்ளவர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்களுக்குத் திரளாகச் சேர்த்துக்கொண்டு.**

> **சத்தியத்துக்குச் செவியை விலக்கி, கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்துபோகுங்காலம் வரும். (2 தீமோத்தேயு 4:3-4)**

> **உனக்கு முன்னின்று பேசுகிறவர்களும் எனக்கு விரோதமாய்த் துரோகம்பண்ணினார்கள். (ஏசாயா 43:27)**

2 பேதுரு 2ம் அதிகாரமும், யூதாவின் புத்தகமும் கள்ள போதகர்களின் தனிப்பட்ட சில குணாதிசயங்களை தருகின்றது, அவற்றின் மூலம் தவறான போதகர்களை கண்டுப்பிடிக்க முடியும்.

பிழையான உபதேசத்தை தவறான நோக்கோடு போதிப்பது சத்தியமானதாகும்:

> **அவர்களுடைய வாயை அடக்கவேண்டும். அவர்கள் இழிவான ஆதாயத்துக்காகத் தகாதவைகளை உபதேசித்து, முழுக்குடும்பங்களையும் கவிழ்த்துப்போடுகிறார்கள். (தீத்து 1:11)**

தேவனுடைய வார்த்தையை கற்பிப்பவர்கள் உண்மையுள்ள விசுவாசிகளுக்கு கற்றுக்கொடுக்க வேண்டும், அப்போதே அவர்கள் மற்றவர்களுக்கு கற்பிப்பார்கள்.

> **மேலும், திருவசனத்தில் உபதேசிக்கப்படுகிறவன் உபதேசிக்கிறவனுக்குச் சகல நன்மைகளிலும் பகிர்ந்துகொடுக்கக்கடவன். (கலாத்தியர் 6:6)**

> **அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி. (2 தீமோத்தேயு 2:2)**

இவ்விதமாக நாம் தொடர்ச்சியாக கற்றுக் கொடுத்தால் தான் உலகத்தில் சுவிசேஷம் வேகமாக பரவும்.

ஆவிக்குரிய போதிக்கும் வரம் கொண்ட ஒருவர் மனித ஞானத்தால் கற்றுக் கொடுக்கமாட்டார்:

> **அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்தஆவி போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, அவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம். (1 கொரிந்தியர் 2:13)**

ஒரு போதகருக்கு தேவ ஞானமும், புத்துணர்வும் இருக்கும். பவுல் சிலரைக்குறித்து எச்சரிக்கின்றார்:

> **தாங்கள் சொல்லுகிறது இன்னதென்றும், தாங்கள் சாதிக்கிறது இன்னதென்றும் அறியாதிருந்தும், நியாயப்பிரமாண போதகராயிருக்க விரும்புகிறார்கள். (1 தீமோத்தேயு 1:7)**

ஞானத்தோடு கற்றுக் கொடுப்பதின் முக்கியத்துவத்தை அழுத்தமாக கூறுகின்றார்:

> **கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம்.**

> **எந்த மனுஷனையும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேறினவனாக நிறுத்தும்படிக்கு, அவரையே நாங்கள் அறிவித்து, எந்த மனுஷனுக்கும் புத்திசொல்லி, எந்த மனுஷனுக்கும் எல்லா ஞானத்தோடும் உபதேசம்பண்ணுகிறோம். (கொலோசெயர் 1:27-28)**

போதகர்கள் கற்பிக்கின்றபடியே ஜீவிக்க வேண்டும்:

> **இப்படியிருக்க, மற்றவனுக்குப் போதிக்கிற நீ உனக்குத்தானே போதியாமலிருக்கலாமா? களவுசெய்யக்கூடாதென்று பிரசங்கிக்கிற நீ களவுசெய்யலாமா?**

> **விபசாரம் செய்யக்கூடாதென்று சொல்லுகிற நீ விபசாரம் செய்யலாமா? விக்கிரகங்களை அருவருக்கிற நீ கோவில்களைக் கொள்ளையிடலாமா? (ரோமர் 2:21-22)**

அவர்கள் கற்றுக் கொடுத்ததின் அடிப்படையிலேயே அவர்கள் நியாயந்தீர்க்கப்படுவார்கள்:

> **என் சகோதரரே, அதிக ஆக்கினை அடைவோம் என்று அறிந்து, உங்களில் அநேகர் போதகராகாதிருப்பீர்களாக. (யாக்கோபு 3:1)**

## மேலதிக படிப்பினைக்கு:

பின்வரும் புதிய ஏற்பாட்டு போதகர்களை உதாரணமாக கொண்டு கற்கவும். ஒருவருக்கு போதகருக்குரிய

விசேட வரம் இருக்கலாம். சபையின் தலைமைத்துவப் பொறுப்பிலும் இருக்கலாம் இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள். பேசும் வரம் கொண்ட போதகர்கள் யார்?

| | |
|---|---|
| -அப்பொல்லோ: | அப்போஸ்தலர்18:24-25 |
| -ஆக்கில்லாவும் பிரிஸ்கில்லாளும்: | அப்போஸ்தலர் 18:26 |
| -பவுல்: | அப்போஸ்தலர் 20:20-21,27; 21:18 |
| -பெயர் குறிப்பிடப்படாதவர்: | அப்போஸ்தலர் 13:1 |
| -பேதுரு: | அப்போஸ்தலர் 5:28-29 |

சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் "கற்பிக்கும் வியூகங்கள்" என்ற பாடம் பிரதான போதகரான இயேசு கிறிஸ்து பயன்படுத்தி வியூகங்களில் அவதானத்தை செலுத்தும்.

## தலைமைத்துவத்தில் ஒன்றாக வேலை செய்தல்

சபையின் தலைமைத்துவத்தில் ஐந்து விசேட வரங்கள் ஒன்றாக கிரியை செய்கின்றன.

**அப்போஸ்தலர்கள்** பல்வேறு பிரதேசங்களுக்குச் சென்று நற்செய்தியை அறிவித்து விசுவாசிகளின் கட்டமைப்பை ஸ்தாபிக்கின்றனர். தேவன் விசேடமான அற்புதங்களையும், அடையாளங்களையும் சுவிசேஷத்தை பரப்புகின்றபோது செய்கின்றார். இந்த அப்போஸ்தலர் விசேட தலைமைத்துவத்தை சபைகளை எழுப்புவதற்காக கொடுக்கின்றனர்.

**தீர்க்கதரிசிகளும்** சபைக்கு தலைமைத்துவத்தைக் கொடுக்கின்றனர். அவர்கள் பரிசுத்த ஆவியானவருடைய வெளிப்படுத்தலின் ஊடாக தேவனுடைய செய்தியை கொடுத்து சபையில் செயலாற்றுகின்றனர்.

**சுவிசேஷகர்கள்** மக்களிடம் நற்செய்தியை கொடுக்கின்றனர், அதன் பலனாக அம்மக்கள் விசுவாசிக்கின்றனர். அவர்கள் தனிப்பட்ட முறையில் அல்லது பெரிய குழுக்களாக இருக்கலாம், ஆனால் இவ்வூழியத்தில் மூலம் புதிய விசுவாசிகள் உருவாகின்றனர். இந்த விசுவாசிகள், அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், மேய்ப்பர்கள், போதகர்கள் ஆகியோரின் பராமரிப்பிற்கு கீழ் வருவார்கள், இவர்கள் விசுவாசிகள் ஆவிக்குரிய வளர்ச்சியடைய வழிநடத்துவார்கள். அப்போஸ்தலர் 8ம் அதிகாரத்தில் இதற்கான உதாரணம் பிலிப்பிடம் காணப்படுகின்றது. அவன் சமாரியர்களை தேவனிடம் கொண்டு வந்தான், அவர்கள் கற்றுக் கொள்வதற்காக அப்போஸ்தலரிடம் அவர்களை திருப்பினான்.

**மேய்ப்பர்கள்** நற்செய்தியாளரின் செய்தி மூலம் விசுவாசிகளானவர்களுக்கு, நீண்ட கால தலைமைத்துவத்தையும், பராமரிப்பையும் கொடுப்பார்கள். இவர்கள் அப்போஸ்தலர்கள் மூலம் விசுவாசிகளானவர்களுக்கும் வழிகாட்டலையும், பராமரிப்பையும் கொடுப்பார்கள். அவர்களுடைய ஊழியம் ஓர் மேய்யப்பன் தன் ஆடுகளை நேசிப்பது போல காணப்படும்.

**போதகர்** சுவிசேஷகர் மூலமாக வரும் சுவிசேஷத்தை குறித்து ஆலோசனைகளை அளிப்பார்கள். ஆவிக்குரிய முதிர்ச்சியடையும் படிக்கு விசுவாசிகளுக்கு கற்றுக் கொடுப்பார்கள். இவர்கள் மற்றவர்களுக்கும் கற்பிக்கக்கூடிய உண்மையுள்ள மனிதரை பயிற்றுவிப்பார்கள்.

மற்ற விசுவாசிகளை பயிற்றுவிக்கும் தலைமைத்துவ வரம் கொண்டவர்களின் முக்கிய உத்தரவாதம் அவர்களுடைய ஆவிக்குரிய வரத்தை கண்டு பிடிக்க உதவுவதாகும் (எபேசியர் 4:11-16). பின்வருகின்ற பட்டியல் சபையில் எவ்விதம் விசேட வரங்கள் கிரியைச் செய்கின்றன என்பதை காட்டும்:

தேவன்

அப்போஸ்தலர்கள் தீர்க்கதரிசிகள் சுவிஷேசகர்கள் மேய்ப்பர்கள்
போதகர்கள் தந்துள்ளார்

பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு

ஊழியர் | புத்திசொல்லுதல்

ஊழியத்திலும் அறிவிலும் பரிபூரணத்திலும்
உள்ள விளைவு

கிறிஸ்துவின் சரீரத்தில்

அவருடைய பிள்கைகள் இல்லை
(பிழையான உபதேசம்)

அவருக்குள் வளர்ந்தவர்கள்
(உண்மை)

கடைசி பதில்:
சுரீரத்தில் முழுபாகமும் அன்பினால் கிரியை செய்யும்

## சுய பரீட்சை:

١. திறவுகோள் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

٢. இவ்வதிகாரத்தில் கற்றுக்கொண்ட 5 விசேட தலைமைத்துவ வரத்தை தருக:

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

3. இவைகள் ஏன் “விசேட வரங்கள்” என அழைக்கப்படுகின்றது?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

4. பின்வரும் கூற்றுக்களை வாசிக்கவும். சரியாயின் “சரி” எனவும், பிழையாயின் “பிழை” எனவும் கீறிட்ட இடங்களில் எழுதுக.

அ................ விசேட வரமான தீர்க்கதரிசன வரத்தை கொண்டிராதிருந்தால் ஒவ்வொருவரும் தீர்க்கதரிசனம் சொல்ல வேண்டியதில்லை.

ஆ................ விசேட வரமான போதக வரத்தை கொண்டிராதிருந்தால் ஒவ்வொருவரும் கற்பிக்க வேண்டியதில்லை.

இ .............. ஒவ்வொருவரும் சுவிஷேசத்தை மற்றவர்களுக்கு கற்றுக் கொடுக்க வேண்டும். இதனால் விசுவாசிகளுக்கு கற்பிக்கும் வரம் உண்டு என்று அர்த்தமாகாது.

5. முதலாம் பகுதியில் விசேட வரங்கள் பற்றிக் கூறப்பட்டுள்ளது. அதன் வரைவிலக்கணம் இரண்டாம் பகுதியில் உள்ளது. கீறிட்ட இடத்தில் சரியான இலக்கத்தை எழுதுக. முதலாவது உதாரணமாக செய்யப்பட்டுள்ளது.

| பகுதி ஒன்று | பகுதி இரண்டு |
|---|---|
| ........2...... தீர்க்கதரிசி | 1. மற்றவர்களுக்காக கிரியை செய்யும் புதிய சபைகளை |

உருவாக்கி கண்காணிக்க அதிகாரம் கொடுத்து அனுப்பப்பட்டவர்கள்.

................அப்போஸ்தலர் — 2. விசேட உத்வேகத்துடன் தேவனுடைய செய்தியை அவரது மக்களுக்கு உடனடியாக கொடுப்பார்கள். தலைமைத்துவ பொறுப்புள்ளவர்கள்.

................மேய்ப்பன் — 3. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையில் மிகவும் உத்தரவாதமுள்ள அங்கத்தவர்கள். நற்செய்தியை கொண்டு வருபவர்கள். இவர்கள் நற்செய்தியை அவிசுவாசிகளுக்கு அறிவிப்பார்கள்.

................சுவிசேஷகன் — 4. விசுவாசிகளின் ஆவிக்குரிய போராட்டத்திற்கு தலைமைதாங்கி நீண்டகால தலைமைத்துவத்தை வகிப்பார்கள்.

................போதகர் — 5. மற்றவர்கள் கற்றுக் கொள்ளும்படியாக தேவனுடைய வசனத்தின் சத்தியத்தை வெளிப்படுத்தி கற்பிப்பார்கள். தலைமைத்துவ பொறுப்பு இவர்களுக்குண்டு.

6. ஆவிக்குரிய வரங்களிலுள்ள முக்கியமான நான்கு பிரிவுகள், கற்பிக்கும் நோக்கங்களுக்காக, இவற்றிலும் பின்வரும் அதிகாரங்களிலும் பயன்படுத்தப்படுகிறது. அவை எவை?

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

இவ்வதிகாரத்தில் விசேட வரங்களை குறித்து சம்பாஷித்தோம் அதேவேளை மேலதிக படிப்பினைக்காக ஆய்வும் கொடுக்கப்பட்டது. மற்ற பாடத்தை ஆரம்பிக்கும் முன்னதாகவே ஆராய்ந்து கற்றுக் கொள்வதற்காக ஆய்வுகளும் கொடுக்கப்பட்டது. திருச்சபையில் விசேட வரத்தை கொண்ட விசுவாசிகளையும் தேவன் ஏற்படுத்தி உள்ளார். ஆனால் திருச்சபையின் தலைமைத்துவத்திற்கு மாத்திரம் கொடுக்கப்பட்டதாக வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை.

புதிய ஏற்பாட்டில் மூப்பர்கள் உதவி ஊழியக்காரர்கள் என்ற வேலைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. சில சபைகள் மேய்ப்பரும், கண்காணியும் ஒருவர் என்று எண்ணுகின்றனர். வேறு சிலர் இவை வேறுபட்ட உத்தியோகங்கள் என்று எண்ணுகின்றனர். இந்த தலைமைத்துவ நிலமைகளும், விசேட வரத்தைப் பெற்றுள்ள தலைமைத்துவம் வித்தியாசமானவை என நாம் தற்போது கற்றுக் கொள்ள போகின்றோம். இந்த விசேட உத்தியோகங்கள் ஆதிசபையில் தேவனின் வழிநடத்தலின் பிரகாரம் ஏற்படுத்தப்பட்டன.

ஆதிசபையில் இருக்கின்ற உதாரணங்களை நாம் பின்பற்றும் படியாக தேவன் பதிவு செய்து வைத்துள்ளார். இதே உத்தியோகங்கள் இன்றைய சபைகளிலும் பின்பற்றப்பட்டு வருகின்றன. இவ் உத்தியோகங்களின் நோக்கங்களைக் கொண்டவர்களுக்கு, விசேட தலைமைத்துவ வரங்களைக் கொண்ட தலைமைத்துவ பொறுப்புள்ளவர்களை எவ்வாறு உதவுவர் என்று நாம் இவ்வதிகாரத்திலே கலந்துரையாடியுள்ளோம். உதாரணம் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிஷேசர்கள், மேய்ப்பர்கள், ஆசிரியர்கள் பற்றி கற்றுள்ளோம். தலைமைத்துவ நிலமைகளைக்குறித்து பின்வரும் அட்டவணைகளிலிருந்து கற்றுக் கொள்ளலாம்.

### சபை ஊழியங்கள்

| தலைப்பு | வசனம் | கடமை |
|---|---|---|
| கண்காணி | 1 தீமோத்தேயு 2:1-7<br>பிலிப்பியர் 1:1<br>தீத்து 1:5-9<br>1 பேதுரு 5:2-3 | கண்காணிகளுக்கு போதகருக்குரிய கடமைகள் இவருக்கு உண்டு என எண்ணுகின்றனர். இவ்வசனங்கள் அவர் நீண்ட காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட விசுவாசிகளை கவனிக்க வேண்டும் என சுட்டிக்காட்டுகின்றன. |
| உதவி ஊழியக்காரர் | 1 தீமோத்தேயு 3:8-13<br>பிலிப்பியர் 1:1<br>அப்போஸ்தலர் 6:1-7 | இவர்களின் வேலை உதவி ஊழியம் செய்வது என இவ்வசனங்கள் சுட்டிக்காட்டுகின்றன. |
| உதவி ஊழியக்காரி | 1 தீமோத்தேயு 3:11<br>ரோமர் 16:1-2 | உதவி ஊழியக்காரிகள் என்ற சொல் வேதாகமத்தில் குறிப்பிடப்படவில்லை. சில சபைகளில், ஊழியக்காரரின் மனைவிக்கு அல்லது ஊழியக்காரிகளுக்கு இதை பாவிக்கின்றனர். உதவி ஊழியம் செய்வது இவர்களது உத்தரவாதம். |
| மூப்பர்கள் | அப்போஸ்தலர் 20:17,28-32 | விசுவாசிகளின் வளர்ச்சியிலும், பராமரிப்பிலும் |

அப்போஸ்தலர் 14:23,15
அப்போஸ்தலர் 16:4; 11:30
1 தீமோத்தேயு 5:17
1 பேதுரு 5:1-4
தீத்து 1:5; யாக்கோபு 5:14

அவசியமான தீர்மானங்களை எடுப்பதற்கும் இவர்கள் உதவுவார்கள் எனவும், தலைமைத்துவ பொறுப்பில் இருப்பர் எனவும் இவ்வசனங்கள் வெளிப்படுத்துகின்றன.

குறிப்பு: மூப்பர் என்ற சொல் முதன்முறையாக யாத்திராகமம் 3:16ல் இஸ்ரவேலின் தலைவர்களுக்கு பாவிக்கப்பட்டுள்ளது. வேதாகமத்தில் இஸ்ரவேலின் மூப்பர்களைக்குறித்து ஏராளமான வேத வசனங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆதிசபையில் இருந்த மூப்பர்களின் நிலைமைக்கும் இவர்களுக்கும் வித்தியாசங்கள் உண்டு. நாம் கவனித்த வேதவாக்கியங்களின் படி சபையிலிருந்த மூப்பர்கள், இஸ்ரவேலின் மூப்பர்களை விட முற்றிலும் வேறுப்பட்டவர்களாய் இருக்கின்றனர்.

தேவன் திருச்சபையில் அமைத்து வைத்துள்ள விசேட தலைமைத்துவ வரத்திற்கும், மூப்பர்களுக்கு உள்ள செயல்பாடுகளை அவதானியுங்கள். மூப்பர்கள் சுயாதீனமாக, தேவனுடைய விசேட தலைவர்களாக செயல்படுவதில்லை. உதாரணமாக தீர்க்கதரிசிகள், அப்போஸ்தலர்கள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள் போன்று செயல்படுவதில்லை. தேவனே விசேட தலைமைத்துவத்தை சபையில் ஏற்படுத்தி வைத்துள்ளார். மூப்பர்கள் மனிதர்களால் நியமிக்கப்படுகின்றனர்.

## தகமைகள்

சபையின் வேலைகளை செய்யப் போகிற இவர்களுக்கு வேதாகமம் விசேடமான தகமைகள் இருக்க வேண்டும் என்று கருதுகின்றது:

கண்காணிகளும், மூப்பர்களும்:

-நற்சாட்சி பெற்றவர்கள் (நல்மதிப்பை பெற்றவர்களாக இருக்க வேண்டும், தேவனுடைய வார்த்தையை மீறியவர்களாக இருக்கக்கூடாது): 1 தீமோத்தேயு 3:2; தீத்து 1:6,7

-ஒரு மனைவியையுடைய புருஷன் (திருமணம் முடித்திருந்தால் ஒரு தரம் ஒரு இணையை கொண்டிருக்க வேண்டும்): 1 தீமோத்தேயு 3:2; தீத்து 1:6

-தன்னடக்கமுள்ளவன் (அனைத்து விடயங்களிலும் இயல்பானவனாக): தீத்து 1:8; 1 தீமோத்தேயு 3:2

-சுய கட்டுப்பாடு (வாழ்விலும், நடத்தையிலும்): தீத்து 1:8

-தெளிந்த புத்தி, விழிப்புணர்வுள்ளவர் (விவேகம், மதிநுட்பம், ஞானம், கவனமான அறிவு): 1 தீமோத்தேயு 3:2; தீத்து 1:8

-உபசரிக்கின்றவன் (மற்றவர்களுக்காக வீடு திறந்திருக்க வேண்டும்): 1 தீமோத்தேயு 3:2; தீத்து 1:8

-கற்றுக் கொடுக்கின்றவனாக (தேவனுடைய வார்த்தையை மற்றவர்களுக்கு கற்பித்தல்): 1 தீமோத்தேயு 3:2; தீத்து 1:9

-மதுபான பிரியனாக இருக்கக்கூடாது: 1 தீமோத்தேயு 3:3; தீத்து 1:7

-பொறுமையுள்ளவன் (விரைவாக கோபம் கொள்ளாதவன்): 1 தீமோத்தேயு 3:3

-சுயசித்தத்தின்படி நடக்காதவன் (சுயத்தை மையமாக வைக்காமலும், தன் சொந்த வழிகளில் எப்போதும் நடக்காதவனாக இருக்க வேண்டும்): தீத்து 1:7

-புதிய விசுவாசியாக இருக்க கூடாது (ஆவிக்குரிய முதிர்ச்சியையும், அனுபவத்தையும், கொண்டிராத விசுவாசியாக இருக்க கூடாது): 1 தீமோத்தேயு 3:6

-நன்மையை நேசிக்கிறவராக: (தேவனுக்கும் அவரது நோக்கங்களுக்கும் துணை சென்று செயல்படுகிறவராக): தீத்து 1:8

-நேர்மையுள்ளவராக (மக்களுடன் நேர்த்தியாய் நடக்கிறவராக): தீத்து 1:8

-வசனத்தில் நிலைத்திருக்கிறவராக: தீத்து 1:9

-பரிசுத்தமுள்ளவராக (நீதியும், பரிசுத்தமும்): தீத்து 1:8

-பேராசையற்றவராக (பண ஆசையற்றவராக): தீத்து 1:7; 1 தீமோத்தேயு 3:3

-தனது வீட்டை சிறப்பாக நிர்வகிக்கிறவராக (தனது வீட்டில் தலைமைத்துவ திறனை காண்பிக்கிறவராக): 1 தீமோத்தேயு 3:4-5

-விசுவாசமுள்ள பிள்ளைகளை கொண்டவராக (தேவனுக்கு கீழ்படிகிற பிள்ளை கொண்டிருக்க வேண்டும், புரட்சி பண்ணும் பிள்ளைகளை கொண்டிராதவர்): தீத்து 1:6

-வெளியாரிடம் நற்சாட்சி பெற்றவராக இருக்க வேண்டும் (அவிசுவாசிகளிடம் நற்சாட்சியை கொண்டிருக்க வேண்டும்): 1 தீமோத்தேயு 3:7

**உதவி ஊழியர்கள்:**

-நற்சாட்சி பெற்றவர் (மதிக்கப்படுகின்றவராகவும், நல்ல குணாதிசயம் கொண்டவராகவும் இருக்க வேண்டும்) 1 தீமோத்தேயு 3:8

-இரு நாக்குள்ளவராக இருக்கக்கூடாது (முரண்பாடாக பேசுகின்றவராக இருக்கக்கூடாது): 1 தீமோத்தேயு 3:8

-மதுபான பிரியராயிருக்க கூடாது: 1 தீமோத்தேயு 3:8

-பண ஆசையற்றவராக இருக்க வேண்டும் (பேராசையுள்ளவராக இருக்க கூடாது): 1 தீமோத்தேயு 3:8

-விசுவாசத்தில் உறுதியுள்ளவராக இருக்க வேண்டும்: 1 தீமோத்தேயு 3:9

-சோதிக்கப்பட்டவராக இருக்க வேண்டும் (ஆவிக்குரிய விதத்தில் பரிசீலிக்கப்பட்டவராகவும், சோதனைகளின் வேளையில் உண்மையுள்ளவராகவும் இருக்க வேண்டும்): 1 தீமோத்தேயு 3:10

-குற்றஞ்சாட்டப்படாதவராக இருக்க வேண்டும் (அவரது நடத்தையைக் குறித்து கண்டனம் செய்யப்படாதவராக): 1 தீமோத்தேயு 3:10

-ஒரே மனைவியையுடைய கணவன் (துணையாளராக இருக்க வேண்டும்): 1 தீமோத்தேயு 3:12

-வீட்டையும், பிள்ளைகளையும் சிறப்பாக நிர்வாகிக்கிறவராக (குடும்ப வாழ்வில் தனது தலைமைத்துவத்தை நிரூபிக்கின்றவராக இருக்க வேண்டும்): 1 தீமோத்தேயு 3:12

-உறுதிசெய்யப்பட்டவராக (புதிய விசுவாசியாய் இருக்க கூடாது. விசுவாசி என்று நிரூபிக்கப்பட்டவராக இருக்க வேண்டும்): 1 தீமோத்தேயு 3:10

**உதவி ஊழியக்காரர்கள்:**

-பெண்களாயிருக்க வேண்டும்: 1 தீமோத்தேயு 3:11

-கண்ணியமானவர்களாக இருக்க வேண்டும் (மதிக்கப்படுகிறவராகவும், நல்ல குணாதிசயத்தை கொண்டவராகவும் இருக்க வேண்டும்) 1 தீமோத்தேயு 3:11

-அவதூறு பண்ணாதவர்களாயிருக்க வேண்டும் (மற்றவர்களை தூற்றித்திரிபவளாக இருக்க கூடாது): 1 தீமோத்தேயு 3:11

-கோபப்படாதவளாக இருக்க வேண்டும் (அனைத்து விடயங்களையும் இயல்பாக எடுத்துக் கொள்பவராக இருக்க வேண்டும்): 1 தீமோத்தேயு 3:11

-சகலவற்றிலும் உண்மையுள்ளவளாக இருக்க வேண்டும் (வாழ்வில் ஒவ்வொரு பகுதியிலும் நம்பகத்தன்மை இருக்க வேண்டும்): 1 தீமோத்தேயு 3:11

-அநேகருக்கு உதவி செய்கின்றவளாக இருக்க வேண்டும் (மற்றவர்களது தேவைகளை தனது ஊழியத்தின் மூலம் பூர்த்தி செய்கின்றவளாக இருக்க வேண்டும்): ரோமர் 16:2

## சபையின் அமைப்பு

பின்வரும் வரைபடம் வேதாகமம் கூறும் சபை அமைப்பு முறையை காண்பிக்கின்றது:

**சபை**

விசேட வரமுள்ள தலைமைத்துவம்:

இப்போஸ்தலர்கள்

தீர்க்கதரிசிகள்

சுவிசேஷகர்கள்

மேய்ப்பர்கள்

போதகர்கள் (எபேசியர் 2:20-22)

விஷேட வேலைகளைக் கொண்டுள்ள கண்காணிகளும், உதவி ஊழியர்களும், மூப்பர்களும், கிறிஸ்துவின் சரீரத்தில் அவயங்களாயும், தங்களுக்கு தேவன் தந்துள்ள வரத்தை அவர் வைத்துள்ள இடத்திலிருந்து பாவிக்க வேண்டும்.

அப்போஸ்தலராலும், தீர்க்கதரிசிகளாலும் அஸ்திபாரத்தின் மேல் கட்டப்பட்டவர்கள்
எபேசியர் 2:20

இயேசு கிறிஸ்துவாகிய கன்மலையின் மேல் கட்டப்பட்டவர்கள்
மத்தேயு 16:18 1 கொரிந்தியர் 3:11 எபேசியர் 2:20

அதிகாரம் ஏழு

# பரிசுத்த ஆவியானவரின் பேசும் வரங்கள்

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால் :

பேசும் வரங்கள் ஐந்தை அடையாளம் காண்பீர்கள்.

பேசும் வரங்களை விபரிப்பீர்கள்.

ஞானத்தையும் உணர்த்தும் வசனத்திற்கும், அறிவை உணர்த்து வசனத்திற்கும் இடையிலுள்ள வித்தியாசத்தையும் அடையாளம் காண்பீர்கள்.

**திறவுகோல் வசனம்:**

**தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். (1 கொரிந்தியர் 12:18)**

## அறிமுகம்

ஐந்து வரங்களுக்கு பேசும் வரங்கள் என்ற தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது, காரணம் அவை பேசுவதோடு தொடர்புள்ளமையாகும். ஐந்து பேசும் வரங்களாவன:

-தீர்க்கதரிசனம் -புத்திசொல்லுதல் -ஞானத்தை போதிக்கும் வசனம்
-போதித்தல் -அறிவை உணர்த்தும் வசனம்

தீர்க்கதரிசனம் கூறலும், போதித்தலும் ஒரே விதமான வரம் போன்றிருப்பினும் பேசும் வரமாகிய இவையிரண்டும் விசேஷ வரமாகும். ஆனாலும் தீர்க்கதரிசனம் கூறலும், போதித்தலுமாகிய இவையிரண்டும் ஒன்றல்ல, தீர்க்கதரிசிக்கும், போதகருக்குமான தலைமைத்துவ வரமுமல்ல.

## தீர்க்கதரிசனம்

**வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும்.... அளிக்கப்படுகிறது. (1 கொரிந்தியர் 12:10)**

தீர்க்கதரிசன வரம் உள்ள ஒரு நபர், தேவனுடைய விஷேட வெளிப்பாட்டை பெற்ற உடனடியாகவே அவருடைய மக்களுக்கு அச்செய்தியை கொடுத்துவிடுவார்.

தீர்க்கதரிசனம் பற்றி விரிவாக, தீர்க்கதரிசியாயிருப்பதற்குரிய விசேட வரம் என்ற பகுதியில் சம்பாஷிப்போம். தீர்க்கதரிசனத்தை கூறும் தீர்க்கதரிசியும் கூட, தனது வாழ்வில் தீர்க்கதரிசன வரத்தை பிரயோகிக்க வேண்டும் என்றே கூறப்படுகின்றது.

பேசும் வரமான தீர்க்கதரிசன வரத்தைக் கொண்டு இருப்பதனால், விசேட வரமான தீர்க்கதரிசியாகி

விடலாம் என்பது இதன் அர்த்தமல்ல. தேவன் தீர்க்கதரிசிகளை சபையின் விசேடமான தலைமைத்துவ பொறுப்பிற்கு நியமித்துள்ளார்.

அவர்கள் தீர்க்கதரிசியைப்போன்று தீர்க்கதரிசனம் உரைக்கின்றபோதும், தீர்க்கதரிசன வரத்தையுடைய மக்கள் தீர்க்கதரிசி என்ற தலைமைத்துவ பெறுப்பு இருப்பதில்லை. அவர்கள் பரிசுத்த ஆவியாகிய தேவனுடைய வெளிப்பாட்டின் படி விசேட செய்திகளை கொடுக்கின்றார்கள்.

## போதித்தல்

**நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான படியினாலே.... ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும்.... (ரோமர் 12:6-7)**

போதித்தல் என்ற பாடம், விசேட வரமான போதித்தல் என்ற பகுதியையும் உள்ளடக்கியதாக இருக்கும்.சகல பாடங்களும் சம்பாஷிக்கப்பட்டு பிரயோகிக்கப்பட வேண்டும், போதிக்கும் வரம் கொண்டவர் தலைமைத்துவ பொறுப்பில் இருக்க வேண்டும் என்பது விதிவிலக்கல்ல.

உதாரணமாக தீர்க்கதரிசியும், தீர்க்கதரிசனமும், பேசும் வரமான போதிக்கும் வரம் என்னும் போது ஒரு நபர் விசேட வரத்தினால் போதகர் ஆகின்றார் என்று அர்த்தமாகாது. தேவனே போதகர்களை நியமிக்கிறார். (அவருக்கு போதிக்கும் வரம் ஏற்கனவே இருக்கும்) சபையில் விசேடமான தலைமைத்துவ பொறுப்பையும் அவர்களுக்கு கொடுக்கிறார்.

## புத்தி சொல்லுதல்

**நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான படியினாலே.... புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும்... (ரோமர் 12:6,8)**

புத்தி சொல்லும் வரம் என்னும் போது, அது தேவையான நேரத்தில், தேவனுடைய வசனத்திலிருந்து சரியானபடி ஆலோசனை கொடுப்பதாகும். "புத்தி" என்ற வார்த்தைக்கு, எழுத்தின்படி அர்த்தம் சொல்வதாயின் அவரை ஒரு பக்கத்திற்கு அழைத்து, ஆலோசனை கூறல், சிபாரிசு செய்தல், அறிவுரை கூறல், உற்சாகப்படுத்தல், ஆறுதல்படுத்தல் எனப்படும்.

புத்தி சொல்லுதல் என்பது ஆவிக்குரிய ஆலோசனை கொடுப்பதற்கான விசேட திறமையாகும். இவ்வரத்தை கொண்டவர்கள் ஊழியம் செய்யும் போது, ஆறுதலையும், தேற்றுதலையும், உற்சாகத்தையும் மற்றவர்களுக்கு உதவும்படி கொடுப்பார்கள். இவ்வரத்திற்கு பாவிக்கப்படும் நவீன வார்த்தை "ஆலோசனை கொடுக்கும் வரம்" என்பதாகும்.

புத்தி சொல்வதை அப்போஸ்தலர்கள், சபைகளில் திட்டமிட்டு பின்பற்றினார்கள்:

**அந்தப் பட்டணத்தில் அவர்கள் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அநேகரைச் சீஷராக்கினபின்பு, லீஸ்திராவுக்கும் இக்கோனியாவுக்கும் அந்தியோகியாவுக்கும் திரும்பி வந்து,**

**சீஷருடைய மனதைத் திடப்படுத்தி, விசுவாசத்திலே நிலைத்திருக்கும்படி அவர்களுக்குப் புத்திசொல்லி..... (அப்போஸ்தலர் 14:21-22)**

எவ்விதமாக புத்தி சொல்லப்பட வேண்டும் என்று வேதாகமம் போதிக்கின்றது:

## தகப்பன் தன் பிள்ளைக்கு சொல்வதைப்போல:

**மேலும், தம்முடைய ராஜ்யத்திற்கும் மகிமைக்கும் உங்களை அழைத்த தேவனுக்கு நீங்கள் பாத்திரராய் நடக்கவேண்டுமென்று... (1 தெசலோனிக்கேயர் 2:11)**

## தயவுடன் வழிகாட்டலை கொடுக்க வேண்டும்:

**சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு. எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு. (2 தீமோத்தேயு 4:2)**

## வேதாகமத்தின் ஆரோக்கியமான உபதேசத்தினால் புத்தி சொல்ல வேண்டும்:

**ஆரோக்கியமான உபதேசத்தினாலே புத்திசொல்லவும், எதிர்பேசுகிறவர்களைக் கண்டனம் பண்ணவும் வல்லவனுமாயிருக்கும்படி, தான் போதிக்கப்பட்டதற்கேற்ற உண்மையான வசனத்தை நன்றாய்ப் பற்றிக்கொள்ளுகிறவனுமாயிருக்கவேண்டும். (தீத்து 1:9)**

## சகல அதிகாரத்தோடும்:

**இஜவகளை நீ பேசி, போதித்து, சகல அதிகாரத்தோடும் கடிந்துகொள். (தீத்து 2:15)**

## நாளானது சமீபித்து வருகின்றமையால் புத்தி சொல்ல வேண்டும்:

**ஒருவருக்கொருவர் புத்திசொல்லக்கடவோம். நாளானது சமீபித்துவருகிறதை எவ்வளவாய்ப் பார்க்கிறீர்களோ அவ்வளவாய்ப் புத்திசொல்லவேண்டும். (எபிரெயர் 10:25)**

## மேலதிக படிப்பினைக்கு:

வேதாகமம், புத்திசொல்லும் வரத்தை கொண்ட மக்கள் மற்றவர்களுக்கு ஆலோசனை கொடுத்ததை பற்றி சில உதாரணங்களை தருகின்றது:

| | |
|---|---|
| -பர்னபாஸ்: | அப்போஸ்தலர் 11:22-24 |
| -யூதாசும், சீலாவும்: | அப்போஸ்தலர் 15:32 |
| -பவுல்: | அப்போஸ்தலர் 14:22, 2கொரிந்தியர் 9:5, 1 தெசலோனிக்கேயர் 4:1 |
| -யூதா: | யூதா 3 |

எவ்வித மனப்பாங்குடன் ஒருவர் மற்றவர்களுக்கு புத்தி சொல்ல வேண்டும்? 1 தெசலோனிக்கேயர் 2:11, 5:14ம் வசனங்களை கவனிக்கவும்.

---

புத்தி சொல்லும் போது, எக்காரியங்களினால் மக்களை உற்சாகப்படுத்த வேண்டும்?

1 பேதுரு 5:1-2 ----------------------------------------------------------------

2 தீமோத்தேயு 4:1-4 ----------------------------------------------------------------

1 தெசலோனிக்கேயர் 2:11-12 -------------------------------------------------------------------

2 தெசலோனிக்கேயர் 3:12 -------------------------------------------------------------------

பின்வரும் வசனங்களை வாசித்து பட்டியலை பூர்த்தி செய்யுங்கள்:

| | யார்? | யாரை? |
|---|---|---|
| அப்போஸ்தலர் 14:21-22 | -------------------------------- | ------------------------------------ |
| அப்போஸ்தலர் 16:40 | -------------------------------- | ------------------------------------ |
| அப்போஸ்தலர் 20:1 | -------------------------------- | ------------------------------------ |
| 2 கொரிந்தியர் 1:3-7 | -------------------------------- | ------------------------------------ |

## ஞானத்தை போதிக்கும் வரம்

**ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும்..... (1 கொரிந்தியர் 12:8)**

இந்த ஞானத்தை போதிக்கும் வசனம் என்பது, விசேட தேவை உள்ளவர்கள் எவ்வாறு அறிவை பிரயோகிக்கலாம் என்பதற்கான உள்ளுணர்வை பெறும் திறமையாகும். நடைபெற்ற நிகழ்ச்சி எவ்வித தீர்வை காணலாம் என்கின்றதை இவ்வரம் கொண்டவர்கள் எச்சர்ந்தர்ப்பத்திலும் அறிந்திருப்பர்.

இந்த ஞானத்தை போதிக்கும் வசனம் தெய்வீக உள்ளுணர்வினால், சந்தர்ப்பத்திற்கு ஏற்றபடி ஒருவருக்கு எளிதில் கிடைப்பதில்லை. தேவன் கொடுக்கிற ஞானத்தில் எதை, எவ்விதம் செய்யவேண்டும் என்ற விளக்கமும் கிடைக்கும். இவ்வரம் "ஞானத்தை போதிக்கும் வசனம்" என்று அழைக்கப்படமாட்டாது. இது தேவனுடைய ஞானமல்ல. ஞானத்தை போதிக்கும் வசனம் என்பது தேவனுடைய எல்லையற்ற ஞானத்தின் ஒரு பகுதியாக இருக்கின்றது.

இந்த ஞானத்தை போதிக்கும் வசனம் கல்வி கற்பதினால் வருவதல்ல. தேவனே ஞானத்தின் ஆதாரம்:

> **பிதாவாகிய தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் உரிய இரகசியத்தை அறிந்துகொள்ளுகிற உணர்வின் பூரண நிச்சயத்தினுடைய எல்லா ஐசுவரியத்திற்கும் உரியவர்களாக வேண்டுமென்றே இப்படி விரும்புகிறேன்.**
>
> **அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது. (கொலோசெயர் 2:2-3)**

இயேசு கிறிஸ்து "ஞானத்தின் தேவன்" என அழைக்கப்பட்டார்:

> **ஆகிலும் யூதரானாலும் கிரேக்கரானாலும் எவர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்களோ, அவர்களுக்குக் கிறிஸ்து தேவபெலனும் தேவஞானமுமாயிருக்கிறார்.**
>
> **அந்தப்படி, நீங்கள் அவராலே கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டிருக்கிறீர்கள். எழுதியிருக்கிறபடி மேன்மை பாராட்டுகிறவன் கர்த்தரைக்குறித்தே மேன்மைபாராட்டத்தக்கதாக, (1 கொரிந்தியர் 24,30)**

தேவ ஞானமும், உலக ஞானமும் ஒன்றல்ல:

> **உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள். சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய் சொல்லாமலுமிருங்கள்.**
>
> **இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது.**
>
> **வைராக்கியம் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச் செய்கைகளுமுண்டு.**
>
> **பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது. (யாக்கோபு 3:14-17)**

உங்களுக்கு ஞானத்தை போதிக்கும் வரம் இல்லாதிருந்தால், நீங்கள் ஆவிக்குரிய ஞானத்தை வளர்த்துக்கொள்ளுங்கள். அதை நீங்கள் தேவனுடைய வார்த்தையை கற்பதின் மூலம் பெற்றுக் கொள்ளலாம்:

> **கிறிஸ்து இயேசுவைப்பற்றும் விசுவாசத்தினாலே உன்னை இரட்சிப்புக்கேற்ற ஞானமுள்ளவனாக்கத்தக்க பரிசுத்த வேத எழுத்துக்களை, நீ சிறுவயது முதல் அறிந்தவனென்றும் உனக்குத் தெரியும். (2 தீமோத்தேயு 3:15)**

நீங்கள் தேவனிடத்தில் ஞானத்தை கேட்கலாம்:

> **உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். (யாக்கோபு 1:5)**

ஞானம் தேவனுக்கு பயந்து ஜீவிக்கின்றவர்களுக்கு கொடுக்கப்படுகிறது:

> **கர்த்தர் ஞானத்தைத் தருகிறார். அவர் வாயினின்று அறிவும் புத்தியும் வரும்.**
>
> **அவர் நீதிமான்களுக்கென்று மெய்ஞ்ஞானத்தை வைத்துவைத்திருக்கிறார். உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு அவர் கேடகமாயிருக்கிறார். (நீதிமொழிகள் 2:6-7)**

ஆவிக்குரிய ஞானம் சகல விசுவாசிகளுக்கும் உரியது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள், ஆனால் ஞானத்தை போதிக்கும் வசனமும், ஆவிக்குரிய ஞானமும் ஒன்றல்ல. ஞானத்தை போதிக்கும் வசனம், பரிசுத்த ஆவியானவருக்கூடாக தேவன் கொடுக்கிற விசேட திறமையாகும்.

## மேலதிக படிப்பினைக்கு:

ஞானத்தை குறித்து பவுல் கொடுத்த வேத வசனங்களை படியுங்கள்: 1 கொரிந்தியர் 2:1-13. எழுத்தாளர் சுட்டிக் காட்டும் இரண்டு ஞானஸ்நானங்களுக்கும் இடையிலான வித்தியாசங்கள் என்ன? ஞானத்தை

போதிக்கும் வசனம் அவனது வாழ்வில் கிரியை செய்தது. 2 பேதுரு 3:15-16, 1 கொரிந்தியர் 2:4-8 ஆகிய வசனங்களை பாருங்கள்.

ஸ்தேவானின் ஊழியத்தில் ஞானம் விளங்கியது: அப்போஸ்தலர் 6:3,10

பழைய ஏற்பாட்டு, ஞானத்திற்கு சிறந்த உதாரணமாக சாலமோன் இராஜா இருக்கின்றான்: 1 இராஜாக்கள் 3:5-28

நிதிமொழிகளை வாசியுங்கள். இவை சாலமோன் இராஜாவால் எழுதப்பட்டவை, ஆவிக்குரிய ஞானத்திற்கு பிரயோகிக்கப்பட்டவையாகும்.

யாக்கோபு 3:17ஐ வாசியுங்கள். தெய்வீக ஞானத்தின் குணாதிசயங்களை பட்டியலிடுங்கள்.

ஞானத்தை போதிக்கும் வசனம் கிரியை செய்தமைக்கு உதாரணமாக வசனங்களையும் படியுங்கள்:

-லூக்கா 2:40-52; 21:15
-அப்போஸ்தலர் 5:26-33
(மனுஷருக்கு கீழ்ப்படிகிறதைப்பார்க்கிலும் தேவனுக்கு கீழ்ப்படிவதே அவசியம் என்ற ஞானத்தின் கூற்றை அவதானியுங்கள்)
-உபாகமம் 34:9
-யாத்திராகமம் 36:1-2

## அறிவை உணர்த்தும் வசனம்

**எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்..... (1 கொரிந்தியர் 12:8)**

அறிவை உணர்த்தும் வசனம், காரியங்களை விளங்கிக்கொள்ளும் ஆற்றலையும், மற்றவர்களால் அறிந்து, பகிர்ந்து கொள்ள முடியாத காரியங்களை ஆவியின் வெளிப்பாட்டால் அறிவிக்கும் திறமையையும் கொண்டது. அறிவை உணர்த்தும் வசனம் அறிவின் வரம் என்று அழைக்கப்பட மாட்டாது. ஆது அறிவை உணர்த்தும் வசனமாக இருக்கின்றது. இது தேவனுடைய முழு அறிவையும் கொண்டதாயிராமல், அவருடைய அறிவில் ஒரு பகுதியை கொண்டுள்ளது.

இந்த ஆவிக்குரிய அறிவின் ஆதாரம் தேவனாகும்:

**அவருக்குள் ஞானம் அறிவு என்பவைகளாகிய பொக்கிஷங்களெல்லாம் அடங்கியிருக்கிறது. (கொலோசெயர் 2:3)**

**மனுஷனிலுள்ள ஆவியேயன்றி மனுஷரில் எவன் மனுஷருக்குரியவைகளை அறிவான்? அப்படிப்போல, தேவனுடைய ஆவியேயன்றி, ஒருவனும் தேவனுக்குரியவைகளை அறியமாட்டான்.**

**நாங்களோ உலகத்தின் ஆவியைப் பெறாமல், தேவனால் எங்களுக்கு அருளப்பட்டவைகளை அறியும்படிக்குத் தேவனிலிருந்து புறப்படுகிற ஆவியையே பெற்றோம்.**

**அவைகளை நாங்கள் மனுஷஞானம் போதிக்கிற வார்த்தைகளாலே பேசாமல், பரிசுத்தஆவி**

**போதிக்கிற வார்த்தைகளாலே பேசி, அவிக்குரியவைகளை ஆவிக்குரியவைகளோடே சம்பந்தப்படுத்திக் காண்பிக்கிறோம்.**

**ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்ஞூ அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும. அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். (1 கொரிந்தியர் 2:11-14)**

அறிவை உணர்த்தும் வசனமானது வெளிப்படுத்தப்பட்ட அறிவாகும். இந்த அறிவு தேவனால் வெளிப்படுத்தப்படுகிறது. இது கல்வியினால், படிப்பினால் வருகின்ற அறிவைக் கொண்டது அல்ல.

இயேசு பேதுருவிடம் ஆவிக்குரிய கேள்வியை கேட்டபோது அவன் அறிவை உணர்த்தும் வசனத்தினாலேயே பதில் கொடுத்தான். இயேசு சொன்னார்:

**இயேசு அவனை நோக்கி: யோனாவின் குமாரனாகிய சீமோனே, நீ பாக்கியவான். மாம்சமும் இரத்தமும் இதை உனக்கு வெளிப்படுத்தவில்லை, பரலோகத்திலிருக்கிற என் பிதா இதை உனக்கு வெளிப்படுத்தினார். (மத்தேயு 16:17)**

இந்த அறிவை உணர்த்தும் வசனம் மனுஷிகத்தால் பாவிக்கப்படுகிறது, ஏனென்றால் நீங்கள் அறிவின் ஆதாரமல்ல. தேவனே அறிவின் ஆதாரம்:

**அறிவு இறுமாப்பை உண்டாக்கும், அன்போ பக்திவிருத்தியை உண்டாக்கும்.**

**ஒருவன் தான் ஏதேனும் ஒன்றை அறிந்தவனென்று எண்ணிக்கொள்வானானால், ஒன்றையும் அறியவேண்டியபிரகாரமாக அவன் இன்னும் அறியவில்லை. (1 கொரிந்தியர் 8:1-2)**

## மேலதிக படிப்பினைக்கு:

அறிவை உணர்த்தும் வசனத்திற்கு, புதிய ஏற்பாட்டு உதாரணத்தை மேலதிக படிப்பிற்காக கவனியுங்கள்.

| | |
|---|---|
| -இயேசு: | லூக்கா 1:48; 4:17-18; 11:14 |
| -சீமோன்: | லூக்கா 2:25-35 |
| -அனனியா, சப்பிராள்: | அப்போஸ்தலர் 5:1-11 |
| -பவுல்: | அப்போஸ்தலர் 27:13-44 |
| -பேதுரு: | அப்போஸ்தலர் 5:1-10; 8:23; 10:19 |
| -அனனியா: | அப்போஸ்தலர் 9:1-18 |

அனனியா பற்றிய இவ்வேத பகுதிகளை அவதானியுங்கள்:

| | |
|---|---|
| பவுல் எங்குள்ளார் என்பதை அறிந்தார்: | வசனம் 11 |
| அவர் ஜெபிக்கிறார் என்பதை அறிந்தார்: | வசனம் 11 |
| தரிசனம் காண்கிறார் என்பதை அறிந்தார்: | வசனம் 12 |
| தேர்ந்தெடுக்கப்பட்ட பாத்திரம் என்பதை அறிந்தார்: | வசனம் 15 |
| பாடுபட வேண்டும் என்பதை அறிந்தார்: | வசனம் 16 |
| அவர் சாட்சியிடுவார் என்பதை அறிந்தார்: | வசனம் 15 |

## சுய பரீட்சை:

١. திறவுகோள் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

٢. பேசும் வரங்கள் ஐந்தும் எவை?

------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------ ------------------------------

3. பேசும் வரங்கள் பற்றிய பட்டியலை முதலாம் பகுதியில் வாசியுங்கள். அதற்குரிய வரைவிலக்கணத்தை இரண்டாம் பட்டியலில் வாசியுங்கள். முதலாம் பகுதியில் கீறிட்ட இடத்தில், இரண்டாம் பட்டியலில் பொருத்தமான இலக்கத்தை எழுதுக.

| **பட்டியல் ஒன்று** | **பட்டியல் இரண்டு** |
|---|---|
| ................ புத்திசொல்லுதல் | 1. தேவனுடைய வார்த்தையை அவரது மக்களுக்கு விசேடமான செய்தியாக பேசுதல். |
| ................ தீர்க்கதரிசனம். | 2. ஆலோசனை கூறலும், தேற்றுதலும் |
| ................ ஞானத்தை போதிக்கும் வசனம் | 3. தேவனுடைய வார்த்தையை மற்றவர்களுக்கு கற்பிக்கும் திறன் |
| ................ போதித்தல் | 4. உள்ளுணர்வின்படி அறிவை அவசியம் ஏற்படின் பிரயோகித்தல் |
| ................ அறிவை உணர்த்தும் வசனம் | 5. முற்றவர்களின் காரியங்களை விளங்கிக்கொள்ளுதல், ஆவியானவரின் வெளிப்படுத்தல் இன்றி பகிர்ந்து கொள்ள முடியாது. |

4. சரியான பதிலில் வட்டமிட்டு வசனத்தை பூர்த்தி செய்யவும். விசுவாசிக்கு கொடுக்கப்படுகின்ற ஞானத்தை போதிக்கும் வசனம் அல்லது அறிவை உணர்த்தும் வசனம்......

அ. அவர் வாசித்ததை மீண்டும் வாசிப்பதற்கு.
ஆ. தேவன் அவர்களுக்கு சொல்ல விரும்புவதை சொல்லுவதற்கு யோசித்தல்.
இ. பரிசுத்த ஆவியானவரால் பேசும்படி கொடுக்கப்படுகின்றது.

5. சரியான பின்வரும் கூற்று சரியானதா அல்லது பிழையானதா? ஞானத்தை போதிக்கும் வசனமும், அறிவை உணர்த்தும் வசனமும் ஒரே வரமாகும். இக்கூற்று ...................................

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

அதிகாரம் எட்டு

# பரிசுத்த ஆவியானவருடைய ஊழிய வரங்கள்

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால் :

பரிசுத்த ஆவியானவருடைய ஒன்பது ஊழியங்களையும் அடையாளம் காண்பீர்கள்.
ஊழிய வரத்திற்கும், உதவும் வரத்திற்கும் உள்ள வேறுபாட்டை விபரிப்பீர்கள்.
நிர்வகிக்கும் வரத்திற்கும், தலைமைத்துவ வரத்திற்கும் உள்ள வேறுபாட்டை விபரிப்பீர்கள்.
விசுவாசத்திற்கும், விசுவாச கனிக்கும் உள்ள வேறுபாட்டை அடையாளம் காண்பீர்கள்.

## திறவுகோல் வசனம்:

**உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். (மாற்கு 10:44)**

## அறிமுகம்

ஒன்பது ஆவிக்குரிய வரங்கள் இருக்கின்றன, அவைகளை நாம் “ஊழிய வரங்கள்” என்றழைப்போம். இவ்வரங்கள் அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர் போன்ற விசேட தொழில்பாடுகளைக் கொண்டதல்ல. சபைக்கு முன்னின்று தேவனுடைய வசனத்தை பகிர்ந்தளிக்கும் பேசும் வரமும் அல்ல. சுவிசேஷத்தில் சத்தியத்தை உறுதிப்படுத்தக் கொடுக்கப்பட்ட அடையாள வரங்களாக இவைகள் இருக்கின்றன. (அடுத்த அதிகாரத்தில் கற்பீர்கள்).

இந்த ஒன்பது வரங்களும் “ஊழிய” வரமாக சபையை நிர்வகிக்கவும், ஆவிக்குரிய வாழ்க்கையில் பிரயோகிக்கின்ற பகுதிகளுக்கும் உதவுகின்றது. இந்த ஒன்பது வரங்களாவன:

-ஆவிகளை பகுத்தறிதல்
-தலைமைத்துவம்
-நிர்வகித்தல்
-விசுவாசம்
-கொடுத்தல்
-உதவிசெய்தல்
-ஊழியம் செய்தல்
-இரக்கம் காண்பித்தல்
-உபசரித்தல்

## ஆவிகளை பகுத்தறிதல்

**ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.**

**எப்படியெனில்.... வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும்... அளிக்கப்படுகிறது. (1 கொரிந்தியர் 12:7-10)**

அவிகளை பகுத்தறியும் திறமை என்பது மக்களை சோதித்தறியவும், உபதேசங்களை சோதித்தறியவும்,

தேவனுடையதா அல்லது சாத்தானுடையதா என்பதை சந்தர்ப்பத்திற்கேற்ப பகுத்தறிய உதவும். ஆவிகளை பகுத்தறியும் வரத்தை, குறை கூறுகின்ற ஆவியுடன் சேர்த்து குழப்பிக் கொள்ள கூடாது. இவ்வரம் ஆவிக்குரிய வரமாகும். ஆவிக்குரிய காரியங்களை எமது சாதாரண ஜென்ம சுபாவத்தால் நிதானிக்க முடியாது:

**ஜென்மசுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான். அவைகள் அவனுக்குப் பைத்தியமாகத் தோன்றும். அவைகள் ஆவிக்கேற்றபிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். (1 கொரிந்தியர் 2:14)**

ஆவிகளை பகுத்தறியும் இவ்வரம் எல்லைக்குட்பட்டது. இது பொதுவான காரியங்களை பகுத்தறியாது. இவ்வரம் சபையின் மக்களுக்கு சேவை செய்யும்படியாகவும், ஐக்கியத்துள் இருக்கின்ற பிளவுகளையும், பிழையான கொள்கைகளையும், உபதேசங்களையும், மனப்பான்மைகளையும் அடையாளம் காணும்படியாகவும் கொடுக்கப்பட்டு உள்ளது.

ஆவிகளை பகுத்தறியும் இவ்வரம் முக்கியமானது, ஏனென்றால் போராடும் எமது எதிரி, கண்ணுக்கு தெரியக்கூடியவன் அல்ல. அவைகளை ஆவிக்குரிய ரீதியிலேயே அடையாளம் காண முடியும்.

**ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. (எபேசியர் 6:12)**

சாத்தானால் பாவிக்கப்படுகின்ற தந்திரம் ஏமாற்றுதலாகும். இதனால் பகுத்தறிதல் மிக முக்கியமானதாக இருக்கின்றது.

**அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக்கொள்வானே.**

**ஆகையால் அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தைத் தரித்துக்கொண்டால் அது ஆச்சரியமல்லவே. அவர்கள் முடிவு அவர்கள் கிரியைகளுக்குத்தக்கதாயிருக்கும். (2 கொரிந்தியர் 11:14-15)**

நாம் கர்த்தராகிய இயேசுவின் வருகைக்கு சமீபமாகிவிட்டபடியால், ஏமாற்றும் ஆவிகளின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன:

**ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள். (1 தீமோத்தேயு 4:1)**

அப்போஸ்தலனாகிய பேதுரு எச்சரிக்கின்றார்:

**கள்ளத்தீர்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத்**

**தந்திரமாய் நுழையப்பண்ணி, தங்களைக் கிரயத்துக்குக்கொண்ட ஆண்டவரை மறுதலித்து, தங்களுக்குத் தீவிரமான அழிவை வருவித்துக்கொள்ளுவார்கள்.**

**அவர்களுடைய கெட்ட நடக்கைகளை அநேகர் பின்பற்றுவார்கள். அவர்கள் நிமித்தம் சத்தியமார்க்கம் தூஷிக்கப்படும். (2 பேதுரு 2:1-2)**

உங்களுக்கு ஆவிகளைப் பகுத்தறியும் வரம் இல்லையென்றால் நீங்கள் தற்பாதுகாப்பை இழந்து விடுவீர்கள். தேவன் ஆவிகளை சோதித்தறிய ஒரேயொரு வழியையே கொடுத்துள்ளார். இந்த பெறுமதிமிக்க சோதனையை ஆவிகளை பகுத்தறியும் வரத்தினால் அன்றி வேறெவற்றினாலும் செய்ய முடியாது:

**பிரியமானவர்களே, உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால், நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளோ என்று சோதித்தறியுங்கள்.**

**தேவஆவியை நீங்கள் எதினால் அறியலாமென்றால்: மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணுகிற எந்த ஆவியும் தேவனால் உண்டாயிருக்கிறது.**

**மாம்சத்தில் வந்த இயேசுகிறிஸ்துவை அறிக்கைபண்ணாத எந்த ஆவியும் தேவனால் உண்டானதல்ல. வருமென்று நீங்கள் கேள்விப்பட்ட அந்திகிறிஸ்துவினுடைய ஆவி அதுவே, அது இப்பொழுதும் உலகத்தில் இருக்கிறது. (1 யோவான் 4:1-3)**

நீங்கள் உங்கள் ஆவிக்குரிய புலன்களினால் நல்லதையும், கெட்டதையும் பகுத்தறியலாம் என கற்றீர்கள்.ஆவிக்குரிய புலன்கள் தேவனுடைய வார்த்தையை கற்பதினால் அபிவிருத்தியடைகின்றது:

**பாலுண்கிறவன் குழந்தையாயிருக்கிறபடியினாலே நீதியின் வசனத்தில் பழக்கமில்லாதவனாயிருக்கிறான்.**

**புலமான ஆகாரமானது நன்மை தீமையின்னதென்று பயிற்சியினால் பகுத்தறியத்தக்கதாக முயற்சிசெய்யும் ஞானேந்திரியங்களையுடையவர்களாகிய பூரண வயதுள்ளவர்களுக்கே தகும். (எபிரெயர் 5:13-14)**

## மேலதிக படிப்பினைக்கு:

பின்வரும் வசனங்கள் ஆவிகளை பகுத்தறியும் வரத்திற்கு உதாரணமாக பாவிக்கப்பட்டுள்ளது:

-இயேசு: மத்தேயு 16:21-23; யோவான் 1:47; லூக்கா 9:55
-பவுல்: அப்போஸ்தலர் 13:6-12; 16:16-18
-பேதுரு: அப்போஸ்தலர் 5:1-11; 8:18-24

(அப்போஸ்தலர் 8:18-24ல் ஆவிகளை பகுத்தறியும் வரம் பாவிக்கப்பட்டதின், திட்டமிடப்பட்ட பதிலின் விளைவா?)

## தலைமைத்துவம்

**நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான**

**படியினாலே... முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன்... (ரோமர் 12:6,8)**

இந்த ஆவிக்குரிய தலைமைத்துவ வரமானது தேவ நோக்குக்கு பொருத்தமான இலக்குகளை கண்டடையும்படியும், தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்கின்ற ஒரு திறமையாகும். இவ்வரத்தை கொண்டுள்ள ஒருவர், கொள்கைகளை அறிவித்து அதற்கமைய மற்ற மக்களையும் சேர்த்து தேவனுடைய மகிமைக்காக உழைப்பார்.

தலைமைத்துவம் பற்றி ரோமர் 12ல் குறிப்பிடப்பட்டுள்ளது, இவ்வரத்தின் தராதரம், சிரத்தையுடன் செயலாற்றுவதாகும். சிரத்தை என்பது கவனத்துடன் கையாளுதல், பொறுப்பை நன்றாக செய்து காண்பித்தலாகும். கஷ்டப்பட்டு வேலை செய்தல், ஜாக்கிரதையாக இருத்தல், பாதுகாத்தல் என்று அர்த்தத்தை தரும்.

தலைமைத்துவ வரமுள்ளவன் தனது சொந்த குடுத்பத்தை சிறப்பாக வழிநடத்த வேண்டும்:

**ஒருவன் தன் சொந்தக் குடும்பத்தை நடத்த அறியாதிருந்தால், தேவனுடைய சபையை எப்படி விசாரிப்பான்? (1 தீமோத்தேயு 3:5)**

இது நிர்வகிக்கும் வரத்தை போன்று முக்கியமானது என்பது உண்மையே.

விசுவாசிகளும், சபையின் தலைவர்களை மதிக்கின்றவர்களாக இருக்க வேண்டும்:

**அன்றியும், சகோதரரே, உங்களுக்குள்ளே பிரயாசப்பட்டு, கர்த்தருக்குள் உங்களை விசாரணைசெய்கிறவர்களாயிருந்து, உங்களுக்குப் புத்திசொல்லுகிறவர்களை நீங்கள் மதித்து,**

**அவர்களுடைய கிரியையினிமித்தம் அவர்களை மிகவும் அன்பாய் எண்ணிக்கொள்ளும்படி உங்களை வேண்டிக்கொள்ளுகிறோம். (1 தெசலோனிக்கேயர் 5:12-13)**

நாம் கூறுவது யாதெனில்:

**உங்களை நடத்துகிறவர்கள், உங்கள் ஆத்துமாக்களுக்காக உத்தரவாதம் பண்ணுகிறவர்களாய் விழித்திருக்கிறவர்களானபடியால், அவர்கள் துக்கத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே அதைச் செய்யும்படி, அவர்களுக்குக் கீழ்ப்படிந்து அடங்குங்கள். அவர்கள் துக்கத்தோடே அப்படிச் செய்தால் அது உங்களுக்குப் பிரயோஜனமாயிருக்கமாட்டாதே. (எபிரெயர் 13:17)**

## மேலதிக படிப்பினைக்கு:

மோசே, யோசுவா, தாவீது போன்றோர் தலைசிறந்த தலைவர்களாக இருக்கின்றனர். மோசேயைப்பற்றிய கதையை யாத்திராகமம் முதல் உபாகமம் வரையும் காணலாம். யோசுவாவின் புத்தகம் யோசுவாவின் புத்தகம் கொண்டுள்ளது. தாவீதைப்பற்றி 1 மற்றும் 2 சாமுவேல் புத்தகங்களில் வாசிக்கலாம்.

வேறு தலைவர்கள்:

-நேகேமியா: நெகேமியாவின் புத்தகம்
-எஸ்றா: எஸ்றாவின் புத்தகம்

-பேதுரு: அப்போஸ்தலர் நடபடிக்கை

## நிர்வகித்தல்

**தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார். (1 கொரிந்தியர் 12:28)**

வேதாகமத்தில் நிர்வகிக்கும் இவ்வரமானது "ஆளுகைகள்" என்றழைக்கப்படுகிறது. திறமையுள்ள ஒரு மனிதன் மற்றவர்கள் வழிநடத்தும், கட்டமைப்பை ஆரம்பித்து செயல்படுத்தும், தீர்மானம் எடுக்கும் வரத்தைக் கொண்டிருப்பார். நிர்வகித்தல் என்ற வார்த்தையை கப்பலின் மாலுமியுடன் சமப்படுத்தி அர்த்தம் கற்பிக்கலாம். இவ்வார்த்தையே வேதாகமத்தில் பாவிக்கப்பட்டுள்ளது:

**சீதோன் அர்வாத் என்னும் பட்டணங்களின் குடிகள் உனக்குத் தண்டு வலிக்கிறவர்களாயிருந்தார்கள். தீருவே, உன்னிடத்திலிருந்த உன்சாஸ்திரிகள் உன் மாலுமிகளாயிருந்தார்கள். (எசேக்கியேல் 27:8)**

இவ்வரத்தை கொண்டவர் வழிகாட்டும், தீர்மானத்தை எடுக்கும் உத்தரவாதத்தை கொண்டிருப்பார். மாலுமி கப்பல் சொந்தகாரன் அல்ல, ஆனால் அவனது உத்தரவாதத்தை நம்பிக்கையுடனும் வழிகாட்டலின்படியும் கடற்பிரயாணத்தை மேற்கொண்டு நிறைவேற்ற வேண்டும்.

ஆவிக்குரிய இலக்குகளை கண்டடைவதற்கு தலைமைத்துவ நிர்வகிக்கும் வரங்கள் இரண்டும் ஒரு கட்டமைப்பை ஏற்படுத்துவதற்கு அவசியமாகின்றது. ஒரு விசுவாசி இவ்விரண்டு வரங்களையும் கொண்டவர்களாக இருக்கலாம். ஒருவருக்கு நிர்வகிக்கும் வரமிருந்து, தலைமைத்துவ வரம் இல்லாதிருந்தால் ஒன்றிணைந்து வேலை செய்யும்படிக்கு இவ்வரம் உள்ள ஒருவர் அவருக்கு தேவைப்படுவார்.

நிர்வகிக்கின்ற திறமையுள்ள ஒருவரால் வழிகாட்டவும், அமைப்பை ஏற்படுத்தவும், தீர்மானம் எடுக்கக்கூடியவராகவும் இருப்பார். அவருக்கு தலைமைத்துவ வரம் இல்லாதிருந்தால் மற்றவர்களோடு சேர்ந்து இலக்கை நிறைவேற்றும் திறமை இவருக்கு இருக்காது.

மேய்ப்பர்களுக்கும், போதகர்களுக்கும் ஆவிக்குரிய தலைமைத்துவ வரம் இருக்கும். ஆவிக்குரிய இலக்குகளை கண்டடையும்படிக்கு அவரால் மக்களுடன் செயலாற்ற முடியும். ஆனால் இவர்களில் அநேகருக்கு நிர்வகிக்கும் திறமை இருப்பதில்லை. ஆதனால் அவர்கள் அமைப்பை ஏற்பாடு செய்வதில் தவறிழைத்து இலக்கை அடைய முடியாதிருக்கின்றனர்.

தீத்துவுக்கும், பவுலுக்கும் இருந்த உறவினால் எவ்விதம் நிர்வாக வரம் கிரியை செய்தது என்பதை காணலாம். மற்ற வரங்கள் யாவற்றிலும் பார்க்கிலும், பவுலுக்கு விஷேட தலைமைத்துவ வரமான அப்போஸ்தல வரம் இருந்தது. ஆவன் அவன் கீரேத்தாதீவிலே சபையை கட்டியெழுப்பினான்:

**உத்தம குமாரனாகிய தீத்துவுக்கு..... நீ குறைவாயிருக்கிறவைகளை ஒழுங்குபடுத்தும் படிக்கும், நான் உனக்குக் கட்டளையிட்டபடியே, பட்டணங்கள்தோறும் மூப்பரை ஏற்படுத்தும்படிக்கும், உன்னைக் கீரேத்தாதீவிலே விட்டுவந்தேனே. (தீத்து 1:5)**

பவுல் தீத்துவை, கிரேத்தா தீவிலுள்ள சபைகளுக்கு நிர்வாகியாக வைத்தார். பவுலுக்கு சபைகளின் மேல் இன்னும் அதிகாரம் இருந்தது. தீத்து நிர்வாகியாக இருந்து இவரது வழிகாட்டலின்படி செயல்பட வேண்டும். இந்த வேத பகுதியின் அடிப்படையில் அவர் மற்ற விசுவாசிகளுக்கு தலைமைத்துவ பயிற்சிகளை கொடுப்பது இவரது வேலைகளில் ஒன்றாகும்.

## மேலதிக படிப்பினைக்கு:

அப்போஸ்தலர் 6:1-7 வரையிலுமுள்ள பிரச்சனை பற்றி வாசியுங்கள். பிரச்சனை என்ன? தலைமைத்துவ வரத்தை பாவித்தது யார்? நிர்வகிக்கின்ற வரமுள்ளவர்கள் யார்?

லூக்கா 14:28-30 வாசிக்கவும். திட்டமிடுதலினதும் கட்டமைப்பினதும் பெறுமதியை அவதானிக்கவும். இது நிர்வகித்தலுக்கு சிறந்த உதாரணமாக இருக்கிறது.

யோசேப்பின் வாழ்வைபற்றி ஆதியாகமம் 37-50 வரையும் படியுங்கள். யோசேப்புக்கு நிர்வாக திறமை இருந்தது. அவர் எகிப்தை பார்வோனுக்காக வழி நடத்தினார்கள். அப்போஸ்தலர் 7:9-10ஐயும் கவனியுங்கள்.

## விசுவாசம்

**ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.**

**வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும்...... (1 கொரிந்தியர் 12:7-9)**

ஒருவனுக்கு விசுவாசம் இருப்பின், கஷ்டமான சூழ்நிலையிலும் அவன் தேவனை நம்புவான், அவனுக்கு இயற்கைக்கு அப்பாற்பட்ட விசுவாசம் இருக்கும். விஷேட தேவைகளை சந்திக்க விசேட வரம் இருக்கும். தேவனால் சகலவற்றை செய்து முடிக்க முடியும் என அறிந்திருப்பான். தன்னைச் சுற்றிலுமிருக்கின்ற, விசுவாசமற்ற விசுவாசிகளின் மத்தியிலும் தனது விசுவாசத்தை அப்பியாசப்படுத்துவான். வேதாகமம் விசுவாசத்திற்கு கொடுக்கின்ற வரைவிலக்கணமாவது:

**விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. (எபிரெயர் 11:1)**

ஆங்கில Amplified Bible இவ்விதமான வரைவிலக்கணத்தை கொடுக்கின்றது:

**விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. (எபிரெயர் 11:1)**

விசுவாசமானது, வாக்குப்பண்ணப்பட்டவைகளுக்கு நம்பிக்கையையும், எதிர்காலத்திற்கு நிச்சயத்தையும், காணாதவற்றிற்கு உறுதியையும் கொடுக்கிறது.

பலவிதமான விசுவாசம் உண்டு. சாதாரண விசுவாசம், சந்தேகப்படாமல் உறுதியுடன் இருக்கும்.வேதாகமம் பரிசுத்த விசுவாசத்தை பற்றியும் (கலாத்தியர் 2:20), பாதுகாக்கும் விசுவாசத்தைப் பற்றியும் (எபேசியர் 6:16), ஊழியம் செய்யும் விசுவாசத்தைப்பற்றியும் பேசுகின்றது (ரோமர் 5:1).

விசுவாசம் பல மட்டங்களிலும் இருக்கின்றது என வேதாகமம் வெளிப்படுத்துகின்றது. விசுவாசிக்க வேண்டிய வேளையில் விசுவாசமற்று இருந்த மக்களிடம் இயேசு பேசினார் (மத்தேயு 17:17). அவர்

அவர்களிடம் சிறிய விசுவாசத்தை பற்றியும் (மத்தேயு 6:30; 8:26; 14:31; லூக்கா 12:28) பெரிதான விசுவாசத்தைப் பற்றியும் (மத்தேயு 8:10; 15:28; லூக்கா 7:9) பேசினார்.

எல்லா மனிதருக்கும் குறிப்பிட்டளவு விசுவாசம் வரமாக தேவனால் கொடுக்கப்பட்டுள்ளதாக வேதாகமம் போதிக்கின்றது (ரோமர் 12:3). விசுவாசத்தினால் ஊழியம் செய்ய வேண்டும் என்றும் (எபேசியர் 2:8) போதிக்கிறது. விசுவாச வரமானது வாழ்வின் எப்பகுதியிலும் தேவனை நம்புகின்ற திறமையை கொண்டிருக்கும். இந்த விசுவாசம் ஆகாதது ஒன்றும் இல்லை என்று அறிந்திருக்கும். இவ்விசுவாசம் தேவனால் என்ன செய்ய முடியும் என அவரை கட்டுப்படுத்தாது.

**விசுவாச வரம் யாருக்கெல்லாம் இல்லையோ, வேதாகமம் விசுவாச வரத்தை எவ்வாறு அதிகரிக்கலாம் என கூறுகின்றதாவது:**

**ஆதலால் விசுவாசம் கேள்வியினாலேவரும், கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். (ரோமர் 10:17)**

கலாத்தியர் 5:22லும் விசுவாசம் குறிப்பிடப்படுகின்றது. பரிசுத்த ஆவியானவருடைய கனியாக காணப்படுகிறது. விசுவாசம் ஆவிக்குரிய வரமாக வல்லமையுடன் வெளிப்படுகின்றது. கனியாக வெளிப்படும் போது குணாதிசயமாக காணப்படுகிறது. விசுவாச வரம் கிரியை நடப்பிக்கும். நடைபெற முடியாத காரியத்திற்கும் விசுவாசத்துடன் முகங் கொடுத்து கிரியை செய்யும் திறமை இதற்குண்டு.விசுவாச கனியானது மனப்பாங்குடன் தொடர்புபட்டது. இது ஆவிக்குரிய வளர்ச்சியின் அடிப்படையில் அபிவிருத்தி செய்யப்படும் பௌதீக உலகின் வளர்ச்சி பெறும் தன்மை இருப்பது போன்று இதுவம் வளர்ச்சி பெறும்.

## மேலதிக படிப்பினைக்கு:

எபிரெயர் 11ம் அதிகாரத்தை படியுங்கள். பேரிதான விசுவாசமுள்ளவர்களின் உதாரணங்களை இந்த அதிகாரம் தருகின்றது.இந்த மக்கள் விசுவாசத்தினால் எதனை சாதித்தனர் என்பதற்கான பட்டியலை தயாரியுங்கள்.

-ஆபிரகாம் விசுவாசமுள்ளவன் என அழைக்கப்பட்டான்: ரோமர் 4:16-21; எபிரெயர் 11:18-19
-ஸ்தேவானுக்கும் விசுவாசம் வெளிப்படையாக இருந்தது: அப்போஸ்தலர் 6:5-8
-பர்னபாவிற்கும் இது சாத்தியமாகவிருந்தது: அப்போஸ்தலர் 11:22-24
-பவுல் உன்னத விசுவாசத்தை நிரூபித்தார்: அப்போஸ்தலர் 27.
-விசுவாசத்தினால் எல்லாம் கூடும் என்று வலியுறுத்தப்படுகின்றது: 1 கொரிந்தியர் 13:2

## கொடுத்தல்

**நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான படியினாலே, பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன். (ரோமர் 12:6,8)**

ஒருவனுக்கு கொடுக்கும் வரம் இருந்தால், அவன் கர்த்தருடைய வேலைக்காக, உலக பொருட்களையும், பொருளாதார உதவிகளையும் செய்யும் ஆற்றல் கொண்டவனாக இருப்பான். அவன் வாஞ்சையுடனும், சந்தோஷத்துடனும் கொடுப்பான்.கொடுக்கும் வரமுள்ளவன் கர்த்தருக்காக நேரத்தையும், பெலனையும், தாலந்துகளையும் கூட கொடுப்பான்.கொடுக்கும் வரமுள்ள ஒருவனிடம் இன்றியமையாத தேவையைச்

சொன்னால் அவன் அதை எளிமையுடன் ஏற்றுச் செயல்படுவான். இங்கே எளிமை என்ற சொல் விடுதலையோடு என்ற அர்த்தப்பட பாவிக்கப்படுகின்றது.

சகல விசுவாசிகளும் கர்த்தருடைய வேலைக்காக கொடுக்க வேண்டும்:

> **அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன். உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார். (2 கொரிந்தியர் 9:7)**

சகல விசுவாசிக சகல விசுவாசிகளும் தங்களுடைய வருமானத்திலிருந்து தசமபாகத்தை கொடுக்க வேண்டும்.சம்பாதித்ததில் 10 வீதம் தசமபாகம் விசுவாசிகள் கொடுக்க வேண்டும். விசுவாசிகள் தசம பாகத்தையும், காணிக்கையையும் கொடுக்காவிட்டால் அவர்கள் தேவனுடையதை கொள்ளையிடுகின்றனர்.

> **மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள். எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே. (மல்கியா 3:8)**

தங்களுடைய வருமானத்திலிருந்து தசமபாகத்தை கொடுப்போருக்கு ஆசீர்வாதத்தை தேவன் வாக்கு பண்ணியுள்ளார்:

> **என் ஆலயத்தில் ஆகாரம் உண்டாயிருக்கும்படித் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள். அப்பொழுது நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து, இடங்கொள்ளாமற்போகுமட்டும் உங்கள்மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கமாட்டேனோவென்று அதினால் என்னைச் சோதித்துப் பாருங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.**
>
> **பூமியின் கனியைப் பட்சித்துப்போடுகிறவைகளை உங்கள் நிமித்தம் கண்டிப்பேன். அவைகள் உங்கள் நிலத்தின் பலனை அழிப்பதில்லை, வெளியிலுள்ள திராட்சக்கொடி பழமில்லாமற்போவதுமில்லை என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.**
>
> **அப்பொழுது எல்லா ஜாதிகளும் உங்களைப் பாக்கியவான்கள் என்பார்கள். தேசம் விரும்பப்படத்தக்கதாயிருக்கும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (மல்கியா 3:10-12)**

இவ்வசனத்தின்படி கொடுக்கின்றவர்களுக்கான வாக்குத்தத்தமாவது:

1. இடங்கொள்ளாமற்போகும் மட்டும், தேவனுடைய ஆசீர்வாதம் கிடைக்கும். வசனம் 10
2. வருமானத்தை கொடுக்கின்ற வேலை ஆசீர்வதிக்கப்படும். வசனம் 11
3. ஜாதிகளுக்குள்ளே அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டு இருப்பார்கள். வசனம் 12
4. அவர்களுடைய சொந்த தேசம் (நிலம்) ஆசீர்வதிக்கப்படும். வசனம் 12

நீங்கள் கொடுக்கின்ற அளவிற்கு தக்கதாக தேவன் உங்களுடைய பொருளாதாரத்தையும் அசீர்வதிப்பார். கர்த்தருடைய வேலைக்காக நீங்கள் நிதி உதவிகளை செய்கிறபோது, அவர் உங்களுடைய தேவைகளை சந்திப்பார்:

**பின்னும் நான் சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான், பெருக விதைக்கிறவன் பெருக அறுப்பான்.**

**மேலும், நீங்கள் எல்லாவற்றிலும் எப்பொழுதும் சம்பூரணமுடையவர்களாயும், சகலவித நற்கிரியைகளிலும் பெருகுகிறவர்களாயுமிருக்கும்படியாக, தேவன் உங்களிடத்தில் சகலவித கிருபையையும் பெருகச்செய்ய வல்லவராயிருக்கிறார். (2 கொரிந்தியர் 9:6,8)**

இயேசுவும் வாக்குப்பண்ணியுள்ளார்:

**கொடுங்கள், அப்பொழுது உங்களுக்கும் கொடுக்கப்படும். அமுக்கிக் குலுக்கிச் சரிந்து விழும்படி நன்றாய் அளந்து, உங்கள் மடியிலே போடுவார்கள். நீங்கள் எந்த அளவினால் அளக்கிறீர்களோ அந்த அளவினால் உங்களுக்கும் அளக்கப்படும் என்றார். (லூக்கா 6:38)**

நீங்கள் தாராளமாக பெற்றுள்ள பணத்தை அல்லது பொருட்களை எபேசியரில் விபரிக்கப்பட்டுள்ளதை போன்று கொடுங்கள்:

**திருடுகிறவன் இனித் திருடாமல், குறைச்சலுள்ளவனுக்குக் கொடுக்கத்தக்கதாகத் தனக்கு உண்டாயிருக்கும்படி, தன் கைகளினால் நலமான வேலைசெய்து, பிரயாசப்படக்கடவன். (எபேசியர் 4:28)**

பிலிப்பிய விசுவாசிகள் கொடுத்த படியால் பவுல் பாராட்டினார்:

**உங்களால் அனுப்பப்பட்டவைகளைச் சுகந்த வாசனையும் தேவனுக்குப் பிரியமான உகந்த பலியுமாக..... நான் திருப்தியடைந்திருக்கிறேன். (பிலிப்பியர் 4:18)**

அவர்களுடைய நன்கொடைகள் தேவனுக்கு முன் பிரியமான உகந்தபலி என குறிப்பிடுகிறார். இதைக் கொடுத்த விசுவாசிகளுக்கு அவர் கூறியதாவது:

**என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார். (பிலிப்பியர் 4:19)**

இந்த வாக்குத்தத்தங்கள் யாவும் கர்த்தருடைய வேலைக்காக கொடுத்தவர்களுக்கே உரியது. எல்லா விசுவாசிகளும் கொடுப்பதினால் தேவ அசீர்வாதத்தை பெறுவார்கள் என்பதையும், கொடுக்கும் வரம் பெற்ற ஒருவர் கர்த்தருக்காக மகிழ்ச்சியுடன் கொடுப்பார் என்பதையும், விசேட ஆவிக்குரிய நோக்குடன் கொடுக்க வேண்டும் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள்.

## மேலதிக படிப்பினைக்கு:

பின்வரும் வேதாகம உதாரணங்களில், மக்கள் கர்த்தருக்காக கொடுக்க உற்சாகமான திறமையை கொண்டிருந்தார்கள். ஆவிக்குரிய கொடுக்கும் வரம் இருந்தாலே இது சாத்தியமாகும்:

| | |
|---|---|
| -விதவை: | மாற்கு 12:41-44; லூக்கா 21:1-4 |
| -மரியாள்: | யோவான் 12:3-8 |
| -கலாத்திய சபை: | கலாத்தியர் 4:15 |
| -பிலிப்பிய சபை: | பிலிப்பியர் 4:10-18 |
| -மக்கதோனிய சபை: | 2 கொரிந்தியர் 8:1-7 |

கொடுக்கின்றதை எவ்விதமான மனப்பாங்குடன் கொடுக்க வேண்டும்? மத்தேயு 6:3; எபேசியர் 4:28; 1 கொரிந்தியர் 13:3.

## உதவி செய்தல்

**தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார். (1 கொரிந்தியர் 12:28)**

உதவி செய்யும் வரம் பெற்ற ஒருவர் கர்த்தருடைய வேலை செய்யும் மற்றவர்களுக்கு, அவர்களுடைய ஆவிக்குரிய வரங்கள் சிறப்பாக அபிவிருத்தி செய்யப்பட்டு பாவிக்கப்பட உதவும் ஆற்றல் கொண்டவராக இருப்பார். இசைகருவிகளை வாசிப்போர் அல்லது வேறு சபை காரியங்களை அல்லது ஊழியங்களை செய்வோருக்கும் உதவி செய்வார். பவுல் பெபேயாள் என்ற பெண்ணை ரோமாபுரிக்கு அனுப்பி வைத்த பின், அங்குள்ள விசுவாசிகளுக்கு, அவளுக்கு உதவி செய்யும் படி வேண்டிக் கொள்கின்றார்:

**கெங்கிரேயா ஊர் சபைக்கு ஊழியக்காரியாகிய நம்முடைய சகோதரி பெபேயாளை நீங்கள் கர்த்தருக்குள் பரிசுத்தவான்களுக்கேற்றபடி ஏற்றுக்கொண்டு,**

**எந்தக் காரியத்தில் உங்கள் உதவி அவளுக்குத் தேவையாயிருக்கிறதோ அதிலே நீங்கள் அவளுக்கு உதவிசெய்யவேண்டுமென்று அவளை உங்களிடத்தில் ஒப்புவிக்கிறேன். அவள் அநேகருக்கும் எனக்குங்கூட ஆதரவாயிருந்தவள். (ரோமர் 16:1-2)**

பிரிஸ்கில்லாவும், ஆக்கில்லாவும் பவுலை சேவித்தனர், உதவி செய்யும் வரத்தை கொண்டிருந்தமையினாலேயே என பவுல் எழுதுகின்றார்:

**கிறிஸ்து இயேசுவுக்குள் என் உடன் வேலையாட்களாகிய பிரிஸ்கில்லாளையும் ஆக்கில்லாவையும் வாழ்த்துங்கள். (ரோமர் 16:3)**

உதவி செய்யும் வரம், எவ்வேலைக்கும் தேவையுள்ள யாருக்கும் உதவும். அவ்வரம் வேலையாள் செய்வதைப்போன்று செயல்படும்.

### மேலதிக படிப்பினைக்கு:

-தபீத்தாள் (தொற்காள்) உதவி செய்யும் வரத்தை கொண்டவள்: அப்போஸ்தலர் 9:36
-இயேசுவின் ஊழியத்தால் குணமான ஸ்திரி: மாற்கு 15:40-41
-உதவி செய்தல் உத்தரவாதமாக கொடுக்கப்பட்டது: யாத்திராகமம் 18:22; எண்ணாகமம் 11:17
-பெலவீனருக்கு உதவி அவசியம்: அப்போஸ்தலர் 20:35

## ஊழியம் செய்தல்

**நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான படியினாலே... ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும், (ரோமர் 12:6-7)**

“ஊழியம் செய்தல்” என்ற சொல்லின் அர்த்தம் சேவை செய்தலாகும். ஊழியம் செய்யும் வரம், கர்த்தர் செய்தது போன்று கிரியையிலும் காட்டும் திறமையை கொண்டது. ஒருவர் ஊழியம் செய்து மற்றவருக்கு உதவுவதோடு ஆவிக்குரிய இலக்குகளை கண்டடைய, வழக்கமான பணிவிடைகளையும் செய்வார்.

Amplified வேதாகமத்தின் மொழிப்பெயர்ப்பில்:

**ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும்... (ரோமர் 12:6-7)**

ஊழியம் செய்வதற்கும் உதவி செய்வதற்கும் உள்ள வேறுபாடு யாதெனில், ஒருவருடைய வேலைப்பளுவை குறைத்தலாகும். ஒருவர் ஊழியம் செய்தால் தனது உத்தரவாதத்தை செய்வதோடு மற்றவர்களுக்காக தன்னுடைய வரத்தையும் பாவிப்பார் என கருத வேண்டும்.

உதவி செய்யும் வரமுள்ள ஒருவர் மற்றவருடைய ஊழியத்திற்கும் உதவுவார். உதாரணமாக சபையிலுள்ள இசைக்கருவியை வாசிக்கிறவர், போதகர் ஆவிக்குரிய இலக்கை கண்டடைய சபை ஆராதனையில் இசை கருவிகளை இசைப்பார். அவருடைய வேலை பளு குறைக்கப்படாமல், ஆராதனையில் அவரது உதவும் வரம் ஆவிக்குரிய குறிக்கோள்களுக்காக உத்தரவாதத்துடன் பாவிக்கப்படுகின்றது.

இன்னொரு விதத்தில், ஒருவருடைய ஊழியம் செய்யும் வரமானது, சபையாரில் தேவையுள்ளோருக்கு ஆகார பரிமாறலில் போதகருக்கு இருக்கின்ற வேலைப்பளுவை குறைக்கின்றது. உதாரணமாக ஆதித்திருச்சபையில் சில விசுவாசிகள் “பந்தி விசாரிப்பு காரராக” நியமிக்கப்பட்டார்கள், அப்போஸ்தலர்கள் ஆவிக்குரிய வேலைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்தனர் என்பதை காண முடிகின்றது:

**அந்நாட்களிலே, சீஷர்கள் பெருகினபோது, கிரேக்கரானவர்கள், தங்கள் விதவைகள் அன்றாட விசாரணையில் திட்டமாய் விசாரிக்கப்படவில்லையென்று, எபிரெயருக்கு விரோதமாய் முறுமுறுத்தார்கள்.**

**அப்பொழுது பன்னிருவரும் சீஷர் கூட்டத்தை வரவழைத்து: நாங்கள் தேவவசனத்தைப் போதியாமல், பந்திவிசாரணைசெய்வது தகுதியல்ல.**

**ஆதலால் சகோதரரே, பரிசுத்தஆவியும் ஞானமும் நிறைந்து, நற்சாட்சி பெற்றிருக்கிற ஏழுபேரை உங்களில் தெரிந்துகொள்ளுங்கள். அவர்களை இந்த வேலைக்காக ஏற்படுத்துவோம்.**

**நாங்களோ ஜெபம்பண்ணுவதிலும் தேவவசனத்தைப் போதிக்கிற ஊழியத்திலும் இடைவிடாமல் தரித்திருப்போம் என்றார்கள். (அப்போஸ்தலர் 6:1-4)**

இனுெ ஊழியம் செய்கின்றவர்களின் தராதரத்தை அவதானிக்கவும். அவர்கள் நேர்மையாலும், ஆவியினாலும், ஞானத்தினாலும் நிறைந்தவர்களாயிருக்க வேண்டும். ஊழியம் செய்கின்றவர்களுக்கு பவுல் கூறுகின்றதாவது:

**ஓநேசிப்போருவின் வீட்டாருக்குக் கர்த்தர் இரக்கங் கட்டளையிடுவாராக. அவன் அநேகந்தரம் என்னை இளைப்பாற்றினான். என் விலங்கைக்குறித்து அவன் வெட்கப்படவுமில்லை:**

**அவன் ரோமாவில் வந்திருந்தபோது அதிக ஜாக்கிரதையாய் என்னைத் தேடிக் கண்டுபிடித்தான்.**

**அந்நாளிலே அவன் கர்த்தரிடத்தில் இரக்கத்தைக் கண்டடையும்படி, கர்த்தர் அவனுக்கு அனுக்கிரகஞ்செய்வாராக. அவன் எபேசுவிலே செய்த பற்பல உதவிகளையும் நீ நன்றாய் அறிந்திருக்கிறாயே. (2 தீமோத்தேயு 1:16-18)**

ஊழியம் செய்கின்ற வரத்தை கொண்டவர் மற்றவர்களின் பாவத்தை சுமக்க ஆயத்தமாயிருப்பார்:

**ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து, இப்படியே கிறிஸ்துவினுடைய பிரமாணத்தை நிறைவேற்றுங்கள். (கலாத்தியர் 6:2)**

ஊழியம் செய்கின்றவனுக்கு இருக்க வேண்டிய மனப்பாங்கை இயேசு வர்ணிக்கின்றபோது:

**அவர் அவர்களை நோக்கி: புறஜாதியாரின் ராஜாக்கள் அவர்களை ஆளுகிறார்கள். அவர்கள்மேல் அதிகாரம் செலுத்துகிறவர்களும் உபகாரிகள் என்னப்படுகிறார்கள்.**

**உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது. உங்களில் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப்போலவும் இருக்கக்கடவன்.**

**பந்தியிருக்கிறவனோ, பணிவிடை செய்கிறவனோ, எவன் பெரியவன்? பந்தியிருக்கிறவன் அல்லவா? அப்படியிருந்தும், நான் உங்கள் நடுவிலே பணிவிடைக்காரனைப்போல் இருக்கிறேன். (லூக்கா 22:25-27)**

## மேலதிக படிப்பினைக்கு:

ஊழிய வரத்திற்கான உதாரணம்:

| | |
|---|---|
| -தேவதூதர்கள் | எபிரெயர் 1:14; 4:11; மாற்கு 1:13 |
| -வேலை செய்தல் அல்லது உணவுக்காக காத்திருத்தல்: | யோவான் 2:5,9; லூக்கா 10:40 |

## இருக்கங் காட்டுதல்

**நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களான படியினாலே... இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன். (ரோமர் 12:6,8)**

"இரக்கம்" என்பதின் அர்த்தம் "கருணை காட்டுதல்" என்பதாகும். இவ்வுணர்வை நீங்கள் மற்றவர்களுக்காக உணர முடியும். இரக்கம் காட்டும் வரத்தைக் கொண்டவர், வேதனைபடுபவர்களுக்கு கருணை காட்டி உதவி செய்யும் திறமையை கொண்டிருப்பார்கள்.

இரக்கம் காட்டும் வரம், கிரியையில் காண்பிக்கின்ற குணாதிசயத்தைக் கொண்டது. நல்ல சமாரியனின் கதை இதையே காண்பிக்கின்றது, இக்கதை லூக்கா 10:30-37ல் பதிவு செய்யப்பட்டுள்ளது.நல்ல சமாரியனுக்கு, கள்ளர்களின் தாக்குதலுக்குட்பட்டவன் மேல் இரக்கம் ஏற்பட்டது மட்டுமின்றி, அதை கிரியையில் போட்டு உதவியும் செய்தான்.

இவ்வரம் தாராள மனப்பான்மையுடன் உற்சாகமாய் ஊழியத்தை நிறைவேற்றும். ஊற்சாகம் என்று கூறும் போது, மகிழ்வுடன் உடனடியாகவே எக்காரியத்தையும், வேதனைப்படுவோருக்கு செய்ய ஆயத்தமாயிருத்தல் எனப்படும்.

பின்வரும் சம்பவங்களின் உதாரணங்களுக்கு இயேசுவும் அவரது சீடர்களும் எவ்விதமாக இரக்கத்தை காண்பித்தனர் என்பதை ஒப்பிட்டு பார்க்கவும்:

| **வசனம்** | **இயேசு** | **சீஷர்கள்** |
|---|---|---|
| மத்தேயு 15:23-28 கானானிய பெண் | மகளை குணமாக்கினார் | அனுப்பப்பட்டார்கள் |
| மாற்கு 8:1-9 திரளானமானோர் | போஷித்தார் | அனுப்பப்பட்டார்கள் |
| மத்தேயு 20:31-34 குருடர்கள் | குணமாக்கினார் | சத்தமிடாதிருக்க முயற்சித்தனர் |
| மாற்கு 10:48-49 குருடனாகிய பர்தலேமேயு | குணமாக்கினார் | சத்தமிடாதிருக்க முயற்சித்தனர் |

## மேலதிக படிப்பினைக்கு:

இந்த இரக்கத்தின் வரத்தை காண்பிக்கும் உவமைகளை கவனியுங்கள்:

-இயேசு குணமாக்குதலோடு சம்பந்தப்பட்டு உள்ளார்: மத்தேயு 9:27-30; 15:21-28; 17:14-18;20:30-34 மாற்கு 10:46-52; லூக்கா 17:1-14
-நல்ல சமாரியன்: லூக்கா 10:30-37
-தொற்காள்: அப்போஸ்தலர் 9:36-42

### உபசரித்தல்

**முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்.**

**அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள். (1 பேதுரு 4:9-10)**

இந்த தேவையுள்ளோருக்கு உணவும், தங்குமிடமும், கொடுப்பது கிறிஸ்துவின் சபை மக்களுக்கு ஆண்டவரால் கொடுக்கப்பட்ட விசேட திறமையும், உபசரிப்பின் வரமுமாகும். இந்த ஆவிக்குரிய வரத்தை விருப்பமின்றி செய்யக்கூடாது என்று நிபந்தனை போடப்பட்டுள்ளது. விருப்பமின்றி எனும்போது கோபத்துடன் செய்யக்கூடாது என்று அர்த்தம்.

உபசரிப்பு என்பது மாயமற்ற அன்பிற்கு சான்றாகும்:

**உங்கள் அன்பு மாயமற்றதாயிருப்பதாக.... அந்நியரை உபசரிக்க நாடுங்கள்..... (ரோமர் 12:9,13)**

உபசரித்தல் கண்காணியின் தராதரத்தில் ஒன்றாகும்:

> **ஆகையால் கண்காணியானவன் அந்நியரை உபசரிக்கிறவனும்.... (1 தீமோத்தேயு 3:2)**
>
> **ஏனெனில், கண்காணியானவன் அந்நியரை உபசரிக்கிறவனும்... (தீத்து 1:7-8)**

## மேலதிக படிப்பினைக்கு:

உபசரிக்கின்ற வரத்திற்கு லீதியாள் உதாரணமாக இருக்கின்றாள்: அப்போஸ்தலர் 16:14-15

ரோமாபுரியில் பவுலை காயு உபசரித்தான்: ரோமர் 16:23

உபசரிப்பில் சுவாரஸ்யமான காரியம் நடைபெற்றதை காண்கிறோம். அதை எபிரெயர் 13:1-2ல் அவதானியுங்கள்.

இது ஆபிரகாம் சாராளின் வாழ்விலும் நடைபெற்றது: ஆதியாகமம் 18.

## சுய பரீட்சை:

١. திறவுகோள் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

------------------------------------------------------------

------------------------------------------------------------

٢. ஊழிய வரங்கள் ஒன்பதையும் எழுதவும்:

------------------------------ ------------------------------

------------------------------ ------------------------------

------------------------------ ------------------------------

------------------------------ ------------------------------

------------------------------

3. ஏன் இவ்வரங்கள் ஊழிய வரங்கள் என்று அழைக்கப்படுகின்றது?

------------------------------------------------------------

------------------------------------------------------------

4. தலைமைத்துவ வரத்திற்கும், நிர்வகிக்கும் வரத்திற்குமுள்ள வித்தியாசங்கள் என்ன?

------------------------------------------------------------

------------------------------------------------------------

5. ஊழிய வரத்திற்கும், உதவும் வரத்திற்கும் உள்ள வித்தியாசங்கள் என்ன?

------------------------------------------------------------

------------------------------------------------------------

6. முதல்பட்டியலிலுள்ள ஊழியம் செய்யும் வரத்தைப்பற்றி வாசிக்கவும். இரண்டாவது பட்டியலிலுள்ள வரையறைகளையும் வாசிக்கவும். இவ்வரையறையில் பொருத்தமானதின் இலக்கத்தை பட்டியல் ஒன்றிலுள்ள கோடிட்ட இடத்தில் எழுதவும்.

**பட்டியல் ஒன்று** **பட்டியல் இரண்டு**

| | | |
|---|---|---|
| .......... ஊழியம் செய்தல் | 1. | மக்களையும், உபதேசங்களையும், சூழ்நிலைகளையும் தேவனுக்குரியதா என மதிப்பிடும் திறமை. |
| .......... உதவி செய்தல் | 2. | விசேட குறிக்கோள்களை நிறைவேற்ற மற்றவர்களை ஊக்குவிக்கும் திறமை. |
| .......... தலைமைத்துவம் | 3. | மற்றவர்கள் சார்பாக வழிகாட்டுதல். |
| .......... நிர்வகித்தல் | 4. | விசுவாசிக்கும் விசேட திறமை. |
| .......... கொடுத்தல் | 5. | கொடுக்கும் விசேட திறமை. |
| .......... இரக்கம் காட்டுதல் | 6. | மற்றவர்களின் ஊழியத்திற்கு உதவுதல். |
| .......... ஆவிகளை பகுத்தறிதல் | 7. | இரக்கத்தை விசேஷித்த விதத்தில் காட்டுதல். |
| .......... விசுவாசம் | 8. | உணவு உறைவிடம் வழங்குதல். |
| .......... உபசரித்தல் | 9. | உத்தரவாதத்துடன் நடைமுறை காரியங்களை செய்தல் அல்லது நிவாரணமளித்தல் |

7. பின்வரும் கூற்றுகள் சரியா, பிழையா: கொடுக்கும் வரம் கொண்ட ஒருவர், கர்த்தருடைய ஊழியத்திற்கு மாத்திரம் கொடுக்க வேண்டப்படுவார். இக்கூற்று ..........................................

8. விசுவாசம் என்பதை வரையறுக்கவும்.

----------------------------------------------------------------------------------------------------

9. விசுவாசத்தின் கனிக்கும், விசுவாசத்தின் வரத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

----------------------------------------------------------------------------------------------------

10. எமது விசுவாசத்தை நாம் எவ்வாறு அதிகரிக்கலாம்?

----------------------------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன).

## மேலதிக படிப்பினைக்கு

ஒன்பது ஊழிய வரங்கள் பற்றியும் தனித்தனியாக ஆராய்ந்துள்ளோம். ஒன்றை குறித்து ஆராய்ந்த பின்னர் அதற்குரிய மேலதிக படிப்பினை கொடுக்கப்பட்ட பின்னரே அடுத்து ஆராயப்பட்டது.

வேதாகமம் விசுவாசிகளுக்கு, கொடுக்கப்படுகின்ற வரங்கள் பற்றி மேலதிகமாக கூறுகின்றபோதும் அவை அனைத்தும் இப்பாடத்தில் உள்ளடக்கப்படவில்லை. இவ்வரங்கள் பரிசுத்த ஆவியின் வரங்கள் என்றும் விசேடமாக அழைக்கப்படுவதில்லை. இதனாலேயே இவைகள் ஆவிக்குரிய வரத்துடன் சேர்க்கப்படவில்லை.

### அன்னகர் - பிரம்மச்சரியம்:

கிறிஸ்தவ ஊழியத்திற்காக இவ்வரம் சில விசுவாசிகளுக்கு தேவனால் கொடுக்கப்படுகின்ற வரமாக இருக்கிறது. 1 கொரிந்தியர் 7:7-8ல் அப்போஸ்தலனாகிய பவுல் இந்த அன்னகர் வரத்தைக்குறித்து பேசுகிறார். இத்துறவரத்தை சகலரும் மேற்கொள்ள வேண்டும் என்றும் குறிப்பிடப்படவில்லை (1 தீமோத்தேயு 4:1-5ஐ பார்க்கவும்). இது தேவனுடைய வரமாக இருக்கின்றது, இது சபையினால் அல்லது சபை சங்கத்தினால் கோரப்படவில்லை. அன்னகர் வரம் சபையின் மேம்பாட்டுக்காக கொடுக்கப்படுகின்றது (1 கொரிந்தியர் 7:32-35ஐயும் பார்க்கவும்).

### பரிந்து மன்றாடுதல்:

பரிந்து மன்றாடும் வரமானது, தொடர்ந்தேர்ச்சியாக ஜெபிக்கும்படி தேவனால் கொடுக்கப்படுகின்ற சிறந்த வரமாக இருப்பதோடு, நீண்ட காலத்தை உள்ளடக்கியதாகவும் இருக்கிறது. பரிந்து மன்றாடுதல் என்னும் போது மற்றவர்களுக்காக பரிந்து தேவனிடம் பேசுவதை குறிக்கும். மக்களுக்காகவும், தலைவர்களுக்காகவும், ஊழியங்களுக்காகவும், தேசங்களுக்காகவும் பரிந்து மன்றாடுதல் அவசியமாகிறது.

பரிந்து மன்றாடுதல் குறிப்பாக ஒரு ஆவிக்குரிய வரமாக இல்லாத போதும், இது கிரியை செய்வதற்கான மூலாதாரமாக பரிசுத்த ஆவியானவரே இருக்கிறார். (ரோமர் 8:26-27ஐ பார்க்கவும்). பின்வரும் வேதவாக்கிய பகுதிகளை வாசித்து பரிந்து மன்றாடுதலுக்கான நோக்கங்களை கண்டறியுங்கள்:

-யாக்கோபு 5:14-16
-1 தீமோத்தேயு 2:1-2
-எபேசியர் 6:19
-எண்ணாகமம் 14:17-19
-அப்போஸ்தலர் 7:60

### கைவேலைப்பாட்டிற்கான திறமை:

இது வேறொரு வகையான வரமாக இருக்கின்றமையால் இதை நாம் "கைவேலைப்பாட்டிற்கான திறமை" என்று அழைப்போம். இது தேவனுடைய வேலைக்காக, அழகிய கைவினைப்பொருட்களை தயாரிக்கும் திறமையை கொண்டு உள்ளது, உதாரணமாக தேவனுடைய வீட்டிற்காகவும், ஆசாரியர்களுக்காகவும் அழகிய கைவேலைப்பாட்டு பொருட்களை தயாரிக்க தேவனால் கொடுக்கப்பட்ட விசேட திறமையாகும் (யாத்திராகமம் 28:3; யாத்திராகமம் 31:3-6).

அதிகாரம் ஒன்பது

# பரிசுத்த ஆவியானவரின் அடையாள வரங்கள்

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

நான்கு அடையாள வரங்களை இனம் காண்பீர்கள்.
அற்புதங்களில் நோக்கத்தை விபரிப்பீர்கள்.
உடல்நலக்கேட்டுக்கான ஐந்து காரணங்களின் பெயர்களை தருவீர்கள்.
பரிசுத்த ஆவியானவருடைய ஞானஸ்நானத்தினால் சரீர அடையாளமாக இருக்கின்ற அந்நியபாஷை வரத்திற்கும், அந்நிய பாஷை பேசும் வரத்திற்கும் உள்ள வேறுபாட்டை காண்பீர்கள்.
அந்நிய பாஷை பேசும் வரத்தை பயன்படுத்தி, வேதாகம வழிகாட்டலில் ஆலோசிக்க முடியும்.

## திறவுகோள் வசனம்:

**முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும்,**

**அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம். (எபிரெயர் 2:3-4)**

### அறிமுகம்

ர்நான்கு வரங்கள் நாம் “அடையாள வரங்கள்” என்றழைப்போம். அவைகள் விசுவாசிகளுக்கு தேவனுடைய வசனத்தை உறுதிப்படுத்தும்படியாக, இயற்கைக்கு அப்பாற்பட்ட விதத்தில் தேவனுடைய வல்லமையால், நடைபெறுகின்றவைகளாக இருக்கின்றன:

**அவர்கள் புறப்பட்டுப்போய், எங்கும் பிரசங்கம்பண்ணினார்கள். கர்த்தர் அவர்களுடனேகூடக் கிரியையை நடப்பித்து, அவர்களால் நடந்த அடையாளங்களினாலே வசனத்தை உறுதிப்படுத்தினார். ஆமென். (மாற்கு 16:20)**

குணமாதல், அற்புதங்கள், தேவனிடமிருந்து விஷேட செய்தியை அந்நியபாஷையினால் கொடுப்பதும், அதை வியாக்கியானம் செய்தலும் விசுவாசிகளுக்கூடாக நடைபெறும் அடையாள வரங்களின் ஊழியங்களாகும்.

அடையாள வரங்கள் நான்கு உண்டு. அவையாவன:

-அற்புதங்கள்
-குணமாக்குதல்
-அந்நியபாஷை
-அந்நியபாஷையை வியாக்கியானம் செய்தல்

## அற்புதங்கள்

**ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.**

**எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே அற்புதங்களைச் செய்யும் சக்தியும்..... (1 கொரிந்தியர் 12:7-10)**

அற்புதங்களை செய்யும் வரம் கொண்ட ஒரு நபர் மூலம், தேவன் இயல்பாகவே சாத்தியமான அற்புதங்களை செய்கின்றார். இந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட கிரியைகள் சாத்தானின் கிரியைகளைப் பார்க்கிலும் தேவனுடைய வல்லமையான கிரியைகளாக இருக்கின்றன.

இந்த அற்புதங்கள் விசேட ஆவிக்குரிய நோக்கங்களை கொண்டவைகளாக இருக்கின்றன. நற்செய்தியை உறுதி செய்யும்படியாக தேவன் இந்த அற்புதங்களை பாவிக்கின்றார்:

**முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும்,**

**அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம். (எபிரெயர் 2:3-4)**

அற்புதங்கள் இயேசுவை மக்கள் விசுவாசிக்கவும், அதனால் நித்திய ஜீவனை பெறவும் காரணமாயிருக்கின்றன:

**இந்தப் புஸ்தகத்தில் எழுதியிராத வேறு அநேக அற்புதங்களையும் இயேசு தமது சீஷருக்கு முன்பாகச் செய்தார்.**

**இயேசு தேவனுடைய குமாரனாகிய கிறிஸ்து என்று நீங்கள் விசுவாசிக்கும்படியாகவும், விசுவாசித்து அவருடைய நாமத்தினாலே நித்தியஜீவனை அடையும்படியாகவும், இவைகள் எழுதப்பட்டிருக்கிறது. (யோவான் 20:30-31)**

ஒரு மனிதனுடைய ஊழியம் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்பதை காண்பிக்க தேவன் அற்புதங்களை செய்கின்றார். இயேசுவின் ஊழியமும் அற்புதங்களினால் உறுதி செய்யப்பட்டது:

**அவன் இராக்காலத்திலே இயேசுவினிடத்தில் வந்து: ரபீ, நீர் தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிந்திருக்கிறோம், ஏனெனில் ஒருவனும் தன்னுடனே தேவன் இராவிட்டால்**

**நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களைச் செய்யமாட்டான் என்றான். (யோவான் 3:2)**

**இஸ்ரவேலரே, நான் சொல்லும் வார்த்தைகளைக் கேளுங்கள். நீங்கள் அறிந்திருக்கிறபடி நசரேயனாகிய இயேசுவைக்கொண்டு தேவன் உங்களுக்குள்ளே பலத்த செய்கைகளையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் நடப்பித்து, அவைகளினாலே அவரை உங்களுக்கு வெளிப்படுத்தினார். (அப்போஸ்தலர் 2:22)**

அப்போஸ்தலர்களின் ஊழியமும் அற்புதங்களினால் உறுதி செய்யப்பட்டது:

**அப்போஸ்தலனுக்குரிய அடையாளங்கள் எல்லாவிதமான பொறுமையோடும், அதிசயங்களோடும், அற்புதங்களோடும், வல்லமைகளோடும், உங்களுக்குள்ளே நடப்பிக்கப்பட்டதே. (2 கொரிந்தியர் 12:12)**

அற்புதங்களில் பல்வேறு வகைகள் இருக்கின்றன. இயேசு அற்புதங்களை பௌதீக இயற்கை சக்திகளுக்கு மேலாகவும் நடத்தி காண்பித்தார்:

**அவர் எழுந்து, காற்றை அதட்டி, கடலைப்பார்த்து: இரையாதே, அமைதலாயிரு என்றார். அப்பொழுது காற்று நின்றுபோய், மிகுந்த அமைதல் உண்டாயிற்று. (மாற்கு 4:39)**

சரீர சுகத்தை கொடுக்க பிசாசுகளை துரத்தியும் அற்புதங்களை செய்தார்:

**பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார்.**

**அவனுடைய சரீரத்திலிருந்து உறுமால்களையும் கச்சைகளையும் கொண்டு வந்து, வியாதிக்காரர்மேல் போட வியாதிகள் அவர்களைவிட்டு நீங்கிப்போயின. பொல்லாத ஆவிகளும் அவர்களை விட்டுப் புறப்பட்டன. (அப்போஸ்தலர் 19:11-12)**

பவுலின் கரங்களினால் செய்யப்பட்ட அற்புதங்கள் “விசேட அற்புதங்கள்” என அழைக்கப்படுகின்றது. “விசேடமான” “சாதாரணமான” என்ற சொற்கள் பொதுவான அற்புதங்களை வேறுபடுத்தி காண்பிக்க ஆதிச்சபையில் பாவிக்கப்பட்டுள்ளது. ஆதிச்சபை தேவனுடைய பெரிதான வல்லமையினால் பிறந்தது. அதனால் பொதுவான, வல்லமையுள்ள அடையாளங்களும், அற்புதங்களும் தனித்தன்மையுடன், வெளிப்படையாக தெளிவாக காண்பிக்கப்பட்டது.

அடையாளங்களும், அற்புதங்களும் ஒரு மனிதனுடைய அல்லது தேவனுடைய ஊழியத்தில் அவசியமில்லை என்று அர்த்தமாகாது. சாத்தானும் அற்புதங்களைச் செய்து ஏமாற்றுகின்றான்:

**அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள்... (வெளிப்படுத்தல் 16:14)**

**அந்த அக்கிரமக்காரனுடைய வருகை சாத்தானுடைய செயலின்படி சகல வல்லமையோடும் அடையாளங்களோடும் பொய்யான அற்புதங்களோடும்,**

**கெட்டுப்போகிறவர்களுக்குள்ளே அநீதியினால் உண்டாகும் சகலவித வஞ்சகத்தோடும் இருக்கும். இரட்சிக்கப்படத்தக்கதாய்ச் சத்தியத்தின்மேலுள்ள அன்பை அவர்கள் அங்கிகரியாமற்போனபடியால் அப்படி நடக்கும்.**

**ஆகையால் சத்தியத்தை விசுவாசியாமல் அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு,**

**அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாகக் கொடிய வஞ்சகத்தைத் தேவன் அவர்களுக்கு அனுப்புவார். (2 தெசலோனிக்கேயர் 2:9-12)**

இந்த வசனங்கள் மக்கள் சாத்தானின் அற்புதங்களின் மூலம் ஏமாற்றப்பட்டனர் என குறிப்பிடுகின்றன, ஏனென்றால் அவர்கள் தேவ வசனத்தின் சத்தியத்தின் அடிப்படையில் நிலை நிறுத்தப்பட்டிருக்கவில்லை.

## மேலதிக படிப்பினைக்கு:

1. பழைய ஏற்பாட்டு அற்புதங்கள்:

-யாத்திராகமம் தொடங்கி உபாகமம் வரை வாசிக்கவும். மோசேயின் காலத்தில் நடைபெற்ற 26 அற்புதங்களையும் அடையாளம் கண்டு கொள்ளவும்.

-1,2 இராஜாக்கள் புத்தகங்களை வாசிக்கவும். எலியா, எலிசாவின் காலத்தில் நடைபெற்ற 21 அற்புதங்களையும் பட்டியல் இடவும்.

2. புதிய ஏற்பாட்டு அற்புதங்கள்:

-மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் புத்தகங்களை வாசிக்கவும். இயேசு கிறிஸ்துவால் நிகழ்த்தப்பட்ட அற்புதங்களை பட்டியலிடவும்.

-அப்போஸ்தலர் நடபடிக்கையை வாசிக்கவும். தேவனால் அப்போஸ்தலர்களுக்கூடாகவும், மற்றவர்களுக்கூடாகவும், ஆதிச்சபையில் நிகழ்த்தப்பட்ட அற்புதங்களை பட்டியலிடவும்.

-அப்போஸ்தலர் 9:36-41ஐ வாசிக்கவும். இங்கு குறிப்பிடப்பட்டுள்ள அற்புதம் யாது? இந்த அற்புதத்தின் பிரதிபலன் யாது? (ஆப்போஸ்தலர் 9:42)

-ரோமர் 15:18-19ன் படி, பவுலின் ஊழியத்தில் புறஜாதிகள் தேவனிடம் வருவதற்கு இருந்த சான்று யாது?

-2 கொரிந்தியர் 12:12ஐ வாசிக்கவும். அற்புதங்களைச் செய்யும் வரத்தோடு தொடர்புடைய ஆவிக்குரிய மற்ற வரம் யாது?

-அப்போஸ்தலர் 19:11-12ல் வெளிப்படுத்தப்பட்டுள்ள இரண்டு அற்புதங்களும் யாவை?

## குணமாகுதல்

**ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.**

**ஏப்படியெனில் ஒருவனுக்கு ஆவியினாலே. குணமாக்கும் வரங்களும்... (1 கொரிந்தியர் 12:7-9)**

குணமாக்கும் வரங்களை கொண்ட விசுவாசியால், தேவனுடைய வல்லமை ஊற்றப்படும்போது, இயற்கை முறைகளை பயன்படுத்தாமல் சுகத்தை மீண்டுமளிக்க முடியும். “குணமாக்குதல்” என்றால் நலமடைதல் என்று அர்த்தம்.

இவ்விதமான சுகத்தை “தெய்வீக சுகம்” என்று அழைக்கப்படுகின்றது. ஏனென்றால் இது தேவனுடைய தெய்வீக வல்லமையால் நடைபெறுகின்றது, இயற்கையான முறையால் நடைபெறமாட்டாது என்பதே இதன் அர்த்தம்.

வேதாகமத்தில் குணமாக்குதல் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களை உடனடியாகவே சரீரம் சுகமடைந்து கிரியை செய்வது பற்றி குறிப்புகளுண்டு. சரீர சுகம், ஆவிக்குரிய அடையாளங்களில் ஒன்றாக உள்ளது:

**விசுவாசிக்கிறவர்களால் நடக்கும் அடையாளங்களாவன: வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள் என்றார். (மாற்கு 16:17-18)**

சபையின் மூப்பர்களும், தேவனால் சரீர சுகத்தை மற்றவர்களுக்கு பெறும்படிக்கு பாவிக்கப்பட்டுள்ளார்கள்:

**உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக. அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள்.**

**அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும். கர்த்தர் அவனை எழுப்புவார். அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். (யாக்கோபு 5:14-15)**

சகல விசுவாசிகளும் வியாதிக்காக ஜெபிக்கலாம். சபையின் மூப்பர்களும் வியாதியஸ்தர்களுக்காக ஜெபிக்கலாம். ஆனாலும் குணமாக்கும் வரத்தை பெற்றுள்ள விசுவாசி தேவனால் விஷேசித்த விதத்தில் தொடர்ந்து பயன்படுத்தப்படுகின்றார்.

இவ்வரம் பன்மையில் உள்ளது. குணமாக்கும் “வரங்கள்” எனப்படுகின்றது. பல்வேறுப்பட்ட குணமாக்கும் வரங்களுண்டு, பல்வேறு விதத்தில் குணமாக்கல் கிடைக்கின்றது, குணமாக்கும் வரங்கள் பல்வேறு முறைகளிலும் பாவிக்கப்படுகின்றது. தேவன் சில விசுவாசிகள் சில வியாதிகளை மட்டும் குணப்படுத்த விஷேடமாக பயன்படுத்துகின்றார். உதாரணமாக பவுல் சிறப்பாக அற்புதங்களை செய்ய பயன்படுத்தப்பட்டதை வேதாகமம் பதிவு செய்து வைத்துள்ளது (அப்போஸ்தலர் 19:11-12). சில விசுவாசிகள் குருடரும், செவிடரும் குணமாக்குவதற்காக விசேட அபிஷேகத்தை பெற்றுள்ளனர். இன்னும் சிலர் பலவிதமான வியாதிகளுக்காக ஜெபிக்கவும், குணமாக்கும் ஊழியத்திற்காகவும் பாவிக்கப்படுகின்றனர்.

சில வகையான வியாதிகள் அசுத்த ஆவியை விரட்டுவதின் மூலம் குணமாக்கப்பட்டு உள்ளது:

**சுற்றுப்பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள். அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள். (அப்போஸ்தலர் 5:16)**

குணமடைவதற்கு தேவன் பேரில் விசுவாசம் வைப்பதே திறவுகோலாக உள்ளது. தெய்வீக சுகம் விசுவாசத்துடனும், வரத்துடனும் சேர்ந்து வருகின்றது. இயேசு மரணத்தினின்றும் பெண்ணை உயிர்ப்பித்தார், குணமாக்கினார்:

**ஜனங்கள் வெளியே துரத்தப்பட்ட பின்பு, அவர் உள்ளே பிரவேசித்து, அந்தச் சிறுபெண்ணின் கையைப் பிடித்தார். உடனே அவள் எழுந்திருந்தாள். (மத்தேயு 9:25)**

பெண் மரித்துப்போன படியால், குணமாக்குவதற்கு அவளால் விசுவாசிக்க முடியாது. அங்கே குணமாகுதல் வரக்காரணம் விசுவாசத்துடனான இயேசுவின் ஊழியமேயாகும்.

வியாதியாயிருக்கின்றவரின் விசுவாசத்தினாலும் குணமாக்கல் நடை பெறுகின்றது:

**இயேசு திரும்பி, அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். அந்நேரம் முதல் அந்த ஸ்திரீ சொஸ்தமானாள். (மத்தேயு 9:22)**

குணமாகுதல் வியாதியஸ்தரின் விசுவாசத்தினடிப்படையிலும், ஊழியம் செய்கின்றவரின் விசுவாசத்தின் அடிப்படையிலும் வருகின்றது:

**அவர் வீட்டிற்கு வந்தபின்பு, அந்தக் குருடர் அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்: ஆம் விசுவாசிக்கிறோம், ஆண்டவரே! ஏன்றார்கள்.**

**அப்பொழுது, அவர்களுடைய கண்களை அவர் தொட்டு: உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார். (மத்தேயு 9:28-29)**

இயேசுவுக்கு குணமாக்கும் ஆற்றல் இருந்தது. தன்னால் குணமாக்க முடியும் என்பதை அவர் அறிந்திருந்தார். குருடர்களின் விசுவாசத்தினாலும் குணமாக்கல் இடம்பெற்றது.

குணமாக்கும் “வரங்கள்” பன்மையில் கூறப்பட்டுள்ளபடி, பல்வேறுப்பட்ட வேதாகம முறைகளில் மூலமும் குணமாகுதல் நடைபெறுகின்றது. உதாரணமாக குணமாகுதல் வசனத்தை பாவிப்பதின் மூலமும் ஏற்படுகிறது:

**நூற்றுக்கு அதிபதி பிரதியுத்தரமாக: ஆண்டவரே! நீர் என் வீட்டுக்குள் பிரவேசிக்க நான் பாத்திரன் அல்ல. ஒரு வார்த்தைமாத்திரம் சொல்லும், அப்பொழுது என் வேலைக்காரன் சொஸ்தமாவான். (மத்தேயு 8:8)**

**அவர் தமது வசனத்தை அனுப்பி அவர்களைக் குணமாக்கி... (சங்கீதம் 107:20)**

குணமாக்குதல் கைகளை வைப்பதினாலும் வருகின்றது:

**சூரியன் அஸ்தமித்தபோது, ஜனங்களெல்லாரும் தங்களுக்குள்ளே பலபல வியாதிகளால் வருத்தப்பட்டவர்களை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள். அவர்கள் ஒவ்வொருவர்மேலும் அவர் தம்முடைய கைகளை வைத்து, அவர்களைச் சொஸ்தமாக்கினார். (லூக்கா 4:40)**

**வியாதிஸ்தர்மேல் கைகளை வைப்பார்கள், அப்பொழுது அவர்கள் சொஸ்தமாவார்கள்.... (மாற்கு 16:18)**

**பவுலின் கைகளினாலே தேவன் விசேஷித்த அற்புதங்களைச் செய்தருளினார். (அப்போஸ்தலர் 19:11)**

கர்த்தருடைய நாமத்தினால் எண்ணெயால் அபிஷேகிக்கின்றபோதும் குணமாகுதல் நடைபெறுகின்றது:

**உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக. அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய்பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள்.**

**அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும். கர்த்தர் அவனை எழுப்புவார். அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். (யாக்கோபு 5:14-15)**

குணமாக்குதலின் வரத்தைக் கொண்டவரின் நிழல்பட்டும் குணமடைந்தவர்களுண்டு:

**பிணியாளிகளைப் படுக்கைகளின் மேலும் கட்டில்களின்மேலும் கிடத்தி, பேதுரு நடந்துபோகையில் அவனுடைய நிழலாகிலும் அவர்களில் சிலர்மேல் படும்படிக்கு, அவர்களை வெளியே வீதிகளில் கொண்டுவந்து வைத்தார்கள்.**

**சுற்றுப்பட்டணங்களிலுமிருந்து திரளான ஜனங்கள் பிணியாளிகளையும் அசுத்த ஆவிகளால் வாதிக்கப்பட்டவர்களையும் எருசலேமுக்குக் கொண்டுவந்தார்கள். அவர்களெல்லாரும் குணமாக்கப்பட்டார்கள். (அப்போஸ்தலர் 5:15-16)**

இயேசு கிறிஸ்து எமது வியாதிகளுக்காக வேதனைப்பட்டபடியால் எமக்கு தெய்வீக சுகம் கிடைக்கின்றது.

**நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம். (ஏசாயா 53:5)**

இயேசு கல்வாரியில் பாவத்தை போக்கும்படியாக மட்டும் வேதனையடையாமல், வியாதியை நீக்கவும் பாடுப்பட்டார். அவர் அடிக்கப்பட்டு, தழும்புகளை முதகில் பெற்றுக்கொண்டது வியாதிகள் குணமாவதற்காகவேயாகும். அவரது வேதனையினால், நாம் சுகத்தையும் இரட்சிப்பையும் பெறுகின்றோம்.

குணமாக்கும் வரத்தை கொண்டு ஊழியம் செய்தாலும், யாவரும் குணமடைவதில்லை என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும். பவுல் சுகயீனமாயிருந்த உடன் வேலையாட்களிடம் பேசிய போதும், அவரது ஊழியத்திற்கூடாக அவர்கள் சுகம் பெறவில்லை:

**துரோப்பீமுவை மிலேத்துவில் வியாதிப்பட்டவனாக விட்டு வந்தேன்... (2 தீமோத்தேயு 4:20)**

பவுல் அப்போஸ்தலன் குணமாக்கும் வரத்தையும், அற்புதம் செய்யும் வரத்தையும் கொண்டவனாக இருந்த போதும், துரோப்பீமு அவனது ஊழியத்தால் குணமடையாதிருந்தான். பவுல் தீமோத்தேயுவிடம் இருந்த நாட்பட்ட வியாதியைக் குறித்தும் எழுதுகின்றார்:

**நீ இனிமேல் தண்ணீர் மாத்திரம் குடியாமல், உன் வயிற்றிற்காகவும், உனக்கு அடிக்கடி நேரிடுகிற பலவீனங்களுக்காகவும், கொஞ்சம் திராட்சரசமும் கூட்டிக்கொள். (1 தீமோத்தேயு 5:23)**

பவுல் ஊழியம் செய்தவர்களில் யாவரும் குணமாக்கப்படாதிருந்த போதும், அவர் குணமாக்கும் வரத்தை

உபயோகிக்காமல் விட்டதில்லை. சுவிஷேச ஊழியம் செய்பவரும் இவ்விதமாகவே இருக்க வேண்டும். அவர் சுவிசேஷத்தை அறிவிக்கின்றபோது அதற்கான பிரதிபலிப்பை மக்களிடம் காணும் போதும் அவர் அறிவிக்கவே வேண்டும்.ஒவ்வொருவருக்கும் பவுல் பிரசங்கித்த போதும் யாவரும் சாதகமான பிரதிபலனை காண்பிக்கவில்லை. அவர் ஜெபித்த போது யாவரும் குணமடையவில்லை. ஆனால் தான் தேவனால் அழைக்கப்பட்டு அவர் வைத்த இடத்தில் நிலைத்திருந்தார். அவர் சுவிசேஷத்தை பிரசங்கித்தார், வியாதியஸ்தருக்காக ஜெபித்தார் ஆனாலும் இதற்கான பதில் தேவனுடைய கரத்திலேயே இருந்தது.

நாம் ஜெபிக்கின்றபோதும் யாவரும் குணமடையாதிருக்கின்றமைக்கு காரணங்களுண்டு.இதைக்குறித்து சர்வதேச அறுவடைநேர நிறுவனத்தின் “Leaven-like Evangelism” என்ற பாடத்தில் சம்பாஷிக்கப்படும். சுவிஷேச பரவலாக்கத்தின் போது குணமடைதல் இடைப்படுவதைக் குறித்து விரிவாக இப்பாடம் காண்பிக்கும்.

## மேலதிக படிப்பினைக்கு:

-சர்வதேச அறுவடை நேர நிறுவனத்தின் பாடமான “சரீரத்தோடுள்ள போராட்டம்” என்ற பாடம் குணமாகுதல் பற்றி படிப்பினையை விபரிக்கும்.

-மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய சுவிசேஷங்களை வாசித்து இயேசுவின் குணமாகுதலின் ஊழியத்தைப்பற்றி கற்கவும். அவர் செய்த அற்புதங்கள் யாவற்றையும் பட்டியலிடவும். ஒவ்வொரு அற்புதமும் வித்தியாசமான முறைகளை பாவித்து செய்யப்பட்டுள்ளன.

-அப்போஸ்தலர் நடப்படிக்கை புத்தகத்தை வாசித்து குணமாக்கும் வரம் ஆதி சபையில் கிரியை செய்தமையை கற்கவும். வியாதியையும், குணமாக்க பயன்படுத்தப்பட்ட முறையையும் கவனிக்கவும்.

-அப்போஸ்தலர் நடபடிக்கையில் குணமாக்கும் வரம், வித்தியாசமான மனிதர்களை தேவன் பாவித்துள்ளதை அவதானிக்கவும்:

| | |
|---|---|
| -அப்போஸ்தலர் 3:1-11: | பேதுருவும், யோவானும் (அப்போஸ்தலர்) |
| -அப்போஸ்தலர் 5:15; 9:32-34: | பேதுரு (அப்போஸ்தலர்) |
| -அப்போஸ்தலர் 8:5-7: | பிலிப்பு (சுவிசேஷகன், உதவி ஊழியன்) |
| -அப்போஸ்தலர் 9:17-18: | அனனியா (அறியப்படாத விசுவாசி) |
| -அப்போஸ்தலர் 14:8-10; 28:7-9: | பவுல் (அப்போஸ்தலர்) |

-பின்வரும் வசனங்களை வாசி.தேவன் அற்புதம் செய்தமைக்கான காரணத்தை பட்டியலிடவும்: யோவான் 9:1-3; அப்போஸ்தலர் 3:1-10; 4:4; பிலிப்பியர் 2:25-27

## அந்நியபாஷை

**ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.**

**எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே பற்பல பாஷைகளைப் பேசுதலும்... அளிக்கப்படுகிறது. (1 கொரிந்தியர் 12:7-10)**

-தாங்கள் கற்றுக்கொள்ளாத பாஷையிலே, தேவன் கொடுத்த செய்தியை பெற்று அவரது பிள்ளைகளுக்கு கொடுக்கும் திறமை அந்நியபாஷை பேசுதல் எனப்படுகிறது. “அந்நியபாஷை” என்பது

பல மொழிகளாகும். இது “அடையாள” பாஷையாகவும், “பேசும்” வரமாகவும் எம்மால் அழைக்கப்படுவதோடு, இவ்வரம் அடையாளமாக கொடுக்கப்படுவதாக வேதாகமம் வர்ணிக்கிறது.

ஒருவர் அந்நியபாஷை பேசுகின்றபோது அது என்ன பாஷை என கேட்பவரினால் நிதானிக்கப்படுகிறது:

> **அந்தச் சத்தம் உண்டானபோது, திரளான ஜனங்கள் கூடிவந்து, தங்கள் தங்கள் பாஷையிலே அவர்கள் பேசுகிறதை அவரவர்கள் கேட்டபடியினாலே கலக்கமடைந்தார்கள்.**
>
> **எல்லாரும் பிரமித்து ஆச்சரியப்பட்டு, ஒருவரையொருவர் பார்த்து: இதோ, பேசுகிற இவர்களெல்லாரும் கலிலேயரல்லவா?**
>
> **அப்படியிருக்க, நம்மில் அவரவர்களுடைய ஜென்மபாஷைகளிலே இவர்கள் பேசக் கேட்கிறோமே, இதெப்படி? (அப்போஸ்தலர் 2:6-8)**

அதே வேளையில் அது மனுஷர் அறிந்த பாஷையுமல்ல. இது அறியப்படாத அந்நியபாஷை பேசும் வரம் என்று அழைக்கப்படுகின்றது:

> **ஏனெனில், அந்நியபாஷையில் பேசுகிறவன், ஆவியினாலே இரகசியங்களைப் பேசினாலும், அவன் பேசுகிறதை ஒருவனும் அறியாதிருக்கிறபடியினாலே, அவன் மனுஷரிடத்தில் பேசாமல், தேவனிடத்தில் பேசுகிறான். (1 கொரிந்தியர் 14:2)**

நீங்கள் முன்னர் கற்கின்றபோது பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திற்கு சரீர அடையாளம் அந்நிய பாஷை பேசுதல் எனக் கற்றீர்கள். ஆனால் நவமான பாஷை பேசும் வரம் அந்நியபாஷை பேசும் வரத்தை விட வித்தியாசமானது. அந்நிய பாஷை பேசும் வரம் விஷேட திறமையாக இருப்பதோடு, தேவனுடைய செய்தியை சபைக்கு கொடுக்கும் வரமாகவும் இருக்கிறது, இப்பாஷையை பேசுகிறவரும் அப்பாஷையைக் குறித்து அறிந்திருக்க மாட்டார்கள்.

நவமான பாஷையில் பேசுதலும், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தினால் கிடைக்கின்ற அந்நியபாஷை பேசும் வரமும் பின்வரும் நோக்கங்களுக்காக தரப்படுகின்றது:

**தேவனிடத்தில் ஜெபித்தல்:** 1 கொரிந்தியர் 14:2

**சுய பக்திவிருத்திக்கு:** 1 கொரிந்தியர் 14:4. சுயபக்திவிருத்தி மாத்திரமல்ல, புத்தியும், ஆறுதலும், ஆவிக்குரிய வளர்ச்சியும் உண்டாகும் என்ற அர்த்தத்தையும் தருகிறது. ஏசாயா 28:11-12 ஆவிக்குரிய புதுப்பித்தலைப்பற்றியும் பேசுகிறது.

**பரிந்து மன்றாடல்:** விசுவாசிக்கூடாக பரிசுத்த ஆவியானவர் அந்நியபாஷை பேசுகின்றபோது தான் அறியாத பாஷையிலே அவர் பரிந்து மன்றாடுகின்றார். பரிந்து மன்றாடுதல் என்றால் மற்றவரின் நலனுக்காக ஜெபித்தல் என்பது அர்த்தமாகும். பரிசுத்த ஆவியானவருக்கு எப்படி எதற்காக ஜெபிக்க வேண்டும் என்று தெரியும். 1 கொரிந்தியர் 14:14. ரோமர் 8:26,27ஐயும் பார்க்கவும்.

**துதித்தல்:** அப்போஸ்தலர் 10:46; 1 கொரிந்தியர் 14:15

**தீர்க்கதரிசனத்தின் நிறைவேறல்:** 1 கொரிந்தியர் 14:21; ஏசாயா 28:11-12

அந்நியபாஷை பேசும் வரத்திற்கு மேலதிகமான இரு நோக்கங்களுண்டு. சபைக்கு ஒருவர் அந்நியபாஷை பேசி செய்தியை கொடுப்பாரேயானால் அச்செய்தி வியாக்கியானம் செய்யப்பட வேண்டும்.

**சபையின் பக்திவிருத்திக்கு:** 1 கொரிந்தியர் 14:12-13

**அவிசுவாசிகளுக்கு அடையாளமாக:** 1 கொரிந்தியர் 14:22. பேசுவதும், வியாக்கியானம் பண்ணப்படுவதினாலேயே இவ்வரம் “அடையாள வரம்” என்று அழைக்கப்படுகின்றது.

சபையில் அந்நியபாஷை பேசுவதற்கு விசேடமான வழிகாட்டல்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

1. ஒரே நேரத்தில் யாவரும் பேசக்கூடியது: 1 கொரிந்தியர் 12:30

2. சபையார் பக்திவிருத்தியடையும்படிக்கு, சபையில் பேசப்பட்டது வியாக்கியானம் செய்யப்பட வேண்டும்: 1 கொரிந்தியர் 14:1-5

3. வியாக்கியானம் செய்பவர் சபையில் இல்லாதபட்சத்தில் விசுவாசி அந்நிய பாஷையில் பேசாமல் அமைதியாயிருக்க வேண்டும்: 1 கொரிந்தியர் 14:28

4. பேசுகிறவர் தானே வியாக்கியானம்பண்ணும்படிக்கு தேவனிடம் ஜெபிக்க வேண்டும்: 1 கொரிந்தியர் 12:13

5. சபையில் அந்நியபாஷை பேசுவதைப்பார்க்கிலும் விளங்கிக்கொள்வதே மிக முக்கியமானது: 1 கொரிந்தியர் 14:18-19

6. ஒரு நேரத்தில் ஒருவரே வியாக்கியானம் செய்ய வேண்டும்: 1 கொரிந்தியர் 14:27

7. அந்நியபாஷை பேசுகின்ற நபர் தன்னை அடக்கிக்கொள்ள முடியும்: 1 கொரிந்தியர் 14:32-33

8. அந்நியபாஷை பேசுதலை புறந்தள்ளிவிடக்கூடாது: 1 கொரிந்தியர் 14:39-40

9. சபை ஆராதனையில் ஒழுங்குகள் இருப்பது மிக முக்கியமானதாகும். மற்ற வரங்களோடு சேர்த்து இவ்வரத்தை குழப்பிக்கொள்ள கூடாது: 1 கொரிந்தியர் 14:40

## மேலதிக படிப்பினைக்கு:

-1 கொரிந்தியர் 12-14 படிக்கவும். இந்த அதிகாரத்தில் ஆவிக்குரிய வரங்களைக்குறித்து பயன்பாடு பற்றி விவாதித்தோம், அந்நிய பாஷையை வியாக்கியானம் செய்வதைப்பற்றி 14ம் அதிகாரத்தில் வலியுறுத்துவோம்.

- 1 கொரிந்தியர் 14:5ஐ வாசிக்கவும். அந்நியபாஷை பேசும் வரத்தையும், வியாக்கியானம் படுத்தும் வரத்தையும் ஒப்பிட முடியுமா?

-இவ்வரத்தின் நோக்கங்கள் யாவை? 1 கொரிந்தியர் 14:4,5,22

-சபை சபை ஆராதனையில் இவ்வரம் பாவிக்கப்படும்போதும் எவ்விதமான வழிமுறைகளை பின்பற்றப்பட வேண்டும்? 1 கொரிந்தியர் 14:26-28ஐ பார்க்கவும்.

-அந்நியபாஷை பேசுதல் அவிவிசுவாசிகளுக்கு அடையாளமாக இருக்கிறது.யார் அவிவிசுவாசிகள்

என்பதையும், அவர்கள் எங்கே, எவ்வாறு இருக்கின்றனர் என்பதையும் பட்டியலிடப்பட்ட வசனங்களிலிருந்து கண்டு பிடிக்கவும்:

| | யார்? | எங்கே? |
|---|---|---|
| அப்போஸ்தலர் 2:2-13 | ----------------------------------- | ----------------------------------- |
| அப்போஸ்தலர் 10:24-28 | ----------------------------------- | ----------------------------------- |
| அப்போஸ்தலர் 19:1-7 | ----------------------------------- | ----------------------------------- |

## அந்நிய பாஷையை வியாக்கியானம் செய்தல்

**ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது.**

**எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே.... பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.... (1 கொரிந்தியர் 12:7-10)**

அந்நியபாஷையில் பேசப்படும் செய்தியை விளங்கிக்கொண்டு நாம் அறிகின்ற மொழியில் வியாக்கியானம் செய்வது விஷேட திறமையாக இருக்கின்றது. பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்டும் ஆவிக்குரிய வரத்தை பெற்ற ஒருவனுக்கு செய்தியை வியாக்கியானம் செய்யும் வரமும் கொடுக்கப்படுகின்றது. அறிந்துள்ள பாஷையில் கொடுக்கப்பட்டு உள்ள செய்தியை வியாக்கியானம் செய்யப்படுவதில்லை. வியாக்கியானம் செய்யப்படும் போது செய்தியின் சாராம்சம் சுருக்கமாக கொடுக்கப்படும், வார்த்தைக்கு வார்த்தை கொடுக்கப்படமாட்டாது. ஏனென்றால் அந்நிய பாஷை செய்தியின் நீளம் அல்லது அமைப்பின் அடிப்படையில் மொழிப்பெயர்ப்பு மாற்றமடையக்கூடும்.

செய்தியை மொழிபெயர்ப்பதின் நோக்கம், செய்தியை விளங்கப்படுத்துவதாகவே இருக்கிறது:

**யாராவது அந்நியபாஷையிலே பேசுகிறதுண்டானால், அது இரண்டுபேர்மட்டில், அல்லது மிஞ்சினால் மூன்றுபேர்மட்டில் அடங்கவும், அவர்கள் ஒவ்வொருவராய்ப் பேசவும், ஒருவன் அர்த்தத்தைச் சொல்லவும் வேண்டும். (1 கொரிந்தியர் 14:27)**

வியாக்கியானம் பண்ணும் வரம், அந்நிய பாஷை பேசும் வரத்தை அணுசரனையாகவே கொண்டே பாவிக்கப்படும். அந்நிய பாஷையின் பாவிக்கப்பட்டு கொடுக்கப்படுகின்ற செய்தி மொழிபெயர்க்கப்டும்போது, சபை அச்செய்தியால் ஆசீர்வதிக்கப்படுகின்றது:

**நீங்களெல்லாரும் அந்நியபாஷைகளைப் பேசும்படி விரும்புகிறேன். ஆகிலும், அந்நியபாஷைகளில் பேசுகிறவன் சபைக்குப் பக்திவிருத்தி உண்டாகும்படிக்கு அர்த்தத்தையும் சொல்லாவிட்டால், தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறவன் அவனிலும் மேன்மையுள்ளவன். ஆதலால் நீங்கள் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிறவர்களாகவேண்டுமென்று அதிகமாய் விரும்புகிறேன். (1 கொரிந்தியர் 14: 5)**

அந்நிய பாஷை பேசுகின்றவரின் செய்தியை மொழிபெயர்க்கும் வரம் கொண்டவர் சபையில் இல்லாதிருந்தால் அவர் அமைதியாகவே இருக்க வேண்டும்:

**அர்த்தஞ் சொல்லுகிறவனில்லாவிட்டால், சபையிலே பேசாமல், தனக்கும் தேவனுக்கும் தெரியப் பேசக்கடவன். (1 கொரிந்தியர் 14:28)**

அந்நிய பாஷையை பேசும் வரம் கொண்டவர் செய்தியை மொழி பெயர்க்கும் வரத்தையும் கேட்டு ஜெபிக்க வேண்டும்:

> **அந்தப்படி அந்நியபாஷையில் பேசுகிறவன் அதின் அர்த்தத்தையும் சொல்லத்தக்கதாக விண்ணப்பம்பண்ணக்கடவன். (1 கொரிந்தியர் 14:13)**

## மேலதிக படிப்பினைக்கு:

-வியாக்கியான வரத்தை பாவிக்கின்ற வழி முறையை கற்றுக்கொள்ள 1 கொரிந்தியர் 14ஐ வாசிக்கவும்.
-அந்நியபாஷையை வியாக்கியானம் பண்ணுவதின் பலன் என்ன? 1 கொரிந்தியர் 14:5ஐ வாசிக்கவும்.
-வியாக்கியானம் இல்லாதிருந்தால் என்ன நடைபெறும்? 1 கொரிந்தியர் 14:28ஐ வாசிக்கவும்.
-அந்நியபாஷையை யாரால் விளக்க முடியும்? 1 கொரிந்தியர் 14:13 மற்றும் 27ஐ வாசிக்கவும்.
-உந்த சர்ந்தர்ப்பத்தில் அந்நியபாஷையை, மொழிப்பெயர்க்க வேண்டிய அவசியமில்லை? அப்போஸ்தலர் 2:4-8; 10:44-48; 19:6ஐ வாசிக்கவும்.

## பயனுள்ள ஊழிய மாதிரிகள்

இவ்வதிகாரம் பல்வேறுப்பட்ட ஆவிக்குரிய வரங்களை உள்ளடக்கிய படிப்பினையைக் கொண்டுள்ளது. சிறப்பாக கற்றுக் கொள்வதற்காக இவைகள் பிரிக்கப்பட்டுள்ளன:

| | |
|---|---|
| -விசேட வரங்கள் | -பேசும் வரங்கள் |
| -ஊழிய வரங்கள் | -அடையாள வரங்கள் |

சபையில் சிறந்த ஊழியத்திற்கு இப்பிரிவுகள் ஒன்றாக இணைந்து செயல்படுவதை பின்வரும் அட்டவனை காண்பிக்கும்:

**விஷேட வரங்கள்**

அப்போஸ்தலர்கள்
தீர்க்கதரிசிகள்
சுவிசேஷகர்கள் → **தேவனுடைய ஜனங்கள் சீர்பொருந்த**
மேய்ப்பர்கள்
போதகர்கள்

**பேசும் வரங்கள்**

**தேவனுடைய சத்தியத்தை போதித்தல்** →
தீர்க்கதரிசனம்
போதனைகள்
புத்தி சொல்லுதல்
அறிவை உணர்த்தும் வசனம்
ஞானத்தை போதிக்கும் வசனம்

**ஊழிய வரம்**

ஊழியம் செய்தல்
உதவி செய்தல்
தலைமைத்துவம்
நிர்வகித்தல்
கொடுத்தல் → **தேவனுடைய வேலைக்காக**
இரக்கம் காட்டுதல்
ஆவிகளை பகுத்தறிதல்
விசுவாசம்
உபசரித்தல்

**அடையாள வரங்கள்**

**தேவனுடைய அதிகாரத்தை விஸ்தரித்தல்** →
அந்நியபாஷை பேசுதல்
வியாக்கியானம் செய்தல்
அற்புதங்களை செய்தல்
குணமாக்குதல்

## சுய பரீட்சை:

١. திறவுகோள் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

------------------------------------------------------------

------------------------------------------------------------

٢. அடையாள வரங்கள் நான்கும் எவை?

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

------------------------------------------------------------

3. யோவான் 20:30-31ன் படி, அற்புதங்கள் செய்யும் வரத்தின் இரண்டு நோக்கங்கள் யாவை?

------------------------------------------------------------

------------------------------------------------------------

4. முதல் பட்டியலில் அடையாள வரங்களை கொடுக்கப்பட்டுள்ளதை கவனியுங்கள். அதன் வரைவிலக்கணத்தை இரண்டாவது பட்டியலில் கொடுக்கப்பட்டுள்ளது. முதலாவது பட்டியலுக்கு பொருத்தமான இலக்கத்தை கீறிட்ட இடத்தில் எழுதுக.

| **பட்டியல் ஒன்று** | **பட்டியல் இரண்டு** |
| --- | --- |
| ---------- குணமாக்குதல் | 1.இயல்பாக அல்லாமல் இயற்கைக்கு அப்பாற்பட்ட முறையில் நடைபெறும் வல்லமையுள்ள கிரியை. |
| ---------- அந்நிய பாஷை பேசுதல் | 2.இயற்கையான முறையில் அல்லாமல் தேவனுடைய வல்லமையால் சுகம் கிடைத்தல். |
| ---------- வியாக்கியானம் செய்தல் | 3.பேசுபவருக்கும் தெரிந்திராத பாஷையில் பேசுதல்.. |
| ---------- அற்புதங்களை செய்தல் | 4.அந்நியபாஷையில் பேசி கொடுக்கப்படும் செய்தியை விளங்கிக் கொண்டு அறிந்த பாஷையில் மொழிப்பெயர்த்தல். |

5. முதல் பட்டிபின்வரும் கூற்றுக்களை வாசிக்கவும்.சரியாயின் ச எனவும், பிழையாயின் பி எனவும் கீறிட்ட இடத்தில் நிரப்பவும்.

அ................ பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றுக்கொண்ட போது பேசிய அந்நிய பாஷையும், அந்நிய பாஷை வரம் ஒன்றாகும்.

ஆ................ சபையில் அந்நியபாஷை பேசும் வரம் கொண்ட நபர், வியாக்கியானம் செய்பவர் இல்லாதபட்சத்தில் அமைதியாயிருக்க வேண்டும்.

இ................ அந்நியபாஷை பேசும் வரம் கொண்டவர் தனது செய்தியை வியாக்கியானம் செய்ய மாட்டார்.

ஈ................ அந்நியபாஷை பேசும் வரம் கொண்டவர் உண்மையாகவே இவ்வரத்தை கட்டுப்படுத்த முடியாது.

உ................ அந்நியபாஷை பேசும் வரம் உள்ளவர் சபையில் பேசுகின்றபோது அப்பாஷை கேட்பவருக்கு வியாக்கியானம் இல்லாத போதும் விளங்க வேண்டும்.

ஊ............. ஒரே செய்தியை ஒரே நேரத்தில் பலரால் வியாக்கியானம் செய்ய முடியும்.

எ............. குணமாக்கும் வரமுள்ள ஒருவரின் ஊழியத்தை பெறும் ஒவ்வொருவரும் குணமாக்கப்படுவார்கள்.

ஏ.............. குணமாக்கும் வரத்தை கொண்டவர் மாத்திரமே வியாதியஸ்தருக்காக ஜெபிக்க முடியும்.

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன).

## மேலதிக படிப்பினைக்கு

நான்கு அடையாள வரங்களைப்பற்றி சம்பாஷிக்கும் போதும் முடிவில் மேலதிக படிப்பினைக்கு என்ற பகுதி சம்பாஷிக்கப்பட்டது. ஒரு அடையாள வரத்தை கற்று முடித்த பின்னர், மற்றவரம் பற்றி ஆரம்பிக்கும் முன்னர் இதைச் செய்துள்ளோம். கடைசியாக இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் பரிசுத்த ஆவியானவருடைய வரங்கள் கிரியை செய்ததை நீங்கள் கற்பீர்கள். கீழே கொடுக்கப்பட்டுள்ள வேதவாக்கியங்கள் அவரது ஊழியத்தில் ஆவியின் வரங்கள் கிரியைச் செய்ததை உறுதிப்படுத்திக் காண்பிக்கும்.

இப்பாடத்தை கற்று முடித்த பின்னர் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் புத்தகங்களை வாசிக்கவும். இயேசு கிறிஸ்துவின் ஊழியத்தில் இவ்வரங்கள் கிரியைச் செய்ததை மேலதிகமான வேதவசனங்கள் விபரித்துக்காண்பிக்கும்.

இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவருடைய வரங்கள்

| | |
|---|---|
| -அற்புதங்கள்: | அப்போஸ்தலர் 2:22 |
| -குணமாக்குதல்: | அப்போஸ்தலர் 10:38 |
| -ஞானத்தை போதிக்கும் வசனம்: | 1 கொரிந்தியர் 1:24,30 |
| -அறிவை உணர்த்தும் வசனம்: | யோவான் 1:45-50; 4:18; 11:14 |
| -அவிகளை பகுத்தறிதல்: | யோவான் 1:45-50; 6:61 |
| -தீர்க்கதரிசனம் அல்லது தீர்க்கதரிசி: | மத்தேயு 24 |
| -போதனை அல்லது போதகர்: | மத்தேயு 4:23; 9:35; 26:55; மாற்கு 6:6; 14:49; லூக்கா 5:17; 13:10,22; 21:37 |
| -புத்தி சொல்லுதல்: | லூக்கா 3:18 |
| -இரக்கம் காண்பித்தல்: | மத்தேயு 20:30-34 |
| -அப்போஸ்தலர்: | எபிரெயர் 3:1 |
| -சுவிசேஷகர்: | யோவான் 10:16 |
| -போதகர்: | யோவான் 10:11 |
| -தலைமைத்துவம்: | யோவான் 13:15-16; மாற்கு 10:42-45 |
| -நிர்வகித்தல்: | லூக்கா 10:1-17 |
| -விசுவாசம்: | லூக்கா 8:49-56 |
| -கொடுத்தல்: | யோவான் 10:11 |
| -உதவி செய்தல்: | யோவான் 17:6-10 |
| -உபசரித்தல்: | யோவான் 13:4-16; மாற்கு 10:42-45 |
| -விருந்தோம்பல்: | யோவான் 21:9-13 |

அந்நிய பாஷையும், வியாக்கியானமும்: இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் இடம்பெறாத இரண்டு ஆவிக்குரிய வரங்கள் எவை? அவரே தேவனுடைய வார்த்தையாக இருந்தமையால் இது அவருக்கு அவசியமானதாகவும் இருக்கவில்லை. முனிதர்களுக்காக தேவனிடமிருந்து அந்நியபாஷையில் செய்தியை பெற்று மொழிபெயர்த்து கொடுக்க வேண்டிய கட்டாயத்தில் அவர் இருக்கவில்லை.

அதிகாரம் பத்து

# உங்களுக்குரிய ஆவிக்குரிய வரங்களை கண்டறிதல்

### குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால் :

ஒரு விசுவாசி தனது ஆவிக்குரிய வரத்தை ஏன் கண்டுபிடித்தல் முக்கியமானது என விபரிக்க முடியும்.
விசுவாசியால் எவ்வாறு ஆவிக்குரிய வரங்களை கண்டுபிடிக்க முடியும் என்பதை விபரிக்க முடியும்.
உங்களுக்குரிய சொந்த ஆவிக்குரிய வரத்தை கண்டுப்பிடிக்க முடியும்.

### திறவுகோள் வசனம்:

**இதினிமித்தமாக, நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல்மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன். (2 தீமோத்தேயு 1:6)**

## அறிமுகம்

கடந்த அதிகாரத்தில் ஒவ்வொரு விசுவாசியும், ஒரு ஆவிக்குரிய வரத்தையாவது கொண்டிருப்பார் எனக் கற்றீர்கள். இவ்வதிகாரத்திலே உங்களுடைய வரத்தை கண்டுபிடித்து, அதை எவ்வாறு உபயோகிக்க ஆரம்பிக்க முடியும் என்பதை கற்பீர்கள்.

## கண்டுபிடித்தலின் முக்கியத்துவம்

உங்களுடைய ஆவிக்குரிய வரத்தைக் கண்டுபிடித்தல் முக்கியமானது, ஏனென்றால்:

### ஆவிக்குரிய குறிக்கோள்களையும் நோக்கங்களையும் பூர்த்தி செய்தல்:

ஊஎபேசியர் 4:12-15ல் பரிசுத்த ஆவியானவரின் ஆவிக்குரிய வரத்தைக் குறித்த குறிக்கோளைப்பற்றியும், நோக்கங்கள் பற்றியும் கூறப்பட்டுள்ளதை மீட்டல் செய்து பாருங்கள்:

**நோக்கங்கள்:**

-பரிசுத்தவான்களை சீர்பொருத்த.
-ஊழியத்தின் வேலைக்காக.
-கிறிஸ்துவின் சபை பக்திவிருத்தியடைய.

**குறிக்கோள்கள்:**

-விசுவாசத்தில் நாமனைவரும் ஐக்கியப்பட.
-கிறிஸ்துவைப்பற்றிய அறிவில் வளர்ச்சியடைய.

-கிறிஸ்துவை எமது மாதிரியாகக் கொண்டு பரிபூரணத்தில் வளர.
-பிழையான உபதேசத்தினால் வஞ்சிக்கப்படாமல் நாம் உறுதியாக இருக்க.
-கிறிஸ்துவுக்குள் ஆவிக்குரிய முதிர்ச்சியடைய.

விசுவாசியொருவர் தனது ஆவிக்குரிய வரத்தை கண்டுபிடித்து சபையில் பாவிக்கின்றபோது இந்த நோக்கங்களும், குறிக்கோள்களும் நிறைவேறுகின்றது.

## ஆவிக்குரிய போராட்டத்தில் ஈடுபட:

சாத்தானின் ஆவிக்குரிய சேனைகளுடன் போராடும்படிக்கு பரிசுத்த ஆவியானவருடைய இந்த வரங்களோடு கூட ஆவிக்குரிய போராட்டத்திற்கான சர்வாயுதவர்க்கங்களும் சபைக்கு கொடுக்கப்பட்டுள்ளது.

> **ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு. (எபேசியர் 6:12)**

ஆவிக்குரிய எதிரியாகிய சாத்தானுடன் சிறப்பாக போராட உங்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய வரத்தை கண்டுபிடிப்பது முக்கியமாகும்.

## துஷ்பிரயோகத்தை தவிர்த்துக் கொள்ள:

கடந்த அதிகாரங்களில் ஆவிக்குரிய வரங்கள் மூன்று விதங்களில் துஷ்பிரயோகம் செய்யப்படுகின்றது என கற்றீர்கள்:

1. உங்களுக்கு கொடுக்கப்பட்ட வரத்தை பாவியாமல் இருத்தல்.
2. உங்களுக்கு கொடுக்கப்பட்ட வரத்தை பாவிக்க முயற்சி செய்யாதிருத்தல்.
3. வரத்தை முறையாக பாவிக்காதிருத்தில்.

நீங்கள் உங்களது ஆவிக்குரிய வரத்தை கண்டு பிடித்ததும் மேற்சொல்லப்பட்ட துஷ்பிரயோகங்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

## ஏமாற்றத்தை தவிர்த்துக் கொள்ளுங்கள்:

அநேகமான புதிய விசுவாசிகள் அவர்களுடைய ஆவிக்குரிய வரத்தை குறித்த அறிவும், அனுபவமும் இல்லாதபடியினால் கர்த்தருக்கு ஊழியம் செய்ய முயற்சித்தும் தோல்விகண்டு, ஏமாற்றமடைந்து விழுந்து போகின்றார்கள். உங்களுடைய சொந்த ஆவிக்குரிய வரத்தை கண்டுபிடிக்காமையால் நீங்கள் கூட ஏமாற்றமடைந்திருக்கக்கூடும். எனவே நீங்கள் ஊழியத்திற்காக தந்திராத வரத்தை பாவிக்க முற்பட வேண்டாம், நீங்கள் இருக்க வேண்டிய நிலமையில் இருந்து ஊழியம் செய்ய முற்படுங்கள்.

நீங்கள் ஊழியத்தில், அதிக வேலைகளை கொண்டவராக இருக்கின்றபோதும் தேவனுடைய இராஜ்ஜியத்திற்கான வேலையை பூர்த்தி செய்யாதவராக இருக்க அதிக வாய்ப்புண்டு. உதாரணமாக சுவிசேஷ வரத்தைக் கொண்ட வண. பில்லிகிரகாமைப் போன்று ஒருவர் பாவனை செய்ய முற்படலாம்.

அவர் வண. பில்லிகிரகாமைப்போலவே பிரசங்கித்த போதும் ஒருவரும் செய்திக்கு பிரதியுத்தரவு கொடுக்காதிருக்கலாம். எனவே அவர் தனக்கு கொடுக்கப்பட்ட ஆவிக்குரிய வரம் என்னவென்றும், தனக்கு கொடுக்கப்பட்ட சுவிசேஷ வரம் அடையாளம் காணாவிடத்து ஊழியத்தில் ஏமாற்றமடைய சர்ந்தர்ப்பமுண்டு. அவரது வரம் போதிப்பதாக இருப்பின், அவர் தனது ஊழியத்தில் போதிக்கும் வரத்தை பாவிப்பராயின் பெரிதான பலனைக் காண்பார்.

உங்களது ஆவிக்குரிய வரத்தை நீங்கள் கண்டு கொண்டதும், அதை உங்களுக்கான தேவைகளுக்கு மட்டும் வைத்துக் கொள்ளாமல், மற்ற கிறிஸ்தவர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கும் வைத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக நீங்கள் உங்களது மேய்ப்பர் சிறந்த ஓர் ஆசிரியர், ஆனால் அவர் நிர்வகிக்கின்ற திறமையற்றவர் என்று நீங்கள் விளங்கிக் கொண்டுள்ளீர்கள். அவர் போதிக்கும் வரம் கொண்டவர், நிர்வகிக்கும் வரம் கொண்டவர் என்று அடையாளம் கண்டுள்ளீர்கள். இச்சூழ்நிலையில் சபை இன்னும் சிறப்பாக செயல்படுவதற்கு அவருக்கு இவ்வரம் கொண்ட இன்னுமொருவர் அவசியமாக இருக்கின்றது.

### உங்களுடைய உத்தரவாதத்தை நினைத்துக் கொள்ளுங்கள்:

உங்கள் ஆவிக்குரிய வரத்தை கண்டுபிடிப்பது முக்கியமானது, ஏனென்றால் நீங்களே அதை அனல்மூட்டி பாவிக்கும் உத்தரவாதத்தை கொண்டிருக்கிறீர்கள். ஆப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவிற்கு:

> **உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே.... (1 தீமோத்தேயு 4:14)**
>
> **இதினிமித்தமாக, நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான தேவவரத்தை நீ அனல்மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன். (2 தீமோத்தேயு 1:6)**

என எழுதுகின்றார். நீங்களே உங்கள் ஆவிக்குரிய வரத்தை கண்டுபிடித்து, அபிவிருத்தி செய்து, உத்தரவாதத்தை நிறைவேற்ற வேண்டும். உங்கள் வரத்தை அறிந்து அதை பிரயோசனமான முறையிலும், பலனுண்டாகும் வண்ணமும் பாவிக்க வேண்டும்.

## உங்கள் ஆவிக்குரிய வரத்தை கண்டு பிடித்தல்

உங்கள் ஆவிக்குரிய வரத்தை அல்லது வரங்களை கண்டுபிடிக்க பின்வரும் வழிகாட்டல்கள் உங்களுக்கு உதவும்:

### முதலாவது படி - மறுபடியும் பிறக்க வேண்டும்:

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும். ஆவிக்குரிய வரங்கள் புதிய பிறப்பிற்கூடாகவும், இயற்கையான தாலந்துகள் இயற்கையான பிறப்பிற்கூடாகவும் வருகின்றது. பௌதீக உலகில் நீங்கள் பிறந்திருந்தால், இயற்கையான தாலந்துகள் உங்களுக்கு கிடைக்காது. நீங்கள் ஆவிக்குரிய உலகில் மறுபடியும் பிறவாதிருந்தால் உங்களுக்கு ஆவிக்குரிய வரங்கள் கொடுக்கப்படமாட்டாது:

> **நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின்**

**நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்தஆவியின் வரத்தைப் பெறுவீர்கள். (அப்போஸ்தலர் 2:38)**

## இரண்டாவது படி - பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்தை பெற்றுக் கொள்ளுங்கள்:

பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தை எவ்வாறு பெற்றுக்கொள்ளலாம் என்பதற்கான வழிகாட்டல் இக்கையேட்டில் நான்காம் அதிகாரத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.

## மூன்றாவது படி - ஆவியின் வரத்தை அறிந்து கொள்ளுங்கள்:

உங்களிடம் ஆவிக்குரிய வரம் உண்டு என அறியாதிருப்பீர்களாயின், உங்களால் தேவன் கொடுத்த வரத்தை பாவிக்க முடியாதிருக்கும். விசுவாசிகளுக்காக பல்வேறுப்பட்ட வரங்கள் இருக்கின்றன என்பதை இப்பாடங்களை படிக்கின்றபோது அடையாளம் கண்டு கொள்வீர்கள்.

## நான்காவது படி - வரங்களின் மாதிரிகளை அவதானியுங்கள்:

உங்களிடம் என்ன வரமுண்டு என கவனிக்குமிடத்து, பல்வேறுப்பட்ட வரங்களின் முதிர்ச்சியான மாதிரிகள் பல இருப்பதையும் அவதானிப்பது உதவியாயிருக்கும். "முதிர்ச்சியான மாதிரி"யை ஆவிக்குரிய வரமாக விசுவாசி கணித்து அதை சமயம் வாய்க்கின்றபோது வரமாக பாவிக்கலாம்.

உதாரணமாக போதிக்கும் வரமுள்ள ஒருவரிடம் பேசவும். அவ்வரத்தை அவர் எவ்வாறு அறிந்து கொண்டார் எனவும், எவ்வாறு பாவிக்க ஆரம்பித்தார் எனவும், எவ்வாறு அந்த வரத்தை அவர் வளர்த்துக்கொண்டார் என்பதைப் பற்றியும் கேள்விகளை கேட்டு அறிந்து கொள்ளவும். மற்ற வரங்கள் பற்றியும் இவ்விதமாகவே அறிந்து கொள்ளவும். மற்றவர்கள் எவ்வாறு தமது வரத்தைக்கண்டு கொண்டு, அதை சிறப்பாக பாவிக்கின்றார்கள் என்பதை நீங்கள் அவதானித்தால் உங்கள் சொந்த வரத்தை அடையாளம் காண அது உதவியாக இருக்கும்.

## ஐந்தாவது படி - ஆவிக்குரிய வரத்தை தேடுங்கள்:

வரத்தை உபவாசத்தோடும், ஜெபத்தோடும், வாஞ்சையோடும் தேடுங்கள். ஆவிக்குரிய வரத்தை தேடுங்கள் என்றே வேதாகமம் கூறுகிறது:

**இப்படியிருக்க, முக்கியமான வரங்களை நாடுங்கள்.... (1 கொரிந்தியர் 12:31)**

நாம் அனைவரும் ஏதேனும் ஒரு வரத்தை பெற்றிருப்போம் எனினும் நாம் வரத்தை தேட வேண்டும் என்று இவ்வசனம் கற்பிக்கிறது.

## ஆறாவது படி - கைகளை வையுங்கள்:

உங்களுடைய ஆவிக்குரிய தலைவர்கள் உங்கள் மேல் கரங்களை வைத்து உங்களுக்குள் வரம் என்ன என்று வெளிப்படுத்தும்படி தேவனிடம் ஜெபிக்க வேண்டும்:

**மூப்பராகிய சங்கத்தார் உன்மேல் கைகளை வைத்தபோது தீர்க்கதரிசனத்தினால் உனக்கு அளிக்கப்பட்ட வரத்தைப்பற்றி அசதியாயிராதே. (1 தீமோத்தேயு 4:14)**

குறிப்பு: முதலாம்படி முதல் ஆறாம் படி வரையுள்ள படிமுறைகளுக்கூடாக தேவன் உங்களது

ஆவிக்குரிய வரத்தை வெளிப்படுத்தக்கூடும். இக்காரியம் சாதகமாக அமையாதபட்சத்தில் பின்வரும் படிமுறைகளை கையாளவும்.

## ஏழாவது படி - உங்களுடைய ஆவிக்குரிய அக்கறையை ஆராயவும்:

தேவன் தந்துள்ள வரத்தை நீங்கள் அடையாளம் காணும்போது அவரை ஆராதிப்பதில் நீங்கள் பெரிதான சந்தோஷத்தை அனுபவிப்பீர்கள். பௌதீக உலகில் பரிசுகளை பெறும்போது நீங்கள் பெற்றுக் கொள்ளும் சந்தோஷத்தைப்போன்று ஆவிக்குரிய வரத்தைக்குறித்தும் சந்தோஷப்படுவீர்கள். உங்களுக்கு "உணர்வு" அல்லது "பாரம்" (ஆர்வம் அல்லது வாஞ்சை) குறிப்பிட்ட ஊழியத்தைக் குறித்து இருக்குமாயின் அதனடிப்படையில் தேவனை ஆராதியுங்கள்.

உதாரணமாக நிர்வகிக்கின்ற திறமையுள்ள ஒருவரால், எதைக்குறித்து வழிகாட்டவும், கட்டமைப்பை உருவாக்கி செயல்படவும் முடியும். அவரால் சபையை, கிறிஸ்தவ பாடசாலையை, போதைபொருட்கள் பாவிப்போரின் புணருத்தான மையங்கள் போன்றவற்றை சிறப்பாக நிர்வகிக்க முடியும். ஆனால் அவருக்கு பாரமும், உணர்வுமுள்ள ஊழியத்திலேயே இவ்வரத்தை பாவிக்க முடியும். கிறிஸ்தவ பாடசாலையை நடத்த வேண்டும் என்ற ஆர்வம் அவருக்கு இல்லாதிருந்தால் நிர்வாக திறமை இருக்கின்றபோதும் இதில் அவரால் நிலைத்திருக்க முடியாது.

பின்வரும் கேள்விகளுக்கு பதிலளிக்கின்றபோது, அது உங்களது ஆவிக்குரிய அக்கறையை அல்லது பாரத்தை தீர்மானிக்க உதவும்:

1. எவ்விதமானவர்கள் அல்லது எவ்வித குழுவைச்சேர்ந்தவர்கள் உங்களை அதிகமாக கவருகின்றனர் என்று உணருகிறீர்கள்?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(நீங்கள் ஓர் குறிப்பிட்ட குழவைச் சேர்ந்த மக்களை அழைப்பீர்கள் என்றால், உங்களது ஆவிக்குரிய வரமானது அவர்களது தேவையை சந்திப்பதாக அமையும். உதாரணமாக நீங்கள் சிறுவர்களை காணவும், அவர்களுக்கு தேவனைக்குறித்து கற்றுக்கொடுக்கவும் விரும்புவீர்களாயின் உங்களுக்கு போதிக்கும் வரமுண்டு).

2. உங்கள் உணர்வுகளை அதிகமாக கலங்கடிக்கச் செய்யும் பகுதிகள் எவை?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(தேவன் எதாவது தேவையை சந்திக்கும்படி உங்களை அழைக்கின்றபோது உணர்வுபூர்வமாய் உங்களை கலங்கடிக்கும் உணர்வுகள்).

3. நீங்கள் தோல்வியடையாதவராயின், தேவனுக்காக நீங்கள் எதைச் செய்ய விரும்புகின்றீர்கள்?

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(தேவன் தனிப்பட்ட ஆசைகளை கனப்படுத்துகிறார்).

4. பின்வரும் வசனத்தை பூர்த்தி செய்யவும்: "நான் ஒய்வற்றதும் நம்பிக்கையற்றதுமான சூழலில் வளர்கின்றமையால் அதற்குள் நான் சிக்கிக்கொள்கிறேன்......"

------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(இவ்விதமாக நம்பிக்கையற்ற வேளையில் தேவன் உங்கள் ஆவியுடன் பேசும்போது, எப்பகுதியில் நீங்கள் அவரை ஆராதிக்க வேண்டும் என விரும்புகிறார்).

5. தேவன் என்னை ஒரு விஷேடமான ஊழியத்திற்காக அழைத்திருக்கின்றார். ஆது.....

(ஊழியத்தின் விஷேடப் பகுதிகளை தேவன் அழைத்துள்ளார் என்ற நிச்சயம் உங்களுக்கிருக்குமாயின் உங்களது ஆவிக்குரிய வரத்தை இலகுவாக உறுதிப்படுத்திக் கொள்ள முடியும். அழைப்பை நிறைவேற்றிக் கொள்ளும்படியான வழிவகைகளையே தேவன் எப்போதும் தருவார். இப்பாடத்திலுள்ள “மேலதிக படிப்பினைக்கு” என்ற பகுதி ஆவிக்குரிய அழைப்பை அடையாளம் காண உதவும்).

6. நினைக்கின்ற போது அல்லது பாவிக்கின்றபோது மிகவும் சந்தோஷத்தைக் கொண்டு வரும் வரங்கள் என்ன? (உதாரணமாக: கற்பிக்கும் போது சந்தோஷமடைகிறீர்களா? மக்கள் உங்கள் வீட்டிற்கு வருகின்ற போது உபசரிப்பதையிட்டு மகிழ்ச்சியடைகின்றீர்களா? தேவனுடைய ஊழியத்திற்காக பெருந்தொகையான பணத்தை மனப்பூர்வமாய் கொடுக்க விரும்புகிறீர்களா?)

### எட்டாவது படி - கிறிஸ்தவ தலைவரால் ஆராயப்படுதல்:

உங்களுடைய ஆவிக்குரிய திறமைகளை கிறிஸ்தவ தலைவர் ஆராய்தல் வேண்டும். பின்வரும் கேள்விகளை கேட்டு பதில்களை பதிவு செய்யுங்கள்:

1. கிறிஸ்தவ சேவையின் எப்பகுதிகளை அவதானிக்கின்ற போது அது செயல்திறன் கொண்டதாக இருக்கிறது?

2. எனது செயல்திறன்களை நான் அவதானித்ததின் அடிப்படையில், உனக்கு என்ன ஆவிக்குரிய வரம் உண்டு என விசுவாசிக்கின்றாய்?

### ஒன்பதாவது படி - உங்களது கடந்த கால கிறிஸ்தவ ஆராதனையை ஆராயுங்கள்:

1. கடந்த காலத்தில் கிறிஸ்தவ ஊழியத்தில் எப்பகுதியில் ஊழியம் செய்தீர்கள்?

2. இவற்றில் எது செயற்திறன்மிக்கதாக இருந்தது?

3. இவ்வூழியத்தை செய்கிற போது எது பெரிதான சந்தோஷத்தை தரும் அனுபவமாக இருந்தது?

4. உனது ஆவிக்குரிய தலைவர் அல்லது மற்றவர்கள் நீர் செயல்திறனுள்ளவராக இருப்பதை அவதானித்துள்ளார்களா?

**பத்தாவது படி - ஆவிக்குரிய வரம் பற்றிய கேள்விகளை நிறைவு செய்தல்:**

1. இப்பாடத்தில் இறுதிபகுதி ஆவிக்குரிய வரம் பற்றிய இரண்டு கேள்விகளைக் கொண்டிருக்கும். அதற்கு பதிலளிக்கின்ற போது நீங்கள் கொண்டுள்ள ஆவிக்குரிய வரம் எது என்று கண்டறிய அது உதவி செய்யும்.

**பதினொன்றாவது படி - உங்களிடத்தில் இருக்கின்றது என்று நீங்கள் எண்ணுகிற வரத்தை அடையாளம் காணுதல்:**

உங்களிடத்தில் இருக்கின்றது என காணும் வரத்தை கீழுள்ள அடிப்படையில் அடையாளம் காணுங்கள்:

1. வரங்களைபற்றிய அறிவை கற்றுக்கொள்வதின் மூலம் பெறலாம்.
2. ஜெபத்தின் மூலமாக தேவன் அதை வெளிப்படுத்தலாம்.
3. உங்களை ஆராய்ந்து பார்ப்பதின் மூலம் அறியலாம்.
4. முக்கியமான கிறிஸ்தவ தலைவர் உங்களை அவதானிப்பதின் மூலம் அறியலாம்.
5. உங்கள் ஊழியத்தின் செயல்திறன்மிக்க பகுதியை ஆராய்ந்து பார்த்தால் முன்னர் செய்ததை காண்பீர்கள்.
6. ஆவிக்குரிய வரங்கள் பற்றி கேள்விகளை முடிவுக்கு கொண்டு வரவும்

“பதின்மூன்றாம்” படியிலுள்ள வரங்கள் பற்றி பட்டியலை பின்பற்றுங்கள். உங்களுக்குண்டு என்று எண்ணுகிற வரத்திற்கு முன் அடையாளமிடவும்.

**பதின்ரெண்டாவது படி - ஆவிக்குரிய தேவைகளை அடையாளம் காணுதல்:**

உங்களது அயலானரினதும், சமுதாயத்தினரினதும், சபையினதும் ஆவிக்குரிய தேவைகளை ஆராயவும். இந்த பட்டியலின் தேவைகளை மீட்டல் செய்யவும்:

**சந்தித்தல்:** வியாதியஸ்தரை, சபைக்கு வந்த புதியவர்களை, சபை அங்கத்தவர்களை, வைத்தியசாலையில், விதவைகளை, சிறைச்சாலையில், மரண வீட்டை, முதியோர் இல்லத்தை.

**சுவிசேஷத்தை அறிவித்தல்:** வீட்டுக்கு வீடு, சுவிசேஷ ஆராதனைகள், திறந்த வெளி கூட்டம், திறந்த வெளி ஆராதனைகள்.

**பின் தொடர் ஊழியம்:** புதிதாக இரட்சிப்படைந்தோரை.

**ஆலோசனை வழங்கள்:** பொதுவான ஆலோசனை அல்லது விசேட குழுவினருக்கு, தொலைபேசியில் அல்லது விசேட குழுவினருக்கு, தொலைபேசியில் ஆலொசனை.

**காரியாலயம் காரியாலயம் அல்லது நிர்வாக உதவி:** தட்டச்சு செய்தல், வரைதல், கோவைப்படுத்தல், பொருத்துதல், மீள உருவாக்கும் பொருட்கள், தபாலிடுதல், தொலைபேசி, பதிவு செய்தல்.

**உபசரித்தல்:** உணவு சமைத்தல், தேவையுள்ளோரை வீட்டில் தங்க வைத்தல் அல்லது சந்தித்து ஊழியம் செய்தல், சுவிசேஷகர்களை, கிறிஸ்தவர்களை.

**ஏழைகளுக்கு ஊழியம் செய்தல்:** உணவு, உடை, உறையுள் கொடுத்தல்.

**சபை கட்டிடத்தை பராமரித்தல்:** இயற்கைக்காட்சிகளை வரைதல், நிறம் தீட்டுதல், தச்சு வேலை செய்தல், மின்சார வேலைகள், குழாய்களை திருத்துதல், சுத்தம் செய்தல்.

**இசை:** பாடற்குழு, இசைக்கருவிகள், பாடற்குழு தலைவர், விசேட இசைக்குழுக்கள், பாடகர், இசைக்குறிப்புகளை எழுதுவோர்.

**சமய நாடகங்களை தயாரித்தல்:** கிறிஸ்தவ நாடகங்களை எழுதுதல் அல்லது தயாரித்தல்.

**நிதி:** நிதி உதவியை பெருக்குதல், கணக்கிடுதல், ஊழியங்களுக்காக நிதி திட்டமிடல்.

**எழுதுதல்:** கிறிஸ்தவ புத்தகங்கள், செய்தி அறிக்கைகள், துண்டு பிரதிகள், செய்திகள், சஞ்சிகைக்கான கட்டுரைகள், கவிதைகள்.

**ஒலி, ஒளி:** ஒலி, ஒளி நாடாக்கள், வானொலி, தொலைக்காட்சி, செய்மதி காட்சிகள்.

**விசேட குழுவினருக்கான ஊழியங்கள்:** செவிடர், குருடர், மனோவியாதியுள்ளோர், மயக்க மருந்தின் பாதிப்புள்ளோர், போதைவஸ்துக்கு அடிமையானோர், புலம் பெயர் தொழிலாளர், பயங்கர குற்றவாளிகள், திருமணமாகாது தாயானவர்கள், ஒரு பாலுணர்வுள்ளோர், யூதர்கள், சிறுபான்மையினர், பெண்கள், ஆண்கள், குடும்பங்கள், தம்பதிகள், துஷ்பிரயோகத்திற்குட்பட்ட சிறுவர், ஓடிப்போனோர், பாடசாலையை பாதியில் விட்டோர், படிப்பற்றோர், சிறைக்கைதிகள், இராணுவத்தினர், சிறுவர்கள், வாலிபர்கள், முதியோர்.

**சபையின் சபையின் ஊழியர்கள்:** மூப்பர், உதவி ஊழியர்கள், உதவி ஊழியக்காரிகள், ஓய்வு நாட் பாடசாலை ஆசிரியர்கள், வரவேற்பாளர், நிர்வாக குழுவினர், கட்டிட, நிதிக்குழுவினர்.

**மொழிபெயர்ப்புகள்:** வேதாகமம், கிறிஸ்தவ இலக்கியங்கள்.

**கிறிஸ்தவ கல்வி:** ஓய்வுநாள் பாடசாலை, விடுமுறை வேதாகம பாடசாலை, கிறிஸ்தவ பாடசாலை, தொடக்க பள்ளி, உயர் நிலைப்பள்ளி, கல்லூரி, சர்வதேச அறுவடை நிறுவனத்தால் நடத்தப்படும் உதவி ஊழியர் பாடநெறிகள், வீட்டு வேதாகம படிப்புக்கள்.

**தூதுப்பணியாளர் அல்லது சபை ஸ்தாபிப்போர்:** உங்கள் பிராந்தியத்திலுள்ள தேசத்திலுள்ள சந்திக்கப்படாத மக்கள்.

**இலக்கியங்கள்:** கிறிஸ்தவ வாசிகசாலை, புத்தக சாலை, வேதாகம அல்லது கிறிஸ்தவ இலக்கிய பகிர்ந்தளிப்பவர்கள்.

**முகாம்களும் ஒன்று கூடல்களும்.**

இப்போது கேள்விகளுக்கு பதிலளியுங்கள்.

1. உங்கள் அயலத்தாரின் எத்தேவைகள் நிறைவு செய்யப்படாமல் இருக்கின்றது?

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

2. உங்கள் சமுதாயத்தின் எத்தேவைகள் நிறைவு செய்யப்படாமல் இருக்கின்றது?

---------------------------------------------------------------------------------------------------------------------------------------

3. உங்கள் சபையின் எத்தேவைகள் நிறைவு செய்யப்படாமல் இருக்கின்றது?

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

## பதின்மூன்றாவது படி - ஆவிக்குரிய தேவைகளை நிரப்புங்கள்:

உங்கள் ஆய்வுகளை செய்து முடித்திருக்கின்றபோதும் உங்கள் வாழ்க்கைக்கும், ஊழியத்திற்கும் பிரயோசனப்படுத்தும்படியான காரியம் இல்லை எனக் காண்பீர்களாயின், பன்னிரண்டாம் படியை ஒப்பிட்டு பாருங்கள்.

உங்களுக்கு இருக்கின்றது என்று எண்ணுகிற வரத்தை ஆவிக்குரிய தேவையுள்ள இடத்தில், தேவை பூர்த்தயாகும்படி ஒப்புக் கொடுங்கள். உதாரணமாக உங்கள் சபைக்கு போதிப்பவர்கள் தேவையென்றால், உங்களுக்கு போதிக்கும் வரம் உண்டு என்று நீங்கள் விசுவாசிப்பீர்களாயின் இத்தேவையை பூர்த்தி செய்ய முன்வாருங்கள். பின்வரும் பக்கங்களை பாவிக்கவும்:

**ஆவிக்குரிய வரத்துடன் தேவைகளை தொடர்புபடுத்துதல்**

| நான் அடையாளமிடும் ஆவிக்குரிய வரம்(ங்கள்) எனக்கு இருக்கின்றது என விசுவாசிக்கின்றேன் | எனக்கு இவ்வரம் அவசியம் எனது அயலாரையும் சமுதாயத்தையும் சபையையும் சந்திப்பதற்கு |
|---|---|
| .... அப்போஸ்தலர் | ............................................................ |
| .... தீர்க்கதரிசி | ............................................................ |
| .... சுவிசேஷகர் | ............................................................ |
| .... மேய்ப்பர் | ............................................................ |
| .... போதகர் | ............................................................ |
| .... தீர்க்கதரிசனம் | ............................................................ |
| .... போதனை | ............................................................ |
| .... புத்தி சொல்லுதல் | ............................................................ |
| .... ஞானத்தை போதிக்கும் வசனம் | ............................................................ |
| .... அறிவை உணர்த்தும் வசனம் | ............................................................ |
| .... உபசரித்தல் | ............................................................ |
| .... உதவி செய்தல் | ............................................................ |
| .... தலைமைத்துவம் | ............................................................ |
| .... நிர்வகித்தல் | ............................................................ |
| .... கொடுத்தல் | ............................................................ |
| .... இரக்கம் காட்டுதல் | ............................................................ |

.... ஆவிகளை பகுத்தறிதல் ..............................................................................................................

.... விசுவாசம் ..............................................................................................................

.... உபசரித்தல் ..............................................................................................................

.... அந்நிய பாஷை பேசுதல் ..............................................................................................................

.... வியாக்கியானம் செய்தல் ..............................................................................................................

.... அற்புதங்கள் ..............................................................................................................

.... குணமாக்குதல் ..............................................................................................................

**பதின்நான்காவது படி - உங்களது ஊழியத்தை மதிப்பீடு செய்தல்:**

ஊழியம் செய்ததின் பின்னர், வரங்களுடன் ஊழியத்தின் இப்பகுதியை சிறிது நேரம் மதிப்பீடு செய்யவும். அப்போது உங்களது ஆவிக்குரிய வரத்தை சரியானபடி உத்தரவாதத்துடன் பாவித்துள்ளீர்களா என்பதை கண்டு பிடிப்பீர்கள்....

-நீங்கள் ஊழியம் செய்கின்றபோது அப்பகுதியில் நிறைவான கனியுண்டா? ஊங்கள் ஊழியத்தில் சாதகமான முடிவுகள் ஏற்படுகின்றதை காண்கிறீர்களா? என்பதே இதன் அர்த்தம்.

-நீங்கள் நிறைவுள்ளவர்களாயின் உங்கள் ஊழியத்தை குறித்து சந்தோஷப்படுங்கள்.நீங்கள் ஏமாற்றமடைந்திருப்பீர்களாயின் உங்களுக்குரிய வரத்தை அப்பகுதியில் பாவிக்கவில்லை.

-உங்களுடைய ஆவிக்குரிய தலைவர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட விமர்சனங்களின் அடிப்படையில், அவர்கள் சுட்டிக்காண்பித்த நிலையில் நீங்கள் ஊழியம் செய்கின்றீர்கள்.

உங்களுடைய ஆவிக்குரிய தன்மைக்கு ஏற்றபடியாக நீங்கள் தாக்கமுள்ள ஊழியத்தை செய்யாதிருந்தால், உங்கள் பட்டியலை மீள் பரிசீலனை செய்து எவ்வித ஊழியம் செய்ய வேண்டும் என்பதை காண்பிக்கும்படி தேவனிடம் கேளுங்கள்.

அதைரியபபட வேண்டாம்.... ஒருவர் தான் ஒரு நற்செய்தி பணியாளர் என்று எண்ணினார், பின்னர் அவர் தான் ஒரு போதகர் என்பதை அடையாளம் கண்டு கொண்டார் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ளுங்கள். எனவே தான் உங்களிடமுள்ள வரம் எது எனவும், உங்களிடமில்லாத வரம் எது என்றும் அறிந்திருப்பது அவசியம். இதை அறியாதிருந்தால் உங்களது வாழ்க்கையும், ஊழியமும் தாக்கமுள்ளதாக இருக்க தடை ஏற்படும். ஜெபத்துடன் படிமுறைகளையும் ஒன்று சேர்த்து பயிற்சி பெறுவீர்களாயின் விரைவிலேயே உங்களது வரத்தையும் தேவன் உங்களுடைய ஊழியத்தில் கொண்டுள்ள விஷேட இடத்தையும் கண்டு கொள்வீர்கள். ஊழியம் செய்ய ஆரம்பிக்கிற போது சீக்கிரமாகவே வரங்களை நீங்கள் அடையாளம் கண்டு கொள்வீர்கள்.

## சுய பரீட்சை:

١. திறவுகோள் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

٢. உங்கள் ஆவிக்குரிய வரத்தை கண்டுபிடிப்பதின் முக்கியத்துவம் பற்றிய ஐந்து காரணங்களை எழுதுக?

3. உங்களது ஆவிக்குரிய வரத்தை கண்டு பிடிப்பதற்கான 14 படிமுறைகளையும் பட்டியலிடுக.

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன).

## மேலதிக படிப்பினைக்கு

1. உங்களுடைய ஆவிக்குரிய அழைப்பை நிறைவேற்ற தேவன் எப்போதும் வரங்களை கொடுக்க போதுமானவராக இருக்கிறார். அழைக்கப்பட்டுள்ளீர்கள் என்பதை எவ்வாறு அறிவீர்கள்? மோசேயின் அழைப்பில் உள்ள பின்வரும் மாதிரிகளை கற்றுக் கொள்ளுங்கள்:

**தேவன் வழி நடத்தினார்:**

யாத்திராகமம் 3: 1-4ஐ வாசிக்கவும். தேவன் ஆரம்பிக்கின்ற வேலை மூலம், தேவனால் அழைக்கப்படுகிறேன் என்பதை அடையாளம் கண்டு கொள்வதே முதலாவது கொள்கையாக இருக்கிறது. நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதற்கு அவரே உத்தரவாதமுள்ளவராகவும், உங்களோடு தொடர்பு கொள்ள வேண்டியவராகவும் இருக்கிறார்.

தேவன் உங்களுக்கூடாக செய்யப்போவதை கண்டுபிடிக்கும்படிக்கு நீங்கள் அங்கும் இங்கும் ஓட வேண்டியதில்லை. நீங்கள் செய்ய வேண்டியதைக்குறித்து உங்கள் நண்பர்கள் எவ்விதமான அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கின்றார்கள் எனவும் நீங்கள் ஏற்றுக்கொள்ளவும் அவசியமில்லை. சரியான தொடர்பாடலைக் கொண்டு, உங்கள் அழைப்பை தெளிவாக உங்களுக்கு அறிவிப்பது தேவனது உத்தரவாதமாக இருக்கின்றது. அவர் கொடுக்கின்ற அழைப்பை நிறைவேற்றுவதே உங்களுடைய உத்தரவாதமாக இருக்கிறது. எதாவது ஒன்றை சுயமாக தீர்மானித்து செய்வது, அல்லது மற்றவர்கள் சொல்வதால் செய்வது உண்மையான தேவனின் அழைப்பாக இருக்க முடியாது.

**பாரம் இருக்க வேண்டும்:**

இஸ்ரவேல் ஜனங்களைக்குறித்த பாரம் மோசேயின் இருதயத்தில் பல வருடங்களாக இருந்தது. இப்பாரம் அவருக்கு இருந்தமையினால் தான் ஒரு எகிப்தியனைக் கொன்று வனாந்தரத்தில் சஞ்சரித்தார் (யாத்திராகமம் 2:11-15). தேவன் உங்களை ஒரு விசேடமான ஊழியத்திற்கு என்று அழைக்கின்றபோது, ஆழமான பாரத்தை உணருவீர்கள், அப்பகுதியைக் குறித்த ஆர்வம் அக்கறை, மனதுருக்கம் என்பனவும் ஏற்படும்.

**தேவன் கொடுத்துள்ள திட்டத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்:**

பாரமும், ஆர்வமும், அக்கறையும், மனதுருக்கமும் மட்டும் இருந்தால் போதாது. பாரத்தையும், வழிகாட்டலையும் தேவன் தருவது மாத்திரமல்ல, அழைப்பை நீங்கள் பூர்த்தி செய்யுமுகமாக ஓர் திட்டத்தையும் அறிவித்துள்ளார்.

இங்கு தான் அநேகர் தவறிழைக்கின்றனர். அவர்கள் அழைப்பையும், பாரத்தையும் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ளுகின்றார்கள், ஆனாலும் தேவ திட்டத்தை காத்திருந்து பெற்றுக் கொள்ளாமல் விடுவதினால் அழைப்பை பூர்த்தி செய்ய முடியாதிருக்கின்றார்கள்.

தேவன் மோசேக்கு ஓர் திட்டத்தை கொடுத்தார். இஸ்ரவேலரை விடுவிக்கும்படியாக அவனும், ஆரோனும் பார்வோனுக்கு முன் சென்றனர். அவர்கள் வனாந்தரத்திற்கூடாக மக்களை தேவனால் வாக்குபண்ணப்பட்ட தேசத்திற்கு அழைத்துச் சென்றார்கள். உங்களுக்கு அழைப்பையும், பாரத்தையும் தேவன் கொடுத்துள்ளாரேயானால் அவரது திட்டம் உங்கள் ஊழியத்தில் நிறைவேறும்படிக்கு அவருக்கு காத்திருங்கள்.

**தகுதி போதாது (தான் எம்மாத்திரம்) என்ற உணர்வை கொண்டிருக்க வேண்டும்:**

யாத்திராகமம் 3:11ஐ நீங்கள் வாசிப்பீர்களாயின் மோசே தான் எம்மாத்திரம் என்ற உணர்வை கொண்டிருந்தான். அப்பொழுது மோசே தேவனை நோக்கி: "பார்வோனிடத்துக்குப் போகவும், இஸ்ரவேல் புத்திரரை எகிப்திலிருந்து அழைத்துவரவும், நான் எம்மாத்திரம்" என்றான்.

நீங்கள் தேவனிடமிருந்து மெய்யான அழைப்பை பெற்றிருப்பீர்களாயின், நீங்களும் நான் எம்மாத்திரம் என்ற உணர்வையே கொண்டிருப்பீர்கள். (போதுமென்ற மனதுடன் இருப்பீர்களாயின் கவனம்! அது மெய்யான அழைப்பல்ல). தேவன் உங்களை அழைக்கிற போது பெலவீனராய், தகுதியற்றவராய், தேவையுள்ளவராயிருக்க கூடும். அவர் செய்யச் சொன்னதை செய்ய தகுதியில்லை என்று எண்ணுவீர்களாயின், சவால்களைக் கண்டு வியப்படைவீர்கள்.

நீங்கள் ஒரு சிறந்த நிறுவனத்திலேயே இணைந்துள்ளீர்கள். பல நூற்றாண்டுக்காலமாக தேவனுடைய ஆண்களும், பெண்களும் இவ்விதமாகவே உணர்ந்து உள்ளார்கள். தேவன் போதுமானவர் என்று அவர்கள் விசுவாசித்தமையினாலேயே, தங்களுடைய பெலவீனத்தையும், தகுதியற்ற தன்மையையும் மேற்கொண்டு தங்களுடைய அழைப்பை நிறைவு செய்தார்கள். யாத்திராகமம் 3:12ல் தேவன் "நான் உன்னோடே இருப்பேன்" என்று பதிலளித்தார். போதும் என்று சுய திருப்தியோடு வாழ்கின்றவர்களை தேவன் கவனிப்பதில்லை. தேவன் யார் என்பதையும் நீங்கள் யார் என்பதையும் நினைவில் கொள்வது முக்கியமாகும்!

2. தேவனுடைய அழைப்பை பெற்ற மற்ற வேதாகம மனிதர்களின் வாழ்க்கைகளைக் குறித்தும் வாசியுங்கள். உதாரணமாக நியாயாதிபதிகள் 6ம் அதிகாரத்தில் கிதியோன் பற்றியும், எரேமியா முதலாம் அதிகாரத்தில் எரேமியாவை பற்றியும் வாசியுங்கள்.

3. பின்வரும் பரிசோதனையின் பட்டியலானது, பயிற்சி பெற வேண்டிய படிமுறைகளை நிறைவுசெய்யவும், ஆவிக்குரிய வரங்களை கண்டுபிடிக்கவும் உதவும்.

முதலாம் படி: .......... நான் மறுபடியும் பிறக்க வேண்டும்.

இரண்டாம் படி: .......... நான் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற வேண்டும்.

மூன்றாம் படி: .......... நான் பல்வேறுப்பட்ட ஆவிக்குரிய வரங்களை அடையாளம் காண வேண்டும்.

நான்காம் படி: .......... வரங்களின் முதிர்ச்சியின் மாதிரிகளை அவதானிக்க வேண்டும்.

ஐந்தாம் படி: .......... உபவாசத்தோடும், ஜெபத்தோடும் ஆவியின் வரத்தை தேட வேண்டும்.

ஆறாம் படி: .......... எனது ஆவிக்குரிய தலைவர்களிடம், எனக்குரிய வரத்தை தேவன் காண்பிக்கும்படிக்கு என்மேல் தமது கரங்களை வைத்து ஜெபிக்கும்படி கூற வேண்டும்.

ஏழாம் படி: .......... எனது ஆவிக்குரிய ஆர்வத்தை ஆராய வேண்டும்.

எட்டாம் படி: .......... எனது ஆவிக்குரிய ஆர்வத்தை எனது ஆவிக்குரிய தலைவரால் ஆராயப்பட வேண்டும்.

ஒன்பதாம் படி: .......... எனது கடந்த கால கிறிஸ்தவ ஊழியத்தைக்குறித்து நான் ஆராய வேண்டும்.

பத்தாம் படி: .......... ஆவிக்குரிய கேள்விகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

பதினொன்றாம் படி .......... எனக்கு இருக்கின்றது என நான் எண்ணுகிற ஆவியானவருடைய வரத்தை அடையாளம் காண வேண்டும்.

பதின்ரெண்டாம் படி .......... எனது வீட்டிலும், சமுதாயத்திலும் சபையிலுமுள்ள ஆவிக்குரிய தேவைகளை அடையாளம் காண வேண்டும்.

பதின்மூன்றாம் படி .......... எனது வரம் நிறைவேற்றப்படவும், ஆரம்பிக்கப்படவும் நான் பொருத்தமானவரா?

பதின்நான்காம் படி .......... எனது ஊழியத்தை நான் மதிப்பீடு செய்த போது அது சிறப்பாக உள்ளது என்று கண்டு கொண்டேன்.

## ஆவிக்குரிய வரங்களுக்கான கேள்விகள்

இரு இரண்டு விதமான கேள்விகள் இருக்கின்றன. ஒன்று விசேட வரமான அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, சுவிசேஷகர், மேய்ப்பன், போதகன் பற்றியது. மற்றவை ஆவிக்குரிய வரங்களைப் பற்றியவை. நீங்கள் சகல கேள்விகளுக்கும் ஆம் அல்லது இல்லை என்ற பதிலையே கூற வேண்டும்.

உதாரணமாக:

ஆம் அல்லது இல்லை

(ஆ) ( ) 1. தேவன் உங்களை தலைமைத்துவத்திற்கு அழைத்துள்ளார் என விசுவாசிக்கின்றீர்களா?

# விஷேட வரங்கள்

## விஷேட வரங்களுக்கான கேள்விகள்:

“விஷேட வரங்கள்” (அப்போஸ்தலர், தீர்க்கதரிசி, சுவிசேஷகர், மேய்ப்பர், போதகர்) சம்பந்தமான கேள்விகள் உங்கள் ஆசைகளையும், வாழ்க்கைமுறைகளையும், மதிப்பீடு செய்யவும், குணாதிசயமும், தகுதியுமுள்ள மக்களுக்கு வெளிப்படுத்திக் காண்பிக்கவும் உதவும். இக்கேள்விகள் உங்களுக்கு உதவும், ஆனால் இது முடிவல்ல என்பதை மனதிற் கொள்ளுங்கள். உங்களது அழைப்பை உள்ளரங்கமாக மதிப்பீடு செய்யுங்கள், வரங்களை தொடர்ச்சியாக பயனுள்ள விதத்தில் பாவியுங்கள், அவ்வரமானது கிறிஸ்துவின் சரீரமாகிய சபைக்குள் இருக்கிற விசுவாசிகளுக்குரிய என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

| ஆம் | இல்லை | | |
|---|---|---|---|
| ( ) | ( ) | 1. | தேவன் உங்களை தலைமைத்துவத்திற்கு அழைத்துள்ளார் என விசுவாசிக்கிறீர்களா? |
| ( ) | ( ) | 2. | நீங்கள் தூதுப்பணியாளராக செல்ல விரும்பினீர்களா? |
| ( ) | ( ) | 3. | பகிரங்கமாக பேசுவதற்குரிய திறமையை தேவன் தந்துள்ளார் என்று விசுவாசிக்கிறீர்களா? |
| ( ) | ( ) | 4. | அவிவிசுவாசிகளிடத்தில் சாட்சியிட வாஞ்சையுண்டா? |
| ( ) | ( ) | 5. | வேதபடிப்பை மேற்கொள்ளும் போது நேரம் செலவிட்டு சந்தோஷமடைகிறீர்களா? |
| ( ) | ( ) | 6. | தேவனுடைய வார்த்தையின், முழு நேர ஊழியத்தில் ஈடுபட வாஞ்சையுண்டா? |
| ( ) | ( ) | 7. | அடிக்கடி இடத்திற்கு இடம் மாறி செல்வதில் சந்தோஷமடைகிறீர்களா? |
| ( ) | ( ) | 8. | பேரிய ஜனக்கூட்டத்தின் முன்னர் பேசும் திறமையுண்டு என்று எண்ணுகிறீர்களா? |
| ( ) | ( ) | 9. | கிறிஸ்தவர்களுக்கு கற்றுக் கொடுப்பதிலும், பயிற்சி கொடுப்பதிலும் பார்க்க அவிவிசுவாசிகளுடன் சுவிசேஷத்தை பகிர்ந்து கொள்வதில் சந்தோஷமடைகிறீர்களா? |
| ( ) | ( ) | 10. | ஸ்தல சபையில் வேலை செய்கின்ற உங்களுக்கு வேறு புதிய இடத்திற்கு செல்லும் சந்தர்ப்பம் ஏற்பட்டால் செல்ல விரும்புவீர்களா? |
| ( ) | ( ) | 11. | உங்களது திருமணமும், குடும்ப பின்னணியும் மற்றவர்கள் பின்பற்றக்கூடியதாக இருக்கின்றது என விசுவாசிக்கிறீர்களா? |
| ( ) | ( ) | 12. | சபைக்கு குறிப்பிட்ட வரம் பெற்ற தலைவர்கள் அவசியம் என்று உணருகிறீர்களா? |
| ( ) | ( ) | 13. | இருக்கின்ற சூழ்நிலையும், சந்தர்ப்பமும் திருப்தியளிக்கக்கூடிய நிலையில் இல்லாதபோது, சீரமைப்பதற்கு உங்களுக்கு வாஞ்சையுண்டா? |
| ( ) | ( ) | 14. | அவிவிசுவாசிகளிடம் சாட்சியிடுவது உங்களுக்கு இலகுவாக இருக்கின்றதா? |
| ( ) | ( ) | 15. | உங்களுக்கு நெருங்கிய பழக்கமில்லாத ஒருவருடன் நட்புகொள்வதில் சந்தோஷமடைகிறீர்களா? |
| ( ) | ( ) | 16. | நீங்கள் இரக்க, தயாள குணமுள்ளவர் என்று மற்ற மக்கள் உங்களைக்குறித்து அறிந்துள்ளார்களா? |
| ( ) | ( ) | 17. | நீங்கள் எப்போதாவது தேவனுக்கு என்று ஊழியத்தை ஆரம்பித்த போது, பயிற்சி பெற்ற மற்றவர்கள் என்ன செய்கின்றனர் எனவும், ஊழியம் எவ்வாறு வளருகின்றது என்றும் கவனித்தீர்களா? |
| ( ) | ( ) | 18. | மக்களுக்கு அவசியமான சூழ்நிலையில் தேவனுடைய வார்த்தையை துணிச்சலுடன் ஆவியானவரின் அனுக்கிரகத்தோடு பேச விரும்புகிறீர்களா? |

( ) ( ) 19. உத்தரவாதத்தையும், கடமைகளையும் விட்டு விட்டு சாட்சி சொல்ல வாஞ்சையுண்டா?

( ) ( ) 20. மக்களுடன் வேலை செய்யவும், அவர்களுடைய தனிப்பட்ட பாரங்களையும், பிரச்சனைகளையும், கேள்விகளையும் வேறொருவருடன் உத்தரவாதத்தை பங்கிட்டு கொள்ள விரும்புகிறீர்களா?

( ) ( ) 21. நுான் ஒரு நல்ல ஒழுக்கமான நபர் என்று உங்களைக் குறித்து உங்களால் கூற முடியுமா?

( ) ( ) 22. வேறொரு நாட்டில் அல்லது வேறு கலாச்சாரத்தை சேர்ந்தவர்களோடு வாழுவது இலகுவானது என கருதுகிறீர்களா?

( ) ( ) 23. தேவனுடைய வார்த்தையை நீங்கள் பேசுகின்ற போது மற்றவிசுவாசிகள் குற்றவாளிகள் என தீர்ப்பிடுகிறீர்கள் என்றா உணருகின்றனர்?

( ) ( ) 24. நற்செய்தியை பகிர்ந்தளிக்கும் வரம் உங்களிடமுண்டு என்று யாராவது கூறினதுண்டா?

( ) ( ) 25. தொடர்ந்து கற்பிக்கும் ஊழியத்தில் பங்கு கொள்ளுவதின் மூலம் மகிழ்ச்சியடைகின்றீர்களா?

( ) ( ) 26. நீங்கள் விருந்தோம்பல் குணம் கொண்டவர் என்றும், உங்கள் வீட்டில் மற்றவரைகளை கொண்டு சந்தோஷப்படுகின்றீர்கள் என உங்களால் கூற முடியுமா?

( ) ( ) 27. கடினமும், மாறுபட்டதுமான சூழ்நிலையின் நடுவே துன்பங்களைப்பொறுத்து, அதற்கான காரணத்தை எளிதாக கண்டு பிடிப்பீர்களா?

( ) ( ) 28. தேவனுடைய வார்த்தையை தேவையுள்ளோரிடம் பகிர்ந்தளிக்கின்றபோது, கேட்பதற்கு அவர்கள் காத்திருக்க வேண்டும் என்ற ஆக்கிரமிப்பு தன்மை உங்களுக்குண்டா?

( ) ( ) 29. விசுவாசிகளுக்கு கற்று கொடுப்பதிலும், பயிற்சியளிப்பதிலும் பார்க்க இரட்சிக்கப்படாதவர்களை சந்திக்க வேண்டும் என்ற ஆர்வமும், அக்கறையும் உங்களுக்குண்டா?

( ) ( ) 30. விசுவாசிகளுக்கு பயிற்சி கொடுக்கவும், அவர்களது ஆவிக்குரிய வரத்தை கர்த்தருடைய ஊழியத்திற்காக எவ்வாறு பயன்படுத்தலாம் என்ற பாரமும் உங்களுக்கு உண்டா?

( ) ( ) 31. குறைந்தளவான வருமானத்தை பெறும் உங்களால் நிதி நெருக்கடியினால் மன உளைச்சலும், பண வரவை அதிகரிக்க வேண்டும் என்ற ஆசையும் கொண்டு வாழுகின்றவரா நீங்கள்?

( ) ( ) 32. குடும்ப, பொருளாதார உத்தரவாதம் இன்றி இருக்கின்றமையால் வேறு நாட்டில், வேற்று கலாச்சார மக்களுடன் சென்று வாழ விரும்புகிறீர்களா?

( ) ( ) 33. தனிப்பட்ட ரீதியாக பேசுவதை விட, பகிரங்கமாக பேசுவதில் உங்களுக்கு சரிவு நிலை உண்டா?

( ) ( ) 34. நீங்கள் கிறிஸ்துவுக்காக சாட்சியிட சந்தர்ப்பங்களை எதிர் நோக்கி தீவிரமாக காத்திருக்கும் நபரா?

( ) ( ) 35. நீங்கள் வேதபாடங்களை ஆராய்வதில் அதிக நேரம் செலவிடுகின்றவரா?

( ) ( ) 36. நீங்கள் மூன்று ஆண்டு காலத்திற்கு மேலான கிறிஸ்தவரா?

( ) ( ) 37. குிறிஸ்துவுக்காக மக்களை ஆதாயப்படுத்தும் திறமையுண்டு என உங்களைக்குறித்து எண்ணுகிறவராயிருப்பதினால், மற்றவர்களுக்கு மேய்ப்பனாக வருவதற்கு பயிற்சியளிக்க விரும்புகிறீர்களா?

( ) ( ) 38. தேவனுடைய வார்த்தையை போதிக்கும் அனுபவம் கொண்டவராக நீங்கள் இருப்பதினால் நீங்கள் பேசுவதை கேட்க மக்கள் ஒன்றாக கூடுவதை உணர்ந்துள்ளீர்களா?

( ) ( ) 39. ஒவ்வொரு நாளின் ஆரம்பத்திலும், அவிவிசுவாசிகளுக்கு நற்செய்தியை பகிர்ந்துகொள்ள ஆசையுடனும், எதிர்ப்பார்ப்புடனும் இருக்கின்றீர்களா?
( ) ( ) 40. யாராவது ஒருவர் நீங்கள் ஒரு மேய்ப்பன் அல்லது போதகர் என்று எப்போதாவது கூறினதுண்டா?
( ) ( ) 41. நீங்கள் குடும்பத்தை அல்லது ஒருவணிக நிறுவனத்தை நிர்வகிப்பதை பார்க்கிலும் மக்கள் வெற்றிகரமாக செயல்படுகிறீர்கள் எனக் கூறுகிறார்களா?
( ) ( ) 42. நீங்கள் எளிதாகவும், விரைவாகவும் அந்நியரை கண்டுபிடித்து, பழகி உபசரிக்கின்றவரா?
( ) ( ) 43. நீங்கள் அடிக்கடி தார்மீக பிரச்சனைகள் பற்றியும், பல்வேறுப்பட்ட சூழ்நிலைகளில் ஏற்படுகின்ற தவறுகளுக்கு எதிராக பேசும் வாஞ்சை கொண்டவரா?
( ) ( ) 44. அடிக்கடி அவிவிசுவாசிகளுடன் இயேசு கிறிஸ்துவைப்பற்றியும் அவரது வேலை பற்றியும் உரையாடுவீர்களா?
( ) ( ) 45. பிரச்சனைகள் கொண்ட மக்களுடன் நேர்மறையிலும், அன்பான முறையிலும் சேவையாற்றும் திறனை தேவன் கொடுத்துள்ளார் என நம்புகின்றீர்களா?
( ) ( ) 46. சபைக்கு வரமாக கொடுக்கப்பட்ட தலைவர் நீங்கள் என்று மற்ற விசுவாசிகள் நம்புகிறார்களா?
( ) ( ) 47. தலைமைத்துவ திறமைகளைக் கொண்டவர்களுக்கு எளிதாக உங்களுடைய பொறுப்புகளை ஒப்படைக்க முன்வருவீர்களா?
( ) ( ) 48. நீங்கள் மிகவும் பயனுள்ள பேச்சாளர் என்று மற்றவர்கள் விபரிக்கின்றார்களா?
( ) ( ) 49. அவிவிசுவாசிகளுக்கான பாரம் உண்டு என உங்களால் கூறமுடியுமானால், பெரும்பாலும் கட்டுப்பாட்டுடன் அதை கூறவும், செய்யவும் முற்படுவீர்களா?
( ) ( ) 50. மக்களுக்குள்ள ஆவிக்குரிய தேவைகளை கவனிக்கும் உத்தரவாதத்தை கொண்ட நீங்கள் மகிழ்ச்சியுடன் அதை செய்கிறீர்களா?

**விஷேட வரங்களுக்கான மதிப்பீட்டு அறிக்கை:**

கேள்வித்தாளை முடித்தபின்னர் அடுத்த பக்கத்திலுள்ளதையும் பூர்த்தி செய்யுங்கள். கேள்விகளுக்கு ஆம் என்று எழுதியிருந்தால் அதன் இலக்கத்திற்கு முன் அதை குறிப்பிடவும். எந்த விடைகளுக்கும் அடையாளமிட வேண்டாம். ஆம் என்று குறிப்பிட்ட கேள்விகளுக்கான பதிலுக்கு மட்டுமே அடையாளமிடவும்.

உதாரணம்: ஒருவர் 1,6,13 ஆகிய கேள்விகளுக்கு ஆம் என குறிப்பிட்டிருந்தால், இந்த இலக்கம் கொண்ட எண்ணுக்கருகில் அடையாளமிட வேண்டும்:

பொதுவான தராதரங்கள்:

| (நான்கு வரமும் கொண்ட நபர்கள்) | தீர்க்கதரிசி (பிரசங்கி) |
|---|---|
| (X) #1 | ( ) #3 |
| (X) #6 | ( ) #8 |
| (X) # 11 | (X) #13 |

அவர் 11, 3, 8 ஆகிய கேள்விகளுக்கு இல்லை என்று பதிலளித்திருந்தால் அதை விடைதாளில் அடையாளமிட தேவையில்லை. இப்போது உங்களுடைய பதிலை மதிப்பீடு செய்யுங்கள்:

பொதுவான தராதரங்கள்:

| (நான்கு வரமும் கொண்ட நபர்கள்) | தீர்க்கதரிசி (பிரசங்கி) |
|---|---|
| ( ) #1 | ( ) #3 |
| ( ) #6 | ( ) #8 |
| ( ) #11 | ( ) #13 |
| ( ) #16 | ( ) #18 |
| ( ) #21 | ( ) #23 |
| ( ) #26 | ( ) #28 |
| ( ) #31 | ( ) #33 |
| ( ) #36 | ( ) #38 |
| ( ) #41 | ( ) #43 |
| ( ) #46 | ( ) #48 |

| அப்போஸ்தலர் (மிஷனரி) | சுவிசேஷகர் | போதகர் அல்லது மேய்ப்பன் |
|---|---|---|
| ( ) #2 | ( ) #4 | ( ) #5 |
| ( ) #7 | ( ) #9 | ( ) #10 |
| ( ) #12 | ( ) #14 | ( ) #15 |
| ( ) #17 | ( ) #19 | ( ) #20 |
| ( ) #22 | ( ) #24 | ( ) #25 |
| ( ) #27 | ( ) #29 | ( ) #30 |
| ( ) #32 | ( ) #34 | ( ) #35 |
| ( ) #37 | ( ) #39 | ( ) #40 |
| ( ) #42 | ( ) #44 | ( ) #45 |
| ( ) #47 | ( ) #49 | ( ) #50 |

**விஷேட வரங்களுக்கான குறிப்புகள்:**

முன்னர் பாவித்த மதிப்பீட்டு அறிக்கையை பாவித்து, பின்வரும் பக்கத்திலுள்ள ஆவிக்குரிய வரங்களின் மதிப்பீட்டு அறிக்கையை பூர்த்தி செய்யவும். ஒவ்வொரு வரத்திலும் உள்ள பெட்டிகளின் இலக்கங்களை எண்ணி அடையாளமிடவும். (ஆம் என்ற கேள்விகளுக்குரிய விடையை மட்டுமே அடையாளம் இட வேண்டும்). சரியான விபரங்களை அறியும்படிக்கு வரிகளை உருவாக்கவும்.

உதாரணம்: ஒருவருடைய மதிப்பீட்டு அறிக்கை அடையாளம் பண்ணப்பட்டிருப்பதை கவனிக்கவும்:

| பொதுவான தராதரங்கள் | தீர்க்கதரிசி (பிரசங்கி) |
|---|---|
| ( ) #1 | ( ) #3 |
| (x) #6 | ( ) #8 |
| ( ) #11 | ( ) #13 |
| ( ) #16 | (x) #18 |
| (x) #21 | ( ) #23 |
| (x) #26 | ( ) #28 |
| (x) #31 | (x) #33 |
| ( ) #36 | ( ) #38 |
| ( ) #41 | (x) #43 |
| ( ) #46 | (x) #48 |

| அப்போஸ்தலர் (மிஷனரி) | சுவிசேஷகர் | போதகர் அல்லது மேய்ப்பன் |
|---|---|---|
| ( ) #2 | (x) #4 | (x) #5 |
| (x) #7 | (x) #9 | ( ) #10 |
| (x) #12 | (x) #14 | ( ) #15 |
| ( ) #17 | (x) #19 | (x) #20 |
| ( ) #22 | (x) #24 | ( ) #25 |
| ( ) #27 | ( ) #29 | ( ) #30 |
| (x) #32 | (x) #34 | ( ) #35 |
| (x) #37 | (x) #39 | ( ) #40 |
| ( ) #42 | (x) #44 | ( ) #45 |
| ( ) #47 | (x) #49 | ( ) #50 |

இங்கே அவர்கள் பாவித்த அவர்களுடைய பதில்கள் வரைபடமாக:

| | |
|---|---|
| பொதுவாக | → → → → → █ |
| அப்போஸ்தலர் | → → → → → → → █ |
| தீர்க்கதரிசி | → → → → → █ |
| நற்செய்தியாளன் | → → → → → → → → → → → █ |
| போதகர் அல்லது மேய்ப்பன் | → → █ |
| | 1 2 3 4 5 6 7 8 9 10 |

இப்போது, உங்களுடைய மதிப்பீட்டு அறிக்கைளை பாவித்து, உங்களுடைய விசேட வரங்களை எழுதுக:

## விஷேட வரத்திற்கான மதிப்பீட்டு அறிக்கை

| | |
|---|---|
| பொதுவாக | |
| அப்போஸ்தலர் | |
| தீர்க்கதரிசி | |
| நற்செய்தியாளன் | |
| போதகர் அல்லது மேய்ப்பன் | |
| | 1 2 3 4 5 6 7 8 9 10 |

நீண்ட சட்டம் உங்களுடைய உயர்வான மதிப்பெண்களை கொண்டது:

குறுகிய சட்டம் உங்களுடைய தாழ்வான மதிப்பெண்களை கொண்டது:

## விஷேட வரங்கள்

**விஷேட வரங்களுக்கான கேள்விகள்:**

| ஆம் | இல்லை | | |
|---|---|---|---|
| ( ) | ( ) | 1. | நீங்கள் சிறந்த பொதுவான பேச்சாளர் என்று உங்களை விபரிப்பீர்களா? |
| ( ) | ( ) | 2. | வேதாகம ஆய்வுக்காக நேரத்தை செலவிடவும், அதில் சந்தோஷமும் அடைவீர்களா? |
| ( ) | ( ) | 3. | மக்களின் தனிப்பட்ட மற்றும் உணர்வுபூர்வமான பிரச்சனைகளை பகிர்ந்து கொள்வதில் சந்தோஷமடைவீர்களா? |
| ( ) | ( ) | 4. | தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்ளவும், வேதத்தைப்பற்றி அறிந்து கொள்ளவும், விஷேட திறனை தேவன் கொடுத்துள்ளார் என உணருகிறீரா? |
| ( ) | ( ) | 5. | தேவனுடைய வார்த்தையை கற்றுக்கொள்ளவும், வேதத்தை பற்றி அறிந்து கொள்ளவும், விசேட திறனை தேவன் கொடுத்துள்ளார் என உணருகிறீரா? |
| ( ) | ( ) | 6. | மற்றவர்கள் பல்வேறு பணிகளையும், ஊழியங்களையும் செய்ய ஊக்கப்படுத்துவதில் மகிழ்ச்சியடைகிறீர்களா? |
| ( ) | ( ) | 7. | உங்களால் மிக எளிதாக தீர்மானங்களை எடுக்க முடியும் என்று மற்றவர்கள் கூறுகின்றார்களா? |
| ( ) | ( ) | 8. | அவர்கள் செய்ய வேண்டிய காரியத்தை பார்க்கிலும் நடைமுறைக் காரியங்களைக்குறித்து அதிகம் கவனம் செலுத்துவீர்களா? |
| ( ) | ( ) | 9. | ஒருவர் உதவி தேவை என்று சொல்லிக் கேட்கும் போது, உடனடியாகவே சேவையை ஆரம்பித்துவிடுவீர்களா? |
| ( ) | ( ) | 10. | உதவி செய்வதிலும் பார்க்க கையேடுகள் தயாரிக்க முன்வருவீர்களா? |
| ( ) | ( ) | 11. | வியாதியஸ்தரை அல்லது இயலாதவரை சந்திக்கும்போது மகிழ்ச்சியடைவீர்களா? |
| ( ) | ( ) | 12. | உங்கள் வீட்டிலுள்ள பெரும்பாலானோர் எவ்வித முன்னறிவிப்புமின்றி உங்களுடன் வெளியே செல்வதை வசதியானதென்று உணருவீர்களா? |
| ( ) | ( ) | 13. | மற்ற விசுவாசிகள் ஏற்றுக்கொள்ள மறுக்கும் காரியத்தை உங்களால் நம்பும் திறன் உண்டு என கண்டுபிடித்துள்ளீர்களா? |
| ( ) | ( ) | 14. | சரியானது, பிழையானது எது என்று அறியும் ஆற்றல் எப்போதும் உங்களுக்குண்டு என்று மற்ற விசுவாசிகள் சொல்வது உண்டா? |
| ( ) | ( ) | 15. | சூழ்நிலைகள் சரியாக இல்லாதிருக்கும் போது, திருந்தும்படியாக பேச வேண்டும் என்ற பாரம் ஏற்படுவதுண்டா? |
| ( ) | ( ) | 16. | சிக்கல்களுக்கும், கேள்விகளுக்குமான பதில்களைக் கொடுக்க நீங்கள் விரும்புவதுண்டா? |
| ( ) | ( ) | 17. | மக்கள் தமது தனிப்பட்ட பிரச்சனைகளுக்கான ஆலோசனைகளை உங்களிடம் பெற்றுக்கொள்ள விரும்புகின்றனர் எனக் கண்டுள்ளீர்களா? |
| ( ) | ( ) | 18. | மற்றவர் என்ன செய்வது என்று தெரியாதிருக்கின்ற சந்தர்ப்பங்களில் என்ன செய்ய வேண்டும் என்று உடனடியாகவே கண்டு கொள்வீர்களா? |
| ( ) | ( ) | 19. | வேதாகமத்தில் புரிந்து கொள்ள முடியாதுள்ள தமது கேள்விகளுக்கும், கடின பிரச்சனைகளுக்கும் பதிலை தேடி மக்கள் உங்களிடம் வருகின்றார்களா? |
| ( ) | ( ) | 20. | விசுவாசி என்ற ரீதியில் உங்கள் ஊழியத்தில், ஊழியத்திற்காக இலக்குகளையும், குறிக்கோள்களையும் கொண்டுள்ளீர்களா? |
| ( ) | ( ) | 21. | மற்றவர்களுக்காக நீங்கள் முடிவெடுக்கின்றபோது பொறுப்புள்ள உணர்வுடன் நடந்து கொள்வீர்களா? |
| ( ) | ( ) | 22. | நீங்கள் வழக்கமாக பெரிய காரியங்களை செய்கின்றபோது கொண்டுள்ள |

மகிழ்வை போன்று சாதாரண சிறிய காரியங்களை செய்யும் போதும் கொள்கின்றீர்களா?

( ) ( ) 23. உதவி செய்யும் ஊழியத்தின் போது, மற்றவர்களின் வேலையில் அவர்கள் இன்னும் திறம்பட செய்ய உதவுவீர்களா?

( ) ( ) 24. ஒருவருக்கு தேவைகள் இருக்கின்றது எனக் கேள்விப்படும் போது அவர்களுக்கு பணம் அனுப்புவதற்கு உடனடியாக எண்ணுகின்றீர்களா?

( ) ( ) 25. ஒருவர் மருத்துவமனையில் இருக்கிறார் என கேள்விப்பட்டால் அவரை உற்சாகப்படுத்தவும், ஊக்குவிக்கவும் வேண்டும் என்ற சவால் ஏற்படுகின்றதா?

( ) ( ) 26. உங்கள் வீட்டிற்கு விருந்தினர் வராதிருப்பது, உங்கள் வாழ்வில் ஏதோவொன்றை தவறவிட்டுவிட்டீர்கள் என்ற உணர்வை கொண்டு வருகிறதா?

( ) ( ) 27. ஒன்றுமே செய்ய முடியாது அல்லது சாத்தியமில்லை என்று மக்கள் கூறும் போது, அது தேவனால் செய்ய முடியும் என்ற உணர்வு உங்களில் ஏற்படுகிறதா?

( ) ( ) 28. மக்களை விளங்கிக் கொள்ள முடியாத சூழ்நிலையில் அவர்களை அறிந்து கொள்ளவில்லையே என எண்ணுகின்றீர்களா?

( ) ( ) 29. குழுவினரிடையே பிரச்சனை ஏற்படுகிறபோது பிரச்சனையை கையாளுவதற்காக சார்பாக பேசுவதற்காக அல்லது அமைதியாயிருக்கவோ விரும்புவீர்களா?

( ) ( ) 30. கேள்வியை அல்லது பிரச்சனையை கேட்கும்போது, பதில் கொடுக்க நீங்கள் இருவரும் ஆவலாக இருப்பீர்களா?

( ) ( ) 31. யாராவது ஒருவருடைய பிரச்சனையைப்பற்றி நேரில் பேசவேண்டும் என்பதற்கு மாறாக யாராவது ஒருவரை உதவி செய்யும்படி அனுப்புவீர்களா?

( ) ( ) 32. மக்கள் பெரும்பாலும் தமது கடினமான சூழ்நிலையில் உங்கள் ஆலோசனையை தேடினால் நீங்கள் என்ன செய்வீர்கள்?

( ) ( ) 33. வேதாகமத்தில் கடினமான ஒரு பகுதியை நீங்கள் அவதானிக்கிறபோது வந்த புதிய சிந்தனைகளை இலகுவாக புரிந்து கொண்டீர்களா?

( ) ( ) 34. யாராவது ஒருவர் தனது வேலையில் செயல்திறன் அற்று இருக்கின்ற போது, அவர் அவ்வேலையை திறம்பட செய்ய உதவுவீர்களா?

( ) ( ) 35. ஒருவருக்கு வழிகாட்டலையும், வழிநடத்துதலையும் கொடுப்பது தார்மீக பொறுப்பு என்ற உணர்வுடன் நீங்கள் செயல்படும்போது, மற்றவர்களுக்கு இது எவ்விதத்தில் பயனைதரும் என்று சிந்திப்பீர்களா?

( ) ( ) 36. நீங்கள் மற்றவர்களைவிட வேலையை திறம்பட செய்து முடித்துள்ளேன் என்று திருப்தியடைந்ததுண்டா?

( ) ( ) 37. தலைமைத்துவத்தில் நீங்கள் மற்றவர்களையும் பார்க்க அதிக ஆதரவை பெறுகின்றதை காண்கிறீர்களா?

( ) ( ) 38. முறையீடுகளை கேட்காமலே, பணம் கொடுக்கும் வாய்ப்பை நீங்கள் தேடி கண்டுபிடித்து விடுவீர்களா?

( ) ( ) 39. உடல்ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளோர் மத்தியில் எளிதாக மகிழ்ச்சியை வெளிப்படுத்த உங்களால் முடியுமா?

( ) ( ) 40. உங்களுக்கு நன்கு அறிமுகமில்லாத மக்கள் வீட்டுக்கு வந்தால் அவர்களை வரவேற்று உபசரிக்க விரும்புவீர்களா?

( ) ( ) 41. ஒன்றும் செய்து முடிக்க முடியாது என்று கூறுபவரை எதிர்த்து நிற்க நினைப்பீர்களா?

( ) ( ) 42. தேவனிலும் பார்க்க பிசாசினால் முன்கொணரப்பட்டது என சொன்னால், இத்தீர்ப்பு சரியானது என்று நீங்கள் தீர்ப்பிடுவீர்களா?

( ) ( ) 43. தவறான நடைமுறைகள் அல்லது தவறான உபதேச கொள்கைகளை குறித்தான காரியங்களுக்குரிய தண்டனையை பற்றி வேதாகமம் கூறுவதை பகிர்ந்து கொள்வீரா?

( ) ( ) 44. கடினமான பிரச்சனைகளை விபரித்துக்கூறும் திறமை உங்களுக்குண்டு என மக்கள் கூறுகின்றார்களா?

( ) ( ) 45. தனிப்பட்ட பிரச்சனைகளுக்குள்ளும், சோதனைகளுக்குள்ளும் உள்ள மக்களை ஊக்குவிக்கின்றபோது சந்தோஷமடைகிறீரா?

( ) ( ) 46. விசுவாசத்தோடு கூடிய சூழ்நிலையைக் குறித்து என்ன நினைக்கின்றீர்கள் என மக்கள் கேட்கும் போது என்ன செய்ய வேண்டும் என உங்களுக்கு தெரியும்?

( ) ( ) 47. கர்த்தருடைய வார்த்தைகளிலுள்ள போதனைகளின் கடின பகுதிகளை, வேதபடிப்பு ஆய்வுமின்றி இலகுவாக விளங்கிக்கொள்ளும் திறன் உங்களுக்குண்டு என அவதானித்துள்ளீர்களா?

( ) ( ) 48. ஒரு வேலையை நீங்கள் செய்வதற்கு மாறாக வேறு யாரையாவது காட்டுவீர்களா?

( ) ( ) 49. மற்றவர்களை வழிகாட்டுவதிலும், அவர்களுக்கு தீர்மானங்களை வழங்குவதற்கும் நீங்கள் சந்தோஷம் அடைவீர்களா?

( ) ( ) 50. குறிப்பிட்ட வேலையை செய்யும்படி கேட்டுக்கொண்ட போது எவ்வித அழுத்தமும், கட்டுப்பாடுமற்ற உணர்வை கொண்டிருப்பீர்கள் என்பது உண்மையா?

( ) ( ) 51. மற்றவர்கள் முக்கியமான வேலையை செய்யும்படிக்கு, அவர்களுக்கு சுதந்திரத்தை கொடுக்கவும், அவர்களது சுமையை குறைக்க வேண்டும் என்ற பாரமும் உங்களுக்கு உண்டா?

( ) ( ) 52. பொருளாதார தேவையுள்ளோருக்கு, எவ்வித திட்டமுமின்றி உடனடியாகவே பணத்தை கொடுத்துதவ முற்படுவீர்கள் என்பதை கண்டுபிடித்துள்ளீர்களா?

( ) ( ) 53. உடல்நிலை பாதிக்கப்பட்டோருடன் பேசுவது எளிமையான விடயமாக உங்களுக்கிருக்கின்றதா?

( ) ( ) 54. மற்றவர்களுக்கு ஊழியம் செய்வதற்கு சிறந்த இடம் உங்களது வீடுதான் என்று எண்ணியதுண்டா?

( ) ( ) 55. ஒரு தீர்மானத்தை எடுக்கும் முன்னதாக ஒரு தெளிவான ஆதாரத்தை அல்லது வழிநடத்தலை கண்டுபிடிக்கும்வரை காத்திருப்பீர்களா?

( ) ( ) 56. நீங்கள் மற்றவர்கள் சொல்லும் அல்லது செய்யும் காரியங்கள் சரியா, தவறா என்று மதிப்பீடு செய்து கண்டுபிடிப்பீர்களா?

( ) ( ) 57. தேவனுடைய வார்த்தையை பேசுகின்றபோது, இவ்வார்த்தை எவ்வாறு மற்றவருக்கு சவால்விட்டு ஊக்குவிக்கிறது என்று சிந்திப்பீர்களா?

( ) ( ) 58. நீங்கள் வேதாகம காரியங்களை விளக்குகின்றபோது, மக்கள் எவ்வளவு தூரம் தமது பாராட்டுதல்களை வெளிப்படுத்துகின்றனர்?

( ) ( ) 59. அதைரியமும், சோர்வும் கொண்ட மக்களுடன் இடைப்படுவதற்கான எளிதான முறைகளை கண்டு பிடித்து, அவர்கள் சந்தோஷமடைய அதை நிறைவேற்றி உள்ளீர்களா?

( ) ( ) 60. நீங்கள் கொடுத்த ஆலோசனைகள் அல்லது முடிவுகளின்படி மற்ற விசுவாசிகள் செயலாற்ற, அது அதி சிறந்தது என்று ஒவ்வொருவரும் ஏற்றுக்கொண்டனரா?

( ) ( ) 61. தேவனுடைய வார்த்தையை நீங்கள் புரிந்து கொண்ட அளவிற்கு அதே பின்னணியைக் கொண்ட மற்ற விசுவாசிகளால் விளங்கிக் கொள்ள முடியாதிருப்பதை கண்டுள்ளீர்களா?

( ) ( ) 62. மற்ற விசுவாசிகள் தலைமைத்துவம் வகிக்கத்தக்கதாக அவர்களுக்கு பயிற்சியளிக்கவும், அக்கறைகாண்பிக்கவும் உங்களால் முடியுமா?

( ) ( ) 63. ஒரு குழு அல்லது ஒரு நிறுவனம் ஒரு தீர்மானத்திற்கு வருவதற்கு வழிகாட்டும்படி தொடர்ந்தும் இருக்க உங்களால் முடியுமா?

( ) ( ) 64. ஒரு குழுவினரோடு வேலை செய்வதைவிட தனியாக அவ்வேலையை நிறைவேற்றுவது சாதகமானது என கருதுவீர்களா?

( ) ( ) 65. யாருக்காவது உதவி வேண்டும் என்று நீங்கள் நம்பும்போது அதை செய்வதற்கு முடியும் என்று நம்புவீர்களா?

( ) ( ) 66. உங்களிடம் இருந்து பெற்றுக்கொண்டவர் பொருட்டாக எண்ணாத போதும் கொடுப்பதை குறித்து மகிழ்ச்சியான உணர்வை பெறுவீர்களா?

( ) ( ) 67. சரீர ரீதியாக பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவ வேண்டும் என அடிக்கடி நினைக்கிறீர்களா?

( ) ( ) 68. உங்கள் வீட்டில் வழமையாக நடைபெறும் ஊழியத்தை மக்கள் பொருட்படுத்தாமல் இருந்தாலும் தொடர்ந்து ஊழியம் செய்ய விரும்புவீர்களா?

( ) ( ) 69. உங்களைச் சுற்றிலுமுள்ளவர்களால் நம்ப முடியாத காரியத்தை உங்களால் நம்ப முடியுமா?

( ) ( ) 70. தேவன் பேரில் மிகப்பெரிதான உத்தரவாதம் உங்களுக்கு உண்டு என்று நீங்கள் உணருகின்றபோது, மற்ற விசுவாசிகள் விளங்கிக் கொள்ள முடியாத ஏதொ ஒரு தவறு உங்களில் உண்டா?

( ) ( ) 71. தேவனுடைய வார்த்தையை பகிர்ந்து கொள்வதற்கான சிறந்த செயல்திறன் உண்டு என மற்ற விசுவாசிகள் உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றனரா?

( ) ( ) 72. தமது குறிப்பிட்ட கேள்விகளுக்கான அல்லது பிரச்சனைகளுக்கான பதில் தேடி மக்கள் உங்களிடம் வருகின்றனரா?

( ) ( ) 73. தனிப்பட்ட அல்லது உணர்வுபூர்வமான பிரச்சனைக் கொண்டவர்களுக்காக அன்பும், இரக்கமும் காண்பிக்கும் நபராக நீங்கள் இருக்கின்றீர்களா?

( ) ( ) 74. நீங்கள் யாருக்காவது ஆலோசனை கொடுக்கிறபோது, எப்படி அதை செய்ய வேண்டும் என்பதற்கு பதிலாக, ஏன் அதை செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்துவீர்களா?

( ) ( ) 75. தேவனுடைய வார்த்தையை விளங்கிக் கொள்ளும் திறமை உங்களுக்கு உண்டு என மற்ற விசுவாசிகள் சொல்வது உங்களுக்கு தெரியுமா?

( ) ( ) 76. மற்றவர்கள் தமது இலக்கையும், நோக்கங்களையும் கண்டடைய நீங்கள் விசேடமாக உதவும் மனிதரா?

( ) ( ) 77. குழு அல்லது கட்டமைப்பிற்கான பெரிதான தீர்மானத்தை எடுப்பதற்கு மக்கள் உங்களை சார்ந்துள்ளனரா?

( ) ( ) 78. நீங்கள் செய்யும்படியாக ஓர் குறிப்பிட்ட வேலையுண்டு என யாராவது கேட்டால், ஆர்வத்துடன் அவ்வேலையை செய்வீர்களா?

( ) ( ) 79. மற்றவர்கள் செய்யாது வெறுமனே இருக்கின்றபோது, நீங்கள் ஒருவருக்கு உதவி செய்து திருப்தியடைவீர்களா?

( ) ( ) 80. யாருக்காவது பணம் கொடுத்து உதவும் போது, மற்றவர்கள் அதை அறியாதிருக்க விரும்புவீர்களா?

( ) ( ) 81. சரீர ரீதியாக பாதிக்கப்படடவர்களுக்கு தொடர்ந்தும் ஊழியம் செய்வதில் மகிழ்ச்சியடைகிறீர்களா?

( ) ( ) 82. உங்கள் வீட்டிற்கு வரும் மக்களுக்கு அற்புதமாக ஊழியம் செய்வது உங்களுடைய கடமை என எண்ணுகிறீர்களா?

( ) ( ) 83. கடினமான சூழ்நிலையிலும் தேவனை நம்பும் திறமை உங்களுக்கு உண்டு என மற்ற விசுவாசிகள் உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்களா?

( ) ( ) 84. மக்கள் பெரும்பாலும் ஒருவரைப்பற்றி அல்லது ஒன்றைப்பற்றி உங்களுக்கு அபிப்பிராயத்தை கேட்கும்போது நீங்கள் நினைப்பது சரி அல்லது தவறு என கூறுவார்களா?

( ) ( ) 85. மற்றவர்களுடன் சிறந்த தொடர்பாடல் கொள்ளும் வரம் உங்களுக்குண்டு என நம்புகிறீர்களா?

( ) ( ) 86. ஒருவருக்கு தேவ வார்த்தையின் பொருளை மேற்கோளின்றி சாதாரணமாகவே விளங்கப்படுத்துவீர்களா?

( ) ( ) 87. நீங்கள் வேறொருவருடன் உங்களது சொந்த பிரச்சனைகளை பகிர்ந்து கொள்வதை விட, மற்றவர்கள் அவைகளை பகிர்ந்து கொள்வதை விரும்புவீர்களா?

( ) ( ) 88. கடினமான சூழ்நிலையில் மற்ற விசுவாசிகள் உங்கள் ஆலோசனையை பின்பற்றுவதை கண்டுள்ளீர்களா?

( ) ( ) 89. மற்றவர்களும். நீங்களும் ஒரே நேரத்தில் தேவனுடைய வார்த்தையை கற்பீர்களாயின், அவர்களுக்கு முன்னதாகவே வேத பகுதியின் அர்த்தத்தை நீங்கள் கண்டு பிடித்துவிடுவீர்களா?

( ) ( ) 90. நீங்கள் வழக்கமாக ஒரு குழுவின் தலைமைத்துவத்தை ஏற்றுக் கொள்வீர்களா?

( ) ( ) 91. உங்களுடைய தீர்மானங்கள் வழக்கமாக நீண்டகால விளைவுகளை ஏற்படுத்துவதற்கான உத்தரவாதத்தை கொண்டிருக்குமா?

( ) ( ) 92. குறிப்பிட்ட வேலையை செய்வதை விட மக்களுடைய தேவைகளையும், பிரச்சனைகளையும்பற்றி பேசுவதற்கு நேரம் செலவிட விரும்புவீர்களா?

( ) ( ) 93. யாராவது ஒருவர் உங்களிடம் உதவி கேட்கின்றபோது, நீங்கள் அவருக்கு "இல்லை" என பதிலளிக்க மிகவும் சிரமப்படுவீர்களா?

( ) ( ) 94. எவ்விதமான பாராட்டுதலையும் எதிர்பாராமல் யாராவது ஒருவருக்கு பண உதவி செய்வீர்களா?

( ) ( ) 95. சரீர ரீதியாக பாதிக்கப்பட்டவருக்கு எவ்விதத்திலாவது உதவ வேண்டும் என்ற இரக்க சிந்தையுடன் நினைக்கிறீர்களா?

( ) ( ) 96. உங்களது வீடு எவ்வாறாயிருப்பினும், உங்கள் வீட்டிற்கு மக்கள் மிக எளிதாக வர முடியும் என்பதை குறித்து உணருகின்றீர்களா?

( ) ( ) 97. தோல்வியும், அதைரியமும் கொண்ட மக்கள் நீங்கள் காணும்போது அவர்கள் தேவனை நம்பும்படிக்கு ஊக்குவிக்கும் உணர்வு உங்களுக்கு ஏற்படுகிறதா?

( ) ( ) 98. இது பாவம், இது தவறு என தேவனுடைய சத்தியத்தை பாதுகாக்க விசேட உத்தரவாதம் உங்களுக்குண்டு என நீங்கள் உணர்ந்துள்ளீர்களா?

( ) ( ) 99. மற்றவர்களுக்கு அதிகமாக வேதவசனத்தை விளக்கப்படுத்துவதை விட குறைந்த விளக்கத்தோடு தேவனுடைய வசனத்தை போதிக்கின்றீர்களா?

( ) ( ) 100. நீங்கள் உங்களுடைய எண்ணங்களை ஒழுங்குமுறையில் கட்டமைத்து கொள்வீர்களா?

( ) ( ) 101. சில விசுவாசிகள் "பாவம் செய்துவிட்டேன்" அல்லது "விழுந்து விட்டேன்" என்று சொல்லும் போது ஆர்வத்துடன் உதவ முற்படுவீர்களா?

( ) ( ) 102. நீங்கள் கடினமான சூழ்நிலையில் கொடுத்த தீர்மானங்கள் அல்லது ஆலோசனைகள் பெரும்பாலாக சரியானதாக இருந்துள்ளதா?

( ) ( ) 103. கடினமான வேதவாக்கியங்களை விளக்கி விசுவாசிகளுக்கு சொல்லுவதற்கு பெரிதான ஆர்வம் உங்களுக்குண்டா?

( ) ( ) 104. தலைமைத்துவ நிலையில் இருக்கின்ற நீங்கள் சிரமமும், அதிருப்தியும் இன்றி சந்தோஷமாயிருப்பீர்களா?

( ) ( ) 105. ஒரு குழுவிற்காக அல்லது கட்டமைப்பிற்காக நீங்கள் தீர்மானங்கள் எடுத்த அனுபவமுண்டா?

( ) ( ) 106. மற்றவர்கள் கேட்காமலேயே, அவசியமான வேலைகளை சந்தோஷத்துடன் செய்வீர்களா?

( ) ( ) 107. மற்றவர்களுக்கு உதவி செய்யும் சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் கொண்டிருப்பீர்களா?

( ) ( ) 108. தேவன் உங்களுக்கு சகலவற்றையும் கொடுத்துள்ளார் என்று விசுவாசிக்கிற நீங்கள் ஆவிக்குரிய ஊழியங்களுக்கு பணம் கொடுப்பீர்களா?

( ) ( ) 109. சரீர ரீதியாக வேதனைப்படுவோரை சந்திப்பது சந்தோஷத்தையா அல்லது வருத்தத்தையா உங்களுக்கு தருகின்றது?

( ) ( ) 110. மற்ற விசுவாசிகள் பெரும்பாலும் உங்கள் வீட்டை பற்றியும் அதை நீங்கள் தேவனுக்காக பயன்படுத்தும் விதத்தை பற்றிய திறனை குறிப்பிடுகின்றனரா?

( ) ( ) 111. உங்கள் வாழ்வில் தேவன் வல்லமையுள்ள காரியங்களை செய்துள்ளதை கண்டும், நம்பியும் இருக்கின்றீர்கள், ஆனால் மற்றவர்கள் அப்படியல்ல என்கின்றார்களா?

( ) ( ) 112. நீங்கள் மற்ற விசுவாசிகளுக்கு உதவி செய்யும்படி உணரும் போது அதில் ஏதாவது தவறு ஏற்பட்டால், உடனடியாகவே உங்களது மதிப்பீட்டை ஏற்றுக் கொள்வீர்களா?

( ) ( ) 113. மற்ற விசுவாசிகளுடன் பேசும்படியான சந்தர்ப்பம் ஏற்பட்டால், உங்களது தனிப்பட்ட அனுபவங்களை பார்க்கிலும் வேத வசனங்களை பகிர்ந்து கொள்வீர்களா?

( ) ( ) 114. உங்களுக்கு கற்பிக்கும் ஊழியம் உண்டு என மற்ற விசுவாசிகள் சொல்வதைப்போன்றே நீங்களும் உணருகின்றீர்களா?

( ) ( ) 115. ஒரு குழவாக ஊழியம் செய்வதை விட தனிநபர் ஊழியம் செய்ய விரும்புகின்றீர்களா?

( ) ( ) 116. கடினமான பிரச்சனைகளின்போது அல்லது சூழ்நிலைகளின்போது அதை கையாள சிறப்பான திறனுண்டு என்று அறிவீர்களா?

( ) ( ) 117. வேதாகமத்தின் கடினமான சில பகுதிகளை விளங்கிக் கொள்ள சில விசுவாசிகள் கஷ்டப்படும் போது, அதன் அர்த்தத்தைப்பற்றி நுட்பமாக பேசும் உத்தரவாதம் உங்களுக்குண்டு என்பதை உணர்ந்து விளங்கப்படுத்துவீர்களா?

( ) ( ) 118. மக்களின் தேவைகள், இலக்குகள், ஆசைகள் என்பவற்றை நிறைவேற்ற ஆய்வுகளும், திட்டமிடுதலுமின்றி முடியும் என்று எண்ணுகிறீர்களா?

( ) ( ) 119. ஒரு குழவின் ஒரு கட்டமைப்பின் வெற்றிக்கு பின்னால், நீங்கள் ஒட்டு மொத்த பொறுப்பையும் வகித்து வழிகாட்டுவது உங்களுக்கு மகிழ்ச்சியை கொடுக்கிறதா?

( ) ( ) 120. ஒரு குறிப்பிட்ட வேலையை செய்யும்படி நீங்கள் கேட்டுக்கொள்ளப்பட்ட போது, அவ்வேலையை செய்ய வேண்டியதில்லை என்று எண்ணுகிறீர்களா?

( ) ( ) 121. ஒரு குறிப்பிட்ட வேலையை செய்து கொண்டு உதவியதைக் குறித்து தெரிவிக்கிறபோது, வேறு ஏதாவது நிவாரணம் மூலம் செய்திருக்கலாமே என மக்கள் குறிப்பிடுகின்றனரா?

( ) ( ) 122. நீங்கள் ஒருவர் கேட்டுக் கொண்டமைக்கிணங்க மகிழ்ச்சியுடன் நிதி உதவி செய்தமை, மரியாதைக்குரியதும், சிறப்பான பயனுள்ள திட்டம் எனவும் கருதுகின்றீர்களா?

( ) ( ) 123. சரீர ரீதியாக வேதனைப்படுகின்றவருக்கு, உங்களது நேரம், பணம் மற்றும் வளங்கள செலவிட தயாராகவும், ஆர்வமாகவும் இருக்கிறீர்களா?

( ) ( ) 124. உங்கள் வீட்டிற்கு மக்கள் வருகின்றபோது சந்தோஷமடைகின்றீர்களா அல்லது வேலை அதிகரிக்கின்றதே என உணருகின்றீர்களா?

( ) ( ) 125. உங்கள் வாழ்வில் இருக்கின்ற ஜெப ஊழியத்தின் மூலம் ஜெபத்திற்கு பதிலாக மனித பார்வையில் சாத்தியமற்றவை சாத்தியமான அற்புதத்தை கண்டு உள்ளீர்களா?

( ) ( ) 126. நீங்கள் யாரையாவது அல்லது எதையாவது, மற்றவர்கள் காணாவிட்டாலும் அவர்கள் செய்தது சரியானது தான் என மதிப்பிட்டு உள்ளீர்களா?

## ஆவிக்குரிய வரங்களின் மதிப்பீட்டு அறிக்கை:

கேள்விகளுக்கான விடையளித்து முடித்ததும் அடுத்த பக்கத்தையும் பூர்த்தி செய்யுங்கள். விசேட வரங்களுக்கான மதிப்பீட்டு அறிக்கையை பூர்த்தி செய்யும் போதும் ஆம் என்று பதிலளித்திருப்பீர்கள் என்றால் வினாவின் இலக்கத்திற்கு முன் அடையாளமிடுங்கள். இல்லை என்றால் விடைக்கு முன்னால் எவ்விதமான அடையாளத்தையும் இட வேண்டாம்.

| தீர்க்கதரிசனம் | ஞானத்தை போதிக்கும் வசனம் | நிர்வாகம் | கொடுத்தல் | விசுவாசம் |
|---|---|---|---|---|
| ( )#1 | ( )#4 | ( )#7 | ( )#10 | ( )#13 |
| ( )#15 | ( )#18 | ( )#21 | ( )#24 | ( )#27 |
| ( )#29 | ( )#32 | ( )#35 | ( )#38 | ( )#41 |
| ( )#43 | ( )#46 | ( )#49 | ( )#52 | ( )#55 |
| ( )#57 | ( )#60 | ( )#63 | ( )#66 | ( )#69 |
| ( )#71 | ( )#74 | ( )#77 | ( )#80 | ( )#83 |
| ( )#85 | ( )#88 | ( )#91 | ( )#94 | ( )#97 |
| ( )#99 | ( )#102 | ( )#105 | ( )#108 | ( )#111 |
| ( )#113 | ( )#116 | ( )#119 | ( )#122 | ( )#125 |

| போதித்தல் | அறிவை உணர்த்தும் வசனம் | ஊழியம் செய்தல் | இரக்கம் காட்டுதல் | பகுத்தறிதல் |
|---|---|---|---|---|
| ( )#2 | ( )#5 | ( )#8 | ( )#11 | ( )#14 |
| ( )#16 | ( )#19 | ( )#22 | ( )#25 | ( )#28 |
| ( )#30 | ( )#33 | ( )#36 | ( )#39 | ( )#42 |
| ( )#44 | ( )#47 | ( )#50 | ( )#53 | ( )#56 |
| ( )#58 | ( )#61 | ( )#64 | ( )#67 | ( )#70 |
| ( )#72 | ( )#75 | ( )#78 | ( )#81 | ( )#84 |
| ( )#86 | ( )#89 | ( )#92 | ( )#95 | ( )#98 |
| ( )#100 | ( )#103 | ( )#106 | ( )#109 | ( )#112 |
| ( )#114 | ( )#117 | ( )#120 | ( )#123 | ( )#126 |

| | | | |
|---|---|---|---|
| **புத்தி சொல்லுதல்** | **தலைமைத்துவம்** | **உதவுதல்** | **உபசரித்தல்** |
| ( )#3 | ( )#6 | ( )#9 | ( )#12 |
| ( )#17 | ( )#20 | ( )#23 | ( )#26 |
| ( )#31 | ( )#34 | ( )#37 | ( )#40 |
| ( )#45 | ( )#48 | ( )#51 | ( )#54 |
| ( )#59 | ( )#62 | ( )#65 | ( )#68 |
| ( )#73 | ( )#76 | ( )#79 | ( )#82 |
| ( )#87 | ( )#90 | ( )#93 | ( )#96 |
| ( )#101 | ( )#104 | ( )#107 | ( )#110 |
| ( )#115 | ( )#118 | ( )#121 | ( )#124 |

## ஆவிக்குரிய வரங்களின் மதிப்பீட்டு அறிக்கை:

முன்னாலுள்ள அறிக்கையை செய்து முடித்ததும் விசேட வரங்களுக்கான அறிக்கையை பூர்த்தி செய்யவும்.

சகல வரங்களுக்குமான இலக்க பெட்டிகளை எண்ணி அதின் கீழ் கோடிடவும். (ஆம் என்று அடையாளமிடப்பட்ட பெட்டிகளையே எண்ண வேண்டும்).

சகல பெட்டிகளையும் எண்ணி முடிந்ததும், சுய விபரக்கோவையில் அடையாளமிடவும். சுய விபரக்கோவையில் அடையாளமிட்ட பின்னர் விசேட வரங்களுக்கான வரைபடத்தை தயாரிக்கவும்.

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| தீர்க்கதரிசனம் | | | | | | | | | |
| போதித்தல் | | | | | | | | | |
| புத்தி சொல்லுதல் | | | | | | | | | |
| ஞானத்தை உணர்த்தும் வசனம் | | | | | | | | | |
| அறிவை உணர்த்தும் வசனம் | | | | | | | | | |
| தலைமைத்துவம் | | | | | | | | | |
| நிர்வகித்தல் | | | | | | | | | |
| ஊழியம் செய்தல் | | | | | | | | | |
| உதவி செய்தல் | | | | | | | | | |
| கொடுத்தல் | | | | | | | | | |
| இரக்கம் காட்டுதல் | | | | | | | | | |
| உபசரித்தல் | | | | | | | | | |
| விசுவாசம் | | | | | | | | | |
| ஆவிகளை பகுத்தறிதல் | | | | | | | | | |

அதிகாரம் பதினொன்று

# பரிசுத்த ஆவியானவரின் கனி

**குறிக்கோள்கள்:**

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால் :

பரிசுத்த ஆவியானவருடைய வெளியரங்கமான கனியை அடையாளம் காண்பீர்கள்.
பரிசுத்த ஆவியானவருடைய உள்ளரங்கமான கனியை அடையாளம் காண்பீர்கள்.
பரிசுத்த ஆவியானவருடைய கனியின் முக்கியத்துவத்தை விபரிப்பீர்கள்.
நாம் கனி கொடுப்பதைக்குறித்து வெளிப்படுத்தப்பட்டுள்ள வேத வாக்கியங்களை அடையாளம் காண்பீர்கள்.
பரிசுத்த ஆவியானவருடைய பல்வேறுப்பட்ட உள்ளான கனியை விபரிப்பீர்கள்.
தேவனின் சமாதானத்திற்கும், தேவனுடன் சமாதானமாயிருப்பதற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை வேறுப்படுத்தி பார்ப்பீர்கள்.

**திறவுகோள் வசனம்:**

**ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம்,**

**சாந்தம், இச்சையடக்கம். இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. (கலாத்தியர் 5:22-23)**

## அறிமுகம்

இந்த அதிகாரம் பரிசுத்த ஆவியானவருடைய கனியைக்குறித்து சம்பாஷிக்கும். அடுத்த அதிகாரத்தில் மாம்சத்தின் கிரியைகளின் மாறுப்பட்ட குணாதிசயங்களைக் கற்றுக் கொள்வீர்கள். கடைசி அதிகாரத்தில் ஆவியின் கனியை அபிவிருத்தி செய்வதைக் குறித்துக் கற்றுக் கொள்வீர்கள்.

## கனி என்றால் என்ன?

பரிசுத்த ஆவியானவரின் சுபாவம் ஒரு விசுவாசியின் வாழ்வில் பரிசுத்த ஆவியானவரின் கனியாக வெளிப்படுகின்றது. இந்த ஆன்மீக குணாதிசயமானது சகல கிறிஸ்தவர்களினதும் ஆவிக்குரிய தன்மைக்கும் ஆதாரமாக இருக்கிறது.

பரிசுத்த ஆவியின் வரங்கள் வல்லமையைக் கொண்டது. பரிசுத்த ஆவியின் கனியோ ஒரு கிறிஸ்தவ விசுவாசியின் குணாதிசயத்துடன் இருக்கின்றது. ஆவியின் வரத்திற்கும், கனிக்குமுள்ள வித்தியாசத்தை பின்வரும் அட்டவனை விபரித்து காண்பிக்கும்.

| வரங்கள் | கனி |
|---|---|
| -சரீரத்தின் ஊழியத்திற்காக | -தனிப்பட்ட முதிர்ச்சிக்காக |
| -அனைத்தும் ஒரு விசுவாசிக்கு கொடுக்கப்படவில்லை | -ஒவ்வொரு விசுவாசிக்கும் ஆனைத்துமுண்டு. |
| -வல்லமைக்காக | -குணாதிசயத்திற்காக |

ஆன்மிக கனி ஆவிக்குரிய முதிர்ச்சிக்கு ஆதாரமாக உள்ளது. பௌதீக உலகிலுள்ள கனியானது ஜீவனை பிறப்பிக்கிறது போல இதுவம் செயல்படுகின்றது. ஆவிக்குரிய கனி கிறிஸ்தவ குணாதிசயத்தை தனிப்பட்ட, சமூக நடத்தையில் உருவாக்கும் போது உங்கள் வேலைகளில் அதன் தாக்கத்தை காணக்கூடியதாக இருக்கும். பௌதீக உலகிலுள்ள கனி விருத்தியடைய காலமெடுப்பதைப் போன்றே ஆவிக்குரிய கனி விருத்தியடையவும் காலமெடுக்கும்.இயற்கையான வளர்ச்சிக்கும், ஆவிக்குரிய வளர்ச்சிக்கும் காலமெடுக்கும்.

## இரண்டு வகையான கனி

வேதாகமம் இரண்டு வகையான கனிகளை குறித்து பேசுகின்றது:

1. சுவிசேஷ ஊழியத்தின் கனி.
2. ஆவிக்குரிய தெய்வீக குணாதிசயத்தைக் கொண்ட கனி.

பரிசுத்த ஆவியானவர், விசுவாசிகள் தாம் கேட்ட நற்செய்திக்கு ஏற்ற கனி கொடுக்க வல்லமையுள்ள சாட்சியாக திகழ அவர்களுக்கு உதவுகின்றார். கிறிஸ்துவைப் போன்ற ஆவிக்குரிய குணாதிசயங்களைக் கொண்டவர்களாக அவர்கள் இருக்க உள்ளான கனியை அபிவிருத்தி செய்கின்றார்.

## வெளியரங்கமான கனி: சுவிசேஷ ஊழியம்

### இயற்கையான இனப்பெருக்கம்:

ஆதாமும் ஏவாளும் தேவனால் சிருஷ்டிக்கப்பட்ட போது, பலுகிப்பெருகி பூமியை நிரப்பும்படியான முதல் கட்டளையையே தேவன் அவர்களுக்கு கொடுத்தார்:

> **நீங்கள் பலுகிப் பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி, சமுத்திரத்தின் மச்சங்களையும் ஆகாயத்துப் பறவைகளையும், பூமியின்மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும் ஆண்டுகொள்ளுங்கள் என்று சொல்லி, தேவன் அவர்களை ஆசீர்வதித்தார். (ஆதியாகமம் 1:28)**

இயற்கை உலகில், தொடர்ச்சியான இனப்பெருக்கம் தேவனால் சூழற்சி முறையில் அமைக்கப்பட்டது:

> **பூமியுள்ள நாளளவும் விதைப்பும் அறுப்பும், சீதளமும் உஷ்ணமும், கோடைகாலமும் மாரிகாலமும், பகலும் இரவும் ஒழிவதில்லை என்று தம்முடைய உள்ளத்தில் சொன்னார். (கலாத்தியர் 8:22)**

## ஆவிக்குரிய இனப்பெருக்கம்:

உலகத்தின் ஆரம்பத்திலிருந்தே, தேவன் தனது மக்களை பௌதீக உலகைப்போன்றே ஆவிக்குரிய மீள் உருவாக்கத்திற்கு அழைத்திருக்கிறார். ஆதாமும் ஏவாளும் சரீரத்திற்குரிய மீள் உற்பத்திக்கு திறனை கொண்டிருந்தனர். அவர்கள் தேவ சாயல் கொண்ட மனிதர்களால் பூமியை நிரப்ப வேண்டும் என்பதும், தேவனுடன் உறவை கொண்டவர்களாக அவருடன் நடக்க வேண்டும் என்பதும் தேவனுடைய ஆதி திட்டமாக இருந்தது.

தேவன் ஆவிக்குரிய மீள் உற்பத்தியை செய்யும்படியாக இஸ்ரவேலரை ஒரு தேசமாக ஏற்படுத்தி, அம்மக்களுக்கூடாக தனது வல்லமையையும், திட்டத்தையும் முழு உலகிற்கும் காண்பித்தார்:

> **நீர் எகிப்திலிருந்து ஒரு திராட்சக்கொடியைக் கொண்டுவந்து, ஜாதிகளைத் துரத்திவிட்டு, அதை நாட்டினீர்.**
>
> **அதற்கு இடத்தை ஆயத்தப்படுத்தினீர். அது வேரூன்றி, தேசமெங்கும் படர்ந்தது.**
>
> **அதின் நிழலால் மலைகளும் அதின் கிளைகளால் திவ்வியமான கேதுருக்களும் மூடப்பட்டது. (சங்கீதம் 80:8-10)**

எகிப்திலிருந்து தேவனால் கொண்டவரப்பட்ட "கொடி" இஸ்ரவேல் தேசமாகும். அவர்கள் அவர்களை சுற்றிலுமிருந்த புறஜாதி மக்களிடத்தில் ஆவிக்குரிய கனி கொடுத்து, மெய்யான தேவனை வெளிப்படுத்த வேண்டும் என்பது அவரது விருப்பமாக இருந்தது.ஆனால் இஸ்ரவேலர் புறஜாதி மக்களைப் போன்றாகி விட்டார்கள். அவர்கள் விக்கிரகங்களை வழிபட ஆரம்பித்தது மாத்திரமின்றி, கண்ணுக்கு புலப்படாத இராஜாதி இராஜாவின் ஆளுகைக்கு பதிலாக கண்களால் காணக்கூடிய அரசனின் ஆளகையை விரும்பினார்கள். இறுதியாக தேவன் இஸ்ரவேலுக்கு சொன்னார்:

> **இஸ்ரவேல் பலனற்ற திராட்சச்செடி... (ஓசியா 10:1)**

அவர்கள் ஆவிக்குரிய கனியை கொடாதபடியால் இயேசுவம் அவர்களை நோக்கி சொன்னார்:

> **ஆகையால், தேவனுடைய ராஜ்யம் உங்களிடத்திலிருந்து நீக்கப்பட்டு, அதற்கேற்ற கனிகளைத் தருகிற ஜனங்களுக்குக் கொடுக்கப்படும். (மத்தேயு 21:43)**

இஸ்ரவேலர் கனிகொடுக்க மறுத்தமையால் இராஜ்ஜியத்தின் சுவிசேஷம் புறஜாதியாரிடத்திற்கு சென்றது. புறஜாதியாரிடத்தில் தேவன் சபைகளை ஏற்படுத்தியமையால் உலகில் தற்போது சபையானது அவரது திட்டத்தை நிறைவேற்றி ஆவிக்குரிய மீள் உற்பத்தியை செய்கிறது.

## கனி கொடுக்க தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள்

விசுவாசிகளாகிய எம்மை இவ்வுலகிற்கு நற்செய்தியை ஏற்ற கனி கொடுக்கும்படியாக தேவன் தெரிந்தெடுத்துள்ளார்:

> **நீங்கள் என்னைத் தெரிந்துகொள்ளவில்லை, நான் உங்களைத் தெரிந்துகொண்டேன். அதை அவர் உங்களுக்குக் கொடுக்கத்தக்கதாக நீங்கள் போய்க் கனிகொடுக்கும்படிக்கும், உங்கள் கனி நிலைத்திருக்கும்படிக்கும்..... (யோவான் 15:16)**

ஆவரை பின்பற்றியோருக்கு அவரால் கொடுக்கப்ட்ட கடைசி கட்டளை ஆவிக்குரிய மீள் உற்பத்தியைக் காண்பிக்கிறது:

**அவர் அவர்களை நோக்கி: நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள். (மாற்கு 16:15)**

அவர் தனது சீடர்களிடத்தில் ஆவிக்குரிய அறுவடையின் பெரிதான தரிசனத்தின் சவாலை முன் வைத்தார்:

**அறுப்புக்காலம் வருகிறதற்கு இன்னும் நாலுமாதம் செல்லும் என்று நீங்கள் சொல்லுகிறதில்லையா? இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள் என்று நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்.**

**விதைக்கிறவனும் அறுக்கிறவனுமாகிய இருவரும் ஒருமித்துச் சந்தோஷப்படத்தக்கதாக, அறுக்கிறவன் கூலியை வாங்கி, நித்திய ஜீவனுக்காகப் பலனைச் சேர்த்துக்கொள்ளுகிறான். (யோவான் 4:35-36)**

சாலமோன் கூறினதாவது:

**நீதிமானுடைய பலன் ஜீவவிருட்சம். ஆத்துமாக்களை ஆதாயப்படுத்திக்கொள்ளுகிறவன் ஞானமுள்ளவன். (நீதிமொழிகள் 11:30)**

பரிசுத்த ஆவியின் வல்லமையால், விசுவாசிகளுக்கு நற்செய்திக்கூடாக ஆவிக்குரிய கனி கொடுக்க முடியும்:

**பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)**

ஆவிக்குரிய மீள் உற்பத்தி முறை 2 தீமோத்தேயு 2:2ல் கொடுக்கப்பட்டுள்ளது:

**அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி. (2 தீமோத்தேயு 2:2)**

தேவன் பௌதீக உலகில் அறுவடையை சூழற்சி முறையில் நிறுவியதுபோலவே, ஆன்மீக உலகிலும் மீள் உற்பத்திக்காக சுழற்சி முறையை நிறுவியுள்ளார்.ஒவ்வொரு விசுவாசியும் மற்ற மக்களுக்கு சுவிசேஷத்தை கற்றுக்கொடுக்க வேண்டும், அவர்களும் அதை மற்றவர்களுக்கு கற்பிக்க வேண்டும். இயற்கையாகவே அறுவடைக்கு நேரம் இருப்பதுபோலவே ஆவிக்குரிய அறுவடைக்கும் சுழற்சி முறையில் அறுவடையுண்டு.

(நுற்செய்திக்கான கனி முக்கியமாக இருப்பதினாலேயே, சர்வதேச அறுவடை நேர நிறுவனமும் வெவ்வேறான பாடங்களை வழங்குகிறது. “ஆவிக்குரிய அறுவடைக்கான வியூகங்கள்”, “பெருக்கத்தின் பல முறைகள்”, “புளித்த மாவைப்போன்ற நற்செய்தி” போன்ற பாடங்களின் தகவல்களை எழுதி பெறலாம்).

## உள்ளான கனி: கிறிஸ்துவை போலாகுதல்

வெளிப்படையான கனியாகிய நற்செய்தியைப்பற்றி வேதாகமம் நேர்மறையாக பேசுகிறது மாத்திரமன்றி பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளின் ஆவிக்குரிய வாழ்க்கையில் மீள் உருவாக்குவதைப் பற்றியும் கூறுகிறது. இதை நாம் கிறிஸ்துவை போலிருத்தல் என்றழைக்கின்றோம். இக்கனியைப் பற்றிய பட்டியல் கலாத்தியர் 5:22-23ல் இருக்கிறது:

> **ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம்,**
>
> **சாந்தம், இச்சையடக்கம். இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. (கலாத்தியர் 5:22-23)**

இவைகளே பரிசுத்த ஆவியானவர் இவ்வுள்ளான குணாதிசயத்தை விசுவாசியின் வாழ்க்கையில் உருவாக்க விரும்புகின்றார். இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையில் இவ்வாறான குணாதிசயங்களை தெளிவாக காணகூடியதாக இருந்தது. அதனாலேயே கிறிஸ்துவை போலாகும் குணாதிசயம் என்று நாம் இதனை அழைக்கிறோம்.

"கனி" என்று ஒருமையில் இச்சொல் காணப்படுகிறது.இது பன்மைச்சொல் அல்ல (கனிகள்). ஆவியின் வரங்கள் பல, அவைகள் விசுவாசிகளின் நன்மைக்காக பல விதங்களில் பரிசுத்த ஆவியானவரின் சித்தப்படி பகிரப்பட்டுள்ளது. கனி ஒருமையிலுள்ளது. இதை "திராட்சை" என்ற இயற்கை உதாரணத்தோடு விளங்கிக் கொள்ளலாம். திராட்சை ஒரு கொத்தாக இருப்பினும் பல தனிப்பட்ட பழங்கள் இருக்கின்றன, எனினும் அதை நாம் திராட்சை என்றே அழைக்கின்றோம். பௌதீக உலகில் திராட்சையை ஒரு தண்டிலிருந்து கொத்தாக பறித்தெடுக்கின்றனர்.பல பழங்கள் இருப்பினும் திராட்சை "கனி" என்றே அழைக்கப்படுகிறது.

ஆவிக்குரிய உலகிலும் பரிசுத்த ஆவியின் கனி திராட்சைக்கொத்துக்கு சமமானமாகவே காணப்படுகிறது. பலவிதமான தனிப்பட்ட ஆவிக்குரிய குணாதிசயங்கள் இருக்கின்றபோதும் அவை ஒன்றாக, கொத்தாக இருக்கிறது. கிறிஸ்துவைப் போலிருக்கும் ஆவிக்குரிய முதிர்ச்சியை இப்பழம் மாத்திரமே வெளிப்படுத்துகிறது.

| | | |
|---|---|---|
| ஒரு கனி | ➡ | **ஆவிக்குரிய முதிர்ச்சி** |
| பல குணாதிசயங்கள் | ➡ | சாந்தம் - இச்சையடக்கம்<br>அன்பு - சந்தோஷம் - சமாதானம்<br>இரக்கம் - நற்குணம்<br>நீடிய பொறுமை<br>விசுவாசம் |

சகல விசுவாசிகளும் இவ் ஆவிக்குரிய கனியை கொண்டிருக்க வேண்டும் என தேவன் விரும்புகிறார். வரங்களில் பல உண்டு, விசுவாசிகளுக்காக அவை பிரிக்கப்பட்டுள்ளன, சகல விசுவாசிக்கும் கனி ஒன்றே உள்ளது.

பரிசுத்த ஆவியின் கனி விசுவாசியில் செயல்படும்போது அவனது கிரியைகளில் நற்குணமும், நீதியும், உண்மையும் காணப்படும்:

**ஆவியின் கனி, சகல நற்குணத்திலும் நீதியிலும் உண்மையிலும் விளங்கும். (எபேசியர் 5:9)**

பின்வருபவை பரிசுத்த ஆவியின் கனியாக இருக்கிறது:

## அன்பு

அன்பானது ஆழமான உணர்வையும், பாதுகாப்பையும், அக்கறையையும் கொண்டது. சூழ்நிலையையும், அவற்றின் நிலையையும் பாராது, நிபந்தனையற்று கொடுக்கும் தன்மையை கொண்டது. நீங்கள் உங்களது ஆவிக்குரிய வரங்களைக்குறித்து கற்றுக் கொண்ட போது, அன்பே சகல வரங்களும் கிரியை செய்வதற்கான திறவுகோல் என கற்றீர்கள். ஆவியின் கனி உருவாகுவதற்கான அனைத்து தராதரத்தையும் அது கொண்டுள்ளது. நீங்கள் ஆவியின் கனிபற்றி கூறப்பட்டுள்ள கலாத்தியருடனும், அன்பை பற்றி கூறப்பட்டுள்ள 1 கொரிந்தியர் 13ம் அதிகாரத்துடனும் ஒப்பிட்டு கற்றுக்கொள்ளும் போது இது வெளிப்படுத்தப்பட்டுள்ளதை அறிந்து கொள்வீர்கள்.

| **1 கொரிந்தியர் 13:1-7** | **கலாத்தியர் 5:22-23** |
|---|---|
| தற்பொழிவை நாடாது,<br>சுயத்தை மையமாக கொண்டிராது. | அன்பு |
| அநியாயத்தில் சந்தோஷப்படாமல்,<br>சத்தியத்தில் சந்தோஷப்படும். | சந்தோஷம் |
| அன்பு இலகுவில் சினமடையாது,<br>ஆனால் சாந்தமும், தயவும் உண்டு. | சமாதானம் |
| அன்பு நீடிய பொறுமை கொண்டது, விடா<br>முயற்சியுடன் செயலாற்றும், அமைதியாயிருக்கும். | நீடிய பொறுமை |
| அன்பு இரக்கம் பாராட்டும், ஆழ்ந்த அக்கறை<br>கொள்ளும், நிபந்தனையற்றது. | தயவு |
| அன்பு பெரியது, கிருபை நிறைந்தது, நற்குணமுடையது,<br>தயவையும், நன்மையையும் காண்பிக்கும். | நற்குணம் |
| அன்பு தீயதை நினைக்காது,<br>தேவனையும், மனிதனையும் நம்பும். | விசுவாசம் |
| தாழ்மையுள்ளது, மென்மையான குணம் கொண்டது,<br>தற்பெருமை கொள்ளாது. | சாந்தம் |
| அன்பு ஒழுக்கமும், கட்டுப்பாடும் கொண்டது,<br>தகுதியற்ற விதத்தில் நடவாது. | இச்சையடக்கம் |

விசுவாசம், ஆவியின் கனியிலும், வரத்திலும், அன்பினாலும் கிரியை செய்வதாக இருக்கின்றது:

**அன்பினால் கிரியை செய்கிற விசுவாசமே உதவும்... (கலாத்தியர் 5:6)**

ஆவியின் கனியாகிய அன்பு உலகத்தாரால் சித்தரிக்கப்படும் அன்பைப் போன்றதல்ல. இது “மெய்யான” அன்பாக இருக்கிறது. இது பரிசுத்தமுள்ள அன்பு. நீங்கள் மற்றவர்களிடம் காண்பிக்கும் மெய்யான அன்பின் வகையைச் சேர்ந்ததே இது:

**ஆகையால் நீங்கள் மாயமற்ற சகோதர சிநேகமுள்ளவர்களாகும்படி, ஆவியினாலே சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, உங்கள் ஆத்துமாக்களைச் சுத்தமாக்கிக் கொண்டவர்களாயிருக்கிறபடியால், சுத்த இருதயத்தோடே ஒருவரிலொருவர் ஊக்கமாய் அன்புகூருங்கள். (1 பேதுரு 1:22)**

நீங்கள் தேவனை நேசிக்க வேண்டும்:

**உன் தேவனாகிய கர்த்தரிடத்தில் உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும், உன் முழு மனதோடும், உன் முழுப் பலத்தோடும் அன்புகூருவாயாக என்பதே பிரதான கற்பனை. (மாற்கு 12:30)**

(1 யோவான் 2:5,15; 3:11-17; 4:7-20; 5:2; 2 யோவான் 1:5-6: உபாகமம் 6:5; லூக்கா 10:27 ஆகியவற்றையும் பார்க்க).

நீங்கள் உங்கள் சத்துருவை நேசிக்க வேண்டும்:

**எனக்குச் செவிகொடுக்கிற உங்களுக்கு நான் சொல்லுகிறேன்: உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள்.**

**உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள்....**

**உங்களைச் சிநேகிக்கிறவர்களையே நீங்கள் சிநேகித்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் தங்களைச் சிநேகிக்கிறவர்களைச் சிநேகிக்கிறார்களே...**

**உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், நன்மைசெய்யுங்கள்... (லூக்கா 6:27,32,35)**

**உனக்கடுத்தவனைச் சிநேகித்து, உன் சத்துருவைப் பகைப்பாயாக என்று சொல்லப்பட்டதைக் கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.**

**நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள், உங்களைச் சபிக்கிறவர்களைச் ஆசீர்வதியுங்கள், உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மை செய்யுங்கள், உங்களை நிந்திக்கிறவர்களுக்காகவும் உங்களைத் துன்பப்படுத்துகிறவர்களுக்காகவும் ஜெபம்பண்ணுங்கள். (மத்தேயு 5:43-44)**

நீங்கள் உங்களை நேசிப்பதைப்போல அயலானையும் நேசிக்க வேண்டும்:

**உன்னிடத்தில் நீ அன்புகூருவதுபோலப் பிறனிடத்திலும் அன்புகூருவாயாக... (மத்தேயு 19:19)**

இயேசு உங்களை நேசிப்பதைப்போல, நீங்கள் மற்றவர்களையும் நேசிக்க வேண்டுமென விரும்புகின்றார்:

**நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள். நான் உங்களில் அன்பாயிருந்ததுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்கிற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். (யோவான் 13:34)**

**பிதா என்னில் அன்பாயிருக்கிறதுபோல நானும் உங்களில் அன்பாயிருக்கிறேன். என்னுடைய அன்பிலே நிலைத்திருங்கள்...**

**நான் உங்களில் அன்பாயிருக்கிறதுபோல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கவேண்டுமென்பதே என்னுடைய கற்பனையாயிருக்கிறது. (யோவான் 15:9,12)**

**நீர் என்னிடத்தில் வைத்த அன்பு அவர்களிடத்திலிருக்கும்படிக்கும், நானும் அவர்களிலிருக்கும்படிக்கும், உம்முடைய நாமத்தை அவர்களுக்குத் தெரியப்படுத்தினேன், இன்னமும் தெரியப்படுத்துவேன் என்றார். (யோவான் 17:26)**

நாம் ஒருவரிலொருவர் அன்பாயிருக்கும்போது, நாம் கிறிஸ்தவர்கள் என அடையாளப்படுத்திக் கொள்ளுகின்றோம்:

**நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார். (யோவான் 13:35)**

நீங்கள் மற்ற விசுவாசிகளை நேசிக்கவில்லை என்றால், தேவனுடைய அன்பு உங்களுக்குள் இராது:

**ஒளியிலே இருக்கிறேன் என்று சொல்லியும் தன் சகோதரனைப் பகைக்கிறவன் இதுவரைக்கும் இருளிலே இருக்கிறான்.**

**தன் சகோதரனிடத்தில் அன்புகூருகிறவன் ஒளியிலே நிலைகொண்டிருக்கிறான். அவனிடத்தில் இடறல் ஒன்றுமில்லை. (1 யோவான் 2:9-10)**

(இது மிகவும் முக்கியமான உண்மை. மேலதிக படிப்பினைகள் பார்க்க: யோவான் 13:34; 14:15,21,23,31; 15:9-19; 17:26; 21:15-17).

உங்கள் அன்பு நிரம்பி வழிய வேண்டும் (அதிகரிக்க):

**மேலும், உத்தமமானவைகளை நீங்கள் ஒப்புக்கொள்ளத்தக்கதாக உங்கள் அன்பானது அறிவிலும் எல்லா உணர்விலும் இன்னும் அதிகமதிகமாய்ப் பெருகவும்.. (பிலிப்பியர் 1:9)**

**நாங்கள் உங்களிடத்தில் வைத்திருக்கிற அன்புக்கொப்பாய், நீங்களும் ஒருவரிடத்தில் ஒருவர் வைக்கும் அன்பிலும் மற்றெல்லா மனுஷரிடத்தில் வைக்கும் அன்பிலும் கர்த்தர் உங்களைப் பெருகவும் நிலைத்தோங்கவும் செய்து... (1 தெசலோனிக்கேயர் 3:12)**

நீங்கள் அன்பில் வேரூன்றி நிலைத்திருக்க வேண்டும்:

**விசுவாசத்தினாலே கிறிஸ்து உங்கள் இருதயங்களில் வாசமாயிருக்கவும், நீங்கள் அன்பிலே வேரூன்றி, நிலைபெற்றவர்களாகி,**

**சகல பரிசுத்தவான்களோடுங்கூடக் கிறிஸ்துவினுடைய அன்பின் அகலமும், நீளமும், ஆழமும், உயரமும் இன்னதென்று உணர்ந்து,**

**அறிவுக்கெட்டாத அந்த அன்பை அறிந்துகொள்ள வல்லவர்களாகவும், தேவனுடைய**

**சகலபரிபூரணத்தாலும் நிறையப்படவும், அவர் தமது மகிமையினுடைய ஐசுவரியத்தின்படியே, உங்களுக்கு அநுக்கிரகம் பண்ணவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறேன். (எபேசியர் 3:17-19)**

நீங்கள் அன்பினால் மற்றவர்களை தாங்க வேண்டும்:

**மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி... (எபேசியர் 4:2)**

அன்பில் உங்களை காத்துக்கொள்ள வேண்டும்:

**தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு.... (யூதா 21)**

**நீதியையும் தேவபக்தியையும் விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு... (1 தீமோத்தேயு 6:11)**

தேவனுக்காக நீங்கள் செய்யும் வேலை அன்பின் அடிப்படையிலிருக்க வேண்டும்:

**உங்கள் விசுவாசத்தின் கிரியையையும், உங்கள் அன்பின் பிரயாசத்தையும், நாங்கள் இடைவிடாமல் நினைவுகூர்ந்து... (1 தெசலோனிக்கேயர் 1:2)**

**ஏனென்றால், உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியுஞ்செய்ததினாலும் செய்து வருகிறதினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்துவிடுகிறதற்குத் தேவன் அநீதியுள்ளவரல்லவே. (எபிரெயர் 6:10)**

நாம் பூமியின் இறுதி நேரத்திற்கருகில் இருக்கின்றோம், அநேகர் அன்பை விட்டு விடுவார்கள். அநேகருடைய அன்பு தனிந்து போகும். மக்கள் மற்றவர்களைக்குறித்து கவலையற்றிருப்பார்கள் என்பதே இதன் அர்த்தம்:

**அக்கிரமம் மிகுதியாவதினால் அநேகருடைய அன்பு தணிந்துபோம். (மத்தேயு 24:12)**

தேவனுடைய அன்பிலிருந்து எம்மை எதுவும் பிரிக்க முடியாது என்ற உத்தரவாதம் எமக்களிக்கப்பட்டுள்ளது:

**உமது நிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும்,**

**மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங்களானாலும்,**

**உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன். (ரோமர் 8:35,38-39)**

(தாவீதும் அன்பைப்பற்றி அதிகமாய் எழுதியுள்ளார்: சங்கீதம் 31:23; 18:1; 40:16; 97:10; 116:1; 119:97, 113, 119, 127, 132, 159, 163, 105, 167; 122:6; 145:20ஐ பார்க்கவும். 1 யோவான் புத்தகத்தை வாசிக்கவும். இப்புத்தகத்தின் முக்கியமான ஒரு பிரதான நோக்கம் அன்பைப்பற்றியது ஆகும்.

## சந்தோஷம்

சந்தோஷம் என்பது மகிழ்ச்சி, களிப்பு, உவகை போன்ற தராதரத்தை கொண்டுள்ளது.

ஆவிக்குரிய கனியாகிய சந்தோஷத்திற்கும், மகிழ்ச்சியான உணர்வும் ஒன்றல்ல. சகல நீருற்றும் வேறுப்பட்ட மூலத்திலிருந்தே வருகின்றது. மகிழ்ச்சியானது உங்களைச் சுற்றிலும் இருக்கின்ற உலகத்திலிருந்து வருவதோடு, சூழ்நிலையை சார்ந்திருக்கும். ஆனால் சந்தோஷமானது தேவனுடைய ஆவியினால் உருவாகின்றமையால் அது வெளியரங்கமான சூழ்நிலைகளை சார்ந்திராது.

இயேசு கிறிஸ்து தனது பிறப்பின் மூலம் சந்தோஷத்தை கொண்டு வந்தார்:

> **தேவதூதன் அவர்களை நோக்கி: பயப்படாதிருங்கள், இதோ, எல்லா ஜனத்துக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டாக்கும் நற்செய்தியை உங்களுக்கு அறிவிக்கிறேன்.**
>
> **இன்று கர்த்தராகிய கிறிஸ்து என்னும் இரட்சகர் உங்களுக்குத் தாவீதின் ஊரிலே பிறந்திருக்கிறார். (லூக்கா 2:10-11)**

நீங்கள் சந்தோஷமாக இருப்பதை தேவன் விரும்புகின்றார்:

> **என்னுடைய சந்தோஷம் உங்களில் நிலைத்திருக்கும்படிக்கும், உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படிக்கும், இவைகளை உங்களுக்குச் சொன்னேன். (யோவான் 15:11)**
>
> **இப்பொழுது நான் உம்மிடத்திற்கு வருகிறேன், அவர்கள் என் சந்தோஷத்தை நிறைவாய் அடையும்படி உலகத்தில் இருக்கையில் இவைகளைச் சொல்லுகிறேன். (யோவான் 17:13)**

சீஷர்கள் சந்தோஷத்தினாலும், பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள்:

> **சீஷர்கள் சந்தோஷத்தினாலும் பரிசுத்த ஆவியினாலும் நிரப்பப்பட்டார்கள். (அப்போஸ்தலர் 13:52)**

விசுவாசிகளின் சந்தோஷத்தின் ஆதாரம் உலக காரியங்கள் அல்ல. அது தேவனிடமிருந்து வருகிறது:

> **உம்முடைய சமுகத்தில் பரிபூரண ஆனந்தமும்.... உம்முடைய வலதுபாரிசத்தில் நித்தியபேரின்பமும் உண்டு. (சங்கீதம் 16:11)**

உங்களுடைய சந்தோஷம் ஆவிக்குரியதாயிருக்கிறதோடு, வெளியரங்கமான சூழ்நிலைகளை சார்ந்தது அல்ல. சோதனையின் போதும் உங்களால் சந்தோஷமடைய முடியும்:

> **என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது... அதை மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள். (யாக்கோபு 1:2)**

உபத்திரவங்களின் மத்தியிலும் சந்தோஷமடைய முடியும்:

**எங்களுக்கு உண்டான சகல உபத்திரவத்திலேயும் பரிபூரண சந்தோஷமாயிருக்கிறேன். (2 கொரிந்தியர் 7:4)**

நீடிய பொறுமையுடன் சந்தோஷமாயிருக்க முடியும்:

**சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும்..... (கொலோசெயர் 1:11)**

சந்தோஷம் தேவ ராஜ்ஜியத்தின் ஒரு பகுதியாக இருக்கிறது:

**தேவனுடைய ராஜ்யம் புசிப்பும் குடிப்புமல்ல, அது நீதியும் சமாதானமும் பரிசுத்த ஆவியினாலுண்டாகும் சந்தோஷமுமாயிருக்கிறது. (ரோமர் 14:17)**

வேதாகமம் விசுவாசிகள் சந்தோஷமாயிருப்பதையும், இதை தேவனிடத்தில் வெளிப்படுவதையும் ஊக்குவிக்கிறது:

**உம்மை நம்புகிறவர்கள் யாவரும் சந்தோஷித்து, எந்நாளும் கெம்பீரிப்பார்களாக: நீர் அவர்களைக் காப்பாற்றுவீர்: உம்முடைய நாமத்தை நேசிக்கிறவர்கள் உம்மில் களிகூருவார்களாக. (சங்கீதம் 5:11)**

(சங்கீதம் 35:9; 63:5; 66:1; 81:1; 95:1-2; 149:5; 98:4,6,8; 100:1ஐ பார்க்கவும்).

## சமாதானம்

சமாதானம் என்பது அமைதி, சாந்தம், கலக்கமற்ற மற்றும் இணக்கம் என்ற நிலையைக் கொண்டிருக்கும். அதில் பூசல், கவலை, மனஉலைவு, தொல்லை என்பன இருப்பதில்லை. அது செயலற்றதுமல்ல. அது சமாதானக் கர்த்தாக்களின் கிரியைகளை வல்லமையாக சமாதானத்துடன் பராமரிக்கும்.

குழப்பம் சமாதானத்திற்கு எதிரானது. தேவனிடம் குழப்பங்கள் ஏற்படாது. சமாதானத்தை கொண்டு வருவதே அவரது வாஞ்சையாக உள்ளது:

**தேவன் கலகத்திற்குத் தேவனாயிராமல், சமாதானத்திற்குத் தேவனாயிருக்கிறார், பரிசுத்தவான்களுடைய சபைகளெல்லாவற்றிலேயும் அப்படியே இருக்கிறது. (1 கொரிந்தியர் 14:33)**

இயேசு உலகத்திற்கு சமாதானத்தை கொண்டு வந்தார்:

**உன்னதத்திலிருக்கிற தேவனுக்கு மகிமையும், பூமியிலே சமாதானமும், மனுஷர்மேல் பிரியமும் உண்டாவதாக என்று சொல்லி, தேவனைத் துதித்தார்கள். (லூக்கா 2:14)**

சகல உண்மையான சமாதானமும் இயேசு கிறிஸ்துவிற்கு ஊடாகவே வரும்:

**இயேசுகிறிஸ்துவைக்கொண்டு அவர் சாமாதானத்தைச் சுவிசேஷமாய்க் கூறி... (அப்போஸ்தலர் 10:36)**

**எப்படியெனில், அவரே நம்முடைய சமாதான காரணராகி, இருதிறத்தாரையும் ஒன்றாக்கி,**

**பகையாக நின்ற பிரிவினையாகிய நடுச்சுவரைத் தகர்த்து... (எபேசியர் 2:14)**

**இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். (ரோமர் 5:1)**

இயேசு தன்னை பின்பற்றியோருக்காக சிறப்பான சமாதானத்தை விட்டுச் சென்றார்:

**சமாதானத்தை உங்களுக்கு வைத்துப்போகிறேன், என்னுடைய சமாதானத்தையே உங்களுக்குக் கொடுக்கிறேன். உலகம் கொடுக்கிறபிரகாரம் நான் உங்களுக்குக் கொடுக்கிறதில்லை. உங்கள் இருதயம் கலங்காமலும் பயப்படாமலும் இருப்பதாக. (யோவான் 14:27)**

இயேசுவின் போதனைகள் சமாதானத்தை கொண்டு வந்தது:

**என்னிடத்தில் உங்களுக்குச் சமாதானம் உண்டாயிருக்கும்பொருட்டு இவைகளை உங்களுக்குச் சொன்னேன். (யோவான் 16:33)**

சுவிசேஷம் சமாதானத்தின் செய்தியாகும்:

**சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்.... (எபேசியர் 6:15)**

இரண்டு வகையான சமாதானம் இருக்கின்றது. முதலாவது தேவனுடன் உள்ள சமாதானம்:

**இவ்விதமாக, நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துமூலமாய் தேவனிடத்தில் சமாதானம் பெற்றிருக்கிறோம். (ரோமர் 5:1)**

தேவனுடன் சமாதானத்தை கொண்ட பின், உங்கள் வாழ்வில் தேவனின் சமாதானம் இருக்கும்:

**அப்பொழுது, எல்லாப் புத்திக்கும் மேலான தேவசமாதானம் உங்கள் இருதயங்களையும் உங்கள் சிந்தைகளையும் கிறிஸ்து இயேசுவுக்குள்ளாகக் காத்துக்கொள்ளும். (பிலிப்பியர் 4:7)**

சமாதானத்தை கொண்டு வரும் விஷயங்களை நாம் பின்பற்றும்படி கூற வேண்டும்:

**ஆனபடியால் சமாதானத்துக்கடுத்தவைகளையும், அந்நியோந்நிய பக்திவிருத்தி உண்டாக்கத்தக்கவைகளையும் நாடக்கடவோம். (ரோமர் 14:19)**

நாம் சமாதானத்துடன் ஜீவிக்கின்றோம்:

**கடைசியாக, சகோதரரே, சந்தோஷமாயிருங்கள், நற்சீர் பொருந்துங்கள், ஆறுதலடையுங்கள்: ஏகசிந்தையாயிருங்கள், சமாதானமாயிருங்கள், அப்பொழுது அன்புக்கும் சமாதானத்துக்கும் காரணராகிய தேவன் உங்களோடேகூட இருப்பார். (2 கொரிந்தியர் 13:11)**

நாம் அனைத்து மனிதரோடும் சமாதானமாய் வாழ வேண்டும்:

**யாவரோடும் சமாதானமாயிருக்கவும், பரிசுத்தமுள்ளவர்களாயிருக்கவும் நாடுங்கள்ளூ பரிசுத்தமில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லையே. (எபிரெயர் 12:14)**

நாம் சமாதானத்துடன் ஆவியின் ஐக்கியத்தை காத்துக் கொள்ள வேண்டும்:

**சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். (எபேசியர் 4:3)**

சமாதானத்தின் தேவன் நம் இருதயங்களை ஆளுகின்றார்:

**தேவசமாதானம் உங்கள் இருதயங்களில் ஆளக்கடவது, இதற்கென்றே நீங்கள் ஒரே சரீரமாக அழைக்கப்பட்டீர்கள். (கொலோசெயர் 3:15)**

நாம் எப்போதும் சமாதானத்தை தேட வேண்டும்:

**சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள். (2 பேதுரு 3:14)**

## நீடிய பொறுமை

நீடிய பொறுமை பொறுத்துக்கொள்ளும் தராதரத்தைக் கொண்டது. பொறுமையாக இருக்க முடியாத சந்தர்ப்பத்திலும், பொறுமையுடன் சகித்துக் கொள்ளும் திறன் இதற்குண்டு. நீடிய பொறுமை தேவனுடைய தராதரமாய் இருக்கின்றது:

**கர்த்தர், கர்த்தர்.. இரக்கமும், கிருபையும், நீடிய சாந்தமும், மகா தயையும், சத்தியமுமுள்ள தேவன். (யாத்திராகமம் 34:6)**

**கர்த்தர் நீடிய சாந்தமும் மிகுந்த கிருபையுமுள்ளவர் என்றும், அக்கிரமத்தையும் மீறுதலையும் மன்னிக்கிறவர் என்றும்.... (எண்ணாகமம் 14:17)**

**ஆனாலும் ஆண்டவரே, நீர் மனவுருக்கமும், இரக்கமும், நீடிய பொறுமையும், பூரண கிருபையும், சத்தியமுமுள்ள தேவன். (சங்கீதம் 86:15)**

**தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்துத் தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்.**

**மேலும் நம்முடைய கர்த்தரின் நீடிய பொறுமையை இரட்சிப்பென்று எண்ணுங்கள். (2 பேதுரு 3:9,15)**

**அல்லது தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணுகிறாயோ? (ரோமர் 2:4)**

அப்போஸ்தலனாகிய பவுலினது ஊழியத்திலும் நீடிய பொறுமையாகிய இத்தராதரம் காணப்பட்டது:

**நீயோ என் போதகத்தையும் நடக்கையையும் நோக்கத்தையும் விசுவாசத்தையும் நீடிய சாந்தத்தையும் அன்பையும் பொறுமையையும்... (2 தீமோத்தேயு 3:10)**

நாம் சந்தோஷத்துடன் நீடிய பொறுமையாயிருக்கும் படி கேட்டுகொள்ளப்பட்டுள்ளோம்:

**சந்தோஷத்தோடே கூடிய எல்லாப் பொறுமையும் நீடியசாந்தமும் உண்டாவதற்கு, மகிமையான அவருடைய வல்லமையின்படி, எல்லா வல்லமையாலும் பலப்படுத்தப்படவும், உங்களுக்காகவேண்டுதல்செய்கிறோம். (கொலோசெயர் 1:11)**

நாம் நீடிய பொறுமையுள்ளவர்களாயிருக்கும்படி அழைக்கப்பட்டுள்ளோம்:

**மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி... (எபேசியர் 4:2)**

நாம் நீடிய பெறுமையுடன் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்க வேண்டும்:

**சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும் ஜாக்கிரதையாய்த் திருவசனத்தைப் பிரசங்கம்பண்ணு... எல்லா நீடிய சாந்தத்தோடும் உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லு. (2 தீமோத்தேயு 4:2)**

விசுவாசிகள் நீடிய பொறுமையுடன் தேவனுடைய வார்த்தையை பிரசங்கிக்க வேண்டும்:

**ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு... (கொலோசெயர் 3:12)**

## தயவு

தயவு மென்மையான, கனிவான தன்மையை கொண்டது... கடுமையான, வன்முறையான அல்லது உரத்த சத்தமிடும் குணத்தை கொண்டதல்ல. அது அமைதியான, மரியாதையான, இரக்கத்தை பிரதிபலிக்கும் குணம்.

விசுவாசிகள் சகல மனிதரிடமும் தயவுள்ளவர்களாக இருக்க வேண்டும், சண்டையிடுகிறவனாக இருக்க கூடாது என்று எச்சரிக்கிறது:

**கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்கவேண்டும். (2 தீமோத்தேயு 2:24)**

நாம் சண்டையிடுகின்றவர்களாக இருக்கக்கூடாது. சுண்டையிடுகிறவர்கள் எப்போதும் விவாதிக்கிறவர்களாயும், சண்டை போடுகின்றவர்களாயும் இருப்பார்கள்:

**ஒருவனையும் தூஷியாமலும், சண்டைபண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா**

**மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு. (தீத்து 3:2)**

நாம் இணக்கமுள்ளவர்களாயிருக்க வேண்டும். மற்றவர்களை நாம் சுலபமாக ஏற்றுக்கொள்ளும் போது அது எமது தயவான அணுகும் சுபாவத்தை காண்பிக்கிறது:

**பரத்திலிருந்து வருகிற ஞானமோ முதலாவது சுத்தமுள்ளதாயும், பின்பு சமாதானமும் சாந்தமும் இணக்கமுமுள்ளதாயும், இரக்கத்தாலும் நற்கனிகளாலும் நிறைந்ததாயும், பட்சபாதமில்லாததாயும், மாயமற்றதாயுமிருக்கிறது. (யாக்கோபு 3:17)**

தாவீது எழுதுகின்றதாவது:

**உம்முடைய இரட்சிப்பின் கேடகத்தையும் எனக்குத் தந்தீர். உம்முடைய வலதுகரம் என்னைத் தாங்குகிறது. உம்முடைய காருணியம் என்னைப் பெரியவனாக்கும். (சங்கீதம் 18:35)**

## நற்குணம்

நற்குணம் பரிசுத்தம் அல்லது நீதியின் கிரியையாக இருக்கிறது. நற்குணம் தேவனது தராதரமாக இருக்கின்றது.

**தேவனுடைய கிருபை எந்நாளுமுள்ளது. (சங்கீதம் 52:1)**

**அவருடைய கிருபையினிமித்தமும், மனுபுத்திரருக்கு அவர் செய்கிற அதிசயங்களினிமித்தமும் அவரைத் துதிப்பார்களாக.. (சங்கீதம் 107:9)**

**அவர் என் தயாபரரும், என் கோட்டையும், என் உயர்ந்த அடைக்கலமும், என்னை விடுவிக்கிறவரும், என் கேடகமும், நான் நம்பினவரும், என் ஜனங்களை எனக்குக் கீழ்ப்படுத்துகிறவருமாயிருக்கிறார். (சங்கீதம் 144:2)**

பூமியானது அவருடைய காருணியத்தை காட்டுகின்றது:

**பூமி கர்த்தருடைய காருணியத்தினால் நிறைந்திருக்கிறது... (சங்கீதம் 33:5)**

தேவன் வருஷங்களை தமது நன்மையினால் முடிசூட்டியுள்ளார். வருடத்தின் சகல ஆசீர்வாதங்களும் அவரால் வருகின்றது என்பதே இதன் அர்த்தம்:

**வருஷத்தை உம்முடைய நன்மையால் முடிசூட்டுகிறீர்.... (சங்கீதம் 65:11)**

தேவனது நற்குணம் பாவிகள் மனந்திரும்பி வாழ வழி காட்டுகின்றது:

**அல்லது தேவதயவு நீ குணப்படும்படி உன்னை ஏவுகிறதென்று அறியாமல், அவருடைய தயவு பொறுமை நீடியசாந்தம் இவைகளின் ஐசுவரியத்தை அசட்டைபண்ணுகிறாயோ? (ரோமர் 2:4)**

தேவனுடைய நன்மையை காணாதிருந்தால், கெட்டுப்போயிருப்பேன் என தாவீது ராஜா கூறுகின்றார்:

**நானோ, ஜீவனுள்ளோர் தேசத்திலே கர்த்தருடைய நன்மையைக் காண்பேன் என்று விசுவாசியாதிருந்தால் கெட்டுப்போயிருப்பேன். (சங்கீதம் 27:13)**

தேவனது நன்மை எம்மேல் வைக்கப்பட்டுள்ளதாக தாவீது கூறுகின்றார்:

**உமக்குப் பயந்தவர்களுக்கும், மனுபுத்திரருக்கு முன்பாக உம்மை நம்புகிறவர்களுக்கும், நீர் உண்டு பண்ணிவைத்திருக்கிற உம்முடைய நன்மை எவ்வளவு பெரிதாயிருக்கிறது! (சங்கீதம் 31:19)**

தேவன் தமது தயவால் தாகமுள்ளோரை நிரப்புகிறார்:

**தவனமுள்ள ஆத்துமாவைக் கர்த்தர் திருப்தியாக்கி, பசியுள்ள ஆத்துமாவை நன்மையினால் நிரப்புகிறாரென்று... (சங்கீதம் 107:8)**

தேவன் தமது தயவால் தாகமுள்ளோரை நிரப்புகிறார்:

**என் ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் என்னைத் தொடரும்ஞ்ரூ நான் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்பேன். (சங்கீதம் 23:6)**

## விசுவாசம்

ஆவிக்குரிய வரத்தை பற்றி படிக்கின்றபோதும் விசுவாசத்தைக் குறித்து நீங்கள் கற்றீர்கள். விசுவாசம் ஒரு வரமாக இருப்பது போலவே கனியாகவும் இருக்கின்றது என்று இப்பகுதி எமக்கு கற்பிக்கிறது.

இரண்டிற்கும் இடையில் வேறுபாடுகள் உண்டு என்று முன்பு விளக்கியதை ஞாபகத்தில் கொள்ளுங்கள். விசுவாசம் வல்லமையான ஓர் வரம். கிரியை செய்யும். இது உறுதியான நம்பிக்கையை தேவனில் கொண்டிருப்பதால், மற்றவர்களிடம் விசுவாசம் இல்லாதபோதிலும் விசுவாசியால் கிரியைச் செய்யக்கூடியதாக இருக்கிறது. விசுவாசம் கனியின் ஓர் குணாதிசயமாக இருக்கிறது. அது தேவனில் மேல் விசுவாசம் வைக்கும் அணுகுமுறையாகவும் இருக்கின்றது. இது ஒருவரது வாழ்க்கையில் ஆவிக்குரிய வளர்ச்சியை கொண்டு செயல் முறையின் மூலம் உருவாக்கப்பட்டது, அனைவருக்கும் விசுவாச வரம் இல்லாதிருக்கின்றபோதும் விசுவாசத்தின் கனி அனைத்து விசுவாசிகளின் வாழ்விலும் தெளிவாக இருக்க வேண்டும்.

## சாந்தம்

சாந்தம் வலிமையை கட்டுப்படுத்துகின்றது. பின்மாற்றக்காரரை மறுசீரமைக்க சாந்தகுணம் பயன்தரும் முறையாக உள்ளது. இயேசுவை இரட்சகராக ஏற்றுக் கொண்ட பின்னரும் திரும்பவும் பாவ வாழ்க்கைக்கு போகின்றவர் பின்மாற்றக்காரராவார்:

**நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன்.**

**சகோதரரே, அதைப் பிடித்துக்கொண்டேனென்று நான் எண்ணுகிறதில்லை. ஒன்று செய்கிறேன், பின்னானவைகளை மறந்து, முன்னானவைகளை நாடி, (கொலோசெயர் 3:12-13)**

**சகோதரரே, ஒருவன் யாதொரு குற்றத்தில் அகப்பட்டால், ஆவிக்குரியவர்களாகிய நீங்கள் சாந்தமுள்ள ஆவியோடே அப்படிப்பட்டவனைச் சீர்பொருந்தப்பண்ணுங்கள். நீயும் சோதிக்கப்படாதபடிக்கு உன்னைக்குறித்து எச்சரிக்கையாயிரு. (கலாத்தியர் 6:1)**

சாந்தம் சபை ஐக்கியத்தை பராமரிக்கின்றது:

**நீங்கள் அழைக்கப்பட்ட அழைப்புக்குப் பாத்திரவான்களாய் நடந்து....**

**மிகுந்த மனத்தாழ்மையும் சாந்தமும் நீடிய பொறுமையும் உடையவர்களாய், அன்பினால் ஒருவரையொருவர் தாங்கி,**

**சமாதானக்கட்டினால் ஆவியின் ஒருமையைக் காத்துக்கொள்வதற்கு ஜாக்கிரதையாயிருங்கள். (எபேசியர் 4:1-3)**

சாந்த குணம் சகல மனிதரிடமும் கையாளப்பட வேண்டும்:

**கர்த்தருடைய ஊழியக்காரன் சண்டைபண்ணுகிறவனாயிராமல், எல்லாரிடத்திலும் சாந்தமுள்ளவனும், போதகசமர்த்தனும், தீமையைச் சகிக்கிறவனுமாயிருக்கவேண்டும்.**

**எதிர்பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும்... (2 தீமோத்தேய 2:24-25)**

**ஒருவனையும் தூஷியாமலும், சண்டைபண்ணாமலும், பொறுமையுள்ளவர்களாய் எல்லா மனுஷருக்கும் சாந்தகுணத்தைக் காண்பிக்கவும் அவர்களுக்கு நினைப்பூட்டு. (தீத்து 3:2)**

சாந்த குணத்தோடு கர்த்தருடைய வசனத்தை ஏற்றுக் கொண்டீர்கள்:

**ஆகையால், நீங்கள் எல்லாவித அழுக்கையும் கொடிய துர்க்குணத்தையும் ஒழித்துவிட்டு, உங்கள் உள்ளத்தில் நாட்டப்பட்டதாயும் உங்கள் ஆத்துமாக்களை இரட்சிக்க வல்லமையுள்ளதாயுமிருக்கிற வசனத்தைச் சாந்தமாய் ஏற்றுக்கொள்ளுங்கள். (யாக்கோபு 1:21)**

ஞானமுள்ள மனிதன் சாந்தகுணமுள்ளவன்:

**உங்களில் ஞானியும் விவேகியுமாயிருக்கிறவன் எவனோ, அவன் ஞானத்திற்குரிய சாந்தத்தோடே தன் கிரியைகளை நல்ல நடக்கையினாலே காண்பிக்கக்கடவன். (யாக்கோபு 3:13)**

விசுவாசிகள் இந்த சாந்தகுணத்தை தேட ஊக்குவிக்கப்படுகின்றனர்:

**ஆகையால், நீங்கள் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட பரிசுத்தரும் பிரியருமாய், உருக்கமான இரக்கத்தையும், தயவையும், மனத்தாழ்மையையும், சாந்தத்தையும், நீடிய பொறுமையையும் தரித்துக்கொண்டு, (கொலோசெயர் 3:12)**

**நீயோ, தேவனுடைய மனுஷனே, இவைகளை விட்டோடி, நீதியையும் தேவபக்தியையும்**

**விசுவாசத்தையும் அன்பையும் பொறுமையையும் சாந்தகுணத்தையும் அடையும்படி நாடு. (1 தீமோத்தேயு 6:11)**

**தேசத்திலுள்ள எல்லாச் சிறுமையானவர்களே, கர்த்தருடைய நியாயத்தை நடப்பிக்கிறவர்களே, அவரைத் தேடுங்கள். நீதியைத் தேடுங்கள், மனத்தாழ்மையைத் தேடுங்கள். (செப்பனியா 2:3)**

## இச்சையடக்கம்

இச்சையடக்கம் உணர்வுகளிலும், எண்ணங்களிலும், கிரியைகளிலும் நிதானமாயிருக்கும். இது சுய கட்டுப்பாட்டை கொண்டது. இச்சையடக்கம் சகல காரியங்களிலும் ஆதிக்கம் செலுத்த வேண்டும்:

**மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன். (1 கொரிந்தியர் 9:27) (1 கொரிந்தியர் 9:19-27ஐயும் பார்க்கவும்)**

நாம் வாழ்க்கையில் இச்சையடக்கத்தை சேர்த்துக்கொள்ள வேண்டும் என்று பணிக்கப்பட்டுள்ளோம்:

**ஞானத்தோடே இச்சையடக்கத்தையும், இச்சையடக்கத்தோடே பொறுமையையும், பொறுமையோடே தேவபக்தியையும்... (2 பேதுரு 1:6)**

பவுலின் நற்செய்தியில் இச்சையடக்கமும் ஒரு பகுதியாக இருக்கிறது:

**அவன், நீதியையும், இச்சையடக்கத்தையும், இனிவரும் நியாயத்தீர்ப்பையும் குறித்துப் பேசுகையில்... (அப்போஸ்தலர் 24:25)**

## கனியின் முக்கியத்துவம்

இயேசு கனி கொடுப்பதைப்பற்றி அக்கறையுடன் பேசியுள்ளார். அவர் ஒரு உவமையை கூறினார்:

**ஒருவன் தன் திராட்சத்தோட்டத்தில் ஒரு அத்திமரத்தை நட்டிருந்தான்: அவன் வந்து அதிலே கனியைத் தேடினபோது ஒன்றுங் காணவில்லை.**

**அப்பொழுது அவன் தோட்டக்காரனை நோக்கி: இதோ, மூன்று வருஷமாய் இந்த அத்திமரத்திலே கனியைத் தேடி வருகிறேன். ஒன்றையுங் காணவில்லை, இதை வெட்டிப்போடு, இது நிலத்தையும் ஏன் கெடுக்கிறது என்றான்.**

**அதற்கு அவன்: ஐயா, இது இந்த வருஷமும் இருக்கட்டும். நான் இதைச் சுற்றிலுங் கொத்தி, எருப்போடுவேன்,**

**கனிகொடுத்தால் சரி, கொடாவிட்டால், இனிமேல் இதை வெட்டிப்போடலாம் என்று சொன்னான் என்றார். (லூக்கா 13:6-9)**

இன்னுமொரு முறை கனி கொடாத காட்டத்தி மரத்தை கண்டார்:

**காலையிலே அவர் நகரத்துக்குத் திரும்பிவருகையில், அவருக்குப் பசியுண்டாயிற்று.**

**அப்பொழுது வழியருகே ஒரு அத்திமரத்தைக் கண்டு, அதனிடத்திற் போய், அதிலே இலைகளையன்றி வேறொன்றையுங் காணாமல்: இனி ஒருக்காலும் உன்னிடத்தில் கனி உண்டாகாதிருக்கக்கடவது என்றார். உடனே அத்திமரம் பட்டுப்போயிற்று. (மத்தேயு 21:18-19)**

இயேசு கிறிஸ்து கோபத்துடன் அத்திமரத்தை சபிக்காமல், பசியாக இருக்கின்றபோது பழமற்று இருந்தமையால் சபித்தார். இதிலிருந்து அவர் முக்கிய சத்தியத்தை கற்பிக்கிறார். அத்திமரத்திற்கு நல்ல தோற்றமிருந்தது. பச்சை இலைகளைக் கொண்டு கனி இருப்பதைப்போன்று காட்சியளித்தது. ஆனால் கனி இருக்கவில்லை.

சிலர் ஆன்மீகவாதிகளைப்போன்று வெளியரங்கமாக காட்சியளிக்கின்றனர், ஆனால் உள்ளான வாழ்வில் கிறிஸ்துவைப் போன்ற கனிதரும் ஆவிக்குரிய வாழ்வு அவர்களிடமில்லை. பரிசேயரும், சமயத்தலைவர்களும் இயேசுவின் காலத்தில் இந்நிலையிலேயே இருந்தனர். இயேசு அவர்களுக்கு கூறினதாவது:

**மாயக்காரராகிய வேதபாரகரே! பரிசேயரே! உங்களுக்கு ஐயோ, வெள்ளையடிக்கப்பட்ட கல்லறைகளுக்கு ஒப்பாயிருக்கிறீர்கள், அவைகள் புறம்பே அலங்காரமாய்க் காணப்படும், உள்ளேயோ மரித்தவர்களின் எலும்புகளினாலும் சகல அசுத்தத்தினாலும் நிறைந்திருக்கும். (மத்தேயு 23:27)**

இயேசு தேவன் கனியுள்ள தோற்றத்தைவிட, கனி கொடுப்பதைப்பற்றியே அவதானம் செலுத்துகிறார்.

நவீன கால ஊழியங்களில் பொதுவாக பரிசுத்தாவியானவரின் கனியைக் குறித்து பேசப்படாமல், வரங்களைக்குறித்தே அதிக கவனம் செலுத்தப்பட்டு பேசப்படுகின்றது. ஆனால் ஆவிக்குரிய கனி பற்றியயே வேதாகமம் வலியுறுத்துகின்றது:

**ஆதலால், அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்.... (மத்தேயு 7:20)**

ஒருவர் உள்ளரங்கில் எவ்வாறு இருக்கின்றாரோ, அதே குணாதிசயத்தையே அவரால் வெளிப்படுத்திக் காண்பிக்க முடியும்:

**நல்ல மரமானது கெட்ட கனிகொடாது, கெட்ட மரமானது நல்ல கனிகொடாது.**

**அந்தந்த மரம் அதனதன் கனியினால் அறியப்படும். முட்செடிகளில் அத்திப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை, நெருஞ்சிச் செடியில் திராட்சப்பழங்களைப் பறிக்கிறதுமில்லை.**

**நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான். பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக்காட்டுகிறான். இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும். (லூக்கா 6:43-45)**

ஒருவர் தனிப்பட்ட முறையில் ஆவிக்குரிய வல்லமையை தவறாக பாவிக்க முடியும். அவர் தேவனுடைய பெயரில் அற்புதங்களை கூட செய்திருக்கலாம். ஆனால் இயேசு கூறினதாவது:

> **பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோகராஜ்யத்தில் பிரவேசிப்பானேயல்லாமல், என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.**
>
> **அந்நாளில் அநேகர் என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! உமது நாமத்தினாலே தீர்க்கதரிசனம் உரைத்தோம் அல்லவா? உமது நாமத்தினாலே பிசாசுகளைத் துரத்தினோம் அல்லவா? உமது நாமத்தினாலே அநேக அற்புதங்களைச் செய்தோம் அல்லவா? என்பார்கள்.**
>
> **அப்பொழுது, நான் ஒருக்காலும் உங்களை அறியவில்லை, அக்கிரமச் செய்கைக்காரரே, என்னைவிட்டு அகன்றுபோங்கள் என்று அவர்களுக்குச் சொல்லுவேன். (மத்தேயு 7:21-23)**

யூதாவின் நிருபம் சபைகளில் பிழையான உபதேசங்கள் கற்றுக்கொடுப்பதை எச்சரிக்கின்றது. அவர்களுடைய வாழ்க்கையில் கனியற்றிருப்பது அவர்களை அடையாளங்கான ஒரு வழியாக இருக்கிறது என அவர் கூறுகிறார்:

> **இவர்கள் காற்றுகளால் அடியுண்டோடுகிற தண்ணீரற்ற மேகங்களும், இலையுதிர்ந்து கனியற்று இரண்டுதரஞ் செத்து வேரற்றுப்போன மரங்களும்.... (யூதா 12)**

எந்த ஊழியத்திலும் கனி இருப்பது மிக முக்கியமானது, ஏனெனில் “அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிந்து கொள்வீர்கள்” (மத்தேயு 7:20).

பௌதீக உலகிலுள்ள பழங்களிலுள்ள விதைகளினால் இனப்பெருக்கம் நடைபெறுகின்றது. ஆவிக்குரிய உலகிலும் பரிசுத்த ஆவியின் கனியினால் ஆவிக்குரிய மீள் உருவாக்கம் நடைபெறுகின்றது:

-விசுவாசிகள் கிறிஸ்துவின் குணாதிசயங்களைக் கொண்ட கனி கொடுக்கும் போது பாவமுள்ள மனிதர்கள் தேவனிடம் ஈர்க்கப்படுவார்கள்.

-தேவ ராஜ்ஜியத்தின் சுவிசேஷம் பரவி கனி கொடுக்கும் போது ஆவிக்குரிய அறுவடை உலகமெங்கும் இருக்கும்.

## சுய பரீட்சை:

١. வெளியரங்கமான ஆவியின் கனி என்றால் என்ன?

٢. உள்ளரங்கமான ஆவியின் கனி என்றால் என்ன?

3. பரிசுத்த ஆவியானவரின் உள்ளான கனியின் குணாதிசயங்களை பட்டியலிடுக.

4. இயேசு கிறிஸ்து கனி கொடுக்க எம்மை தேர்ந்தெடுத்துள்ளார் என்பதை வெளிப்படுத்தும் வேத வாக்கியம் எது?

5. திறவுகோள் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

6. பட்டியல் ஒன்றில் பரிசுத்த ஆவியின் கனி கொடுக்கப்பட்டுள்ளதை வாசியுங்கள். அதன் வரைவிலக்கணத்தை பட்டியல் இரண்டில் கொடுக்கப்பட்டு உள்ளது. சரியான இலக்கத்தை பட்டியல் ஒன்றில் கோடிடப்பட்டுள்ள இடத்தில் எழுதவும்.

| **பட்டியல் ஒன்று** | **பட்டியல் இரண்டு** |
| --- | --- |
| ----------- இச்சையடக்கம் | 1. ஆழமான அன்பும், கரிசனையும் |
| ----------- விசுவாசம் | 2. மகிழ்ச்சி, பெருமகிழ்ச்சி |
| ----------- சாந்தம் | 3. அமைதியானது, சாந்தமுள்ளது, இணக்கமுள்ளது |

| | |
|---|---|
| ----------- தயவு | 4. பொறுமையுள்ளது, நீடிய பொறுமையுள்ளது |
| ----------- நற்குணம் | 5. கனிவானது, கடுமையானதல்ல |
| ----------- சந்தோஷம் | 6. நீதியான நற்கிரியைகள் |
| ----------- நீடிய பொறுமை | 7. தேவனின் மேல் வலுவான விசுவாசம் |
| ----------- சமாதானம் | 8. பேலனை கட்டுப்படுத்தும் |
| ----------- அன்பு | 9. சுய கட்டுப்பாடு |

7. ஏன் ஆவியின் கனி முக்கியமானது?

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

8. தேவனுடன் சமாதானமாயிருப்பதற்கும், தேவ சமாதானத்திற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

--------------------------------------------------------------------------------------------------------------------------------------------

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன).

## மேலதிக படிப்பினைக்கு

1. மத்தேயு 5:1-12ஐ வாசிக்கவும். கிறிஸ்துவை போலாகுவதற்கான உள்ளான கனி எத்தனை இங்கு காண்கிறீர்கள்? உதாரணமாக, 12ம் வசனத்தில் சந்தோஷத்தின் கனியை காண்பீர்கள்.

2. 1 கொரிந்தியர் 13ம் அதிகாரத்தில் ஆவியின் கனியாகிய அன்பு பற்றி வாசியுங்கள். அன்பின் கனியில் காணப்படுகிற வேறு ஆவிக்குரிய கனி என்ன? உதாரணமாக 7ம் வசனம் கூறும் “சகவற்றையும் நம்பும் கனி”, விசுவாசத்தின் கனியாக உள்ளது.

3. பரிசுத்த ஆவியின் கனி தேவனின் தன்மையை வெளிப்படுத்துகின்றது. தேவனாகிய கர்த்தர் கீழுள்ளவைகளுக்கு தேவனாயிருக்கின்றார்:

| | |
|---|---|
| அன்பு: | 1 யோவான் 4:16; தீத்து 3:4 |
| சந்தோஷம்: | மத்தேயு 25:21 |
| சமாதானம்: | பிலிப்பியர் 4:7 |
| நீடிய பொறுமை: | 2 பேதுரு 3:9,15 |
| தயவு: | மத்தேயு 11:28-30 |
| நற்குணம்: | 2 பேதுரு 1:3 |
| விசுவாசம்: | 2 தீமோத்தேயு 2:13 |
| சாந்தம்: | செப்பனியா 2:3 |
| இச்சையடக்கம்: | எபிரெயர் 12:11 |

4. இயேசு கிறிஸ்து தனது வாழ்வில் பரிசுத்த ஆவியின் சகல கனியையும் கொண்டிருந்தார்:

   வெளியான கனி: சுவிசேஷம்: யோவான் 10:16; மாற்கு 1:38

   ஊள்ளான கனி:

| | |
|---|---|
| அன்பு: | மாற்கு 10:21; யோவான் 11:5,36 |
| சந்தோஷம்: | யோவான் 15:11 |
| சமாதானம்: | யோவான் 14:27 |
| நீடிய பொறுமை: | 1 பேதுரு 3:15 |
| தயவு: | 2 கொரிந்தியர் 10:1 |
| நற்குணம்: | ரோமர் 11:22 |
| விசுவாசம்: | மத்தேயு 17:14-21 |
| சாந்தம்: | 2 கொரிந்தியர் 10:1 |
| இச்சையடக்கம்: | லூக்கா 4:1-13 |

மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் புத்தகங்களை வாசிக்கவும். இயேசுவின் வாழ்வில் பரிசுத்த ஆவியின் கனி நிரூபிக்கப்பட்ட சந்தர்ப்பங்களுக்கான வேத வாக்கியங்களை பட்டியலிடவும்.

அதிகாரம் பதின்ரெண்டு

# மாம்சத்தின் கிரியைகள்

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால் :

மாம்சத்தின் கிரியைகளை அடையாளம் காண்பீர்கள்.
மாம்சத்தின் கிரியையை தவிர்த்து ஆவியில் எவ்வாறு நடப்பது என்பதை விபரிக்க முடியும்.

## திறவுகோள் வசனம்:

**மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன, அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்,**

**விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள்,**

**பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே: இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். (கலாத்தியர் 5:19-21)**

## அறிமுகம்

மாம்சத்தின் கிரியைகள் பாவத்தின் குணாதிசயங்கள் இவைகளுக்கு மாறான பரிசுத்த ஆவியானவர் கனி பற்றி இவ்வதிகாரம் அக்கறை செலுத்தும்.

## மாம்சத்தின் கிரியைகள் என்ன?

மாம்சத்தின் கிரியைகள் என்னும் போது, அது மனிதனுடைய பாவ சுபாவத்தையும், அதன் மேலுள்ள ஆசையையும் சுட்டிக்காட்டும். உங்கள் வாழ்க்கையில் பரிசுத்த ஆவியானவர் உருவாக்க எதிர்பார்க்கும் குணாதிசயங்களுக்கு எதிரானவைகளாக அவைகள் இருக்கின்றன.

## ஆவிக்குரிய போராட்டம்?

ஒரு விசுவாசியின் வாழ்க்கையில் ஆவிக்குரிய போராட்டம் தொடர்ந்து இருந்துகொண்டே இருக்கும். மாம்சத்தின் கிரியைகள் பரிசுத்த ஆவியானவரின் கனியை அழித்துபோட முயற்சிக்கின்றன:

**மாம்சம் ஆவிக்கு விரோதமாகவும், ஆவி மாம்சத்துக்கு விரோதமாகவும் இச்சிக்கிறது, நீங்கள்**

**செய்யவேண்டுமென்றிருக்கிறவைகளைச் செய்யாதபடிக்கு, இவைகள் ஒன்றுக்கொன்று விரோதமாயிருக்கிறது. (கலாத்தியர் 5:17)**

ஜென்ம சுபாவமுள்ள மனிதனின் ஆசைகள், பரிசுத்த ஆவியானவரின் சுபாவத்திற்கு எதிரானவைகளாக இருக்கின்றன. மாம்சத்தின் கிரியைகளாவன:

**விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்,**

**விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள்,**

**பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே... (கலாத்தியர் 5:19-21)**

இப்பாவங்களின் விளைவுகள் தவறான நடத்தைகளாக காணப்படுகின்றபோதும், காரணமானது வெளிப்படையானது அல்ல. இதயத்திலுள்ள பாவ ஆசைகளே அதன் காரணமாக இருக்கின்றது:

**அதற்கு அவர்: நீங்களும் இவ்வளவு உணர்வில்லாதவர்களா? புறம்பேயிருந்து மனுஷனுக்குள்ளே போகிறதொன்றும் அவனைத் தீட்டுப்படுத்தமாட்டாதென்று நீங்கள் அறிந்துகொள்ளவில்லையா?**

**மனுஷனுக்குள்ளே இருந்து புறப்படுகிறதே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்.**

**எப்படியெனில், மனுஷருடைய இருதயத்திற்குள்ளிருந்து பொல்லாத சிந்தனைகளும், விபசாரங்களும், வேசித்தனங்களும், கொலைபாதகங்களும்,**

**களவுகளும், பொருளாசைகளும், துஷ்டத்தனங்களும், கபடும், காமவிகாரமும், வன்கண்ணும், தூஷணமும், பெருமையும், மதிகேடும், புறப்பட்டுவரும்.**

**பொல்லாங்கானவைகளாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார். (மாற்கு 7:18,20-23)**

வேதாகமம் அடையாளப்படுத்தும் பாவங்கள் அனைத்தும் கலாத்தியர் 5:19-21ல் பட்டியலில் குறிப்பிடப்படவில்லை. குறிப்பிடத்தக்க சில பாவங்கள் மட்டும் “மாம்சத்தின் கிரியை” எனச் சொல்லப்படுகின்றது மட்டுமின்றி அவைகள் பரிசுத்த ஆவியின் கனியையும் வேறுபடுத்தி காட்டுகின்றது. அதனாலேயே இப்பாவங்களைக் குறித்து நாம் ஆராய்கின்றோம்.

## விபச்சாரம்

விபச்சாரம் என்பது திருமணம் செய்த ஒருவர் தனது துணையல்லாத ஒருவருடன் பாலியல் உறவை கொண்டிருப்பதாகும். தேவன் கொடுத்த பத்து கட்டளைகளில் ஒன்று:

**விபசாரம் செய்யாதிருப்பாயாக. (யாத்திராகமம் 20:14)**

என்பதாகும். பழைய ஏற்பாட்டு காலத்தில் ஒருவன் விபச்சாரம் செய்தால் அவனை கொலை செய்து

விடுவார்கள்:

**ஒருவன் பிறனுடைய மனைவியோடே விபச்சாரம் செய்தால், பிறன் மனைவியோடே விபச்சாரம் செய்த அந்த விபசாரனும் அந்த விபசாரியும் கொலைசெய்யப்படக்கடவர்கள். (லேவியராகமம் 20:10)**

புதிய ஏற்பாட்டிலே இயேசுவும், பவுலும் இதற்கெதிரான எச்சரிக்கையை கொடுக்கின்றனர்:

**விபசாரஞ் செய்யாதிருப்பாயாக... என்கிற கற்பனைகளை அறிந்திருக்கிறாயே என்றார். (மாற்கு 10:19)**

**எப்படியென்றால், விபசாரம் செய்யாதிருப்பாயாக.... (ரோமர் 13:9)**

இயேசு விபச்சாரத்தை மனதின் தீய பாலியல் ஆசையால் ஏற்படுவது என்ற அர்த்தத்தோடு பேசினார்:

**விபசாரஞ் செய்யாதிருப்பாயாக என்பது பூர்வத்தாருக்கு உரைக்கப்பட்டதென்று கேள்விப்பட்டிருக்கிறீர்கள்.**

**நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ்செய்தாயிற்று. (மத்தேயு 5:57-28)**

விபச்சாரமானது ஒருவரை விவாகரத்து செய்ய தூண்டுவதுடன், வேதாகமம் அங்கீகரிக்காத மீள் திருமணத்தையும் ஆதரிக்கின்றது:

**நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ்செய்யப்பண்ணுகிறவனாயிருப்பான், அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான். (மத்தேயு 5:32)**

**மனைவியும் தன் புருஷனைத் தள்ளிவிட்டு, வேறொருவனை விவாகம்பண்ணினால், விபசாரஞ்செய்கிறவளாயிருப்பாள் என்றார். (மாற்கு 10:12)**

ஒரு மனிதன் விபச்சாரம் செய்கின்றபோது தனது சொந்த ஆன்மாவிற்கு எதிராகவே பாவம் செய்கின்றான்:

**ஸ்திரீயுடனே விபசாரம்பண்ணுகிறவன் மதிகெட்டவன், அப்படிச் செய்கிறவன் தன் ஆத்துமாவைக் கெடுத்துப் போடுகிறான். (நீதிமொழிகள் 6:32)**

விபச்சாரம் செய்கின்றவர்களை தேவன் நியாயந்தீர்ப்பார்:

**விவாகம் யாவருக்குள்ளும் கனமுள்ளதாயும், விவாகமஞ்சம் அசுசிப்படாததாயுமிருப்பதாக, வேசிக்கள்ளரையும் விபசாரக்காரரையும் தேவன் நியாயந்தீர்ப்பார். (எபிரெயர் 13:4)**

விபச்சாரம் செய்கின்றவனுக்கு தேவனுடைய இராஜ்ஜியத்தில் மரபுரிமை கிடைக்காது:

**அநியாயக்காரர் தேவனுயைட ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்: வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும்,**

**விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும்,**

**திருடரும், பொருளாசைக்காரரும், வெறியரும், உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. (1 கொரிந்தியர் 6:9-10)**

தவறான உபதேசத்தை செய்கின்றவர்களின் குணாதிசயங்களில் ஒன்றாக விபச்சாரம் இருக்கும் என்பதை அடையாளம் கண்டு கொள்ளுங்கள்:

**உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள். விபசாரமயக்கத்தால் நிறைந்தவைகளும், பாவத்தை விட்டோயாதவைகளுமாயிருக்கிற கண்களையுடையவர்கள். (2 பேதுரு 2:1,14)**

வேதாகமம் எச்சரிக்கின்றது:

**விபசாரியானவள் அருமையான உயிரை வேட்டையாடுகிறாள். (நீதிமொழிகள் 6:26)**

## வேசித்தனம்

திருமணமாகாத இருவர் பாலியல் உறவை கொண்டிருப்பது வேசித்தனமாகும். இதில் விபச்சாரம் உள்ளடக்கப்பட்டுள்ளது, எனினும் பாலியல் உறவை வைத்துக்கொள்ளும் நபர் தனது துணையல்லாத ஒருவருடன் உறவை மேற்கொள்வதை இது குறிக்கும். அதுபோலவே வேசித்தனம் பண்ணுதலும் தனக்குரியவரல்லாதவரிடம் மேற்கொள்ளும் பாலியலுறவை குறிக்கிறது. ஓரினச்சேர்க்கையையும் இதனுடன் இனைத்துக் கொள்ளலாம். (ஒரேபாலாருடன் கொள்ளும் உறவு).

வேசித்தனம் பண்ணுகிறவர்களை விவாகரத்து பண்ணிக்கொள்ள வேதாகமம் அனுமதி கொடுக்கிறது:

**நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்: வேசித்தன முகாந்தரத்தினாலொழிய தன் மனைவியைத் தள்ளிவிடுகிறவன், அவளை விபசாரஞ்செய்யப்பண்ணுகிறவனாயிருப்பான். அப்படித் தள்ளிவிடப்பட்டவளை விவாகம்பண்ணுகிறவனும் விபசாரஞ்செய்கிறவனாயிருப்பான். (மத்தேயு 5:32)**

வேசித்தனம் பண்ணுகிறவர்களுக்கு தேவனுடைய இராஜ்ஜியத்தில் உரிமை கிடையாது:

**அநியாயக்காரர் தேவனுயைட ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள்: வேசிமார்க்கத்தாரும்... தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. (1 கொரிந்தியர் 6:9-10)**

வேசித்தனத்திற்கு விலகியிருக்கும்படி வேதாகமம் கூறுகிறது:

**நீங்கள் பரிசுத்தமுள்ளவர்களாகவேண்டுமென்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது. அந்தப்படி, நீங்கள் வேசிமார்க்கத்துக்கு விலகியிருந்து.... (1 தெசலோனிக்கேயர் 4:3)**

**ஆகிலும் வேசித்தனம் இராதபடிக்கு அவனவன் தன் சொந்த மனைவியையும், அவளவள் தன் சொந்தப் புருஷனையும் உடையவர்களாயிருக்கவேண்டும். (1 கொரிந்தியர் 7:2)**

**அவர்களில் சிலர் வேசித்தனம்பண்ணி.. அதுபோல நாமும் வேசித்தனம்பண்ணாதிருப்போமாக. (1 கொரிந்தியர் 10:8)**

எமது சரீரம் வேசித்தனத்திற்காக உருவாக்கப்படவில்லை, காரணம் அது தேவனுக்கு சொந்தமானது. இந்த காரணத்திற்காக தான், நீங்கள் வேசித்தனத்திற்கு விலகியோட வேண்டும்:

**சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே உரியது, கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர்.**

**வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும். வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்.**

**உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கிற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும், நீங்கள் உங்களுடையவர்களல்லவென்றும் அறியீர்களா?**

**கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே, ஆகையால் தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள். (1 கொரிந்தியர் 6:13,18-20)**

வேசித்தனத்திற்கு விலகியிருப்பது உனது உத்தரவாதமாகும்:

**ஆகையால், விபசாரம்.. உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள். (கொலோசெயர் 3:5)**

விசுவாசிகளிடையே வேசித்தனம் என்ற சொல்லும் சொல்லப்படலாகாது:

**மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும், பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது. (எபேசியர் 5:3)**

ஒருவன் வேசித்தனத்தில் தொடர்ந்தும் ஈடுபடும்போது முற்றிலுமாக அதற்கே அடிமையாகிவிடுவான். அது ஓரினச்சேர்க்கைக்கும் வழிவகுக்கும். இறுதியில், அவனது மனச்சாட்சியும் மழுங்கி விடும்:

**இதினிமித்தம் தேவன் அவர்களை... ஒப்புக்கொடுத்தார்.... சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும்.... (ரோமர் 1:26,29)**

## அசுத்தம்

அசுத்தம், சுத்தத்திற்கு எதிரானதாக இருக்கிறது. மாம்சத்தின் கிரியையிலுள்ள “அசுத்தம்” என்ற சொல் ஆவிக்குரிய நெறித்தன்மையில் தூய்மையற்றிருப்பதை குறிக்கும்.

தமது மக்கள் தூய்மையற்று இருப்பதை தேவன் விரும்பவில்லை:

**மேலும், பரிசுத்தவான்களுக்கு ஏற்றபடி, வேசித்தனமும், மற்றெந்த அசுத்தமும்,**

**பொருளாசையும் ஆகிய இவைகளின் பேர்முதலாய் உங்களுக்குள்ளே சொல்லப்படவுங்கூடாது. (எபேசியர் 5:3)**

**தேவன் நம்மை அசுத்தத்திற்கல்ல பரிசுத்தத்திற்கே அழைத்திருக்கிறார். (1 தெசலோனிக்கேயர் 4:7)**

தூய்மையற்ற அசுத்த வாழ்வை அகற்றிவிட்டு, பரிசுத்தமாக ஜீவிப்பது உனது உத்தரவாதமாகும்:

**ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள். (கொலோசெயர் 3:5)**

**இப்படிப்பட்ட வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினால், பிரியமானவர்களே, மாம்சத்திலும் ஆவியிலும் உண்டான எல்லா அசுசியும் நீங்க, நம்மைச் சுத்திகரித்துக்கொண்டு, பரிசுத்தமாகுதலைத் தேவபயத்தோடே பூரணப்படுத்தக்கடவோம். (2 கொரிந்தியர் 7:21)**

**உங்களில் அவனவன் தன்தன் சரீர பாண்டத்தைப் பரிசுத்தமாயும் கனமாயும் ஆண்டுகொள்ளும்படி அறிந்து... (1 தெசலோனிக்கேயர் 4:5)**

அசுத்தத்தை தள்ளிவிடாதிருந்தால், இறுதியில் அதற்கே அடிமையாகிவிடுவீர்கள்:

**உங்கள் மாம்ச பலவீனத்தினிமித்தம் மனுஷர் பேசுகிறபிரகாரமாய்ப் பேசுகிறேன். அக்கிரமத்தை நடப்பிக்கும்படி முன்னே நீங்கள் உங்கள் அவயவங்களை அசுத்தத்திற்கும் அக்கிரமத்திற்கும் அடிமைகளாக ஒப்புக்கொடுத்ததுபோல, இப்பொழுது பரிசுத்தமானதை நடப்பிக்கும்படி உங்கள் அவயவங்களை நீதிக்கு அடிமைகளாக ஒப்புக்கொடுங்கள். (ரோமர் 6:19)**

அசுத்த வாழ்வை தள்ளிவிடாதிருந்தால், இறுதியில் அதற்கே அடிமையாகிவிடுவீர்கள்:

**உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள்.**

**நீங்களோ இவ்விதமாய்க் கிறிஸ்துவைக் கற்றுக்கொள்ளவில்லை. (எபேசியர் 4:19-20)**

நீங்கள் தொடர்ந்தும் ஆவிக்குரிய அசுத்தத்தில் ஜீவிப்பீர்கள் என்றால், தேவன் உங்களை அதற்கே ஒப்புக்கொடுத்து விடுவார்:

**இதினிமித்தம் அவர்கள் தங்கள் இருதயத்திலுள்ள இச்சைகளினாலே ஒருவரோடொருவர் தங்கள் சரீரங்களை அவமானப்படுத்தத்தக்கதாக, தேவன் அவர்களை அசுத்தத்திற்கு ஒப்புக்கொடுத்தார். (ரோமர் 1:24)**

மனிதன் தன்னை தேவனை விட வேறொன்றுக்கு தன்னை ஒப்புக்கொடுக்கும்போது அவனது மனச்சாட்சி சரியாக செயல்படாது மழுங்கி விடுகின்றது. அவன் மனந்திரும்பாத பட்சத்தில் பாவத்தினாலே அவன்

அழிந்து விடுவான்:

**விசேஷமாக அசுத்த இச்சையோடே மாம்சத்திற்கேற்றபடி நடந்து, கர்த்தத்துவத்தை அசட்டைபண்ணுகிறவர்கள். இவர்களோ பிடிபட்டழிக்கப்படுவதற்கு உண்டான புத்தியற்ற மிருகஜீவன்களைப்போலத் தங்களுக்குத் தெரியாதவைகளைத் தூஷித்து, தங்கள் கேட்டிலே கெட்டழிந்து, அநீதத்தின் பலனை அடைவார்கள். (2 பேதுரு 2:10,12)**

பின்வரும் அட்டவனையை பாருங்கள். சுத்தமின்மையை ஒன்றாக வைத்து ஆராய்ந்து பாருங்கள். பாவத்திலிருந்து விலகி ஜீவிக்கவும், அல்லது விலகி விட்டு விடவும் வல்லமையைக் கொண்டிருக்கிறீர்கள். நீங்கள் அசுத்தத்தை விட்டு விலகுவீர்கள் என்றால் அது உங்கள் ஜீவியத்தை பரிசுத்தத்திற்குள் வழிநடத்தும். பாவத்திற்கு விட்டு கொடுத்தால் அதற்கு அடிமையாகிவிடுவீர்கள், கடைசியாக தேவன் உங்களை பாவத்திற்கு ஒப்புக்கொடுத்து விட்டால் அதனாலேயே அழிந்து விடுவீர்கள், அது உங்களது ஒழுக்கக்கேட்டின் விளைவினால் ஏற்படுவதாகும்:

## அசுத்தம்: தேர்ந்தெடுப்பின் மாதிரி

நீங்கள்
அசுத்தத்தை விட்டு விலகினால்:
அது உங்களை
பரிசுத்தத்திற்குள் வழிநடத்தும்
1 தெசலோனிக்கேயர் 4:7

நீங்கள்
அசுத்தத்தில் ஜீவித்தால்:
அது உங்களை
அதற்கு உங்களை ஒப்புக்கொடுப்பீர்கள்
எபேசியர் 4:19
அதன் பலன்
தேவன் அதற்கு உங்களை
ஒப்புக்கொடுப்பார்
அதன் முடிவு
உங்களுடைய சொந்த ஒழுக்கக்கேட்டின்
விளைவாக அழிந்து போவீர்கள்:
2 பேதுரு 2:10,12

## காமவிகாரம்

காமவிகாரம் இச்சையால் ஏற்படுகிறது, பாவம் நிறைந்த உணர்வையும், கற்பின்மையையும் கொண்டது. அருவருப்பான, வெட்கங்கெட்ட தன்மையால் நிறைந்திருக்கும். பிழையான உபதேசக்காரர்களின் குணாதிசயங்களில் இதை அடையாளம் காண முடியும்:

**ஏனெனில் நமது தேவனுடைய கிருபையைக் காமவிகாரத்துக்கேதுவாகப் புரட்டி, ஒன்றான ஆண்டவராகிய தேவனையும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவையும் மறுதலிக்கிறபக்தியற்றவர்களாகிய சிலர் பக்கவழியாய் நுழைந்திருக்கிறார்கள். அவர்கள் இந்த ஆக்கினைக்குள்ளாவார்களென்று பூர்வத்திலே எழுதியிருக்கிறது. (யூதா 4)**

கடந்த காலங்களில் காமவிகாரம் கொண்டவர்களாக நீங்கள் இருந்திருக்கலாம். விசுவாசி என்ற

வகையில் இப்பழக்கத்தில் தொடர்ந்தும் நிலைத்திருக்கக்கூடாது:

**ஏனென்றால் மாம்சத்தில் பாடுபடுகிறவன் இனி மாம்சத்திலிருக்கும் காலம்வரைக்கும் மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல் தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்தக்கதாகப் பாவங்களை விட்டோய்ந்திருப்பான்.**

**சென்ற வாழ்நாட் காலத்திலே நாம் புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி நடந்துகொண்டதுபோதும், அப்பொழுது நாம் காமவிகாரத்தையும் துர்இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம்பண்ணி, களியாட்டுச்செய்து, வெறிகொண்டு, அருவருப்பான விக்கிரகாராதனையைச் செய்துவந்தோம். (1 பேதுரு 4:2-3)**

நீங்கள் நீங்கள் காமவிகாரத்தில் தொடர்ந்தும் ஜீவிப்பீர்கள் என்றால் இறுதியில் அதற்கே அடிமையாகிவிடுவீர்கள் என வேதாகமம் கற்பிக்கிறது:

**உணர்வில்லாதவர்களாய், சகலவித அசுத்தங்களையும் ஆவலோடே நடப்பிக்கும்படி, தங்களைக் காமவிகாரத்திற்கு ஒப்புக்கொடுத்திருக்கிறார்கள். (எபேசியர் 4:19)**

## விக்கிரக ஆராதனை

விக்கிரக ஆராதனை என்பது சிலைகளை வணங்குவதாகும். உலோகங்களினாலும், கற்களினாலும், மரங்களினாலும் செய்யப்பட்ட சிலைகளை வணங்குவது மட்டுமே விக்கிரக ஆராதனையாகாது. தேவனைப் பார்க்கிலும் வேறு ஏதாவதொன்றுக்கு முக்கியத்துவம் கொடுப்பதும் விக்கிரக ஆராதனைத்தான். மெய்யான தேவனை விட்டு விட்டு விக்கிரகங்களை வணங்குபவர்களே விக்கிரக ஆராதனைக்காரர். தேவனைப்பற்றி அறிவுக்குறைவே உங்களை விக்கிரக ஆராதனைக்குள் வழிநடத்தும்.

விக்கிரக ஆராதனை குறித்து தேவனால் கொடுக்கப்பட்ட முதலாவது கற்பனைகளின் ஒன்று:

**விக்கிரகங்களை நாடாமலும், வார்ப்பிக்கப்பட்ட தெய்வங்களை உங்களுக்கு உண்டாக்காமலும் இருப்பீர்களாக. நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். (லேவியராகமம் 19:4)**

**நீங்கள் உங்களுக்கு விக்கிரகங்களையும் சுரூபங்களையும் உண்டாக்காமலும், உங்களுக்குச் சிலையை நிறுத்தாமலும், சித்திரந்தீர்ந்த கல்லை நமஸ்கரிக்கும்பொருட்டு உங்கள் தேசத்தில் வைக்காமலும் இருப்பீர்களாக. நான் உங்கள் தேவனாகிய கர்த்தர். (லேவியராகமம் 26:1)**

புறஜாதிகளின் தேவர்கள் விக்கிரகங்கள் என அழைக்கப்படுகின்றனர்:

**சகல ஜனங்களுடைய தேவர்களும் விக்கிரகங்கள்தானே. கர்த்தரோ வானங்களை உண்டாக்கினவர். (சங்கீதம் 96:5)**

நீங்கள் விக்கிரகங்களை சேவிப்பீர்கள் என்றால் குழப்பத்திற்கு ஆளாகலாம்:

**சொரூபங்களை வணங்கி, விக்கிரகங்களைப்பற்றிப் பெருமைபாராட்டுகிறயாவரும் வெட்கப்பட்டுப் போவார்களாக. (சங்கீதம் 97:7)**

புறஜாதிகளின் கைவேலையாக விக்கிரகங்கள் இருக்கின்றன. அவைகளுக்கு வல்லமை அல்லது ஆவிக்குரிய அடையாளமோ இல்லை:

**அஞ்ஞானிகளுடைய விக்கிரகங்கள் வெள்ளியும் பொன்னும், மனுஷருடைய கைவேலையுமாயிருக்கிறது.**

**அவைகளுக்கு வாயிருந்தும் பேசாது, அவைகளுக்குக் கண்களிருந்தும் காணாது.**

**அவைகளுக்குக் காதுகளிருந்தும் கேளாது, அவைகளுடைய வாயிலே சுவாசமுமில்லை.**

**அவைகளைப் பண்ணுகிறவர்களும், அவைகளை நம்புகிறவர்கள்யாவரும், அவைகளைப்போல் இருக்கிறார்கள். (சங்கீதம் 135:15-18) (சங்கீதம் 115:4-8ஐயும் பார்க்க)**

கிறிஸ்தவன் விக்கிரகங்களை வழிபட முடியாது:

**தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? (2 கொரிந்தியர் 6:16)**

விக்கிரக ஆராதனைக்காரரோடு கூட்டுறவும் வைக்கக் கூடாது:

**நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது. அப்படிப்பட்டவனுடனேகூடப் புசிக்கவுங்கூடாது. (1 கொரிந்தியர் 5:11)**

நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகியிருக்கும் படி எச்சரிக்கப்பட்டுள்ளீர்கள்:

**பிள்ளைகளே, நீங்கள் விக்கிரகங்களுக்கு விலகி, உங்களைக் காத்துக்கொள்வீர்களாக. ஆமென். (1 யோவான் 5:21)**

விக்கிரக ஆராதனைக்காரருக்கு தேவ ராஜ்ஜியத்தில் பங்கில்லை:

**அநியாயக்காரர் தேவனுயைட ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வுஞ்சிக்கப்படாதிருங்கள். விக்கிரகாராதனைக்காரரும்... தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. (1 கொரிந்தியர் 6:9-10)**

வேதாகமம் விக்கிரக ஆராதனைக்காரரின் இறுதிநிலையை வெளிப்படுத்துகிறது:

**பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள் என்றார். (வெளிப்படுத்தல் 21:8)**

**நாய்களும், சூனியக்காரரும், விபசாரக்காரரும், கொலைபாதகரும்,**

**விக்கிரகாராதனைக்காரரும், பொய்யை விரும்பி அதின்படி செய்கிற யாவரும் புறம்பே இருப்பார்கள். (வெளிப்படுத்தல் 22:15)**

வேதாகமம் பொருளாசையையும் விக்கிரக ஆராதனை என்றே அழைக்கிறது. பிழையான ஆசையின் தீவிரம் பேராசையாக மாறுகிறது. பேராசையால் நெறி தவறும் போது அழிந்து போவீர்கள்:

**ஆகையால், விபசாரம், அசுத்தம், மோகம், துர்இச்சை, விக்கிரகாராதனையான பொருளாசை ஆகிய இவைகளைப் பூமியில் உண்டுபண்ணுகிற உங்கள் அவயவங்களை அழித்துப்போடுங்கள். (கொலோசெயர் 3:5)**

நீங்கள் கடந்த காலங்களில் விக்கிரக ஆராதனைக்காரராக இருந்திருக்கலாம், ஆனால் தற்போது விசுவாசி என்ற வகையில் இதைத் தொடர முடியாது:

**ஏனென்றால் மாம்சத்தில் பாடுபடுகிறவன் இனி மாம்சத்திலிருக்கும் காலம்வரைக்கும் மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல் தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்தக்கதாகப் பாவங்களை விட்டோய்ந்திருப்பான்.**

**சென்ற வாழ்நாட் காலத்திலே நாம் புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி நடந்துகொண்டதுபோதும், அப்பொழுது நாம் காமவிகாரத்தையும் துர்இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம்பண்ணி, களியாட்டுச்செய்து, வெறிகொண்டு, அருவருப்பான விக்கிரகாராதனையைச் செய்துவந்தோம். (1 பேதுரு 4:2-3)**

**ஏனெனில், அவர்கள்தாமே எங்களைக் குறித்து, உங்களிடத்தில் நாங்கள் அடைந்த பிரவேசம் இன்னதென்பதையும், ஜீவனுள்ள மெய்யான தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு, நீங்கள் விக்கிரகங்களைவிட்டுத் தேவனிடத்திற்கு மனந்திரும்பினதையும், (1 தெசலோனிக்கேயர் 1:9)**

## பில்லி சூனியம்

பில்லிசூனியம், சூனியக்காரர்களால் வெள்ளை, கருப்பு மாயாஜாலம், வித்தைகள், சோதிடம், மாயமயக்கங்கள், போதைபொருள், விஷத்தை பாவித்தல், மந்திர உச்சாடனம் என்பவற்றின் மூலமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. அதில் சகலவிதமான சாத்தானிய வாதமும், அதன் ஆராதனைக்குரிய நடைமுறை காரியங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

மற்றவர்கள் கட்டுப்படுத்தி கையாளும் திறன் இந்த பில்லி சூனியத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நீங்கள் சாத்தானிய் வாதத்திற்கு உட்பட்டு மாந்திரிக வேலைகளுடன் தொடர்பற்றவராக இருந்தாலும் கூட, மாம்சத்தின் கிரியைகளை கையாளுகின்றவர்களுக்காகவும், சாத்தானிய கட்டுப்பாட்டில் இருப்பவர்களுக்காகவும் ஜெபிக்க வேண்டும்.

பில்லிசூனியம் தேவனுக்கு எதிரான ஆவிக்குரிய கிளர்ச்சியாக இருக்கின்றது. கலகம் செய்தல் பில்லிசூனியப் பாவத்தை பார்க்கிலும் மோசமானது என தேவன் கூறுகிறார்:

**இரண்டகம்பண்ணுதல் பில்லிசூனியப்பாவத்துக்கும் சரியாய் இருக்கிறது... (1 சாமுவேல் 15:23)**

## பகைகள்

அன்பிற்கு எதிரானதாக பகை உள்ளது. இது ஆழ்ந்த வெறுப்பான ஓர் உணர்வாக இருக்கிறது. இது மற்றவர்களைக் குறித்து தீய உணர்வை கொண்டு வரும். பகை விரோதங்களை உருவாக்கும் என வேதாகமம் கூறுகிறது:

**பகை விரோதங்களை எழுப்பும். அன்போ சகல பாவங்களையும் மூடும். (நீதிமொழிகள் 10:12)**

பகையினால் நிரப்பப்பட்டு இருப்பதைவிட அன்பினால் நிரப்பப்பட்டிருப்பது சிறந்தது:

**பகையோடிருக்கும் கொழுத்த எருதின் கறியைப்பார்க்கிலும், சிநேகத்தோடிருக்கும் இலைக்கறியே நல்லது. (நீதிமொழிகள் 15:17)**

வஞ்சகமாக மறைத்து வைக்கப்பட்ட பகை தேவனால் வெளியாக்கப்படும்:

**பகையை வஞ்சகமாய் மறைத்து வைக்கிறவனெவனோ, அவனுடைய பொல்லாங்கு மகா சபையிலே வெளிப்படுத்தப்படும். (நீதிமொழிகள் 26:26)**

நீங்கள் உண்மையில் வெறுக்கின்ற ஒருவரை நேசிப்பது போல பாசாங்கு செய்வது வஞ்சகமாக இருக்கிறது.

## விரோதங்கள்

விரோதங்கள் என்பது முரண்பாடுகள், ஒற்றுமையின்மை, வேறுபாடு என்பதைக் குறிக்கும். இது முரண்பாட்டுக்கு ஒத்ததாக இருக்கிறது. இவ்வார்த்தை வேதாகமத்தில் ஒரேயொரு இடத்தில் மாத்திரமே பாவிக்கப்பட்டுள்ளது. இயேசு கடைசி காலத்தின் அடையாளமாக குடும்பங்களுக்குள் விரோதங்கள் ஏற்படும் எனக் கூறினார் (மத்தேயு 10:35).

## வைராக்கியங்கள்

வைராக்கியம் மற்றவர்களைப்போன்று அல்லது மற்றவர்களுக்கு சமமாக இருக்க வேண்டும் என்ற போட்டி மனப்பான்மையை குறிக்கும். இது ஒரு போட்டி போடும் ஆவியாக இருப்பதோடு, பொறாமையின் காரணமாக உருவாவதாகும். வேதாகமத்தில் கலாத்தியரில் மாத்திரமே இவ்விதமான குறிப்பு காணப்படுகிறது (கலாத்தியர் 5:19-21).

## கோபங்கள்

கோபமானது வன்முறையை உருவாக்கும் வெஞ்சினமாக இருக்கிறது. ஆத்திரம் எனவும் கூறலாம். கோபம் கொடுமையானது என வேதாகமம் கூறுகிறது:

**உக்கிரம் கொடுமையுள்ளது, கோபம் நிஷ்டூரமுள்ளது. பொறாமையோவென்றால், அதற்கு முன்னிற்கத்தக்கவன் யார்? (நீதிமொழிகள் 27:4)**

வெஞ்சினத்தால் மனிதன் பாதிக்கப்படக்கூடும்:

**கடுங்கோபி ஆக்கினைக்குள்ளாவான். நீ அவனைத் தப்புவித்தால் திரும்பவும் தப்புவிக்கவேண்டியதாய் வரும். (நீதிமொழிகள் 19:19)**

ஞானவான்கள் கடுங்கோபத்திலிருந்து விலகியிருப்பார்கள்:

**ஞானிகளோ குரோதத்தை விலக்குகிறார்கள்... (நீதிமொழிகள் 29:8)**

நீங்கள் அவிவிசுவாசியாக இருந்த போது கோபாக்கினையின் பிள்ளையாக இருந்தீர்கள்:

**அவர்களுக்குள்ளே நாமெல்லாரும் முற்காலத்திலே நமது மாம்ச இச்சையின்படியே நடந்து, நமது மாம்சமும் மனசும் விரும்பினவைகளைச் செய்து, சுபாவத்தினாலே மற்றவர்களைப்போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம். (எபேசியர் 2:3)**

இப்போது கடுங்கோபம் உங்கள் வாழ்க்கையில் கிரியை செய்ய முடியாது:

**சகலவிதமான கசப்பும், கோபமும், மூர்க்கமும், கூக்குரலும், தூஷணமும், மற்ற எந்தத் துர்க்குணமும் உங்களை விட்டு நீங்கக்கடவது. (எபேசியர் 4:31)**

கடுங்கோபத்தை விட்டு விலகுங்கள்:

**இப்பொழுதோ கோபமும் மூர்க்கமும் பொறாமையும், உங்கள் வாயில் பிறக்கலாகாத தூஷணமும் வம்பு வார்த்தைகளுமாகிய இவைகளையெல்லாம் விட்டுவிடுங்கள். (கொலோசெயர் 3:8)**

கோபத்தை கைவிட்டு விடுங்கள்:

**கோபத்தை நெகிழ்ந்து, உக்கிரத்தை விட்டுவிடு, பொல்லாப்புச்செய்ய ஏதுவான எரிச்சல் உனக்கு வேண்டாம். (சங்கீதம் 37:8)**

கோபம் கொள்ள தாமதியுங்கள்:

**ஆகையால், என் பிரியமான சகோதரரே, யாவரும் கேட்கிறதற்குத் தீவிரமாயும், பேசுகிறதற்குப் பொறுமையாயும், கோபிக்கிறதற்குத் தாமதமாயும் இருக்கக்கடவர்கள்.**

**மனுஷருடைய கோபம் தேவனுடைய நீதியை நடப்பிக்கமாட்டாதே. (யாக்கோபு 1:19,20)**

**நீடிய சாந்தமுள்ளவன் மகாபுத்திமான். முற்கோபியோ புத்தியீனத்தை விளங்கப்பண்ணுகிறான். (நீதிமொழிகள் 14:29)**

மாம்சத்தின் கிரியைக்கும், கடுங்கோபத்திற்கும் சம்பந்தமுண்டு, சண்டைப்பற்றிய குறிப்பில் இதை கற்பீர்கள். வேதாகமம் இந்த சம்பத்தைப்பற்றி பேசுகிறது:

**கோபக்காரன் சண்டையை எழுப்புகிறான், நீடியசாந்தமுள்ளவனோ சண்டையை அமர்த்துகிறான். (நீதிமொழிகள் 15:18)**

**கோபத்தைக் கிண்டிவிடுதல் சண்டையைப் பிறப்பிக்கும். (நீதிமொழிகள் 30:33)**

## சண்டைகள்

சண்டைகள் என்றால் வலிந்து சண்டைபிடித்தல், சச்சரவுகள், முரண்பாடுகளினால் மோதிக்கொள்ளல் எனப்படும். மோதுதல், போராடுதல் என்னும் அர்த்தமும் உண்டு. இது அநேகமாக கடுங்கோபத்தினாலும், வெறுப்பினாலும் ஏற்படுகின்றது:

**பகை விரோதங்களை எழுப்பும். அன்போ சகல பாவங்களையும் மூடும். (நீதிமொழிகள் 10:12)**

மாறுபாடுள்ள மனிதர்கள் சண்டைகளை ஏற்படுத்துகின்றனர்:

**மாறுபாடுள்ளவன் சண்டையைக் கிளப்பிவிடுகிறான். (நீதிமொழிகள் 16:28)**

பெருமையும் கலவரத்தை ஏற்படுத்துகின்றது:

**பேருநெஞ்சன் வழக்கைக் கொளுவுகிறான்.... (நீதிமொழிகள் 28:25)**

கோபக்காரனும் கலவரத்தை ஏற்படுத்துகின்றான்:

**கோபக்காரன் வழக்கைக் கொளுவுகிறான். மூர்க்கன் பெரும்பாதகன். (நீதிமொழிகள் 29:22)**

பரியாசக்காரனும் கலவரத்தை ஏற்படுத்துகின்றான்:

**பரியாசக்காரனைத் துரத்திவிடு, அப்பொழுது வாது நீங்கும், விரோதமும் அவமானமும் ஒழியும். (நீதிமொழிகள் 22:10)**

பரியாசக்காரன் ஒருவனை அல்லது ஒன்றைக்குறித்து அவமதித்து கேலி செய்வான்.

மக்கள் ஒருவர் வழக்கில், ஒருவர் தலையிட்டு வாக்குவாதம் பண்ணுவதாலும் கலவரம் ஏற்படுகிறது:

**வழியே போகையில் தனக்கடாத வழக்கில் தலையிடுகிறவன் நாயைக் காதைப் பிடித்திழுக்கிறவனைப்போலிருக்கிறான்....**

**விறகில்லாமல் நெருப்பு அவியும், கோள்சொல்லுகிறவனில்லாமல் சண்டை அடங்கும்.**

**கரிகள் தழலுக்கும், விறகு நெருப்புக்கும் ஏதுவானதுபோல, வாதுப்பிரியன் சண்டைகளை மூட்டுகிறதற்கு ஏதுவானவன். (நீதிமொழிகள் 26:17,20-21)**

முட்டாள்தனமான கேள்விகள் சண்டைகளை ஏற்படுத்தும்:

**புத்தியீனமும் அயுக்தமுமான தர்க்கங்கள் சண்டைகளைப் பிறப்பிக்குமென்று அறிந்து, அவைகளுக்கு விலகியிரு. (2 தீமோத்தேயு 2:23)**

மாம்சத்தின்படி நடக்கிறவர்களும் கோபக்காரராக இருந்து கலவரத்தை ஏற்படுத்துவர்:

**பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா? (1 கொரிந்தியர் 3:3)**

பொறாமையும், சந்தேகமும் இருக்கின்ற இடத்தில் சண்டைகள் இருக்கும்:

**உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள். வைராக்கியம் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச் செய்கைகளுமுண்டு. (யாக்கோபு 3:14,16)**

சண்டையிட்டு எதுவும் செய்யப்படலாகாது என்று வேதாகமம் கூறுகிறது:

**ஒன்றையும் வாதினாலாவது, வீண்பெருமையினாலாவது செய்யாமல், மனத்தாழ்மையினாலே ஒருவரையொருவர் தங்களிலும் மேன்மையானவர்களாக எண்ணக்கடவீர்கள். (பிலிப்பியர் 2:3)**

தவறான உபதேசக்காரர்களின் குணாதிசயங்களில் ஒன்றாக சண்டையிடுதல் இருக்கிறது:

**அவன் இறுமாப்புள்ளவனும், ஒன்றும் அறியாதவனும், தர்க்கங்களையும் வாக்குவாதங்களையும்பற்றி நோய்கொண்டவனுமாயிருக்கிறான். அவைகளாலே பொறாமையும், சண்டையும், தூஷணங்களும், பொல்லாத சம்சயங்களுமுண்டாகி,**

**கெட்டசிந்தையுள்ளவர்களும் சத்தியமில்லாதவர்களும் தேவபக்தியை ஆதாயத்தொழிலென்று எண்ணுகிறவர்களுமாயிருக்கிற மனுஷர்களால் உண்டாகும் மாறுபாடான தர்க்கங்களும் பிறக்கும்... (1 தீமோத்தேயு 6:4-5)**

## பிரிவினைகள்

கோபத்தால் வரும் கிளர்ச்சியினால் முரண்பாடுகளும், அமைதியின்மையும் ஏற்படும். இவைகள் மாம்சத்தின் கிரியைகளாக சில இடங்களில் இச்சொல் வேதாகமத்தில் பயன்படுத்தப்படுகின்றது.

## மார்க்க பேதங்கள்

தேவனுடைய வார்த்தைக்கு எதிரான நம்பிக்கைகள் உள்ளன. அவைகள் மனிதர்களின் எண்ணங்களாக இருக்கின்றமையினாலே அவைகள் சபைகளில் பல பிரிவினைகளுக்கு வழிவகுக்கின்றன. பிழையான தீர்க்கதரிசிகளின் குணாதிசயங்களில் ஒன்றாக மார்க்க பேதங்கள் இருக்கின்றன:

**கள்ளத்தீர்கதரிசிகளும் ஜனங்களுக்குள்ளே இருந்தார்கள், அப்படியே உங்களுக்குள்ளும் கள்ளப்போதகர்கள் இருப்பார்கள். அவர்கள் கேட்டுக்கேதுவான வேதப்புரட்டுகளைத் தந்திரமாய் நுழையப்பண்ணி.... (2 பேதுரு 2:1)**

## பொறாமைகள்

மற்றவர்கள் வெற்றி பெறுகின்றபோது பொறாமை ஏற்படுகிறது. ஆவிக்குரிய, பொருளாதார, பொருள்ரீதியான ஆசீர்வாதங்களை மற்றவர்கள் பெறும்போது அது கோபமாக வெளிப்படும்.

பிழையாக போதிக்கின்றவர்களின் ஓர் குணாதிசயமாகவும் இது இருக்கிறது:

**அவன் இறுமாப்புள்ளவனும், ஒன்றும் அறியாதவனும், தர்க்கங்களையும்**

**வாக்குவாதங்களையும்பற்றி நோய்கொண்டவனுமாயிருக்கிறான். அவைகளாலே பொறாமையும், சண்டையும், தூஷணங்களும், பொல்லாத சம்சயங்களுமுண்டாகி, (1 தீமோத்தேயு 6:14)**

பொறாமை மனித ஆவியில் இருந்து வருகிறது:

**நம்மில் வாசமாயிருக்கிற ஆவியானவர் நம்மிடத்தில் வைராக்கிய வாஞ்சையாயிக்கிறாரென்று வேதவாக்கியம் வீணாய்ச் சொல்லுகிறதென்று நினைக்கிறீர்களா? (யாக்கோபு 4:5)**

மாம்சீக கிறிஸ்தவர்களின் அடையாளமாகவும் பொறாமை இருக்கிறது:

**பொறாமையும் வாக்குவாதமும் பேதகங்களும் உங்களுக்குள் இருக்கிறபடியால், நீங்கள் மாம்சத்துக்குரியவர்களாயிருந்து மனுஷமார்க்கமாய் நடக்கிறீர்களல்லவா? (1 கொரிந்தியர் 3:3)**

பாவத்தில் ஜீவிப்பவர்களிடமும் பொறாமையுண்டு:

**அவர்கள் சகலவித அநியாயத்தினாலும், வேசித்தனத்தினாலும், துரோகத்திலும், பொருளாசையினாலும், குரோதத்தினாலும் நிறையப்பட்டு, பொறாமையினாலும், கொலையினாலும், வாக்குவாதத்தினாலும், வஞ்சகத்தினாலும், வன்மத்தினாலும் நிறைந்தவர்களுமாய்... (ரோமர் 1:29)**

**ஏனெனில், முற்காலத்திலே நாமும் புத்தியீனரும், கீழ்ப்படியாதவர்களும், வழிதப்பி நடக்கிறவர்களும், பலவித இச்சைகளுக்கும் இன்பங்களுக்கும் அடிமைப்பட்டவர்களும், துர்க்குணத்தோடும் பொறாமையோடும் ஜீவனம்பண்ணுகிறவர்களும், பகைக்கப்படத்தக்கவர்களும், ஒருவரையொருவர் பகைக்கிறவர்களுமாயிருந்தோம். (தீத்து 3:3)**

பொறாமை இருக்கின்ற இடங்களில் பிரச்சனைகள் எழுகின்றன:

**உங்கள் இருதயத்திலே கசப்பான வைராக்கியத்தையும் விரோதத்தையும் வைத்தீர்களானால், நீங்கள் பெருமை பாராட்டாதிருங்கள். சத்தியத்திற்கு விரோதமாய்ப் பொய்சொல்லாமலுமிருங்கள். வைராக்கியம் விரோதமும் எங்கே உண்டோ, அங்கே கலகமும் சகல துர்ச் செய்கைகளுமுண்டு. (யாக்கோபு 3:14,16)**

பாவிகளின் மேல் பொறாமை கொள்ள வேண்டாம் என நாம் எச்சரிக்கப்பட்டுள்ளோம்:

**உன் மனதைப் பாவிகள்மேல் பொறாமைகொள்ள விடாதே: நீ நாடோறும் கர்த்தரைப பற்றும் பயத்தோடிரு. (நீதிமொழிகள் 23:7)**

## கொலைகள்

இன்னுமொருவரின் வாழ்வை எவ்வித முன்யோசனையுமின்றி விருப்பத்தோடு பறித்தெடுப்பதே

கொலையாக இருக்கிறது. கொலை என்பது சுய பாதுகாப்பிற்காக அல்லது தற்செயலாக செய்யப்பட்டதை இங்கு குறிப்பிடப்படவில்லை. இன்னுமொருவனை கொன்றவன் மேல் சுமத்தப்படும் மரண தண்டனையும் கொலையல்ல. எண்ணாகமம் 35ல் தேவனால் நிறுவப்பட்ட தீர்ப்பாக இது இருக்கிறது. "கொலை செய்யாதிருப்பாயாக" என்பதே தேவனின் முதல் கட்டளையாக இருக்கிறது.

இயேசு சொன்னார்:

**கொலை செய்யாதிருப்பாயாக... (மத்தேயு 19:18)**

நீங்கள் கொலை பாதகனாக இருக்கக்கூடாது:

**ஆதலால் உங்களில் ஒருவனும் கொலைபாதகனாயாவது, திருடனாயாவது, பொல்லாங்கு செய்தவனாயாவது, அந்நிய காரியங்களில் தலையிட்டுக்கொண்டவனாயாவது பாடுபடுகிறவனாயிருக்கக்கூடாது. (1 பேதுரு 4:15)**

புதிய ஏற்பாடு கொலைவெறியை வெறுப்புடன் சேர்த்தே அர்த்தப்படுத்துகிறது. நீங்கள் மற்ற விசுவாசிகளை வெறுப்பீர்களாயின் அது கொலைபாதகத்திற்கு சமமாக உள்ளது:

**தன் சகோதரனைப் பகைக்கிற எவனும் மனுஷகொலைபாதகனாயிருக்கிறான். மனுஷகொலைபாதகனெவனோ அவனுக்குள் நித்தியஜீவன் நிலைத்திராது என்று அறிவீர்கள். (1 யோவான் 3:15)**

## வெறிகள்

அதிகமாக மதுபானத்தை குடிக்கின்றமையால் மனம் மற்றும் சரீரம் பாதிக்கப்பட்ட நிலையிலேயே குடிவெறிகள் இருக்கும். வலுவான இரசாயன பானங்களை பாவிக்கின்றமையால் ஏற்படுகின்ற போதையாக இருக்கின்றது. குடிக்காரன் ஏழையாவான் என்று வேதாகமம் எச்சரிக்கின்றது:

**குடியனும் போஜனப்பிரியனும் தரித்திரராவார்கள்... (நீதிமொழிகள் 23:21)**

போதையில் வாழும் வாழ்க்கைமுறையை நீங்கள் கொண்டிருக்கக்கூடாது:

**களியாட்டும் வெறியும், வேசித்தனமும் காமவிகாரமும், வாக்குவாதமும் பொறாமையும் உள்ளவர்களாய் நடவாமல், பகலிலே நடக்கிறவர்கள்போலச் சீராய்நடக்கக்கடவோம். (ரோமர் 13:13)**

மதுபான வெறியரோடு கூட்டுறவும் வைத்திருக்கக்கூடாது:

**நான் உங்களுக்கு எழுதினதென்னவென்றால், சகோதரனென்னப்பட்ட ஒருவன் விபசாரக்காரனாயாவது, பொருளாசைக்காரனாயாவது, விக்கிரகாராதனைக்காரனாயாவது, உதாசினனாயாவது, வெறியனாயாவது, கொள்ளைக்காரனாயாவது இருந்தால், அவனோடே கலந்திருக்கக்கூடாது. அப்படிப்பட்டவனுடனேகூடப் புசிக்கவுங்கூடாது. (1 கொரிந்தியர் 5:11)**

மதுபான வெறியர்களுக்கு தேவ ராஜ்ஜியத்தில் உரிமை கிடையாது என வேதாகமம் எச்சரிக்கின்றது:

**அநியாயக்காரர் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று அறியீர்களா? வஞ்சிக்கப்படாதிருங்கள். வெறியரும்... தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை. (1 கொரிந்தியர் 6:9-10)**

நீங்கள் கடந்த காலங்களில் மதுபான வெறியனாய் இருந்திருக்கலாம், இப்போது நீங்கள் விசுவாசியான படியால் அதிலே நீங்கள் நிலைத்திருக்க முடியாது:

**ஏனென்றால் மாம்சத்தில் பாடுபடுகிறவன் இனி மாம்சத்திலிருக்கும் காலம்வரைக்கும் மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல் தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்தக்கதாகப் பாவங்களை விட்டோய்ந்திருப்பான்.**

**சென்ற வாழ்நாட் காலத்திலே நாம் புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி நடந்துகொண்டதுபோதும், அப்பொழுது நாம் காமவிகாரத்தையும் துர்இச்சைகளையும் நடப்பித்து, மதுபானம்பண்ணி, களியாட்டுச்செய்து, வெறிகொண்டு, அருவருப்பான விக்கிரகாராதனையைச் செய்துவந்தோம். (1 பேதுரு 4:2-3)**

துன்மார்க்கத்திற்கு ஏதுவாக மதுபான வெறி கொள்ளாமல் ஆவியில் நிறைந்திருக்கும்படி வேதாகமம் கூறுகிறது:

**துன்மார்க்கத்திற்கு ஏதுவான மதுபான வெறிகொள்ளாமல், ஆவியினாலே நிறைந்து, (எபேசியர் 5:18)**

பௌதீக உலகில் வாழுகின்ற குடிகாரன்.....

1. குடிப்பதற்கு ஆசையுள்ளவனாயிருப்பான்.
2. குடிபோதையானது அவனது உணர்வுகளையும், உடல் தொகுதிகளையும் கட்டுப்படுத்துகிறது.
3. குடிபோதையில் பேச்சும் பாதிக்கப்பட்டிருக்கும்.
4. சுயாதீனத்தை தடை செய்கிறது. பயமின்றி இருப்பர், பெலசாலி போல் காணப்படுவர்.
5. போதைக்கு அடிமையாகி மகிழ்ச்சியுடன் இருப்பது போல் காணப்படுவர்.

## களியாட்டுக்கள்

உலக இன்பங்களை அனுபவிப்பதற்கான ஈடுபாடு எனலாம், மாத்திரமன்றி மூர்க்கத்தனமான கேளிக்கைகளும் இதில் அடங்கும். காட்டு வாழ்வைப் போன்று கட்டுப்பாடு இன்றி செய்யும் களியாட்டுகள் உண்டு.

நீங்கள் கடந்த காலங்களில் களியாட்டுக்காரராக ஜீவித்து இருக்கலாம், இப்போது நீங்கள் விசுவாசி என்ற ரீதியில் இதில் ஈடுபடக்கூடாது:

**ஏனென்றால் மாம்சத்தில் பாடுபடுகிறவன் இனி மாம்சத்திலிருக்கும் காலம்வரைக்கும் மனுஷருடைய இச்சைகளின்படி பிழைக்காமல் தேவனுடைய சித்தத்தின்படியே பிழைக்கத்தக்கதாகப் பாவங்களை விட்டோய்ந்திருப்பான்.**

**சென்ற வாழ்நாட் காலத்திலே நாம் புறஜாதிகளுடைய இஷ்டத்தின்படி**

**நடந்துகொண்டதுபோதும், அப்பொழுது நாம் களியாட்டுச்செய்து வந்தோம். (1 பேதுரு 4:2-3)**

## மாம்சத்தின் கிரியைகள்: அதன் விளைவுகள்

மாம்சத்தின் கிரியைகளின் விளைவுகளைப்பற்றி பவுல் விபரிக்கிறார்:

> **பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே. இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். (கலாத்தியர் 5:21)**

இவற்றை தவிர்த்துக் கொள்ளவும் தேவன் வழிவகுத்துள்ளார்:

> **நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். (1 யோவான் 1:9)**

## ஆவியில் நடத்தல்

மாம்சத்தின் பாவக்கிரியைகளை நிறுத்துவது எப்படி?

**முதலாவதாக:** பாவத்திலிருந்து மனந்திரும்புங்கள், தேவனில் நம்பிக்கை வைத்து இயேசு கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளுங்கள்:

> **இப்படியிருக்க, ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான், பழையவைகள் ஒழிந்துபோயின, எல்லாம் புதிதாயின. (2 கொரிந்தியர் 5:17)**

தேவனால் பாவ மனிதனை எடுத்துவிட்டு, சுய முன்னேற்றத்தை கொடுக்க முடியாது. ஆனால் அவனை புது சிருஷ்டியாக்க முடியும். பழையவைகள் ஒழிந்து விட்டன. மாம்சத்தின் கிரியைக்கு பதிலாக பரிசுத்த ஆவியின் கனி அவனுக்கு கொடுக்கப்படுகிறது.

**இரண்டாவதாக:** பரிசுத்தாவியால் நிறையுங்கள். மாம்சத்தின் கிரியைகளுக்கு பதிலாக, ஆவியின் வழியில் நடக்க பரிசுத்த ஆவியானவர் உதவுவார்:

> **பின்னும் நான் சொல்லுகிறதென்னவென்றால், ஆவிக்கேற்படி நடந்துகொள்ளுங்கள், அப்பொழுது மாம்ச இச்சையை நிறைவேற்றாதிருப்பீர்கள். (கலாத்தியர் 5:16)**

**மூன்றாவதாக:** மாம்சத்தின் கிரியைகளை உங்கள் சொந்த முயற்சியால் நிறுத்த முடியாது, ஆவியில் நடந்தால் விடுபடமுடியும் என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

அப்போஸ்தலனாகிய பவுல் தேவனுக்கு பிரியமான வாழ்வை வாழுவதற்கு தனக்கு இருந்த போராட்டத்தை பற்றி விபரிக்கின்றார்:

**எப்படியெனில், நான் செய்கிறது எனக்கே சம்மதியில்லை. நான் விரும்புகிறதைச் செய்யாமல், நான் வெறுக்கிறதையே செய்கிறேன்.**

**இப்படி நான் விரும்பாததைச் செய்கிறவனாயிருக்க, நியாயப்பிரமாணம் நல்லதென்று ஒத்துக்கொள்ளுகிறேனே.**

**ஆதலால் நான் அல்ல எனக்குள் வாசமாயிருக்கிற பாவமே அப்படிச் செய்கிறது.**

**அதெப்படியெனில், என்னிடத்தில், அதாவது, என் மாம்சத்தில், நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன். நன்மைசெய்ய வேண்டுமென்கிற விருப்பம் என்னிடத்திலிருக்கிறது, நன்மைசெய்வதோ என்னிடத்திலில்லை.**

**ஆதலால் நான் விரும்புகிற நன்மையைச் செய்யாமல், விரும்பாத தீமையையே செய்கிறேன். (ரோமர் 5:15-19)**

பவுல் பரிசுத்த வாழ்க்கை வாழ கஷ்டப்பட்டார், ஆனாலும் இக்குறிக்கோளை அடைவதற்காக தோல்விகள் ஏற்பட்ட போதும் போராடினார்.

பரிசுத்தமான ஆசைகளை இருதயத்தில் வைக்கும்படி தேவனிடம் கேளுங்கள். நீங்கள் பாவம் செய்து தோல்வியடைகின்ற போதெல்லாம் உடனடியாகவே அறிக்கையிட்டு, அதை மேற்கொள்ள பரிசுத்த ஆவியானவரின் உதவியை கேட்கவும். இவ்விதமாகவே ஆவியில் நடக்க நீங்கள் கற்றுக்கொள்ளுங்கள்......

**ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.**

**கிறிஸ்து இயேசுவினாலே ஜீவனுடைய ஆவியின் பிரமாணம் என்னைப் பாவம் மரணம் என்பவைகளின் பிரமாணத்தினின்று விடுதலையாக்கிற்றே.**

**அதெப்படியெனில், மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.**

**மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படி நடக்கிற நம்மிடத்தில் நியாயப்பிரமாணத்தின் நீதி நிறைவேறும்படிக்கே அப்படிச் செய்தார்.**

**அன்றியும் மாம்சத்தின்படி நடக்கிறவர்கள் மாம்சத்துக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள். ஆவியின்படி நடக்கிறவர்கள் ஆவிக்குரியவைகளைச் சிந்திக்கிறார்கள்.**

**மாம்சசிந்தை மரணம்: ஆவியின் சிந்தையோ ஜீவனும் சமாதானமுமாம்.**

**எப்படியென்றால், மாம்சசிந்தை தேவனுக்கு விரோதமான பகை: அது தேவனுடைய நியாயப்பிரமாணத்துக்குக்கீழ்ப்படியாமலும், கீழ்ப்படியக்கூடாமலும் இருக்கிறது.**

**மாம்சத்துக்குட்பட்டவர்கள் தேவனுக்குப் பிரியமாயிருக்கமாட்டார்கள்.**

**தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருந்தால், நீங்கள் மாம்சத்துக்குட் பட்டவர்களாயிராமல் ஆவிக்குட்பட்டவர்களாயிருப்பீர்கள். கிறிஸ்துவின் ஆவியில்லாதவன் அவருடையவனல்ல. (ரோமர் 8:1-9)**

நீங்கள் பரிசுத்த ஆவியானவரின் வல்லமையால் நடக்கின்றபோது கிறிஸ்துவைப் போலாகும் கனியின் தராதரத்தை அபிவிருத்தி செய்து கொள்ளலாம். இதனாலேயே விசுவாசிகள் பரிசுத்த ஆவியானவரின் ஊழியத்தை விளங்கிக் கொள்வது மிக முக்கியமானதாக இருக்கிறது.

## சுய பரீட்சை:

١. திறவுகோள் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

٢. பரிசுத்த ஆவியின் கனிக்கு எதிராக வேறுப்படுத்தி காண்பிக்கும் கிரியை எவ்வாறு அழைக்கப்படுகிறது?

3. மாம்சத்தின் கிரியைகளை மேற்கொள்ள வேதாகமம் கூறும் வேத பகுதி என்ன?

4. தொடரும் பக்கத்தில், பட்டியல் ஒன்றில் மாம்சத்தின் கிரியைகள் கொடுக்கப்பட்டுள்ளது. இரண்டாம் பட்டியலில் அதன் விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளதை வாசியுங்கள். கோடிட்ட இடத்தில் மாம்சத்தின் கிரியையை விபரிக்கும் வரைவிலக்கணத்தின் இலக்கத்தை எழுதவும்.

| பட்டியல் ஒன்று | பட்டியல் இரண்டு |
|---|---|
| ............ களியாட்டுக்கள் | 1.திருமணமானவர் தனது துணையல்லாதவரிடம் கொள்ளும் பாலியலுறவு. |
| ............ பொறாமைகள் | 2. திருமணம் முடிக்காத இருவர் மேற்கொள்ளும் பாலியல் உறவு. |
| ............ கொலைகள் | 3. ஆவிக்குரிய மற்றும் ஒழுங்கற்ற பாவம். |
| ............ வெறிகள் | 4. இச்சை, பாவ உணர்வு, ஒழுக்கமின்மை. |
| ............ காமவிகாரம் | 5. விக்கிரகங்களை வணங்குதல். |
| ............ விபச்சாரம் | 6. பில்லிசூனியங்களை நடைமுறைப்படுத்தல். |
| ............ வேசித்தனம் | 7. அன்பிற்கு எதிரானது. |
| ............ அசுத்தம் | 8. கருத்து வேறுபாடு, அபிப்பிராய பேதம். |
| ............ பில்லி சூனியம் | 9. போட்டி மனப்பான்மை, மற்றவரைப் போல பிரதிபலிக்க ஆசை. |
| ............ விக்கிரக ஆராதனை | 10. வன்முறையான கடுங்கோபம், ஆத்திரம். |
| ............ பகைகள் | 11. சண்டை, வன்முறை. |
| ............ விரோதங்கள் | 12. குழப்பங்கள். |
| ............ மார்க்க பேதங்கள் | 13. தேவனுடைய வார்த்தைக்கு எதிரான நம்பிக்கைகள். |
| ............ வைராக்கியங்கள் | 14. மற்றவர்களின் வெற்றியை பார்த்து பொறாமை கொள்ளல். |
| ............ கோபங்கள் | 15. மற்றவர்களின் வாழ்க்கையை பறித்தல். |
| ............ சண்டைகள் | 16. அதிகப்படியான குடிப்போதை. |
| ............ பிரிவினைகள் | 17. மூர்க்கத்தனமான களியாட்டுக்கள் அல்லது விழா எடுத்து மகிழ்தல். |

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன).

## மேலதிக படிப்பினைக்கு

கலாத்தியர் 5:22-24ல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவியின் கனிக்கும், கலாத்தியர் 5:19-21ல் குறிப்பிடப்பட்டுள்ள மாம்சத்தின் கிரியைக்குமுள்ள வேறுபாட்டை குறிப்பிடவும். உதாரணத்திற்கு முதலாவது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது:

**வேறுபாடுகள்**

| ஆவியின் கனிகள் (கலாத்தியர் 5:22-24) | மாம்சத்தின் கிரியைகள் (கலாத்தியர் 5:19-21) |
|---|---|
| அன்பு | பகைகள், கொலை, பொறாமை |
| சந்தோஷம் | |
| சமாதானம் | |
| நீடிய பொறுமை | |
| தயவு | |
| நற்குணம் | |
| விசுவாசம் | |
| சாந்தம் | |
| இச்சையடக்கம் | |

அதிகாரம் பதின்மூன்று

# ஆவியின் கனியை விருத்தி செய்தல்

## குறிக்கோள்கள்:

இந்த அதிகாரத்தைக் கற்று முடிவுற்றதும் உங்களால்:

ஆவிக்குரிய கனியின் பல்வேறுப்பட்ட அபிவிருத்தியின் மட்டத்தை விளங்க வைப்பீர்கள்.

பௌதீக உலகில் கனி உற்பத்தி செய்யப்படுவதற்கு இணையாக எவ்வாறு ஆவிக்குரிய கனி விசுவாசியின் வாழ்வில் அபிவிருத்தி செய்யப்படுகிறது என்பதை காண்பீர்கள்.

## திறவுகோள் வசனம்:

**என்னில் கனிகொடாதிருக்கிற கொடி எதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார். கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். (யோவான் 15:2)**

## அறிமுகம்

உங்கள் வாழ்வில் ஆவிக்குரிய கனி இருப்பது தேவனுடைய வாஞ்சையாக இருக்கின்றது என்பதை திறவுகோள் வசனம் உறுதி செய்கிறது. ஆவிக்குரிய கனி வளருவதற்கான வழிகாட்டல்களை இவ்வதிகாரம் வழங்குகின்றது.

## கனியை உற்பத்தி செய்வதின் மட்டங்கள்

விசுவாசிகளின் வாழ்க்கையில் கனி தருவதற்காக பல்வேறு நிலைகள் காணப்படுகிறது. கனி தருவதற்கான பல்வேறு மட்டங்களை யோவான் 15ம் அதிகாரம் அடையாளப்படுத்துகின்றது:

| | |
|---|---|
| -கனி: | யோவான் 15:2 |
| -அதிக கனி: | யோவான் 15:2 |
| -மிகுந்த கனி: | யோவான் 15:5,8 |
| -நிலையான கனி: | யோவான் 15:16 |

நீங்கள் நிலையான கனியையும், அதிகமான ஆவிக்குரிய கனியையும் கொடுக்க வேண்டும் என்பதே தேவனுடைய வாஞ்சையாக இருக்கிறது. சுவிசேஷம் அறிவித்தலாகிய வெளியான கனியையும், கிறிஸ்துவை போலாகும் உள்ளான கனியையும் உற்பத்தி செய்ய வேண்டும் என்று தேவன் உங்களில் எதிர்பார்க்கிறார்.

## இயற்கை மற்றும் ஆவிக்குரிய உண்மைகள்

வேதாகமம் மிக முக்கியமான கொள்கைகளை கொண்டிருக்கிறது.. அவைகளை இனங்கண்டு, தேவன்

என்ன சொல்லுகிறார் என்பதை அவரது வார்த்தைகள் மூலம் விளங்கிக் கொள்ள வேண்டும். இயற்கைக்கு இணையாக ஆவிக்குரிய சத்தியங்கள் இருப்பது இக்கொள்கைகளில் ஒன்றாக இருக்கிறது. “இணையாக” என்ற சொல்லின் அர்த்தம் “ஒத்ததாக” என்பதாகும். ஆவிக்குரிய சத்தியங்களை விளங்கப்படுத்தும் உதாரணங்களாக அல்லது எடுத்துக்காட்டுகளாக “இயற்கைக்கு இணையான ஆவிக்குரிய சத்தியங்களை” தேவன் பாவிக்கின்றார்.

இயேசுவின் உவமைக்கதைகளும், ஆன்மீக சத்தியத்தை கொண்டே இயற்கை உதாரணங்களாக உள்ளன. உதாரணமாக காணாமற்போன காசை தேடும் பெண்ணின் உதாரணத்தை அவர் பாவித்தார். இதை அவர் பாவித்து, பாவத்தினால் காணாமற்போயுள்ள ஆண்களையும், பெண்களையும் குறித்து நாம் அவதானமாயுள்ளவர்களாயிருக்க வேண்டும் என காண்பிக்கிறார். இதைப்போன்றே அநேக உதாரணங்களை இயேசு பாவித்து ஆவிக்குரிய சத்தியங்களை விபரித்துள்ளார்.

1 கொரிந்தியரில் இயற்கைக்கு இணையாக ஆவிக்குரிய சத்தியத்தை விபரிக்கும் கொள்கை இருக்கிறது:

> **ஜென்மசரீரமுமுண்டு, அவிக்குரிய சரீரமுமுண்டு.**
>
> **அந்தப்படியே முந்தின மனுஷனாகிய ஆதாம் ஜீவாத்துமாவானான் என்றெழுதியிருக்கிறது: பிந்தின ஆதாம் உயிர்ப்பிக்கிற ஆவியானார்.**
>
> **ஆகிலும் ஆவிக்குரிய சரீரம் முந்தினதல்ல, ஜென்மசரீரமே முந்தினது: ஆவிக்குரிய சரீரம் பிந்தினது. (1 கொரிந்தியர் 15:44-46)**

இவ்வசனங்களில் அப்போஸ்தலனாகிய பவுலினால் இயற்கைக்கு இணையாக ஆவிக்குரிய சத்தியம் பகிர்ந்து கொள்ளப்பட்டதை காணலாம். ஆதாம் என்னும் மனிதன் தேவனால் உலகில் முதன்முதலாக சிருஷ்டிக்கப்பட்டான். ஆவிக்குரிய விதத்தில் இயேசு பிந்தின ஆதாமாக இருக்கிறார். இயற்கைக்கு இணையாக ஆவிக்குரிய சத்தியத்தை வெளிப்படுத்தும் போது தேவன் ஆதாமை இயேசு கிறிஸ்துவுக்கு இணையாக வெளிப்படுத்துகிறார். இயற்கையான மனிதனால் பாவமும், மரணமும் ஏற்பட்டது. ஆவிக்குரிய மனிதனால் இரட்சிப்பும், ஜீவனும் வந்தது.

இயற்கையை உங்களால் அவதானிக்கவும், பார்க்கவும், கேட்கவும் முடியும். ஆவிக்குரியவற்றை ஆவிக்குரிய ரீதியிலேயே அவதானிக்க முடியும். இயற்கையான உதாரணங்கள் சரீர உணர்வுகளில் அங்கீகரிக்கப்படுகின்றன. ஆவிக்குரியவைகள் பரிசுத்த ஆவியானவரின் வெளிப்படுத்தலினால் மட்டுமே அங்கீகரிக்கப்படுகின்றது. இயற்கைக்கு இணையான ஆவிக்குரிய சத்தியங்களை தேவனுடைய வார்த்தையை ஆராய்ந்து படித்து புதிய சிந்தனைகளை பெற்றுக்கொள்ளுங்கள்.

## ஆவிக்குரிய கனி வளர்ச்சியடைதல்

“கனி” என்ற சொல்லை இயேசு இயற்கைக்கு இணையான ஆவிக்குரிய சத்தியத்திற்காக பாவித்தார். பௌதீக உலகில் பழ உற்பத்தி செய்ய வேண்டிய அவசிய நிலை உள்ளது. ஆவிக்குரிய கனி உற்பத்தி செய்ய வேண்டியதும் இதற்கிணையாகவே உள்ளது. இயற்கை உலகில், ஆன்மீகத்தைப் போன்றே வளர்ச்சியை உறுதிப்படுத்த பல விசேட நிலமைகள் உண்டு. அவைகள் கீழே தரப்படுகின்றன.

## ஜீவன்:

ஆவியின் கனி வளர்ச்சிக்கு ஜீவன் இருப்பது முதல் அத்தியாவசிய தேவையாக இருக்கிறது. பௌதீக உலகில் விதைகளிலிருந்து ஜீவன் வருகின்றது, ஆவிக்குரிய உலகில் ஜீவன் விதையாகிய இயேசு கிறிஸ்துவின் மூலமாக வருகிறது.

இரட்சகருக்காக கொடுக்கப்பட்ட முதல் வாக்குத்தத்தத்தில் இயேசு வித்து என்றே அழைக்கப்பட்டார்:

**உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன். அவர் உன் தலையை நசுக்குவார், நீ அவர் குதிங்காலை நசுக்குவாய் என்றார். (ஆதியாகமம் 3:15)**

**இயேசு கிறிஸ்துவிற்கூடாக (வித்து) வாழ்க்கையில் ஆவிக்குரிய கனி உண்டாகுகின்றது:**

**அவருக்குள் ஜீவன் இருந்தது, அந்த ஜீவன் மனுஷருக்கு ஒளியாயிருந்தது. (யோவான் 1:4)**

**ஏனெனில், பிதாவானவர் தம்மில் தாமே ஜீவனுடையவராயிருக்கிறது போல, குமாரனும் தம்மில்தாமே ஜீவனுடையவராயிருக்கும்படி அருள்செய்திருக்கிறார். (யோவான் 5:26)**

**நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன். (யோவான் 10:10)**

ஜீவனுள்ள விதையாகிய இயேசு கிறிஸ்து உங்களில் ஜீவிக்கின்றார். அவருடன் தனிப்பட்ட உறவு வைக்காமல் உங்களால் ஆவிக்குரிய கனியை கொடுக்க முடியாது, ஏனென்றால்.....

**என்னாலே உன் கனியுண்டாயிற்று... (ஓசியா 14:8)**

## தண்ணீர்:

பௌதீக உலகில் கனி உற்பத்திக்கு தண்ணீர் அவசியம். தண்ணீர், பரிசுத்த ஆவியானவருக்கு அடையாளமாக இருக்கின்றது. ஆவிக்குரிய உலகில், ஆவிக்குரிய கனி உற்பத்திக்கு தண்ணீராகிய பரிசுத்த ஆவியானவர் அவசியமாக இருக்கின்றார். அது ஆவிக்குரிய தாகத்தை தனித்து ஆவிக்குரிய வளர்ச்சியைக் கொண்டு வரும்:

**வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத்தண்ணீருள்ள நதிகள் ஓடும் என்றார்.**

**தம்மை விசுவாசிக்கிறவர்கள் அடையப்போகிற ஆவியைக்குறித்து இப்படிச்சொன்னார். இயேசு இன்னும் மகிமைப்படாதிருந்தபடியினால் பரிசுத்தஆவி இன்னும் அருளப்படவில்லை. (யோவான் 7:38-39)**

**தாகமுள்ளவன்மேல் தண்ணீரையும், வறண்ட நிலத்தின்மேல் ஆறுகளையும் ஊற்றுவேன். உன் சந்ததியின்மேல் என் ஆவியையும், உன் சந்தானத்தின்மேல் என் ஆசீர்வாதத்தையும் ஊற்றுவேன். (ஏசாயா 44:3)**

**வெளிச்சம்:**

பௌதீக உலகில் வெளிச்சத்தின் பயனாக கனிவகைகள் அபிவிருத்தியடைந்து கனி கொடுக்கின்றன. உங்கள் வாழ்விலும் தேவனுடைய வசனமாகிய வெளிச்சத்தில் நடந்து, ஆவிக்குரிய கனி கொடுப்பது அவசியமாக இருக்கின்றது.

> **தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை, இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமாயிருக்கிறது.**
>
> **நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய்சொல்லுகிறவர்களாயிருப்போம்.**
>
> **அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோடொருவர் ஐக்கியப்பட்டிருப்போம், அவருடைய குமாரனாகிய இயேசுகிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும். (1 யோவான் 1:5-7)**

**காற்று:**

இயற்கையான தாவரங்கள் அதை சுற்றியுள்ள வளியிலிருந்து காபனீர் ஒட்சைட்டை உள்வாங்குகின்றது. அது வளர்ச்சியடைவதற்கு அடிப்படையாகவும், கனி உற்பத்திக்கு அவசியமாகவும் இருக்கின்றது. தேவனுடைய வசனத்தில் பரிசுத்த ஆவியானவர் காற்றுக்கு ஒப்பிடபட்டுள்ளார்:

> **காற்றானது தனக்கு இஷ்டமான இடத்திலே வீசுகிறது, அதின் சத்தத்தைக் கேட்கிறாய், ஆகிலும் அது இன்ன இடத்திலிருந்து வருகிறதென்றும், இன்ன இடத்துக்குப் போகிறதென்றும் உனக்குத் தெரியாது. ஆவியினாலும் பிறந்தவனெவனோ அவனும் அப்படியே இருக்கிறான் என்றார். (யோவான் 1:8)**

இயற்கை உலகில் காற்று வீசுவதைப்போன்று பரிசுத்த ஆவியானவரின் "காற்று" உங்கள் வாழ்க்கையில் வீச வேண்டும். தேவனுடைய வசனமாகிய விதைகள் பல்வேறு திசைகளிலும் பரவுவது மாத்திரமல்ல, காற்று கோதுமையையும், பதரையும் வெவ்வேறாக பிரிப்பது போல உங்கள் ஜீவியத்திலுள்ள தேவையற்றவற்றையும் பிரித்து விடும், மட்டுமின்றி சுடர்விட்டு பிரகாசிக்கவும் உதவும்.

**இடம்:**

மத்தேயு 13ம் அதிகாரத்தில் விதைக்கிறவனின் உவமையில், நிலம் விதை விதைப்பதற்காக ஏற்பாடு செய்யப்படுகிறது. விசுவாசிகள் ஆவிக்குரிய கனியை விருத்தி செய்ய உலகத்தின் போட்டா போட்டிகளை தவிர்த்துக் கொள்ள வேண்டும்:

> **முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன், வசனத்தைக் கேட்கிறவனாயிருந்தும், உலகக்கவலையும் ஐசுவரியத்தின் மயக்கமும் வசனத்தை நெருக்கிப் போடுகிறதினால், அவனும் பலனற்றுப் போவான். (மத்தேயு 13:22)**

நீங்கள் உலகத்தின் வழிகளில் உங்களால் இணங்கி செல்ல முடியாது. நீங்கள் தேவனுடைய வழிகளுக்கு மாற வேண்டும்:

**தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்.... (ரோமர் 12:2)**

நீங்கள் ஆவிக்கேற்றப்படி வளரும்படியாக உங்களை சுற்றிலும் (உலகத்திலிருந்து) பிரித்து வைத்திருப்பார்:

**அவன் லீலிப் புஷ்பத்தைப்போல் மலருவான். லீபனோனைப்போல் வேரூன்றி நிற்பான். அவன் கிளைகள் ஓங்கிப் படரும், அவன் அலங்காரம் ஒலிவமரத்தினுடைய அலங்காரத்தைப்போலவும், அவனுடைய வாசனை லீபனோனுடைய வாசனையைப் போலவும் இருக்கும்.**

**அவன் நிழலில் குடியிருக்கிறவர்கள் திரும்புவார்கள். தானிய விளைச்சலைப்போலச் செழித்து, திராட்சச்செடிகளைப்போலப் படருவார்கள்.... என்னாலே உன் கனியுண்டாயிற்று. (ஓசியா 14:5-8)**

## வேர்களின் அமைப்பு முறை:

தாவரங்களுக்கு புரதம் வழங்கவும், நங்கூரமாக தொழிற்படவும் வேர்கள் அவசியமாகின்றது. முதலாம் சங்கீதம் உங்களுடைய ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அவசியமான வேர்களின் அமைப்பை அபிவிருத்தி செய்து கொள்வதைப்பற்றி விபரிக்கின்றது:

**துன்மார்க்கருடைய ஆலோசனையில் நடவாமலும், பாவிகளுடைய வழியில் நில்லாமலும், பரியாசக்காரர் உட்காரும் இடத்தில் உட்காராமலும்,**

**கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்.**

**அவன் நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்டு, தன் காலத்தில் தன் கனியைத் தந்து, இலையுதிராதிருக்கிற மரத்தைப் போலிருப்பான். அவன் செய்வதெல்லாம் வாய்க்கும். (சங்கீதம் 1:1-3)**

## செயலற்ற தன்மை:

தாவரங்களின் இயற்கையான வளர்ச்சியின் சுழற்சியில் குறிப்பிட்ட பருவத்தில் செயலற்ற தன்மை காணப்படும். தாவரங்கள் வளர்ச்சியற்றதாக, செத்து போய்விட்டது போன்று தோன்றும். இது அவைகளின் ஓய்வு காலமாக இருக்கின்றது. மிக விரைவான வளர்ச்சிக்கு முன்னதாக இவ்வாறே செயலற்றதாக தோன்றும். பௌதீக உலகிலுள்ள நிலங்களுக்கு ஓய்வு கொடுக்கும்படியும் தேவன் கட்டளையிட்டு உள்ளார் (லேவியராகமம் 25:5)

**ஆனபடியினாலே, அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப்போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்.**

**ஆகையால், தேவனுடைய ஜனங்களுக்கு இளைப்பாறுகிற காலம் இனி வருகிறதாயிருக்கிறது. (எபிரெயர் 4:1,9)**

**பரியாச உதடுகளினாலும் அந்நியபாஷையினாலும் இந்த ஜனத்தோடே பேசுவார்.**

**இதுவே நீங்கள் இளைத்தவனை இளைப்பாறப்பண்ணத்தக்க இளைப்பாறுதல். இதுவே ஆறுதல் என்று அவர்களோடே அவர் சொன்னாலும் கேட்கமாட்டோம் என்கிறார்கள். (ஏசாயா 28:11-12)**

**மண்:**

பௌதீக உலகிலும், ஆவிக்குரிய உலகிலும் கனி கொடுக்கப்பட நிலமானது தயார் செய்யப்பட்டு பண்படுத்தப்பட்டிருக்க வேண்டும். மத்தேயு 13ம் அதிகாரத்தில் கூறப்படுகிற விதைக்கிறவனின் உவமையில், விதை முளைப்பதற்கு பாதகமான நிலம் இருந்தமையையும் காண்கிறோம். பௌதீக உலகிலுள்ள நிலத்தைப் போன்றது உங்களது இருதயம். உங்களுடைய இருதயம் கடினப்பட்டதாக, உலகின் காரியங்களால் நிறைந்து தேவனுடைய வார்த்தையை தடைசெய்கின்ற நிலமாக இருக்குமானால், உங்களால் ஆவிக்குரிய கனியை கொடுக்க முடியாது.

உங்களுடைய இருதயத்தை ஆவிக்குரிய பண்பட்ட நிலமாக ஆயத்தம் பண்ணும் பொறுப்பு உங்களிடமே உண்டு, மட்டுமின்றி தேவனுடைய வார்த்தைக்கும் இடமளிக்க வேண்டும்:

**நீங்கள் நீதிக்கென்று விதைவிதையுங்கள், தயவுக்கொத்ததாய் அறுப்புஅறுங்கள், உங்கள் தரிசுநிலத்தைப் பண்படுத்துங்கள். கர்த்தர் வந்து உங்கள்மேல் நீதியை வருஷிக்கப்பண்ணுமட்டும், அவரைத் தேடக் காலமாயிருக்கிறது. (ஓசியா 10:12)**

**மரணம்:**

ஒவ்வொருமுறையும் செடியானது கனியை உற்பத்தி செய்ய வேண்டும், அதற்கு ஜீவன் இல்லாதிருந்தால் அது மரித்து விடும்:

**மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், கோதுமை மணியானது நிலத்தில் விழுந்து சாகாவிட்டால் தனித்திருக்கும், செத்ததேயாகில் மிகுந்த பலனைக்கொடுக்கும். (யோவான் 12:24)**

**புத்தியீனனே, நீ விதைக்கிற விதை செத்தாலொழிய உயிர்க்கமாட்டாதே. (1 கொரிந்தியர் 15:36)**

ஆவிக்குரிய வாழ்க்கையும் உலக காரியங்களிலிருந்து மரணமடையும் அளவிலேயே சார்ந்திருக்கின்றது. அதற்கு உலக காரியங்களிலிருந்தும், ஆடம்பரத்திலிருந்தும், பாவத்திலிருந்தும் மரணம் அடைய வேண்டியதாயிருக்கின்றது. உலகின் பலன் மரணமாயிருக்கின்றமையால் கிறிஸ்துவை போலாகும், கனிதரும் வாழ்வை விருத்தி செய்து கொள்ள முடியும்.

## செடியில் இணைக்கப்பட்டிருத்தல்:

பௌதீக உலகில் சிறந்த கனிகொடுக்க செடியின் கிளைகளானது தாவரத்தில் இணைக்கப்பட்டிருக்க

வேண்டும். செடியில் இருந்து கிளை முறிந்து போய்விட்டால், அதனால் கனி கொடுக்க முடியாது. இயேசுவே செடி, நாம் அதன் கிளைகள். நாம் ஆவிக்குரிய கனி கொடுக்க அவருடனான உறவை பாதுகாத்துக் கொள்ள வேண்டும்:

**நான் மெய்யான திராட்சச்செடி, என் பிதா திராட்சத்தோட்டக்காரர்.**

**என்னில் கனிகொடாதிருக்கிற கொடிஎதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார். கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார்.**

**நான் உங்களுக்குச் சொன்ன உபதேசத்தினாலே நீங்கள் இப்பொழுதே சுத்தமாயிருக்கிறீர்கள்.**

**என்னில் நிலைத்திருங்கள், நானும் உங்களில் நிலைத்திருப்பேன். கொடியானது திராட்சச்செடியில் நிலைத்திராவிட்டால் அது தானாய்க் கனிகொடுக்கமாட்டாதது போல, நீங்களும் என்னில் நிலைத்திராவிட்டால், கனிகொடுக்கமாட்டீர்கள்.**

**நானே திராட்சச்செடி, நீங்கள் கொடிகள். ஒருவன் என்னிலும் நான் அவனிலும் நிலைத்திருந்தால், அவன் மிகுந்த கனிகளைக் கொடுப்பான். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. (யோவான் 15:1-5)**

### சுத்திகரிப்பு:

பௌதீக உலகில் செடிகள் பரம்பி, அதிக கனி கொடுக்கும்படியாக சுத்திகரிக்கப்படுகின்றன. ஒரு விவசாயி, கனி கொடாத கிளைகளை வெட்டியெறிந்து விடுவார், கனி கொடுக்கும் கிளை இன்னும் அதிகமாய் கனி கொடுப்பதற்காக விட்டு வைப்பார். செடி வளருவதற்கு தடையாக இருக்கின்ற சகல காரியங்களையும் அகற்றி விடுவார்.

ஆவிக்குரிய உலகத்திற்கும் கத்தரித்தல் மிக முக்கியமானது. ஆவிக்குரிய கத்தரித்தல் தேவனால் திருத்தப்படுவதாக இருக்கின்றது. அதை வேதாகமம் கண்டித்துணர்த்துதல் என்று அழைக்கிறது. தேவன் உனது ஆவிக்குரிய வளர்ச்சியை தடைசெய்யும் காரியங்களை அகற்றுவதோடு, அவசியமற்றவற்றை கத்தரித்தும் விடுகிறார். கனிகொடுக்க இந்நடைமுறை அவசியமாகும்:

**என்னில் கனிகொடாதிருக்கிற கொடிஎதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார், கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். (யோவான் 15:2)**

சில வேளைகளில் நீங்கள் நற்காரியங்களை அடையாது இருக்கின்றபோது, சாத்தானை குற்றம் சாட்டுகிறீர்கள் எனினும் தேவனே உங்களை திருத்தியமைப்பதற்காக அவ்விதமான சூழ்நிலைகளை அனுமதிக்கிறார். திருத்துவதே தேவனுடைய நோக்கம் என்று ஓசியாவும் அறியத்தருகிறார்:

**கர்த்தரிடத்தில் திரும்புவோம் வாருங்கள். நம்மைப் பீறினார், அவரே நம்மைக் குணமாக்குவார். நம்மை அடித்தார், அவரே நம்முடைய காயங்களைக் கட்டுவார். (ஓசியா 6:1)**

கண்டித்து திருத்துதலின் பலன் தேவனிடம் திரும்புவதாகும். அவரிடம் திரும்புவதினால் மாத்திரமே, பரிசுத்த ஆவியானவர் மூலம் ஆவிக்குரிய கனி கொடுக்க உங்களால் முடியும்.

**கால நிலை:**

கனி உருவாக கால நிலையும் முக்கியமானதாக இருக்கின்றது. பௌதீக உலகிலுள்ள பல்வேறு விதமான கனிகளின் அபிவிருத்தி சூழலின் கட்டுப்பாட்டினாலேயே உருவாக்கப்படுகிறது. அவைகள் குறிப்பிட்ட வெப்பநிலையில் “வெப்ப வீடுகள்” என்றழைக்கப்படும் கட்டிடங்களில் வளருகின்றன. அவைகள் வெளியுலகின் சீதோஷன நிலையிலிருந்து பாதுகாக்கப்படுகின்றன. “வெப்ப வீடுகளில்” வளர்க்க வேண்டிய தாவரத்தை நீங்கள் வெளியே வைப்பீர்களாயின், விரைவில் மரித்து விடும்.. ஏனெனில் கட்டுப்படுத்தப்பட்ட சூழலே அதற்கு அவசியமாக இருக்கிறது. உண்மையான உலக சூழ்நிலை அதனால் தாங்கிக் கொள்ள முடியாது.

“வெப்ப வீடு” வேண்டாம் என்று கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய ரீதியில் கூறினால், அவர்கள் உண்மையாகவே உலக சூழலால் மரித்து போவார்கள். கட்டுப்பாடுள்ள கிறிஸ்தவ நண்பர்கள், அல்லது சபை உலக சிநேகங்களிலிருந்து எம்மை கட்டுப்படுத்தி ஆவிக்குரிய கனி கொடுக்க ஆதாரமாக இருக்கின்றது.

## சுய பரீட்சை:

١. திறவுகோள் வாக்கியத்தை மனப்பாடமாக எழுதுக.

٢. யோவான் 15ம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கனி கொடுப்பதற்கான 4 மட்டங்களும் எவை?

3. பௌதீக உலகில் கனி உற்பத்திக்காக தேவைப்படும் பன்னிரண்டு விடயங்களையும் பட்டியலிடவும். இயற்கைக்கு இணையான ஆவிக்குரிய சத்தியங்களை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள். ஏனெனில் ஆவிக்குரிய கனி கொடுக்க இவைகள் முக்கியமானவையாக இருக்கிறது.

(இவற்றுக்கான விடைகள் பாடத்தின் இறுதியிலுள்ள விடைத்தாளில் கொடுக்கப்பட்டுள்ளன)

## மேலதிக படிப்பினைக்கு

1. உன்னதப்பாட்டு 4:12-16 வரை வாசியுங்கள். இந்தப்பகுதியிலே தேவனுடைய தோட்டத்தின் காட்சி எங்களுக்கு தரப்பட்டுள்ளது. தனது மக்களையும், தனது சபையையும் (விசுவாசிகளை) தனது தோட்டம் என்று அவர் அழைக்கிறார். உங்களது வாழ்க்கை ஆவிக்குரிய "நிலமாகும்", அது ஆவிக்குரிய கனியை கொடுக்க வேண்டும்.. ஆவிக்குரிய "களையை" கொடுத்தால் அது தரிசு நிலமாகி விடும். உங்கள் வாழ்க்கையின் ஆவிக்குரிய நிலத்தில் விளைவது என்ன? களைகளும், முட்களும் உள்ள:

 -இவ்வுலகத்தின் கவலைகளும், ஆசைகளும், நலன்களுமா?
 -தவறாக வழியில் வரும் ஆஸ்தியா?
 -உலக காரியங்களுக்கான ஆசையா?

 எது உங்கள் வாழ்க்கையில் முக்கிய இடத்தைப் பெறுகிறது? உங்கள் பெரும்பாலான கவனத்தையும், நேரத்தையும் ஆக்கிரமிப்பது என்ன? முக்கியமானவற்றில் எதற்கு முன்னுரிமை கொடுக்கின்றீர்கள்? உங்கள் "இருதயத்தின் நிலம்" கற்கள் நிறைந்ததா? உங்களுக்குள்ளது கடினமான இருதயமா? நீக்குவதற்க்கு கடினமான பகுதிகளை, கற்கள் நிறைந்த ஆவிக்குரிய நிலத்தை, தரிசு நிலத்தை விட்டுவிட்டு.. கிறிஸ்துவின் கட்டளைக்கு இசைந்து கொடுங்கள்.

2. "பரிசுத்த ஆவியானவருடைய ஊழியம்" என்ற பாடத்தின் ஆய்வு இத்துடன் முடிவடைகின்றது. இதற்கு பின்னர் சர்வதேச அறுவடைநேர நிறுவனமானது, "ஆவிக்குரிய போர் வியூகங்கள்" என்ற பாடத்தை கற்றுக்கொள்ளும்படி உங்களுக்கு பரிந்துரைக்கின்றது. இப்பாடம் ஆவிக்குரிய போராட்டத்தில் பரிசுத்த ஆவியானவரின் செயற்பாடுகளை குறித்து விளக்குவதோடு திரித்துவத்தில் மற்றைய அங்கத்தவர்களான பிதாவாகிய தேவன் மற்றும் குமாரனான கிறிஸ்துவின் ஊழியங்களையும் விபரிக்கும்.

3. பின்வரும் "ஆவிக்குரிய கனியின் பகுப்பாய்வை" பூர்த்தி செய்யுங்கள். உங்களுடைய தற்போதைய வாழ்வை மதிப்பீடு செய்யவும், அபிவிருத்தி செய்யவும் உங்களுடைய நேர்மையான பதில்கள் உதவி செய்யும்.

## ஆவிக்குரிய கனியின் பகுப்பாய்வு

கூற்றுக்கள் ஒவ்வொன்றையும் வாசியுங்கள், தற்போதைய நிலையை குறிக்கும் இலக்கத்தை தெரிவு செய்து குறிப்பிடுங்கள். 3,2,1 அல்லது 0 தெரிவு செய்து கேள்விகளுக்கு பதிலளியுங்கள்.

3 - "இதுவே எனது வாழ்வின் உண்மை நிலை."
2 - "இதுவே எனது வாழ்வின் பொதுவான நிலை."
1 - "இது ஓரளவான உண்மை."
0 - "இதுவே எனது வாழ்வில் உண்மையில்லை."

உதாரணம்: .....2..... 1. எதிர்காலத்தில் நான் தேவனுடைய கட்டுப்பாட்டுக்குள் உறுதியாக பாதுகாப்புடன் இருப்பேன்.

(இவ் ஆய்வில் எழுதும் நபர் 2 எனக் குறிப்பிடுவாராயின் இதுவே அவரது பொதுவான நிலையாக இருக்கும்).

............ 1. எதிர்காலத்தில் நான் தேவனுடைய கட்டுப்பாட்டுக்குள் உறுதியாக பாதுகாப்புடன் இருப்பேன்.
............ 2. இயேசுவின் விருப்பப்படி, தேவனின் சித்தம் செய்ய எச்சரிக்கையாக இருக்கிறேன்.
............ 3. தேவனை நம்புவதில் மட்டுமே எனது விசுவாசம் வல்லமை கொண்டதாக இருக்கும்.
............ 4. தேவனது வாக்குத்தத்தம் நிறைவேற வேண்டும் என்று காத்திருக்கிறேன்.
............ 5. தேவன் கோபமாக இருக்கின்றார் என சில சமயங்களில் நினைக்கிறேன்.
............ 6. தேவன் இரக்கமுள்ளவர் என்பதையும், ஆக்கினைதீர்ப்பிலிருந்து தப்புவிக்கும்படிக்கு இயேசு கிறிஸ்துவை அனுப்பியதன் மூலம் வெளிப்படுத்தியுள்ளார் என்பதையும் அறிந்திருக்கின்றேன்.
............ 7. தேவன் உலகை நேசித்து தனது குமாரன் இயேசு கிறிஸ்துவை கொடுத்தமையால் நான் அவருக்கு நன்றியுள்ளவனாயிருக்கிறேன்.
............ 8. தேவனுடைய பிரசன்னமே எனது மகிழ்ச்சியென அறிந்திருக்கிறேன்.
............ 9. தேவன் தடைசெய்தவற்றிற்கு “இல்லை” எனவும், அவரது கட்டளைகளுக்கு “ஆம்” எனவும் கூறுவேன்.
............ 10. சமாதானத்தின் வாக்குத்தத்தம் என்று இயேசுவை ஏற்றுக்கொண்டேன்.
............ 11. எனது வாழ்க்கையின் முழு விருப்பத்தோடும் அதிகாரங்களுக்கு இணங்குகிறேன்.
............ 12. இயேசு கிறிஸ்து நேற்றும், இன்றும், என்றும் மாறாதவர் என்று விசுவாசிக்கிறேன்.
............ 13. மற்றவர்களின் குறைபாடுகளை ஏற்றுக்கொள்கின்றேன், அவர்களுடைய வாழ்க்கையில் இன்றும் தேவன் கிரியை செய்கிறார் எனவும் அறிந்திருக்கிறேன்.
............ 14. நான் கடுமையான தண்டனையின் கீழிருக்கின்றபோதும் தேவன் நல்லவரே.
............ 15. கிறிஸ்து என்னை மன்னித்தது போன்று நானும் மற்றவர்களை மன்னிக்கின்றேன்.
............ 16. நான் மற்றவர்களை நேசிக்காதபோதும் கூட அவர் என்னை நேசிக்கிறார்.
............ 17. இயேசுவை கர்த்தராக ஏற்றுக்கொண்டமையால் இரட்சிப்பின் நிச்சயத்தை பெற்றுள்ளேன்.
............ 18. தேவனுடைய அதிகளவான அனுபவங்களின் பொருட்டு குறைவான காரியங்களுக்கு “இல்லை” என்று கூற கற்றுக்கொண்டேன்.
............ 19. பாவமன்னிப்பின் நிச்சயத்தை கொண்டுள்ளேன்.
............ 20. நான் தேவனுடைய வார்த்தைக்கும், பரிசுத்த ஆவியானவருக்கும் ஒப்புக்கொடுக்க ஆயத்தமாயிருக்கிறேன்.
............ 21. வாக்குறுதிகளை நிறைவேற்ற நம்பகத்தன்மை கொண்டவனாக இருக்கிறேன்.
............ 22. தேல்வி, உபத்திரவம், அடக்குமுறை, அழுத்தங்களுக்கு முகங்கொடுக்கின்றபோதும் விடாமுயற்சியுள்ளவனாயிருக்கிறேன்.
............ 23. வேதாகம நடைமுறைக்கு ஏற்றப்படி நாளாந்தம் எனது வாழ்கையில் செயல்படுகிறேன்.
............ 24. நான் மற்றவர்களுக்கு ஆறுதலையும், தைரியத்தையும், ஆலோசனைகளையும் கொடுப்பேன்.
............ 25. நான் நிபந்தனையின்றி உறவினர்கள், நண்பர்களின் தேவைகளை பூர்த்தி செய்வேன்.
............ 26. தேவனின் நோக்கத்திற்கமைவான முதிர்ச்சியில் வளர்கிறேன்.
............ 27. எனக்கு நிலையான ஆவிக்குரிய வாழ்க்கையுண்டு.
............ 28. தேவனுடன் சரியான உறவில் இருக்கிறேன் என்ற நிச்சயம் உண்டு (நீதி).
............ 29. ஒத்துழைத்தல், கற்பிக்கும் இயல்பு, தாழ்மை எனக்கு இருக்கிறது என வெளிப்படுத்துவேன்.
............ 30. ஏற்றுக்கொண்ட உத்தரவாதத்திற்கு, நம்பகமாக இருப்பேன்.
............ 31. தேவனுடைய நோக்கத்தை நிறைவேற்ற அவருடைய உதவிக்காக காத்துக்கொண்டு இருக்கிறேன்.
............ 32. சத்தியத்தை சொல்லவும், நேர்மையையும், வாக்குறுதியை காத்துக்கொள்ளவும் உறுதியாயிருக்கிறேன்.
............ 33. மற்றவர்களை கட்டியெழுப்பும்படிக்கு நேர்மறையான வார்த்தைகளையே பேசுவேன்.
............ 34. எனது “மனவுறுதியை அதிகரிக்கும்” நல்ல குணங்களுடைய மக்களுடன் உடன்படுவேன்.

............ 35. தேவனுடைய சித்தம் செய்வதில் திருப்தியாயிருப்பேன்.

............ 36. கணக்கொப்புவிக்கவும், எனக்கு பிரச்சனையான பகுதிகளை கட்டுப்படுத்தவும் ஒருவரை அல்லது ஒரு குழுவை வைத்திருப்பேன்.

............ 37. எனது உள்ளான வாழ்வை கட்டுப்படுத்தும் பரிசுத்தாவியானவருக்கு அனுமதி கொடுத்து அமைதியாயிருப்பேன்.

............ 38. என்னை மேம்படுத்தும் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ள திறந்த மனதுடையவனாயிருக்கிறேன்.

............ 39. எனது திறமைக்கேற்றபடி எனது வேலைகளை சிறப்பாக செய்கிறேன்.

............ 40. எதிர்கால ஆவிக்குரிய வளர்ச்சிக்காக தற்காலிக இன்பங்களை வழங்கும் காரியங்களை ஒத்தி வைக்கின்றேன்.

............ 41. மற்ற கிறிஸ்தவர்களின் நடத்தைகள் தவறானதாக இருக்கின்றபோது அவர்களை நேருக்கு நேர் எதிர்க்க தைரியமுள்ளவனாயிருக்கிறேன்.

............ 42. மற்றவரை புரிந்துகொள்ளும்படிக்கு அவர் கூறுவதை அவதானிக்கிறேன்.

............ 43. எனக்கு சேவை செய்யாத அல்லது செய்ய முடியாதுள்ளவர்களுக்கும் நான் சேவையாற்றுகிறேன்.

............ 44. ஆவிக்குரிய காரியங்களை செய்து வெற்றியடையும்போது பெரு மகிழ்ச்சியடைகிறேன்.

............ 45. எனது அறிவுக்கு எட்டியபடி என் வாழ்க்கையில் பணம், பாலியல், அளவிற்கு அதிகமாக உண்ணுதல், புறங்கூறல் என்பவற்றின் பிரச்சனையின்றி கட்டுப்பாட்டுடன் வாழுகிறேன்.

............ 46. மற்றவர்களுடனான கருத்து வேறுபாட்டினால் ஏற்படும் மோதல்களின்போது அமைதியுடன் இருப்பேன்.

............ 47. எனது சம்பாஷனைகளை சாந்தத்தோடு முன்னெடுக்கிறேன்.

............ 48. தேவனுக்கு சொந்தமான எனது நேரத்தையும், பணத்தையும், என்னையும் நன்றாக நிர்வகிப்பேன்.

............ 49. நான் வேதனைப்படும் வேலைகளிலெல்லாம், தேவனை நம்பிக்கொண்டிருப்பேன்.

............ 50. “எனது நற்கிரியைகளை மற்றவர்கள் காணும்படியாக என் விளக்கை பிரகாசிப்பிற்காக இடமளிக்கிறேன்”

............ 51. எனக்கு இரக்கமும், அதற்காக பணிவும் தேவை என்று எண்ணுகிறேன்.

............ 52. என்னை ஆழமாக காயப்படுத்தியவர்களை மன்னித்து விட்டேன்.

............ 53. மற்ற விசுவாசிகளின் வாழ்க்கையில் தேவன் செய்கின்ற காரியங்களுக்காக மகிழ்ச்சியடைகிறேன்.

............ 54. நான் இவ்வுலகின் பாடுகளின் மத்தியிலும், வேதனையடையா மனதுடன் இருக்கிறேன்.

............ 55. மற்றவர்கள் எனக்கு எதிராக தவறு செய்கின்றபோதும் அதற்குடன்படாது தவிர்த்துக் கொள்கிறேன்.

............ 56. கடுந்துன்பமான நேரங்களை கணக்கிட முடியும்.

............ 57. மற்றவர்கள் வெவ்வேறான திசைகளில், அல்லது வித்தியாசமான கண்ணோட்டம் கொண்டவர்களாக இருக்கின்ற போதும் என்னால் அவர்களை வளர்ச்சியுற செய்ய முடியும்.

............ 58. நடைமுறைகளில் அநியாயம் காணப்படுமிடத்து, அதற்கு எதிரான மனுவில் கையெழுத்திடுவேன்.

............ 59. மற்றவர்கள் பாவத்தை தீவிரமாக செய்வதை, கவனமாய் அவதானிப்பதை ஏற்றுக்கொள்வேன்.

............ 60. எனது எதிரிகளுக்காகவும், என்னை நேசிக்காதவர்களுக்காகவும் ஜெபிக்கிறேன்.

............ 61. ஊழியத்திற்கான எனது கடமைகளை நிறைவேற்றுவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

............ 62. எளிதாக சோதனைக்குட்படும் அல்லது அடிமைப்படுத்தும் சூழ்நிலைகளை தவிர்த்து கொள்ளுகிறேன்.

## ஆய்வை மதிப்பீடு செய்தல்

1. ஆய்விலிருந்து செய்த உங்கள் பதில்களை கீழுள்ள அட்டவனைக்கு மாற்றுங்கள்... உதாரணமாக, முதலாவது கேள்விக்கான பதில் மூன்றாக இருந்தால், '3' என்ற இலக்கத்தை முதலாவது சதுரத்தில் எழுதுங்கள்.

2. இவ்வாறு ஒவ்வொரு சதுரத்தையும் நிரப்பிய பின்னர் மொத்தத்தையும் வரிசையில் சேர்த்துக்கொள்ளவும்.

| ⇨ | ⇨ | ⇨ | ⇨ | ⇨ | ⇨ | ⇨ | வரிசையின் மொத்தம் | கனி |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 10 | 19 | 28 | 37 | 46 | 55 | | சமாதானம் |
| 2 | 11 | 20 | 29 | 38 | 47 | 56 | | தயவு |
| 3 | 12 | 21 | 30 | 39 | 48 | 57 | | விசுவாசம் |
| 4 | 13 | 22 | 31 | 40 | 49 | 58 | | நீடிய பொறுமை |
| 5 | 14 | 23 | 32 | 41 | 50 | 59 | | நற்குணம் |
| 6 | 15 | 24 | 33 | 42 | 51 | 60 | | சாந்தம் |
| 7 | 16 | 25 | 34 | 43 | 52 | 61 | | அன்பு |
| 8 | 17 | 26 | 35 | 44 | 53 | 62 | | சந்தோஷம் |
| 9 | 18 | 27 | 36 | 45 | 54 | 63 | | இச்சையடக்கம் |

## விண்ணப்பம்

உங்களது ஆவிக்குரிய கனியின் அடிப்படையில் பின்வரும் கூற்றுக்களை பூர்த்தி செய்யவும்:

1. உங்களுடைய குறைந்த மதிப்பீட்டை கவனித்து பின்வரும் கூற்றை பூர்த்தி செய்யவும்:

   எனது ஆய்வின்படி நான் ஆவிக்குரிய கனியாகிய ..................................................................

   ..........................................................................................வளர்ச்சியடையச் செய்ய வேண்டும்.

2. நான் அடுத்த மாத ஜெபத்திற்காகவும், எனது அவதானத்திற்காகவும் ஒரு கனியை தேர்ந்தெடுக்கப்போகிறோம். அக்கனியானது................................................

3. கனியை வளர்ச்சியுற செய்வதற்காக பின்வரும் நடவடிக்கைகளை ஜெபத்தின் போது அதிகமாய் எடுப்பேன்:

   ............. நான் புதிதாக ஒரு காரியத்தை செய்யப்போகிறேன்.

   நீங்கள் என்ன செய்ய ஆரம்பிப்பீர்கள்?..........................................................................

   ............. நான் தற்போது செய்து கொண்டிருக்கிற இக்காரியத்தை நிறுத்துவேன்.

   நீங்கள் நிறுத்தப்போகும் காரியம் என்ன?......................................................................

   ............. என் வாழ்க்கையில் ஏதாவதொன்றை மாற்றுவேன்.

   குறிப்பாக நீங்கள் எக்காரியத்தை மாற்றுவீர்கள்?......................................................................

# அனுபந்தம்

அம்பிளிபைட் என்ற ஆங்கில மொழிபெயர்ப்பு வேதாகமமானது ஆவிக்குரிய வரங்கள் பற்றி மேலதிகமான அர்த்தங்களை தருகிறது:

**-மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும் அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்க பூரணபுருஷராகும்வரைக்கும்,**

**பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும்பொருட்டு, சுவிசேஷஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்,**

**அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும் போதகராகவும் ஏற்படுத்தினார்.**

**நாம் இனிக் குழந்தைகளாயிராமல், மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுமுள்ள போதகமாகிய பலவித காற்றினாலே அலைகளைப்போல அடிபட்டு அலைகிறவர்களாயிராமல்,**

**அன்புடன் சத்தியத்தைக் கைக்கொண்டு, தலையாகிய கிறிஸ்துவுக்குள் எல்லாவற்றிலேயும், நாம் வளருகிறவர்களாயிருக்கும்படியாக அப்படிச் செய்தார்.**

**அவராலே சரீரம் முழுவதும், அதற்கு உதவியாயிருக்கிற சகல கணுக்களினாலும் இசைவாய்க் கூட்டி இணைக்கப்பட்டு, ஒவ்வொரு அவயவமும் தன்தன் அளவுக்குத்தக்கதாய்க் கிரியைசெய்கிறபடியே, அது அன்பினாலே தனக்குப் பக்திவிருத்தி உண்டாக்குகிறதற்கேதுவாகச் சரீரவளர்ச்சியை உண்டாக்குகிறது.**

**ஆதலால், கர்த்தருக்குள் நான் உங்களுக்குச் சாட்சியாகச் சொல்லி எச்சரிக்கிறது என்னவெனில், மற்றப் புறஜாதிகள் தங்கள் வீணான சிந்தையிலே நடக்கிறதுபோல நீங்கள் இனி நடவாமலிருங்கள். (எபேசியர் 4:11-17)**

**-முறுமுறுப்பில்லாமல் ஒருவரையொருவர் உபசரியுங்கள்.**

**அவனவன் பெற்ற வரத்தின்படியே நீங்கள் தேவனுடைய பற்பல கிருபையுள்ள ஈவுகளைப் பகிர்ந்துகொடுக்கும் நல்ல உக்கிராணக்காரர்போல, ஒருவருக்கொருவர் உதவிசெய்யுங்கள்.**

**ஒருவன் போதித்தால் தேவனுடைய வாக்கியங்களின்படி போதிக்கக்கடவன். ஒருவன் உதவிசெய்தால் தேவன் தந்தருளும் பெலத்தின்படி செய்யக்கடவன். எல்லாவற்றிலேயும் இயேசுகிறிஸ்துமூலமாய்த் தேவன் மகிமைப்படும்படியே செய்வீர்களாக. அவருக்கே மகிமையும் வல்லமையும் சதாகாலங்களிலும் உண்டாயிருப்பதாக. ஆமென். (1 பேதுரு 4:9-11)**

-ஏனெனில், நமக்கு ஒரே சரீரத்திலே அநேக அவயவங்களிருந்தும், எல்லா அவயவங்களுக்கும் ஒரே தொழில் இராததுபோல,

அநேகராகிய நாமும் கிறிஸ்துவுக்குள் ஒரே சரீரமாயிருக்க, ஒருவருக்கொருவர் அவயவங்களாயிருக்கிறோம்.

நமக்கு அருளப்பட்ட கிருபையின் படியே நாம் வெவ்வேறான வரங்களுள்ளவர்களானபடியினாலே, நம்மில் தீர்க்கதரிசனஞ்சொல்லுகிற வரத்தையுடையவன் விசுவாசப்பிரமாணத்துக்கேற்றதாகச் சொல்லக்கடவன்.

ஊழியஞ்செய்கிறவன் ஊழியத்திலும், போதிக்கிறவன் போதிக்கிறதிலும்,

புத்திசொல்லுகிறவன் புத்திசொல்லுகிறதிலும் தரித்திருக்கக்கடவன். பகிர்ந்துகொடுக்கிறவன் வஞ்சனையில்லாமல் கொடுக்கக்கடவன். முதலாளியானவன் ஜாக்கிரதையாயிருக்கக்கடவன். இரக்கஞ்செய்கிறவன் உற்சாகத்துடனே செய்யக்கடவன். (ரோமர் 12:4-8)

-அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக்குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை.

தேவனுடைய ஆவியினாலே பேசுகிற எவனும் இயேசுவைச் சபிக்கப்பட்டவனென்று சொல்லமாட்டானென்றும், பரிசுத்த ஆவியினாலேயன்றி இயேசுவைக் கர்த்தரென்று ஒருவனும் சொல்லக்கூடாதென்றும், உங்களுக்குத் தெரிவிக்கிறேன்.

வரங்களில் வித்தியாசங்கள் உண்டு, ஆவியானவர் ஒருவரே. ஊழியங்களிலேயும் வித்தியாசங்கள் உண்டு, கர்த்தர் ஒருவரே.

கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு, எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக்கிற தேவன் ஒருவரே.

ஆவியினுடைய அநுக்கிரகம் அவனவனுடைய பிரயோஜனத்திற்கென்று அளிக்கப்பட்டிருக்கிறது. எப்படியெனில், ஒருவனுக்கு ஆவியினாலே ஞானத்தைப் போதிக்கும் வசனமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே அறிவை உணர்த்தும் வசனமும்,

வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே விசுவாசமும், வேறொருவனுக்கு அந்த ஆவியினாலேயே குணமாக்கும் வரங்களும்,

வேறொருவனுக்கு அற்புதங்களைச் செய்யும் சக்தியும், வேறொருவனுக்குத் தீர்க்கதரிசனம் உரைத்தலும், வேறொருவனுக்கு ஆவிகளைப் பகுத்தறிதலும், வேறொருவனுக்குப் பற்பல பாஷைகளைப் பேசுதலும், வேறொருவனுக்குப் பாஷைகளை வியாக்கியானம்பண்ணுதலும் அளிக்கப்படுகிறது.

இவைகளையெல்லாம் அந்த ஒரே அவியானவர் நடப்பித்து, தமது சித்தத்தின்படியே அவனவனுக்குப் பகிர்ந்து கொடுக்கிறார்.

**எப்படியெனில், சரீரம் ஒன்று, அதற்கு அவயவங்கள் அநேகம். ஒரே சரீரத்தின் அவயவங்களெல்லாம் அநேகமாயிருந்தும், சரீரம் ஒன்றாகவேயிருக்கிறது. அந்தப்பிரகாரமாகக் கிறிஸ்துவும் இருக்கிறார்.**

**நீங்களே கிறிஸ்துவின் சரீரமாயும், தனித்தனியே அவயவங்களாயுமிருக்கிறீர்கள்.**

**தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும், மூன்றாவது போதகர்களையும், பின்பு அற்புதங்களையும், பின்பு குணமாக்கும் வரங்களையும், ஊழியங்களையும், ஆளுகைகளையும், பலவித பாஷைகளையும் ஏற்படுத்தினார். (1 கொரிந்தியர் 12, தெரிவு செய்யப்பட்ட வசனங்கள்)**

# சுய பரீட்சைக்கான விடைகள்

## அதிகாரம் ஒன்று:

1. இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜலத்திலிருந்து கரையேறினவுடனே, இதோ, வானம் அவருக்குத் திறக்கப்பட்டது; தேவ ஆவி புறாவைப்போல இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார். அன்றியும், வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி: இவர் என்னுடைய நேசகுமாரன், இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. (மத்தேயு 3:16-17)

2. பிதா, குமாரன், பரிசுத்த ஆவி.

3. பரிசுத்த ஆவியானவருக்கு:
   -சிந்தையுண்டு.
   -மனித சிந்தையை ஆராய்கிறார்.
   -சித்தமுண்டு.
   -பேசுகிறார்.
   -நேசிக்கிறார்.
   -பரிந்து பேசுகிறார்.

4. இதன் அர்த்தமானது மனிதருடைய கிரியைகள் அவரது உணர்வுகளை பாதிக்கப்படச் செய்யக்கூடும்.

5. -ஆவியானவரிடம் பொய் சொல்லல்.
   -ஆவியானவரை எதிர்த்தல்.
   -ஆவியானவரை அவித்துப்போடுதல்.
   -ஆவியானவரை துக்கப்படுத்துதல்.
   -ஆவியானவரை அவமதித்தல்.
   -ஆவியானவரை நிந்தித்தல்.
   -ஆவியானவரை கோபப்படுத்துதல்.

6. 5,3,2,1,4

## அதிகாரம் இரண்டு:

1. நீங்கள் தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களென்றும், தேவனுடைய ஆவி உங்களில் வாசமாயிருக்கிறாரென்றும் அறியாதிருக்கிறீர்களா? (1 கொரிந்தியர் 3:16)

2. அடையாளச்சின்னம் எதாவதொரு காரியத்தை குறிக்கும். அடையாளம் விசேட அர்த்தத்தை கொண்டது.

3. 5,4,3,1,2

4. -தேவனுடைய பிரசன்னம்
   -உறுதிப்பாடு
   -பாதுகாப்பு அல்லது வழிநடத்தல்
   -பரிசுத்தப்படுத்தல்

-பரிசுத்த ஆவியானவருடைய வரங்கள்
-நியாயத்தீர்ப்பு

5. -தேவனின் ஆவி
-கிறிஸ்துவின் ஆவி
-நித்திய ஆவி
-சத்திய ஆவி
-கிருபையின் ஆவி
-ஜீவனின் ஆவி
-மகிமையின் ஆவி
-ஞானத்தை வெளிப்படுத்தும் ஆவி
-தேற்றரவாளன்
-வாக்குத்தத்தத்தின் ஆவி
-பரிசுத்தத்தின் ஆவி
-விசுவாசத்தின் ஆவி
-சுவீகரத்தின் ஆவி

## அதிகாரம் மூன்று:

1. என் நாமத்தினாலே பிதா அனுப்பப்போகிற பரிசுத்த ஆவியாகிய தேற்றரவாளனே எல்லாவற்றையும் உங்களுக்குப் போதித்து, நான் உங்களுக்குச் சொன்ன எல்லாவற்றையும் உங்களுக்கு நினைப்பூட்டுவார். (யோவான் 14:26)

2. -இஸ்ரவேலரின் தலைவர்கள் மீது வந்தார்.
-அவர்களது ஆராதனை இடங்களின் மீது வந்தார்.
-வாக்குத்தத்தத்தின் தேசத்திற்கு வழி நடத்தினார்.
-இஸ்ரவேலரின் உபத்திரவத்தின் போது அவர்கள் மீது வருவார்.
-ஆயிரவருட அரசாட்சியின் போது இஸ்ரவேலர் மீது வருவார்.

3. சரி

4. 2, 1, 3

5. யோவான் 16:7-11

6. பரிசுத்த ஆவியானவருக்கு சாத்தானின் அதிகார எல்லைகளை கட்டுப்படுத்தும் வல்லமையுண்டு.

7. இயேசு:
-பரிசுத்த ஆவியானவரால் கர்ப்பந்தரித்தார்.
-பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகிக்கப்பட்டார்.
-பரிசுத்த ஆவியானவரால் முத்திரையிடப்பட்டார்.
-பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டார்.
-பரிசுத்த ஆவியானவரால் வல்லமைப்படுத்தப்பட்டார்.
-பரிசுத்த ஆவியானவரால் நிரப்பப்பட்டார்.

-பரிசுத்த ஆவியானவரால் துக்கமடைந்தார்.
-பரிசுத்த ஆவியானவரால் களிகூர்ந்தார்.
-பரிசுத்த ஆவியானவருக்கூடாக ஒப்புக்கொடுப்பட்டார்.
-பரிசுத்த ஆவியானவரால் உயிர்ப்பிக்கப்பட்டார்.
-பரிசுத்த ஆவியானவருக்கூடாக சீடர்களுக்கு கட்டளையிட்டார்.

8. பரிசுத்த ஆவியானவர்:
-உருவாக்கினார்.
-அதன் ஆராதனையை அனல் மூட்டினார்.
-தூதுப்பணியின் நடவடிக்கைகளுக்கு வழிகாட்டுகிறார்.
-ஊழியர்களை தேர்ந்தெடுக்கிறார்.
-பிரசங்கிகளை அபிஷேகிக்கிறார்.
-தீர்மானங்களுக்கு வழிகாட்டுகிறார்.
-வல்லமையால் அபிஷேகிக்கிறார்.

9. பரிசுத்த ஆவியானவர்:
-குற்றத்தை கண்டிக்கிறார்.
-பரிசுத்தமாக்குகிறார்.
-வாசம் செய்கிறார்.
-ஐக்கியப்படுத்துகிறார்.
-வழிகாட்டுகிறார்.
-கிறிஸ்துவின் சாயலாக மாற்றுகிறார்.
-இரட்சிப்பை உறுதிப்படுத்துகிறார்.
-விடுதலையை கொடுக்கிறார்.
-சாட்சியிட வல்லமையளிக்கிறார்.
-தேவனுடைய வல்லமையை
-உறுதிப்படுத்துகிறார்.
-மறுபடியும் பிறப்பிக்கிறார்.
-அபிஷேகிக்கிறார்.
-பெலப்படுத்துகிறார்.
-பரிந்து பேசுகிறார்.
-அன்பை நிரூபித்து காட்டுகிறார்.
-சத்தியத்தை வெளிப்படுத்துகிறார்.
-கற்பிக்கிறார்.
-அவருக்கூடாக பேசுகிறார்.
-தேற்றுகிறார்.
-உயிர்ப்பிக்கிறார்.

10. அவர்கள் சுவிஷேசத்திற்காக வல்லமையுள்ள சாட்சிகளாக மாறுகிறார்கள். அப்போஸ்தலர் 1:8.

### அதிகாரம் நான்கு:

1. பரிசுத்தஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள் என்றார். (அப்போஸ்தலர் 1:8)

2. -மனந்திரும்பி ஞானஸ்நானம் எடுங்கள்
-அது உங்களுக்குரியது என விசுவாசியுங்கள்
-வாஞ்சியுங்கள்
-வரம் என்று பெற்றுக்கொள்ளுங்கள்
-தேவனுக்கு இசைந்து கொடுங்கள்
-மற்ற விசுவாகளை ஜெபிக்கும் படி வேண்டிக்கொள்ளுங்கள்

3. பேசுகின்றவருக்கு தெரியாத பாஷையில் பேசுகின்றார்.

4. நற்செய்திக்கு வல்லமையுள்ள சாட்சியாயிருக்க கிறிஸ்தவர்களை உருவாக்குகிறார். அப்போஸ்தலர் 1:8.

5. -மனமாற்றம் அடையும்போது ஒவ்வொரு கிறிஸ்தவர்களும் பரிசுத்த ஆவியானவரை பெறுவார்கள்.
-சகலரும் அந்நியபாஷையை பேசுவதில்லை என்று வேதாகமம் கூறுகின்றது.
-பயம்.
-இது உணர்வுபூர்வமான அனுபவம்.

6. இல்லை.

7. முற்றிலுமாக மூழ்குதல் அல்லது அமிழ்தல்.

8. -அப்போஸ்தலர் 2:2-4
-அப்போஸ்தலர் 10:44-46
-அப்போஸ்தலர் 19:6

## அதிகாரம் ஐந்து:

1. அன்றியும், சகோதரரே, ஆவிக்குரிய வரங்களைக்குறித்து நீங்கள் அறியாதிருக்க எனக்கு மனதில்லை. (1 கொரிந்தியர் 12:1)

2. தாலந்து என்பது இயற்கையாகவே பிறப்பினால் அல்லது பயிற்சி பெற்று அபிவிருத்தி செய்யப்பட்டமையினால் கிடைத்திருக்கும். ஆவிக்குரிய வரம் இயற்கைக்கு அப்பாற்பட்ட திறமையாகும், இது பரம்பரையினால் அல்லது பயிற்சியினால் கிடைப்பதில்லை. இது பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்படுகிற விசேட திறமை மட்டுமின்றி, ஆவிக்குரிய நோக்கங்களுக்காக அருளப்படுகிறது.

3. -பரிசுத்தவான்கள் சீர்பொருந்த.
-ஊழிய வேலை விருத்திக்காக.
-சபை பக்தி விருத்தியடைய.

4. நாம்:
-விசுவாசத்தின் ஐக்கியமடைய.
-கிறிஸ்துவை பற்றிய அறிவில் விருத்தியடைய.
-கிறிஸ்துவை முன்மாதிரியாக கொண்டு பரிபூரணத்தில் விருத்தியடைய.
-பிழையான உபதேசங்களால் வஞ்சிக்கப்படாமல் சத்தியத்தில் உறுதியாயிருக்க.
-கிறிஸ்துவில் ஆவிக்குரிய முதிர்ச்சியடைய.

5. ஆம். 1 பேதுரு 4:10, 1 கொரிந்தியர் 12:7,11

6. -கொடுக்கப்பட்ட வரங்களை பாவிக்காமை.
-உங்களுக்கு கொடுக்கப்படாத வரத்தை இருப்பதாக காண்பிக்க முயற்சி செய்தல்.
-வரங்களை சரியாக பயன்படுத்தாமை.
-உங்கள் வரங்களை குறித்து மேன்மைபாராட்டுதல்.

7. பரிசுத்த ஆவியானவர்.

8. அன்பு. 1 கொரிந்தியர் 13.

9. கள்ளத்தனமான வரங்கள் எபேசியர் 4:12-15ல் கொடுக்கப்பட்டுள்ள ஆவிக்குரிய வரங்களின் நோக்கங்களை நிறைவேற்ற மாட்டாது. அவைகள் இயேசுவை குறித்து வேதாகமம் கற்பிப்பதையும் ஒத்துக்கொள்ள மாட்டாது. 2 பேதுருவும், யூதாவும் குறிப்பிடும் தனிப்பட்ட குணாதிசயங்களை கள்ளத்தனமான வரங்களைக் கொண்டவர்கள் காண்பிப்பார்கள்.

10. ஆவிக்குரிய வரங்கள் பரிசுத்த ஆவியானவரால் கொடுக்கப்பட்டுள்ள இயற்கைக்கு அப்பாற்பட்ட திறமையாக இருக்கிறது மட்டுமின்றி அவைகளால் விசுவாசிகள் பயனுள்ள ஊழியத்தைச் செய்ய முடியும்.

11. சகல ஆவிக்குரிய வரங்களும் கொடுக்கப்பட்ட நோக்கங்கள் இன்னும் பூரணமாக நிறைவேறவில்லை. "பரிபூரணம்" பெறுமட்டும் ஆவிக்குரிய வரங்கள் கிரியைச் செய்யும். கிறிஸ்துவின் இராஜ்ஜியம் இப்பூமியில் ஸ்தாபிக்கப்படும் என்பதே இதன் அர்த்தம்.

12. பரிசுத்த ஆவியானவர் பெந்தேகொஸ்தே நாளில் அருளப்பட்டார். பரிசுத்த ஆவியானவருடைய வரங்கள் இயற்கைக்கு அப்பாற்பட்ட வல்லமையைக் கொண்டுள்ளதோடு விசுவாசிகளுக்காகவே கொடுக்கப்பட்டுள்ளது.

13. அ. ச
ஆ. பி
இ. பி
ஈ. பி
உ. பி
ஊ. ச
எ. ச
ஏ. ச
ஐ. ச

## அதிகாரம் ஆறு:

1. அவர், சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். (எபேசியர் 4:13)

2. -அப்போஸ்தலர்
-தீர்க்கதரிசி
-சுவிசேஷகர்
-மேய்ப்பர்
-போதகர்

3. ஏனென்றால் சபையில் ஒவ்வொருவரும் விசேட தலைமைத்துவ நிலையை கொண்டுள்ளனர்.

4. அ. சரி ஆ. சரி இ. சரி

5. 2,1,4,3,5

6. -விசேட வரங்கள்
-பேசும் வரங்கள்
-ஊழிய வரங்கள்
-அடையாள வரங்கள்

**அதிகாரம் ஏழு:**

1. தேவன் தமது சித்தத்தின்படி, அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார். (1 கொரிந்தியர் 12:18)

2. -தீர்க்கதரிசனம்
-போதித்தல்
-புத்திசொல்லுதல்
-ஞானத்தின் வசனம்
-அறிவை உணர்த்தும் வசனம்

3. 2,1,4,3,5

4. இ

5. பிழை

**அதிகாரம் எட்டு:**

1. உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாயிருக்க விரும்பினால், அவன் எல்லாருக்கும் ஊழியக்காரனாயிருக்கக்கடவன். (மாற்கு 10:44)

2. -ஆவிகளை பகுத்தறிதல்
-தலைமைத்துவம்
-நிர்வகித்தல்
-விசுவாசம்
-கொடுத்தல்
-உதவி செய்தல்
-ஊழியம் செய்தல்
-இரக்கம் காட்டுதல்
-உபசரித்தல்

3. அவர்கள் ஆன்மீக கட்டமைப்பு, அமைப்பு மற்றும் ஆவிக்குரியதும், நடைமுறைக்குமான காரியங்களுக்கும் ஆதரவு வழங்குகின்றார்கள்.

4. நிர்வாகத்திறமை கொண்ட ஒருவர் வழிகாட்டவும், கட்டமைப்பை உருவாக்கவும், மற்றவர்களுக்காக தீர்மானங்களை செய்யவும் திறனைக் கொண்டிருப்பார். தலைமைத்துவ வரம் கொண்டவர், தேவனுடைய நாமத்தின் மகிமைக்காக மற்றவர்களை குறிப்பிட்ட நோக்கங்களை நிறைவேற்றும்படிக்கு வழிகாட்டுவார்.

5. ஊழியம் செய்தலும், உதவி செய்தலும் வேறுபட்டிருப்பதோடு யாராவது கடமைகளைச் செய்ய உதவுகிறது. மற்றவர்களின் வரத்தைக் கருத்திற் கொண்டு, அவர்கள் சுயாதீனமாக பணிகளைச் செய்ய ஒருவருக்கொருவர் உதவி செய்வார்கள். உதவி செய்யும் வரத்தை கொண்டவர், அவர்கள் ஊழியத்திற்கு உதவுவார்கள் ஆனால் பொறுப்பை விட்டுக் கொடுக்க மாட்டார்கள்.

6. 9,6,2,3,5,7,11,4,8

7. பிழை

8. விசுவாசத்தின் வரைவிலக்கணம் எபிரெயர் 11:1ல் தரப்பட்டுள்ளது.

9. வரங்கள் வல்லமைக்கானது. கனி குணாதிசயத்திற்கானது.

10. தேவனுடைய வார்த்தையை கேட்பதனூடாக. ரோமர் 10:17

## அதிகாரம் ஒன்பது:

1. முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு, பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்டதும், அடையாளங்களினாலும் அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்துகொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும், தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக்குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படித் தப்பித்துக்கொள்ளுவோம். (எபிரெயர் 2:3-4)

2. -அற்புதங்கள்
-குணமாகுதல்
-அந்நியபாஷை
-அந்நியபாஷையை வியாக்கியானம் செய்தல்

3. கிறிஸ்து என்று இயேசுவை விசுவாசிக்க வேண்டும். அவரை விசுவாசிப்பதற்கூடாக அவர் நாமத்தினால் நித்திய ஜீவனை பெறுவீர்கள். யோவான் 20:30-31.

4. 2,3,4,1

5. அ. பி; ஆ. ச; இ. பி; ஈ. பி; உ. ச; ஊ. பி; எ. பி; ஏ. பி

## அதிகாரம் பத்து:

1. இதினிமித்தமாக, நான் உன்மேல் என் கைகளை வைத்ததினால் உனக்கு உண்டான

தேவவரத்தை நீ அனல்மூட்டி எழுப்பி விடும்படி உனக்கு நினைப்பூட்டுகிறேன். (2 தீமோத்தேயு 1:6)

2. -ஆவிக்குரிய குறிக்கோள்களையும், நோக்கங்களையும் பூர்த்தி செய்தல்
-ஆவிக்குரிய போராட்டத்தில் ஈடுபடுதல்
-துஷ்பிரயோகத்தை தவிர்த்தல்
-ஏமாற்றத்தை தவிர்த்தல்
-உத்தரவாதத்தை உறுதிபடுத்தல்

3.

| | |
|---|---|
| முதலாவது படி: | மறுபடியும் பிறத்தல். |
| இரண்டாம் படி: | பரிசுத்த ஆவியானவருடைய அபிஷேகத்தை பெற்றுக்கொள்ளுதல். |
| மூன்றாம் படி: | ஆவியின் வரங்களை அறிந்து கொள்ளுதல். |
| நான்காம் படி: | வரங்களின் மாதிரிகளை அவதானித்தல். |
| ஐந்தாம் படி: | ஆவிக்குரிய வரத்தை தேடுதல். |
| ஆறாம் படி: | கைகளை வைத்தல். |
| ஏழாம் படி: | உங்களுடைய ஆவிக்குரிய அக்கறையை ஆராய்தல். |
| எட்டாம் படி: | கிறிஸ்தவ தலைவரால் ஆராயப்படுதல். |
| ஒன்பதாம் படி: | கடந்தகால கிறிஸ்தவ ஆராதனையை ஆராய்தல். |
| பத்தாம் படி: | ஆவிக்குரிய வரங்கள் பற்றிய கேள்விகளை நிறைவு செய்தல். |
| பதினொன்றாம் படி: | இருக்கின்றது என்று நீங்கள் எண்ணுகிற வரத்தை அடையாளம் காணுதல். |
| பதின்ரெண்டாம் படி: | ஆவிக்குரிய தேவைகளை அடையாளம் காணுதல். |
| பதின்மூன்றாம் படி: | ஆவிக்குரிய தேவைகளை நிரப்புதல். |
| பதின்நான்காம் படி: | உங்களது ஊழியத்தை மதிப்பீடு செய்தல். |

## அதிகாரம் பதினொன்று:

1. சுவிசேஷம் அறிவித்தல்; சுவிஷேச செய்திக்கு வல்லமையுள்ள சாட்சியாயிருத்தல்.

2. ஆவிக்குரிய தகுதிகளை போன்ற கிறிஸ்துவிற்குள்ளான கனி.

3. கலாத்தியர் 5:22-23.

| | |
|---|---|
| -அன்பு | -சந்தோஷம் |
| -சமாதானம் | -நீடிய பொறுமை |
| -தயவு | -நற்குணம் |
| -விசுவாசம் | -சாந்தம் |

-இச்சையடக்கம்

4. யோவான் 15:16

5. ஆவியின் கனியோ, அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயவு, நற்குணம், விசுவாசம், சாந்தம், இச்சையடக்கம்; இப்படிப்பட்டவைகளுக்கு விரோதமான பிரமாணம் ஒன்றுமில்லை. (கலாத்தியர் 5:22-23)

6. 9,7,8,5,6,2,4,1

7. ஆவியின் கனி முக்கியமானது, ஏனென்றால் ஆவிக்குரிய தோற்றம் கொடுக்க அதுமட்டும் போதுமானது அல்ல. நாம் தேவனை அறிந்துள்ளோம் என்பதற்கு ஏதுவாக எமக்கு ஆவிக்குரிய கனி இருக்க வேண்டும். ஆவிக்குரிய உலகின் இனப்பெருக்கத்திற்கு கனியானது விதைகளை கொண்டிருக்கிறது.

8. தேவனுடைய சமாதானம் பாவத்தின் மன்னிப்பின் மூலம் பெறப்படும் நீதியினால் கிடைக்கிறது. இவ் அனுபவத்திற்கு பின்னரே தேவ சமாதானம் கிடைக்கிறது. தினசரி வாழ்க்கையில் தேவன் கொடுக்கிற சமாதானமே இது. (ரோமர் 5:1ஐயும், பிலிப்பியர் 4:7ஐயும் பார்க்கவும்).

## அதிகாரம் பதின்ரெண்டு:

1. மாம்சத்தின் கிரியைகள் வெளியரங்கமாயிருக்கின்றன; அவையாவன: விபசாரம், வேசித்தனம், அசுத்தம், காமவிகாரம்,

   விக்கிரகாராதனை, பில்லிசூனியம், பகைகள், விரோதங்கள், வைராக்கியங்கள், கோபங்கள், சண்டைகள், பிரிவினைகள், மார்க்கபேதங்கள்,

   பொறாமைகள், கொலைகள், வெறிகள், களியாட்டுகள் முதலானவைகளே; இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லையென்று முன்னே நான் சொன்னதுபோல இப்பொழுதும் உங்களுக்குச் சொல்லுகிறேன். (கலாத்தியர் 5:19-21)

2. மாம்சத்தின் கிரியைகள்.

3. கலாத்தியர் 5:16

4. 17,14,15,16,4,1,2,3,6,5,7,8,13,9,11,10,12

## அதிகாரம் பதின்மூன்று:

1. என்னில் கனிகொடாதிருக்கிற கொடிஎதுவோ, அதை அவர் அறுத்துப்போடுகிறார்; கனிகொடுக்கிற கொடி எதுவோ, அது அதிக கனிகளைக் கொடுக்கும்படி, அதைச் சுத்தம்பண்ணுகிறார். (யோவான் 15:2)

2. கனி, அதிக கனி, மிகுந்த கனி, நிலையான கனி.

3. ஜீவன், தண்ணீர், வெளிச்சம், காற்று, இடம், வேர்களின் அமைப்பு முறை, செயலற்ற தன்மை, மண், மரணம், செடியில் இணைக்கப்பட்டிருத்தல், சுத்திகரிக்கப்படுதல், கால நிலை.